

# பெரியார்

# தமிழ் இனத்தின் பகைவரா?

*- வாலாசா வல்லவன்*



வழக்கறிஞர் பா.குப்பன் என்பவர் **‘தமிழரின் இனப்பகை ஈ.வெ.ரா’** என்கிற ஒரு நூலை எழுதியுள்ளார். அந்நூலில் **வரலாற்றுப் பொய்கள் பலவற்றையும் வரலாற்றுத் திரிபுகள் பலவற்றையும் செய்துள்ளார்**, அவர். அண்மைக் காலமாக ம.பொ.சி-யின் அடியாராக மாறியுள்ளதால், ம.பொ.சி.யின் வரலாற்றுப் புரட்டல்களை அவரது மாணவக் கோடிகள் இன்றும் செய்து வருவதில் வியப்பொன்றுமில்லை.

தமிழ் மக்களுக்கு உண்மை வரலாறுகள் தெரிய வேண்டும். தமிழினத்திற்கு உண்மையான எதிரிகள் யார், உண்மையான தோழர்கள் யார் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டால்தான் நாம் மேற்கொண்டிருக்கும் பயணத்தின் இறுதியில் வெற்றி கொள்ள முடியும். பா.குப்பன் தன்னுடைய நூலின் தொடக்கத்திலேயே ‘என்னுரை’யில் பக்கம் 31இல் (அவர் தமிழ் எண்ணில் பக்க எண் கொடுத்துள்ளார்).

“*இமய மலைக்கும் விந்திய மலைக்கும், கங்கை ஆற்றுக்கும் சிந்து ஆற்றுக்கும்இடைப்பட்ட பகுதியில் இருந்த ஆரிய வணிகத்திலிருந்த சூத்திரப் பட்டத்தைத்தமிழர்களுக்குச் சூட்டி இழிவுபடுத்தினார் ஈ.வெ.ரா. தமிழர்களைப் பார்ப்பனர்கள் ‘சூத்திரன்’ என்று அழைத்ததாகக் கூறிய ஈ.வெ.ரா. ‘சூத்திரர், சூத்திரர்’ என்று திரும்பத் திரும்பச் சொல்லித் தமிழரிடம் ஒரு தாழ்வு மனப்பான்மையை உருவாக்கினார்*” என்று கூறுகிறார். இது எவ்வளவு உலகப் பெரும் பொய் என்பது வரலாறு படித்த அனைவருக்கும் தெரியும்.

திருவள்ளுவர் காலத்திலேயே, 2000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் நாட்டில் ஆரியம் ஊடுருவித் தமிழர்களை இழிவுபடுத்தியது என்பதற்குத் திருவள்ளுவரே சான்று.

***“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்”***

என்று திருவள்ளுவர் எழுத வேண்டிய காரணமென்ன? பிறப்பின் அடிப்படையில் உயர்வு – தாழ்வு இருந்ததால்தானே? அது மட்டுமன்றி, 1500 ஆண்டுகளுக்கு முன்பு அரசாட்சி செய்த பல்லவ அரசர்கள் மனுநீதிப்படி ஆட்சி நடத்தியுள்ளதும், 1000 ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சி செய்த இராசராச சோழன் வட நாட்டு ஆரியப் பார்ப்பனர்கள் பல்லாயிரக்கணக்கானோரை வரவழைத்து அவர்களுக்குப் பல ஆயிரக்கணக்கான காணி(ஏக்கர்) நிலங்களை ‘*பிரம்மதேயம்*’, ‘*சதுர்வேதி மங்கலம்*’ என்ற பெயர்களில் தானமாகக் கொடுத்து, அவர்கள் சொல்படி (நால்வருண வழக்கப்படி) ஆட்சி நடத்தியதும் முனைவர் இராசமாணிக்கனாரின் ‘பல்லவர் வரலாறு’, சதாசிவப் பண்டாரத்தாரின் ‘பிற்காலச் சோழர் சரித்திரம்’ முதலான நூல்களில் கல்வெட்டுச் சான்றுகளோடு உள்ளன.

மேலும், பாண்டியர் கால ஆட்சிகளிலும் பார்ப்பன நால் வருண ஆட்சியே நிலைபெற்றிருந்தது. பாண்டிய அரசன் ஒருவனுடைய பெயரே ‘முதுகுடுமிப் பெருவழுதி’ ஆகும். சோழ அரசன் ஒருவனுடைய பெயர் ‘மனுநீதிச் சோழன்’ என்றும் உள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்தில் தமிழ் அரசர்கள் அரசு ஆண்ட

பொழுதிலும் வேற்று மொழி அரசர்கள் தமிழகத்தில் அரசு ஆண்ட போதிலும் ஆரியப் பார்ப்பன மேலாளுகையும்(ஆதிக்கமும்) அவர்களுடைய செல்வாக்கும் உச்ச நிலையில் இருந்ததைத் தமிழக வரலாறு நன்கு உணர்த்துகிறது. ஆனால் குப்பன் கேட்கிறார், எந்த ஆரிய மன்னன் தமிழ் நாட்டை ஆண்டான் என்று. இவருடைய வாதத்தை என்னவென்று சொல்வது! வழக்குரைஞர் பா.குப்பன் எழுதுகிறார், வடக்கே இருந்த நால்வருணத்தையும் சூத்திரப் பட்டத்தையும் பெரியார் கொண்டு வந்து தமிழர் மேல் சுமத்துகிறார் என்று. இது எவ்வளவு பச்சையான பொய்யும் வரலாற்றுத் திரிபுமாகும்!

வழக்குரைஞர் பா.குப்பன் இந்துச் சட்டத்தைப் படித்திருப்பார் என நினைக்கிறேன். இந்துச் சட்டத்தின் முகவுரையிலேயே, எடுத்த எடுப்பிலேயே இந்துக்களை நான்கு வருணங்களாகப் பிரித்துள்ளதைத் தெளிவாக அறியலாம். பெரியார் பிறப்பதற்கு முன்பே ஆங்கிலேயர்கள் 1863ஆம் ஆண்டிலேயே இந்துச் சட்டத்தைத் தொகுத்தார்கள். அதன் பிறகு 1955இல் அதில் சில மாற்றங்களை இந்திய அரசு செய்தது. இன்றும் பார்ப்பனர்கள் பூசாரிகளாக உள்ள பெரிய கோவில்களில் பிற சாதியினர் பூசை செய்ய முடியாது. தமிழக அரசின் ‘அனைத்து சாதியினரும் அருச்சகர் ஆகும் சட்டம்’ உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

**சூத்திரப் பட்டத்தை ஒழிக்கப் போராடிய பெரியாரைப் பார்த்துத் தமிழர்களிடம் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தினார் என்பது எவ்வளவு புரட்டு**! குப்பனுடைய பாட்டனையும், பூட்டனையும் 10 அகவைப் பார்ப்பனச் சிறுவன் கூட ‘டே, போடா, வாடா’ என்றுதான் அழைத்தான். அவர்கள் ‘என்ன சாமி’ என்றுதான் கூறினார்கள். இந்த நிலைமையை ஒழித்தது யார்? பெரியாரில்லையா? தமிழர்களுக்குத் தன்மான உணர்ச்சியூட்டிய பெரியாரைப் பார்த்துத் தாழ்வு மனப்பான்மையை உருவாக்கினார் என்பது குப்பனுடைய பேதைமையைக் காட்டுகிறது.

குப்பன் இந்த நூலில் பெரியார் மீது வைத்திருக்கும் மிகப் பெரிய குற்றச்சாட்டு எல்லைப் போராட்டத்தில் பெரியார் இரண்டகம்(துரோகம்) இழைத்து விட்டார் என்பதுதான். அந்த நூலில் இச்செய்தி பல பக்கங்களில் உள்ளது.

அக்குற்றச்சாட்டில் ஒரு துளிக்கூட உண்மை இல்லை. ம.பொ.சி பொய்யர், வரலாற்றுப் புரட்டர். அவர் தனக்கு, ஏதுவாகவும் திராவிடர் இயக்கங்களுக்கு எதிராகவும் உண்மைக்கு மாறான பல செய்திகளை எழுதியுள்ளார். ‘புதிய தமிழகம் படைத்த வரலாறு’, ‘எனது போராட்டம்’ ஆகிய நூல்களில் அப்பொய்களை எழுதியுள்ளார். அதைப் படித்துவிட்டு **ம.பொ.சி-யின் மாணவர்கள் அப்பொய்களையே திரும்பத் திரும்பக் கூறி வருகின்றனர்.**

உண்மையில், எல்லைப் போராட்டம் நடத்தியவர்கள் அதை ஒரு தேசிய இன விடுதலைப் போராட்டமாக நடத்தவில்லை. ம.பொ.சி வடக்கெல்லைப் போராட்டம் நடத்தியபோது 'தமிழரசுக் கழகம்' என்ற பெயர் வைத்துக் கொண்டிருந்தாலும் 1953இல் காமராசர் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளும் வரையில் காங்கிரசுக் கட்சியில்தான் இருந்தார். காங்கிரசுக் கட்சியைவிட்டு வெளியே வந்த பிறகும் கூட அவருடைய சிந்தனைப்போக்கு இந்தியத் தேசியத்திலேயே குடி கொண்டிருந்தது. அதற்கு அவருடைய 'எனது போராட்டம்' நூலே சான்று.

தெற்கெல்லைப் போராட்டம் நடத்திய மார்சல் நேசமணி 'திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசு' என்ற பெயரிலேயே அமைப்பை வைத்திருந்தார். "கொச்சி, திருவிதாங்கூரிலுள்ள தமிழ்ப் பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைப்பது மட்டுமே எங்கள் குறிக்கோள். மற்றபடி, காங்கிரசுக்கும் எங்களுக்கும் கொள்கை வேறுபாடு கிடையாது" என்று வெளிப்படையாக அறிக்கை விட்டவர்(நம் நாடு 1-9-1954). **எல்லைப் போராட்டம் நடத்தியவர்கள், அடிப்படையில் இந்திய தேசியவாதிகளாகவே இருந்தார்கள்.** நேசமணி 1957இல் இந்தியத் தேசியக் *காங்கிரசில்* சேர்ந்தார். வடக்கெல்லைப் போராட்டத் தளபதி கே.விநாயகம் 1952 முதல் குடிமக்கள் பொதுவுடைமைக் கட்சிச் (Praja Socialist Party) சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். 1957இல் இந்தியத் தேசியக் *காங்கிரசில்* சேர்ந்தார். இருவரும் 1957இல் காங்கிரசுக் கட்சிச் சட்டமன்ற உறுப்பினர் ஆனார்கள். ம.பொ.சி கடைசியாகக் காங்கிரசில் சேர்ந்தார். ஆக, **இவர்களில் யாரும் தமிழ் இனவிடுதலைக்கான உண்மையான போராளிகள் அல்லர்.**
இனி எல்லைப் போராட்டங்களைக்குறித்துச் சற்றுப் பார்ப்போம். தலைமையமைச்சர் நேரு 1953இல் அமைத்த நீதிபதி வாஞ்சு குழு தன் பரிந்துரையில் சென்னை ஆந்திராவின் தற்காலிகத் தலைநகராக 3-5 ஆண்டுகள் இருக்க வேண்டும்.(அறிக்கை, பக்கம் 6). ஆந்திராவின் உயர்நீதிமன்றம் 5 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரை சென்னையில் இருக்க வேண்டும்.(அறிக்கை, பக்கம் 8). சென்னையில் உள்ள மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரிகளில் ஆந்திர மாணவர்களுக்கு 36 விழுக்காடு இடங்களை 25 ஆண்டுகளுக்கு ஒதுக்கித் தர வேண்டும்.(அறிக்கை, பக்கம் 12-13). பிரிந்து போகும் ஆந்திர மாநிலம் புதிய தலைநகரை உருவாக்குவதற்குச் சென்னை மாகாண அரசு இரண்டரைக் கோடி உரூபாய் தர வேண்டும். (அறிக்கை, பக்கம் 26) என்றெல்லாம் கூறியிருந்தது. தமிழகத்தின் வடக்கெல்லையான சித்தூர், திருப்பதியையும் இக்குழுதான் ஆந்திராவிற்கு அளித்தது.
**இந்தப் பரிந்துரைகளைக் கண்டித்துத் தமிழ்நாடே கொதித்து எழுந்தது.**

**ஆந்திராச் சிக்கல் குறித்து திராவிடர் கழக நடுவண் மேலாண்மைக்குழு 11-1-1953இல் நிறைவேற்றிய தீர்மானம்:**

(அ) ஆந்திர நாடு பிரிவினையில் ஆந்திரர்கள் பிடிவாதமாக இருப்பதால் ஆந்திரநாட்டைப் பிரிப்பதில் காலதாமதம் செய்யாமல் உடனடியாகப் பிரித்து விடவேண்டுமென்று இக்குழு தெரிவித்துக் கொள்ளுகிறது.

அப்படிப் பிரிப்பதில் ஆந்திரநாட்டினரிலேயே சிலர் பிரிவினைக்கு முட்டுக்கட்டை போடுகிற மாதிரியில் தாங்கள் பிரிந்துபோன பின்பும் எஞ்சியுள்ள சென்னை நாட்டில் தங்களுக்குச் சில உரிமையோ சலுகையோ அதாவது பொது நீதிமன்றம், பொது ஆளுநர் முதலியவை சென்னையிலிருக்க வேண்டுமென்று கேட்பதையும், சென்னையைத் தற்காலிகத் தலைநகரமாக இருக்க இடம் தர வேண்டுமென்பதையும், இக்கூட்டம் கண்டிப்பதுடன், அப்படிப்பட்ட **உரிமைக்கோ சலுகை முதலியவற்றிற்கோ மத்திய அரசார்(*சர்க்கார்*) இடம் கொடுக்குமானால் தமிழர்களின் அதிருப்திக்கும், கிளர்ச்சிக்கும் ஆளாகவேண்டி நேரிடுமென்று மத்திய அரசாருக்கு எச்சரிக்கை செய்கின்றது.**

இதே சமயத்தில், திராவிடர் கழகம் *இராச்சியப்* பிரிவினையைப் பற்றிய தனது கருத்தைக் தெரிவித்துக் கொள்ளுகின்றது. அதாவது **தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழி நாடுகள் சேர்ந்த சென்னை மாகாணம் மத்திய (இந்திய யூனியன்) ஆட்சியின் எவ்விதத் தொடர்புமில்லாத தனி விடுதலை யரசாகப் பிரிக்கப்பட வேண்டும் என்பதே அதன் முடிந்த கருத்தாகும்**. இந்த நிலையில் சென்னை அரசிலிருந்து எந்த மொழி நாடு பிரிந்து போனாலும் மீதியுள்ள மொழி நாடு அல்லது நாடுகள் முழுத் தன்னுரிமையுள்ள தனி அரசு நாடாக ஆக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்து கொண்டு இருக்கிறதுடன் இந்தக் கொள்கைக்குக் கட்டுப்பட்டுப் பிரிவினைக் கிளர்ச்சி செய்யும் எந்த மொழி நாட்டாருடனுடம் யாருடனும் திராவிடர் கழகம் கூடுமான அளவு ஒத்துழைக்க முன்வரும் என்று தெரிவித்துக் கொள்கின்றது.

ஆ) எந்தக் காரணத்தைக் கொண்டும் மத்திய அரசாங்கத்தார் சென்னை நகரத்தையும் அதைச் சேர்ந்த எந்தப் பாகத்தையும் சேர்த்து ஆணையர் மாகாணமாக (Part C State) ஆக்கக் கூடாதென்றும் இக்குழு வற்புறுத்தித் தெரிவித்துக் கொள்ளுகிறது.

இ) பிரித்தானிய ஆட்சி இருந்த காலத்தில் அவர்கள் நிருவாக வசதிக்கு ஆக அமைத்துக் கொள்ளப்பட்ட மாவட்ட எல்லையில் தமிழ் பெரும்பான்மையாகப் பேசப்படும் பகுதியையும், தெலுங்கு பெரும்பான்மையாகப் பேசப்படும் பகுதியையும் ஒன்றாக ஒரே மாவட்டமாக அமைத்திருந்தனர். சித்தூர் மாவட்டத்தில் திருத்தணி முதலிய, பெரும்பாலாகத் தமிழ் பேசும் மக்களடங்கிய பகுதிகள் இருப்பதனால் இப்போது மொழியை அடிப்படையாகக் கொண்ட நாடே பிரிக்கப்படுவதனால் **ஒரு மொழி பேசும் நாட்டுடன் வேறு மொழி பேசும் பெரும்பான்மையான மக்களைக் கொண்ட பகுதி சேர்க்கப்படுவதென்பது மொழிவாரிப் பிரிவினைத்**

**தத்துவத்திற்கே எதிர்ப்பானது** என்பதோடு வேறு மொழி பேசும் மக்களுக்கும் இடையூறானது. ஆதலால் இந்த மொழிவாரி நாடு பிரிவினையில் **சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ் மொழி அதிகமாகப் பேசும் பகுதியைக் கண்டிப்பாகத் தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டுமென்று இக்குழு தீர்மானிக்கிறது.** (விடுதலை 12-1-1953).

1-2-1953ஆம் நாள் தமிழ் இசுலாமியர் சார்பில் சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற 'சென்னை தமிழருக்கே' என்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நூறாயிரக்கணக்கான (இலட்சக்கணக்கான) மக்கள் இடையில் பேசிய பெரியார் "எங்களுடைய கொள்கைப்படி நாங்கள் பிரிவினை கேட்பது எல்லாம் இந்த மாதிரியான பிரிவினை அன்று. நாடு பிரிய வேண்டும். எப்படிப்பட்ட பிரிவினை என்றால், பருமா பிரிந்தது போல... அயலவர் சுரண்டலற்ற தனி நாடு வேண்டும் என்பதுதான். ஆனால் பிரிய வேண்டுமென்பவர்களை மகிழ்ச்சியாகப் பிரித்து அனுப்பி விடுவோம். தன்னலக்காரர்களோடு சண்டை போட்டுக் கொண்டிருப்பதை விட வெளியே அனுப்பிவிடுவது நல்லது.

மற்றபடி இரண்டு, மூன்று சிக்கல்கள் சொல்லப்படுகின்றன; அதாவது ஆந்திரா அரசு உயர்நீதிமன்றம், அரசு செயலகம், தலைநகர் முதலியவை எல்லாம் சென்னையில் கொஞ்ச நாளைக்காவது இருக்க வேண்டும் என்கிறார்கள். எப்போது போகிறோம் என்று போகிறார்களோ, அவர்களுக்கு இங்கு என்ன வேலை? ஒரு வீட்டில் பாகப்பிரிவினை எல்லாம் செய்யப்பட்ட பிறகு சமையல் மட்டும் கொஞ்ச நாளைக்கு இங்கே செய்து கொள்கிறேன் என்பது என்ன நியாயம்?

அடுத்தபடியாக ஆணையர் மாகாணமாகச் (Part C State) சென்னையை ஆக்க வேண்டும் என்று ஆந்திரர்கள் சொல்வதைப்பற்றிக் கூற வேண்டுமானால் மடத்தை விட்டுப் போகின்ற ஆண்டிக்கு நந்தவனத்தைப் பற்றி என்ன கவலை? மற்றும் நட்ட ஈடு கேட்பது என்பதும் அப்படித்தான், நியாயமில்லாத கோரிக்கையாகும்" என்று **ஆந்திரர்களைக் கண்டித்துப் பேசினார்**. (விடுதலை 3-2-1953).

சென்னை நகர மாநகர்தலைவர்(mayor) செங்கல்வராயன் முதலமைச்சர் இராசாசியைக் கலந்து பேசி அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். முதலமைச்சர் இராசாசி அக்கூட்டத்திற்குப் பெரியாரையும் அழைக்கும்படி கூறினார். பெரியாருக்கு மட்டும்தான் நேரு அஞ்சுவார் என்பது இராசாசிக்கு நன்கு தெரியும். அக்கூட்டத்திற்குப் பெரியாரை அழைக்க மாநகர் முதல்வர் செங்கல்வராயனும் ம.பொ.சி-யும் வந்தனர். பெரியார் அக்கூட்டத்தில் கலந்து கொண்டு இரு நூறாயிரம் மக்களிடையே எழுச்சியுரை ஆற்றினார். ஆந்திரர்களின் அட்டூழியத்துக்கு முடிவு கட்ட ஒருநாள் கடையடைப்பும் வேலைநிறுத்தமும் செய்ய வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். அக்கூட்டத்தில் எம்.பக்தவச்சலம், எசு.என்.கரையாளர், பி.டி.இராசன், மீனாம்பாள் சிவராசு, ம.பொ.சி முதலான பலர்

பேசினர். மாநகர் தலைவர் நன்றி கூறினார். (விடுதலை 17-2-1953). வாஞ்சு அறிக்கை வெளிவருவதற்கு முன்பிருந்தே அதன் செய்திகள் கசியத் தொடங்கிய காலம் முதலே விடுதலையில் அதன் ஆசிரியர் குத்தூசி குருசாமி நடுவண் அரசைக் கண்டித்தும், ஆந்திரர்களைக் கண்டித்தும், வாஞ்சு அறிக்கையைக் கண்டித்தும் 7-1-1953 முதல் பல ஆசிரியவுரைகள் எழுதியுள்ளார்.

**ம.பொ.சியின் பொய்**

"மாநகர் தலைவர் தமது சொந்தப் பொறுப்பில் 16-3-1953 அன்று திருவல்லிக்கேணிக் கடற்கரையில் கூட்டம் நடத்த முயன்றார். பெரியார் ஈ.வெ.ரா-வையும் இந்தக் கூட்டத்திற்கு அழைக்குமாறு இராசாசி கூறினார்.

நான் "அவர்தான் சென்னை ஆந்திராவுக்குப் போனாலும் தமிழ் நாட்டிலிருந்தாலும் திராவிடத்தில்தானே இருக்கப் போகிறது என்று சொல்லிவிட்டாரே! தமிழ்நாட்டில்தான் இருக்க வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கு அவர் வருவாரா?" என்றேன். 'இந்தக் கூட்டத்தில் நாயக்கர் பேசுவதை நான் விரும்புகிறேன் என்று அவரிடம் சொல்லுங்கள். அவர் வருவார்' என்று சொன்னார்". (ம.பொ.சி 'எனது போராட்டம்' பக்கம் 623). இது எவ்வளவு பெரிய வரலாற்றுப் பொய்! திராவிடர் கழக நடுவண் செயற்குழு 11-1-1953இல் **சென்னை தமிழகத்திற்கே சொந்தம். தற்காலிகத் தலைநகராகக் கூட ஆந்திராவிற்குக் கொடுக்கக்கூடாது** என்று கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றிய பிறகும், 1-2-1953இல் சென்னைக் கடற்கரையில் நூறாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் சென்னையில் ஆந்திரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லையென்று கண்டித்துப் பேசிய பிறகும், 16-3-1953 கூட்டத்திற்கு அழைக்க வந்த ம.பொ.சி. இராசாசியிடம் கூறியதாக 'எனது போராட்டம்' என்ற நூலில் எழுதியுள்ளது எவ்வளவு பெரிய வரலாற்று ஏய்ப்பு? உண்மையில் ம.பொ.சி-யின் ஆசான் இராசாசிதான் சென்னை ஆந்திரர்களின் தற்காலிகத் தலைநகராக இருக்க வேண்டும் என்று விரும்பினார். இதோ ம.பொ.சி.யே கூறுகிறார். "மாநகராட்சியின் சிறப்புக் கூட்டம் நடைபெற இருக்கும் செய்தியைப் பத்திரிகைகளில் பார்த்ததும் மாநகரத்தலைவரையும்(மேயரையும்) என்னையும் இராசாசி தமது இல்லத்திற்கு அழைத்துப் பேசினார். "ஆந்திர அரசுக்குத் தற்காலிகமாகக் கூடச் சென்னையில் இடம் தரக்கூடாது' என்ற வாசகத்தை நீக்கிவிடுமாறு மாநகரத்தலைவரையும் (மேயரையும்) என்னையும் இராசாசி கேட்டுக் கொண்டார். மாநகரத்தலைவர் மேயர் அவர்கள் வெகு சுலபத்தில் அதற்கு இணங்கிவிட்டார். நான் பிடிவாதமாக மறுத்து விட்டேன். நிபந்தனை எதுவும் இல்லாமலே ஆந்திர அரசுக்குச் சென்னையில் இடம் தரத் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவரும் தயாராக இருப்பதை நான் அறிவேன்". (ம.பொ.சி 'எனது போராட்டம்' பக்கம் 632). சென்னையில் ஆந்திராவுக்குத் தற்காலிகமாகக் கூடத்

தலைநகரமாக இருக்க விடக்கூடாது என்று சொன்ன பெரியாரை இரண்டகர் (துரோகி) என்பதும், ஆந்திரத் தலைநகர் தற்காலிகமாகச் சென்னையில் இருக்க வேண்டும் என்று சொன்ன இராசாசியைத் தலைவர் என்பதும் இராசாசியைத் தமிழ்ப் பார்ப்பனர் என்பதும், வேண்டுமென்றே பெரியார் அவரை எதிர்க்கிறார் என்பதும் எவ்வளவு பெரிய வரலாற்று ஏய்ப்புகள் (மோசடிகள்) என்பதை இதன் மூலம் அறியலாம்.

15-2-1953 சென்னை மாவட்டத் திராவிடர் கழகச் செயற்குழு 22-2-1953 அன்று சென்னைக்கு வரும் குடியரசுத் தலைவர் இராசேந்திரப் பிரசாத்துக்குக் கருப்புக் கொடி காட்டத் தீர்மானித்தது.(விடுதலை 16-2-1953). அன்றே திராவிடர் கழக நடுவண் செயற்குழு கூடி இந்தியக் குடிஅரசுத் தலைவர் இராசேந்திரப் பிரசாத்து சென்னைக்கு வரும் அன்றே '**தமிழக உரிமைப் பாதுகாப்பு நாள்**' தமிழகமெங்கும் கொண்டாடும்படித் தீர்மானம் நிறைவேற்றியது. (விடுதலை 16-2-1953).

திட்டமிட்டபடி இராசேந்திரப் பிரசாத்துக்குக் குத்தூசி குருசாமி தலைமையில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கருப்புக்கொடி காட்டினர். காவல்துறையினரின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலால் சில தி.க தோழர்களுக்கு மண்டையும் உடைந்தது.

22-2-1953 அன்று வாஞ்சு அறிக்கைக் கண்டன நாள் தி.க தோழர்களால் தமிழகம் முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டது.

தமிழ் நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் 32 பேரும் கட்சி வேறுபாடு கருதாமல் புது தில்லியில் 1953 மார்ச்சு 23 அன்று தலைமையமைச்சர் நேருவைச் சந்தித்து, ஆந்திரத்தின் தற்காலிகத் தலைநகரமோ, உயர்நீதிமன்றமோ சென்னையில் இருக்கக்கூடாது என்று வலியுறுத்தினர். (விடுதலை 4-3-1953).

இவ்வளவு போராட்டங்களுக்குப் பிறகுதான் நேரு ஆந்திரத் தலைநகர் ஆந்திர எல்லைக்குள்ளேயே அமையும் என்றார்.

**தெற்கெல்லைப் போராட்டத்தைப்பற்றிச் சுருக்கமாகப் பார்க்கலாம்**

இந்தியாவில் உள்ள மாநிலங்களை மொழிவழியாகப் பிரித்து அமைக்க நேருவின் தலைமையிலான இந்திய அரசு, **நீதிபதி பசல் அலி** தலைமையிலான குழுவை 29-12-1953இல் அமைத்தது. அக்குழுவில் கே.எம்.பணிக்கர் என்ற மலையாளியும் குன்சுரு என்ற உ.பி-காரரும் உறுப்பினர்களாக இருந்தார்கள். அக்குழு 30-9-1955இல் தங்கள் பரிந்துரையை இந்திய அரசுக்கு அளித்தது. 267 பக்க அறிக்கையில் பக்கம் 81 முதல் பக்கம் 89 வரை தமிழகத்தைப் பற்றியது.

அக்குழுதான் தேவிகுளம், பீர்மேடு முதலான 4 மாவட்டங்களைக் கேரளாவுக்குக் கொடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தது. ***மார்சல்* நேசமணி** தலைமையில் 1946 முதலே திருவாங்கூர், கொச்சி பகுதியில் உள்ள தமிழ்ப்பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும் என்று போராடி வந்தனர். இந்த அறிக்கை வெளிவந்தவுடன் அவர்களுடைய போராட்டமும் மிகுதியானது. தமிழகமும் கொந்தளித்து எழுந்தது. 10-7-1954 முதலே விடுதலையில் திருவாங்கூர்த் தமிழர் கிளர்ச்சிக்கு ஆதரவான ஆசிரியவுரைகள் எழுதப்பட்டு வந்தன.

21-11-1955 முதல் 24-11-1955 வரை தமிழகச் சட்டமன்றத்தில் இந்தக் குழுவின் அறிக்கை மீது விவாதம் நடைபெற்றது. **மலையாளிகளும் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியினரும் (Indian Communist Party) தவிர எல்லோருமே தேவிகுளம், பீர்மேடு தமிழகத்துடன் இணைய வேண்டும் என்று பேசினர்**. தமிழக நிதியமைச்சர் சி.சுப்பிரமணியம் தேவிகுளம், பீர்மேடு தமிழகத்திற்குச் சொந்தம் என்பதைச் சான்றுகளோடு விளக்கினார். இறுதி நாளில் நடைபெற்ற வாக்கெடுப்பில் தேவிகுளம், பீர்மேடு தமிழகத்திற்குச் சேர வேண்டுமென்ற தீர்மானத்திற்கு ஏற்பாக (ஆதரவாக) 122 வாக்குகளும் அதற்கு எதிராக 18 வாக்குகளும் கிடைத்தன. பின்னாளில் உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்த வி.ஆர்.கிருட்டிணய்யர் (CPI) உள்பட பலர் எதிர்த்து வாக்களித்தனர். தமிழகப் பொதுவுடைமைக் கட்சி உறுப்பினர்கள் ப.சீவானந்தம், ஞ.இராமமூர்த்தி, கல்யாண சுந்தரம் முதலான 13 சட்டமன்ற உறுப்பினர்கள் நடுநிலைமை வகித்தனர். தீர்மானம் தமிழ்நாட்டுக்கு ஏதுவாக நிறைவேறியது.

தமிழகச் சட்டமன்றத் தீர்மானத்துக்கு ஏற்பாக(ஆதரித்து) விடுதலையில் ஆசிரியவுரை எழுதினார் குத்தூசி குருசாமி(விடுதலை 25-11-1955). நேரு, பசல் அலி குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வைத்தார். 16-12-1953 முதல் 23-12-1953 வரை விவாதம் நடைபெற்றது. நேசமணியும் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் எவ்வளவோ எடுத்துக் கூறியும் **நேரு தமிழகச் சட்டமன்றத் தீர்மானத்தைப் புறக்கணித்துத் தேவிகுளம், பீர்மேடு கேரளாவுக்கே சொந்தம் என்று தீர்மானம் நிறைவேற்றி விட்டார்.**

தமிழக முதல்வரையும், நிதியமைச்சர் சி.சுப்பிரமணியத்தையும் தில்லிக்கு அழைத்துத் தேவிகுளம், பீர்மேடு கேரளாவுக்குச் சொந்தம் என்று தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றார்.

*தமிழகச் சட்டமன்றத்தில் சி.சுப்பிரமணியம் தேவிகுளம், பீர்மேடு கேரளாவுக்கே சொந்தம் என்று சட்ட வரைவு (மசோதா) கொண்டு வந்தார். 28-3-1956 முதல் 31-3-1956 வரை நடைபெற்ற விவாதத்தில் காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் விவாதத்தில் பங்கேற்கக் கூடாது என்று குறடா (கொறடா) ஆணை பிறப்பித்து, இது மேலிட ஆணை, இதை மீற முடியாது என்று கூறித் தீர்மானத்தை வாக்கெடுப்புக்கும்*

விடாமலே நிறைவேற்றினார். அப்போதுதான் முதலமைச்சர் குளமாவது மேடாவது என்று சட்டமன்றத்திலேயே பேசினார்.

**தமிழர்களின் உண்மையான எதிரி நேருவே** என்பதை உணர்ந்த பெரியார் மலையாளிகளைத் தமிழகத்தை விட்டு வெளியேறும்படியான கிளர்ச்சி செய்யாத வரையில் தில்லி பணியாது என்று மதுரைப் பொதுக்கூட்டத்தில் அறிவித்தார். (விடுதலை 18-1-1956).

'தில்லி – அநீதிக்கு மேல் அநீதி! தேவிகுளம் பீர்மேடு தாய்த் தமிழகத்திலிருந்துதுண்டிக்கப்படுகின்றன' என்று 17-1-1956 அன்று விடுதலையில் ஆசிரியவுரைஎழுதப்பட்டது. 15-2-1956 அன்று மன்னார்குடியில் பொதுக்கூட்டத்தில் பேசியபெரியார் பார்ப்பான், வடநாட்டான், மலையாளி போன்ற அயலவனெவனும்வெளியேற்றப்பட வேண்டியவனே; மலையாளிகளைத் தமிழ் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டாவா என்று கொந்தளித்தார். (விடுதலை 16-2-1956). ஆக, **தமிழகம் தன் மண்ணை இழந்தது திராவிடம் பேசியதாலா அல்லது இந்தியம் பேசியதாலா** என்பதைத் தெரிந்து கொள்ளலாம். 'தமிழரசுக் கழகம்' என்ற பெயரில் போலிக் கட்சி வைத்துக் கொண்டு நேருதான் என் தலைவர், காந்திதான் என் தலைவர், சத்தியமூர்த்திதான் என் தலைவர், இராசாசிதான் என் தலைவர் என்று கூறி இந்திய தேசியத்திற்குக் காவடி தூக்கிய ம.பொ.சி-தான் தமிழின இரண்டகர்! தி.மு.க-வும்வடக்கு எல்லை தெற்கு எல்லைப் போராட்டங்களில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டது.

ம.பொ.சி வட எல்லைப் போராட்டத்தில் பெரியாரின் மீது பொய்யையும், புளுகையும்அவிழ்த்துவிட்டதைப் போலவே தெற்கெல்லைப் போராட்டத்திலும் மிகப் பெரிய பொய்யை அவிழ்த்து விட்டார்.

"பெரியார் ஈ.வெ.ரா எப்போதும் எதிலும் ஒரு தனிப்போக்கோடு நடந்து கொள்ளக்கூடியவரல்லவா? பசல் அலி ஆணையம்(கமிசன்) பரிந்துரையிலும் தமது வழக்கப்படித்தான் அவர் நடந்து கொண்டார். திருச்சியிலுள்ள தமது மாளிகையில் 'தினத்தந்தி' (நாள் கொடுக்கப்படவில்லை) செய்தியாளருக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் 'தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றின் கரை, கொச்சி, சித்தூர் ஆகிய பகுதிகள் பற்றி எனக்குக் கவலை இல்லை. மலையாளத்துடன் அவற்றைச் சேர்க்க வேண்டியதுதான். சமீபத்தில் சர்தார் பணிக்கர் வந்திருந்தார். அவரை நான் சந்தித்துப்பேசினேன். தொழிலுக்காகத் தமிழர்கள் அங்கு (தேவிகுளம், பீர்மேடு) வந்தார்களேஒழிய நிலம் மலையாளத்தைதான் சேர்ந்தது என்று பணிக்கர் சொன்னார். நானும் சரிஎன்று சொல்லிவிட்டேன்" (எனது போராட்டம் பக்கம் 758). தினத்தந்திக்குக் குத்தூசி குருசாமி வைத்த பெயரே 'டெய்லி டூப்' என்பதாகும். ம.பொ.சி-யும், தினத்தந்தி ஆதித்தனும் வேண்டுமென்றே பெரியாரின் மீது அவதூறுகளைப் பரப்பி வந்தனர்.

ஆதித்தனார் 1952-57 வரை குடிமக்கள் பொதுவுடைமைக் கட்சிச் (Praja Socialist Party) சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். அக்கட்சியின் கொச்சி முதலமைச்சர் பட்டம்

*தாணுப்பிள்ளை தமிழர்கள் 11 பேரைச் சுட்டுக் கொன்றார். அக்கட்சி கொச்சி சட்டமன்றத்தில் தேவிகுளம், பீர்மேடு கேரளாவுக்கே சொந்தம் என்று கூறியபோதும் தினத்தந்தி ஆதித்தன் அக்கட்சியின் செயல்பாடுகளை எதிர்க்கவில்லை. ம.பொ.சி-யைப் போன்றே பெரியார் மீது ஏதாவது பொய் சொல்லிக் கொண்டிருப்பது அவரது வழக்கம். பெரியாருக்கென்று விடுதலை நாளேடு இருக்கிறது. எங்காவது தேவிகுளம், பீர்மேடு மலையாளிக்குச் சொந்தம் என்று இருக்கிறதா என்று யாராவது காட்ட முடியுமா?*

*1956 **முதல் பெரியார் மறையும் வரை 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று முழங்கி வந்தார்.** இவரா தமிழினப் பகைவர், தமிழின இரண்டகர்?*

# 2_பகுதி
# பெரியார் தமிழினப் பகைவரா?

நீதிக் கட்சி ஆட்சியில் 'அரிஜனங்கள்' எவரும் அமைச்சராக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை ம.பொ.சி.யின் 'தமிழ்நாட்டில் பிற மொழியினர்' என்ற நூலிலிருந்து மேற்கொள் கொடுத்துள்ளார் வழக்குரைஞர் பா. குப்பன் (பக்கம் –81) இது வழக்கமான குற்றச்சாட்டுதான். இதே மேற்கோளைப் பழ. நெடுமாறன் தனது 'உருவாகாத இந்திய தேசியமும் உருவான இந்துப் பாசிசமும்' என்ற நூலிலும் கொடுத்துள்ளார். இவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். 1919 இல் இயற்றப்பட்ட மாண்டேகு செம் போர்டு சீர்திருத்தச் சட்டப் படி நடைபெற்றது நீதிகட்சி ஆட்சி இரட்டை ஆட்சி முறையாகும் நீதிக் கட்சி ஆட்சிக் காலம் முழுவதும் ஒரு முதலமைச்சர் 2 அமைச்சர்கள் என மொத்தம் 3 பேர் மட்டுமே அமைச்சர்களாக இருந்தனர். 1935 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டப்படி இரட்டை ஆட்சி முறை நீங்கி விட்டது. முழுப் பொறுப்பும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களுக்கே இருந்தது.

1937 இல் அமைந்த இராஜாஜி ஆட்சியில் முதலமைச்சர் உட்பட 10 பேர் அமைச்சர்களாக இருந்தனர். 10 அமைச்சர்களில் தாழ்த்தப்பட்டவர் ஒருவருக்கு அமைச்சர் பதவி கொடுப்பது ஒன்றும் பெரிய செயல் அல்ல. 10 அமைச்சர்களில் முதலமைச்சர் இராஜாஜி, டி. பிரகாசம், டாக்டர் டி. எ . எ . இராஜன், வி. வி. கிரி ஆகிய 4 பேர் பார்ப்பனர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள். சபாநாயகரும் புலுசு சாம்பமூர்த்தி என்ற ஆந்திரப் பார்ப்பனரே. இது நியாயமா என்பதை ம. பொ. சி அன்பர்கள்தான் கூற வேண்டும். இராஜாஜி ஆட்சியில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த வி.ஐ.முனிசாமிப் பிள்ளை என்பவரை பொம்மையாக ஆட்சியில் அமரவைத்துக் கொண்டு ஆதிதிராவிடர்களுக்கு எதிராகப் பல காரியங்களை இராஜாஜி செய்தாரே அது நியாயமா?

15.8.1938 அன்று எம்.சி.ராஜா ஆதிதிராவிடர்கள் கோயில் நுழைவு மசோதா ஒன்றைச் சட்டப் பேரவையில் தாக்கல் செய்தார். ''உடனே பிரதம மந்திரியார் எழுந்து தடுமாற்றத்துடன், தர்க்கதியற்ற விதமாய், ஒருவரும் நம்ப முடியாத வகையில் அம் மசோதாவை எதிர்த்துப் பேசியது மிக்க ஆச்சரியத்தை விளைவித்தது.... பிறகு முதலமைச்சர் உருக்கமாகப் பேசி இந்த மசோதவை நிறுத்தி வைக்கும் படி எம்.சி.ராஜாவிடம் சொன்னார்..... அதற்கு எம்.சி.ராஜா பதில் அளிக்கும் போது'' நான் அவரை (முதலமைச்சரை) நம்பினேன். ஆனால் இப்பொழுது அவர் கூறுவதைச் செவியுற்றுக் கேளுங்கள்! இம் மசோதாவை வாபா பெற்றுக் கொள்ளவும். சபையிலே இவ்விஷயம் விவாதிக்கப்படாமலிருக்கவும் வேண்டிய முயற்சிகளை இப்பொழுது செய்கிறார் இப்பிரதம மந்திரியார். இது அவருக்கே நியாயமாகத் தோன்றுகிறதா? நான் இவ்விஷயத்தில் பெரிதும் ஏமாற்றமடைந்தேன்'' என்று சட்டசபையிலேயே பேசினார்.

முதலமைச்சர் இராஜாஜி 45 நிமிடங்கள் இம் மசோதாவை எதிர்த்துப் பேசிக் காங்கிர கட்சியினர் யாரும் இதற்கு வாக்களிக்கக் கூடாது என்று கூறினார். வாக்கெடுப்பில் எம்.சி.ராஜாவின் ஆதி திராவிடர் கோயில் நுழைவு மசோதாவுக்கு ஆதரவாக 24 வாக்குகளும் எதிராக 130 வாக்குகளும் கிடைத்தன. (ஆதாரம்: ஆரிய ஆட்சி பதிப்பாசிரியர் வாலாசா வல்லவன் பக் – 50 முதல் 56 வரை.) நீதிக் கட்சி ஆட்சியில் ஆதிதிராவிடருக்கு அமைச்சர் பதவி கொடுக்கவில்லை என்றாலும் அவர்களுக்கான அடிப்படை உரிமைகளை மறுக்க வில்லை. ஆனால் இராஜாஜி ஆட்சியில் பொம்மையாக ஒரு அமைச்சரை உட்காரவைத்துக் கொண்டு அவரை அந்தச் சமூகத்துக்கு எதிராக வாக்களிக்க வைத்தார் இராஜாஜி. நீதிக்கட்சி ஆட்சியில் மாபெரும் சமூகப் புரட்சிக்கு வித்திடப்பட்டது. இதை வெறும் தெலுங்கர்கள் ஆதிக்கம் செலுத்திய ஆட்சி என்று புறந்தள்ளி விட முடியாது.

நீதிக்கட்சி ஆட்சியைத் தெலுங்கர்கள் ஆதிக்கம் மிகுந்த ஆட்சி என்று குறை சொல்லும் தமிழ்த் தேசியர்கள் காங்கிர கட்சி ஆட்சியில் இராஜாஜி முதல்வராக இருந்தபோது 1937, 1952 ஆண்டுகளில் என்ன நிலைமை என்பதை மூடி மறைக்கின்றனர்.

1937 இல் இராஜாஜி முதல்வராக இருந்த போது அவர் உள்பட 10 பேர் அமைச்சர்களாக இருந்தார்கள். அதில் டி.பிரகாசம், வி.வி.கிரி, பெசவாட கோபால ரெட்டி, மூவர் ஆந்திராவைச் சேர்ந்த அமைச்சர்கள், தமிழ் நாட்டைச் சேர்ந்த ப.சுப்பராயன், வி.ஐ.முனிசாமிப் பிள்ளை, எ . இராமநாதன், டி.எ .எ .இராஜன் என்கிற பார்ப்பனர் ஆக நால்வர் தமிழ்நாட்டைச் சேர்ந்த அமைச்சர்களாக இருந்தார்கள். மற்ற அமைச்சர்கள் கேரளாவையும், கன்னடப் பகுதியையும் சேர்ந்தவர்கள். சபாநாயகர் புலுசு சாம்பமூர்த்தி ஒரு ஆந்திரப் பார்ப்பனரே.

1952இல் இராஜாஜி அமைச்சரவையில் 15 பேர் அமைச்சர்களாக இருந்தார்கள். அதில் என். ரங்கா ரெட்டி, எம். வி. கிருஷ்ணாராவ், என். சங்கர ரெட்டி, பட்டாபி ராமராவ், டி. சஞ்சீவய்யா ஆகியோர் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் ஆர். நங்கன்னகவுடா, ஏ.பி.ஏ.ஷட்டி கர்நாடகப் பகுதியைச் சேர்ந்தவர்கள். வெங்கடசாமி நாயுடு தமிழ்த் தேசியவாதிகள் பார்வையில் தெலுங்கர் குட்டி கிருஷ்ணன் நாயர், கேரளாவை சேர்ந்தவர். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் ப. சுப்பராயன்,

வி.சி.பழனிச்சாமி, எம்.ஏ.மாணிக்கவேலர் (உழைப்பாளர் கட்சியைக் கலைத்துவிட்டு வந்ததால் அமைச்சர் பதவி) சண்முக ராஜே வர சேதுபதி என 15 பேர் கொண்ட இராஜாஜி அமைச்சரவையில் 4 பேர் மட்டுமே தமிழர்கள். இதையெல்லாம் ம.பொ.சி எழுதமாட்டார். ஏனெனில் ராஜாஜி அவருடைய குருநாதர், நீதிக்கட்சியைப்பற்றி குறைக் கூறும் தமிழ்த் தேசியவாதிகள் இனியேனும் உண்மையை உணர்வார்களா?

**நீதிக்கட்சி ஆட்சியில் ஆதிதிராவிடர்கள் பெற்ற நன்மைகள்:**

பள்ளர், பறையர் என்று இழிவாக உள்ள பெயரை மாற்றி ஆதி திராவிடர் என்ற பெயரை எங்கள் சமூகத்திற்கு இட்டு அழைக்க வேண்டும் என்று எம்.சி.இராசா 20.02.1922 சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தார். அத்தீர்மானம் ஒரு மனதாக நிறைவேறியது. அதன் அடிப்படையில் இனி இச்சமூகத்தினரை ஆதித்திராவிடர்கள் என்றே அனைத்து ஆவணங்களிலும் பதியவேண்டும் என்று அரசாணை எண் 217 சட்டம் (பொது) நாள் 25.03.1902இல் பிறக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டது.

- ✦ ஆதிதிராவிடர் பிள்ளைகளைப் பொது பள்ளிகளில் கட்டாயமாகச் சேர்க்க அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. G.O.No.87 கல்வி நாள் 6.1.1923
- ✦ அரசு மானியம் பெறும் பள்ளிகளில் ஆதி திராவிடர் பிள்ளைகளைச் சேர்க்க மறுத்தால் அரசு மானியம் இரத்துச் செய்யப்படும் என அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. G.O.No 88. கல்வி நாள் 16.1.1923.
- ✦ திருச்சி மாவட்ட நிர்வாகம் (Distric Bord) ஆதிதிராவிடர் பிள்ளைகளை தனி இடத்தில் தங்கி படிக்க அனுமதி கோரியதை அரசு ஏற்க மறுத்து, ஆதி திராவிடப் பிள்ளைகளையும், மற்ற சாதிப் பிள்ளைகளையும் ஒன்றாகத்தான் படிக்க வைக்க வேண்டும் என்று ஆணைப்பிறப்பித்தது. G.O.No 2015 கல்வி நாள் 11.2.1924.
- ✦ தொடக்கப்பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டத் தொடங்கும் போதே ஆதி திராவிடப் பிள்ளைகள் அணுக முடியுமா? ஏனெனில் கோவில், அக்கிரகாரம், போன்ற இடங்களில் ஆதி திராவிடர் பிள்ளைகளை மற்ற சாதியினர் அனுமதிக்க மறுப்பார்கள் என்பதால் அதை ஆய்ந்து பார்த்து ஆதி திராவிடர் பிள்ளைகள் வருவதற்குத் தடையில்லாத இடத்தில் பள்ளிக் கட்டிடங்களைக் கட்ட அரசு ஆணைப் பிறப்பிக்கப்பட்டது. G.O.No.2333 நாள் 27–11–1922
- ✦ இந்தியாவிலேயே முதன் முதலாக ஆதி திராவிட மாணவர்கள் இலவசமாகத் தங்கி படிக்க. ஆதி திராவிடர் மாணவர் விடுதி திறக்கப்பட்டது. G.O.No.2563 நாள் 24.10.1923.
- ✦ இதைக் கட்டுவதற்கான பணம் முழுவதையும் ஆதி திராவிடர் தலைவர் எம்.சி.ராஜா அவர்களிடமே கொடுத்து கட்டுவித்தார்கள்.
- ✦ 1931க்குள் ஆதி திராவிட மாணவர்களுக்கு மூன்று விடுதிகள் ஏற்படுத்தப்பட்டன. (T.G.Boag ICS. Madras prsidency 1881 - 1931 பக்கம் 132)
- ✦ ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசாணைப் பிறப்பிக்கப்பட்டது. (அரசாணை எண் 1243. நாள் 5.7.1922)
- ✦ ஆதி திராவிட மானவர்கள் எ.எ .எல்.சி. தேர்வு எழுதத் தேர்வுக்கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. (அரசாணை எண் 1241 சட்டம் (கல்வி) நாள் 17.10.1922)
- ✦ ஆதி திராவிட மாணவர்களின் கல்வி நிலையைப் பற்றிய விவரத்தை அரசுக்கு அளிக்கவேண்டும் என்று அரசாணைப் பிறப்பிக்கப்பட்டது. (அரசாணை எண் 859 நாள் 22.06.1923)
- ✦ ஆதி திராவிட வகுப்பு மாணவர்களுக்கு நான்காம் வகுப்பு முதல் கல்வி உதவித்தொகை வழங்கத அரசாணைப் பிறப்பிக்கப்பட்டது. (அரசாணை எண் 1568 சட்டம் (கல்வி) நாள் 06.11.1923)
- ✦ ஆதி திராவிட மாணவர்களுக்கு சில பள்ளிகளில் தனி வகுப்பறைகள் இருந்ததை அரசு கண்டித்தது. ஆதி திராவிட மாணவர்களை அதிக எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளும் கல்வி நிறுவனங்களுக்கு அதிக அளவில் அரசின் பண உதவி அளிக்கப்படும் என்று அரசாணைப் பிறக்கப்பட்டது. (அரசாணை எண் 205 கல்வி நாள் 11.02.1924)
- ✦ மருத்துவக் கல்லூரியில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பின் தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்க அரசாணைப் பிறப்பிக்கப்பட்டது. (அரசாணை எண் 866 (பொது) சுகாதாரம் நாள் 17.06.1922)

சிதம்பரத்தில், சாமி சகஜானந்தம் ஆதித் திராவிடப் பிள்ளைகளுக்கென 1916இல் ஒரு பள்ளியைத் தொடங்கினார். ஆங்கில அரசிடம் நிலம் கேட்டார். அவர்கள் கொடுக்கவில்லை. அவர் திண்ணைப் பள்ளி மாதிரி நடத்தினார். பனகல் அரசர் தான் 50 ஏக்கர் நிலம் கொடுத்து அதை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி அங்கீகாரம் கொடுத்து, ஆண்டு தோறும் அரசின் நிதியுதவி கிடைக்கவும் வழி செய்தார்.

சென்னையில் எல்.சி. குருசாமி அருந்ததியர்களுக்கு 5 பள்ளிகளைத் தொடங்கினார். அதில் நான்கு இரவுநேரப் பள்ளிகள். ஒன்று பகல்நேரப் பள்ளி. பனகல் எல்.சி. குருசாமியை மேலாளராக இருக்க வைத்து அய்ந்து பள்ளிகளுக்கும் அரசின் நிதி உதவியை எல்.சி. குருசாமியிடமே கொடுத்து வந்தார்.

பனகல் அரசர் காலத்தில்தான் ஆதித்திராவிட மாணவர்கள் 3 பேருக்கு வகுப்புரிமையின் அடிப்படையில் மருத்துவக் கல்வியில் இடம் கிடைத்தது. அதேபோல் பொறியியல் மற்றும் வேளாண் கல்லூரியிலும், கால்நடை மருத்துவக் கல்லூரியிலும் இடங்கள் கிடைத்தன. மற்ற பல அரசுப் பணிகளிலும் ஆதித்திராவிடர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார். ஆதித் திராவிடர்களின் நலனைக் காப்பதில் அவருக்கு நிகர் அவரே. இதுவும் பெரியாரை பனகல் பக்கம் இழுத்துச் சென்றதற்கு மற்றொரு காரணம் ஆகும்.

இந்தியாவில் இருந்த வேறு எந்த மாகாணத்திலும் இல்லாத அளவிற்கு நீதிக் கட்சி ஆட்சியில் ஆதி திராவிடர்களுக்குப் பஞ்சமி நிலத்தை வாரி வழங்கியது. நீதி கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு வரை 1920–21 ஆதி திராவிடர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பஞ்சமி நிலம் 19,251 ஏக்கர் மட்டுமே. ஆனால் நீதிக் கட்சி ஆட்சியில் 1931 வரை கொடுக்கப்பட்ட பஞ்சமி நிலம் 3, 42, 611 ஏக்கர் ஆகும். (ஆதாரம் T.G.Boag I.c.s என்ற சென்னை மாகாண அரசின் புள்ளிவிவர அதிகாரி எழுதிய Madras prsidency 1881 - 1931 என்ற நூல் பக்கம் 132.) மேலும் 1935 மார்ச் 31 வரை ஆதி திராவிடர்களுக்கு வழங்கப் பட்ட பஞ்சமி நிலத்தின் அளவு 4, 40, 000 ஏக்கராக உயர்ந்துள்ளதை ஜ டி ஏடு 19.7.1935 இல் சுட்டிக் காட்டியுள்ளது.

கல்வி, சுகாதாரம், பொதுப்பணி போன்ற முக்கிய பணிகளை அப்போது உள்ளாட்சி நிர்வாகங்களே கவனித்து வந்தன. அந்த நிறுவனங்களில் ஆதி திராவிடர் ஒருவரை அரசு நியமனம் மூலம் நிரப்பி அவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தில் பங்களித்தது நீதிக் கட்சியே சென்னை மாகணத்தில் உள்ளாட்சியில் ஆதி திராவிடர் பிரதிநிதித்துவம் பெற்றிருந்த விவரம்:

| 1920–21 | மொத்த எண்ணிக்கை | ஆதி திராவிடர் நியமனம் பெற்றவை |
|---|---|---|
| மாவட்டக்கழகங்கள் (District Boards) | 25 | 17 |
| வட்டக்கழகங்கள் (Taluk Boards) | 125 | 66 |
| நகராட்சிகள் (Municipalities) | 79 | 46 |

| 1924–25 | மொத்த எண்ணிக்கை | ஆதி திராவிடர் நியமனம் பெற்றவை |
|---|---|---|
| மாவட்டக் கழகங்கள் (District Boards) | 24 | 20 |
| வட்டக்கழகங்கள் (Taluk Boards) | 126 | 72 |
| நகராட்சிகள் (Municipalities) | 80 | 61 |

| 1928–29 | மொத்தம் எண்ணிக்கை | ஆதி திராவிடர் நியமணம் பெற்றவை |
|---|---|---|
| மாவட்டக்கழகங்கள் (District Boards) | 25 | 25 |
| வட்டக்கழகங்கள் (Taluk Boards) | 129 | 128 |
| நகராட்சிகள் (Municipalities) | 81 | 81 |

1921 இல் இருந்து 1928க்குள் ஆதி திராவிடர்கள் உள்ளாட்சி நிர்வாகங்களில் 100% நியமனம் செய்யப்பட்டனர்.

(T.G. Boag ICS Madras prsidency 1881-1931 P No. 134)

இந்தியா முழுவதும் 1928இல் இருந்த தாழ்த்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மாகாணம் வாரியாக.

| வ.எண் | மாகாணம் | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சென்னை | 10 |
| 2. | பம்பாய் | 2 |
| 3. | வங்காளம் | 1 |
| 4. | அயக்கிய மாகாணம் | 1 |
| 5. | பஞ்சாப் | – |
| 6. | பீகார் | 2 |
| 7. | மத்திய மாகாணம் | 4 |
| 8. | அ ஸாம் | – |
| 9. | பர்மா | – |

சான்று (எம்.சி. ராஜா வாழ்க்கை வரலாறு எழுத்தும் பேச்சும் ஜெ. சிவசண்முகம் பிள்ளை பக். 35, 36)

இந்தியா முழுவதும் ஆங்கிலேயர்தான்ஆண்டனர். ஆனால் சென்னை மகாாணத்தில் மட்டும் தான் சட்டமன்றத்திற்குத் தாழ்த்தப்பட்டவர்கள் 10 பேர் நியமிக்கப்பட்டனர்.1935 அரசியல் சட்டம் வரும்வரை தாழ்த்தப்பட்டவர் நியமனம் மூலம் மட்டுமே பதவி வகித்தனர். அப்போது டெல்லியில் இருந்த சட்டசபைக்குப் பெயர் (MLA) Member of Legislative Assembly 1928இல் சென்னை சட்டமன்றம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு டெல்லி சட்டசபைக்கு அனுப்பப்பட்ட முதல் தாழ்த்தப்பட்ட உறுப்பினர் எம்.சி.ராஜா தான். நீதிக் கட்சி ஆதரவு பெற்ற டாக்டர் சுப்பராயன் ஆட்சியில் தான் அது நிறைவேறியது. அவர் டெல்லி சென்றதால் தான் அகில இந்திய அளவில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரை ஒருங்கிணைக்க முயற்சி செய்தார்.

ஆதி திராவிடர் பொது இடங்களில் புழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தால் அவர்களுக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்று இரட்டை மலை சீனிவாசன் 22.08.1924 இல் சென்னை சட்ட மன்றத்தில் கொண்டு வந்த தீர்மானத்தையும், வீரய்யன் 24.02.1925 இல் கொண்டு வந்த தீர்மானத்தையும் ஏற்றுக் கொண்டு சத்திரம், சாவடி, அரசு அலுவலங்கள் பொதுச் சாலைகள், பொதுக் கிணறுகள், போன்ற பொதுவான இடங்களில் ஆதி திராவிடர்கள் வருவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களுக்கு ரூ 100 அபராதம் விதிக்கப்படும் என்று அரசாணையில் (Gasate notification 08.04.1925 part IV) தெரிவிக்கப்பட்டது. இந்த அரசாணையைத் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய மொழிகளில் வெளியிட்டதோடு தண்டோரா மூலம் சென்னை மாகாணம் முழுவதும் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆதி திராவிடர்களுக்கு இருந்த சமூகத் தடைகளை நீக்க வழிவகைச் செய்தது நீதிக் கட்சியே.

1927 முதலே சுயமரியாதை இயக்கத்தினரும், நீதிக் கட்சியினரும் பல்வேறு கோயில்களில் ஆதி திராவிடர்களை உள்ளே அழைத்துச் சென்று ஆதி திராவிடர்களின் உரிமைகளுக்காகப் போராடினர். (பார்க்க கோவில் நுழைவுப் போராட்டங்களில் திராவிடர் இயக்கங்களின் பங்களிப்பு வாலாசா வல்லவன்)

அரசுப்பணிகளில் தாழ்த்தப்பட்டோருக்கு, மற்ற பார்ப்பனரல்லதார்களுக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது நீதி கட்சி ஆட்சிதான்.

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அளித்து நிறைவேற்றப்பட்ட முதல் அரசாணை எண் 613 நாள் 16.09.1921இல் வெளியிடப்பட்டது.

இரண்டாவது வகுப்புரிமை ஆணை எண் 652 நாள் 15.08.1922இல் பிறப்பிக்கப்பட்டது. இந்த அரசாணையின் படி வகுப்புரிமை அடிப்படையில் பணியிடம் நிரப்பப்படுவதை உறுதி செய்யும்படி துறைத் தலைவர்கள், உயர்மட்ட நிர்வாக அதிகாரிகள் ஆகியோர் ஆறுமாதத்திற்கு ஒருமுறை அரசுக்கு அளிக்கவேண்டும் என்று ஆணை இடப்பட்டது.

1921 – 22 இல் வகுப்புரிமை ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட போதிலும் பார்ப்பனர்கள் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து அதை நடைமுறைப்படுத்தா வண்ணம் இடையூறு செய்து வந்தனர்.

1924 இல் அரசு பணிகளில் வேலைக்கு ஊழியர்களை அமர்த்துவதற்காக ஒரு ஆணையம் உருவாக்கப்பட்டது.

'Staff Selection board' என்று அதற்குப் பெயர். அது தான் இப்போது T.N.P.S.C ஆக மாறியுள்ளது. 1925 முதல் அரசாங்க ஆண்டறிக்கைகளில் வகுப்பு வாரியாக அரசு ஊழியர்கள் விவரம் வெளியிடப்பட்டு வந்தது. பனகல் அரசர்

ஆட்சிக்காலத்தில் 1927–1926க்குள் ஆதி திராவிடர்கள் காவலர் பணியில் 382 பேரும், தலைமைக் காவலர் பணியில் 20 பேரும், துணை ஆய்வாளர் பணியில் ஒருவரும் அமர்த்தப்பட்டனர். 1935இல் துணைக் கண்காணிப்பாளர் வரை ஆதி திராவிடர் பதவி உயர்வு பெற்றனர். 1927 இல் தான் ஆதி திராவிடர் ஒருவர் இன் பெக்டராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். ('Staff Slection board' அறிக்கை பக் 120.) அந்த காலக்கட்டத்தில் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் ஆதி திராவிடர்களைக் காவல் துறையில் காவலர்களாக கூடச் சேர்த்துக் கொண்டதில்லை என்று எம்.சி ராசா 1928 இல் மத்திய அரசுக்கு அனுப்பிய அறிக்கையில் கூறியுள்ளார். (எம்.சி. ராசா வாழ்க்கை வரலாறும் எழுத்தும் பேச்சும் ஜெ. சிவசண்முகம் பிள்ளை பக் 42)

'Staff Selection board' இல் 7.2.1925 சி. நடேச முதலியார் கொண்டு வந்த சட்ட மன்றத் தீர்மானத்தின் படி கீழ்க் கண்டவாறு இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதனால் பார்ப்பனரல்லாதாரிலும், ஆதி திராவிடர்களிலும் அரசு வேலைக்குச் செல்ல முடிந்தது.

1. பார்ப்பனரல்லாத இந்துக்கள் – 40
2. பார்ப்பனர்கள் – 20
3. முகமதியர்கள் – 20
4. ஆங்கிலோ இந்தியர், இந்தியக் கிறித்துவர் – 10
5. ஆதி திராவிடர்கள் – 10

(ஆதாரம்: சென்னை சட்ட மன்ற விவாதக் குறிப்பு நாள் 27 – 8– 1927 பக்கம் 469)

1930 இல் இராமநாதபுரம் மாவட்ட கழகத் தலைவராக இருந்த ஊ.அ.பூ. சௌந்தரபாண்டியன் பேருந்து முதலாளிகளுக்கு ஒரு உத்தரவை அனுப்பினர். பேருந்துகளில் ஆதி திராவிடர்களை ஏற்ற மறுத்தால் பேருந்து உரிமங்கள் இரத்துச் செய்யப்படும் என்று உத்தரவிட்டார். அந்த மாவட்டத்தில் அக்காலத்தில் சுப்பிரமணியம் என்ற அய்யர் பேருந்தை நடத்தி வந்தார். அவர் பேருந்துப் பயணச் சீட்டுகளிலேயே ஆதி திராவிடர்கள் பேருந்தில் ஏற்றிக் கொள்ளப்பட மாட்டார்கள் என்று அச்சடித்து வைத்திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

நீதிக் கட்சி ஆட்சிக்காலத்தில் எதிர்க் கட்சி வரிசையில் இருந்த டாக்டர் சுப்பராயன் 2.11.32 ஆதி திராவிடர்கள் கோயில் நுழைவு மசோதா ஒன்றைக் கொண்டு வந்தார். அந்த மசோதா சட்ட சபையில் தாக்கல் செய்வதற்கு முன்பே பெரியார்அதை ஆதரித்துக் குடி அரசில் ஒரு தலையங்கம் எழுதினார். அதில் நீதிகட்சியினரையும் அம்மசோதாவை ஆதரிக்கும்படி கேட்டுக் கொண்டார். "ஜ டி கட்சியினரோ, சமூகச் சீர்திருத்தத்தக் கொள்கையையே அடிப்படை நோக்கமாகக் கொண்டவர்கள். அவர்கள் பல ஆண்டுகளாக எல்லா வகுப்பினருக்கும் ஆலயங்களில் சம உரிமை இருக்க வேண்டும் என்னும் விஷயத்தை ஆதரித்து வருபவர்கள், ஆகையால் அவர்கள், தமது எதிர்கட்சித் தலைவர்களால், கொண்டு வரப்படும் மசோதா என்ற அற்பமான காரணத்தை மாத்திரம் கருதி, இந்த நல்ல மசோதாவை எதிர்க்க மாட்டார்கள் என்றே நாம் நிச்சயமாக நம்புகிறோம். ஒரு சமயம் ஜ டி கட்சியினர் திரு சுப்பராயன் அவர்களுடைய கட்சிக்கும் தமது கட்சிக்குமுள்ள அரசியல் அபிப்பிராயங்களை முன்னிட்டும் எதிர்கட்சியினர் எந்த நல்ல மசோதாவைக் கொண்டு வந்தாலும் அதை எதிர்ப்பதே எமது கடமை" என்னும் அரசியல் வஞ்சம் தீர்க்கும் கொள்கையை முன்னிட்டும், இம்மசோதாவை ஆதரிக்காமல் நடுநிலைமை வகித்தாலும், அல்லது எதிர்த்தாலும், அது மிகவும் வெறுக்கத் தக்க செய்கையாகு மென்றே நாம் கூறி எச்சரிக்கிறோம்." (குடிஅரசு 30.10.1932) நீதிக் கட்சியின் சார்பில் டாக்டர் நடேச முதலியார் ஆதரித்துப் பேசினார், இரட்டை மலை சீனிவாசன் என் சிவராஜ் ஆகியோர் பேசிய பின்பு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. ஆதரித்து 56 பேர் வாக்களித்தனர். 19 பேர் நடுநிலையாக இருந்தனர். எதிர்ப்பே இன்றித் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேறியது. ஆனால் பார்ப்பனர்கள் ஆளுநரிடம் தங்களுக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி இம்மசோதாவைச் சட்டமாக்காமல் தடுத்து நிறுத்திவிட்டனர்.

ஆதி திராவிடர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஏராளமான தொகை கடன் உதவியாக அளிக்கப்பட்டுள்ளது. 31.10.1931 இல் சட்டமன்றத்தில் ரங்கநாத முதலியார் நீதிக் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு ஆதி திராவிடர்களுக்குக் கூட்டுறவுச்சங்கள் மூலம் எவ்வளவு கடனாக தரப்பட்டது. அதில் எவ்வளவு தொகை திரும்பப் பெறப்பட்டது என்ற கேள்வியை எழுப்பினார். அதற்கு அரசு தெரிவித்த பதில் வருமாறு:

| ஆண்டுகள் | கடன்கொடுத்த தொகை | கடன் வசூலான தொகை |
|---|---|---|
| 1921 – 22 | 1, 04, 543 | 73, 728 |
| 1922 – 23 | 1, 40, 340 | 87, 886 |
| 1923 – 24 | 93, 005 | 63, 413 |
| 1924 – 25 | 4, 29, 465 | 1, 89, 732 |

| ஆண்டுகள் | கடன்கொடுத்த தொகை | கடன் வசூலான தொகை |
|---|---|---|
| 1925 – 26 | 2, 07, 542 | 76, 748 |
| 1926 – 27 | 5, 53, 283 | 1, 30, 098 |
| 1927 – 28 | 51, 252 | 60, 180 |
| 1928 – 29 | 49, 377 | 1, 21, 897 |
| 1929 – 30 | 63, 068 | 52, 589 |

(ஆதாரம் சென்னை சட்டமேலவை விவாதக் குறிப்புகள் தொகுதி LVIII பக் 268)

அனைவருக்கும் கட்டாயக் கல்விச் சட்டம் G.O.No.376 சட்டம் (கல்வி) நாள் 9.3.1923 தொடக்கக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தனர். நீதிக் கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு கல்வித்துறையில் உயர்கல்விக்கே அதிகமாக செலவழித்து வந்தனர். இதனால் பெரிதும் பயனடைந்தவர்கள் பார்ப்பனர்களே. அதை மாற்றிப் பெருமளவு நிதி தொடக்க கல்விக்குச் செலவழிக்க வேண்டுமென நீதிக்கட்சியின் மாநாடுகளில் வலியுறுத்தப்பட்டது. அதனை ஆட்சிக்கு வந்தவுடன் செயல் முறையிலும் நடைமுறைப்படுத்தினர். தொடக்கக் கல்விக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளித்து வந்த மானியம் விவரம்:

| ஆண்டு | | தொகை |
|---|---|---|
| 1920 – 21 | – | 34, 79, 134 |
| 1921 – 22 | – | 30, 37, 641 |
| 1922 – 23 | – | 41, 72, 787 |
| 1923 – 24 | – | 44, 51, 359 |
| 1924 – 25 | – | 49, 43, 065 |
| 1925 – 26 | – | 55, 37, 396 |

(ஆதாரம் சட்டமன்ற விவாத குறிப்புகள் பக் 407 நாள் 27.8.1927.) அந்தக் காலத்தில் உள்ளாட்சி அமைப்புகள் தான் தொடக்கக் கல்வியைப் – பள்ளிகளை நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

28.7.1929 இல் K.V.A சாமி என்பவர் சட்டமன்றத்தில் 1921 முதல் 1928 வரை புதிதாகத் தொடங்கப்பட்ட தொடக்கப் பள்ளிகள் எத்தனை என்று கேள்வி கேட்டார். அரசு தரப்பில் 19, 095 பள்ளிகள் என்று பதில் அளிக்கப்பட்டது.

1925 – 26 இல் அரசு ஊழியர் வகுப்பு வாரி விவரத்தைச் சென்னை அரசின் நிர்வாக ஆண்டறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிவரம்.

| வ.எண் | வகுப்பு | கெசடட்பதவி | கெசடட் அல்லாத பதவி மாத வருமானம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 100ரூபாய்க் மேல் | 35ரூபாய்க் மேல் | 35ரூபாய்க் கீழ் |
| 1. | பார்ப்பனர் | 402 | 3, 403 | 8, 197 | 928 |
| 2. | பார்ப்பனரல்லாதார் | 215 | 1, 901 | 5, 238 | 29, 357 |
| 3. | ஆதி திராவிடர் | – | 2 | 54 | 1, 175 |
| 4. | முகமதியர்கள் | 53 | 323 | 1, 139 | 9, 445 |
| 5. | ஆங்கிலோஇந்தியர் | 408 | 456 | 106 | 38 |
| 6. | இந்தியக் கிறித்தவர் | 102 | 456 | 643 | 1, 888 |
| 7. | மற்றவர்கள் | 16 | 2 | 17 | 412 |

ஆதாரம்: 1925 – 26 ஆம் சென்னை மாகாண அரசின் ஆண்டறிக்கையின் பக்க எண் 201

| வ.எண் | வகுப்பு | கெசடட் பதவி | கெசடட் அல்லாத பதவி | | |
|---|---|---|---|---|---|
| | | | ரூ100க்கு மேல் | ரூ35க்கு மேல் | ரூ35க்கு கீழ் |
| 1. | பார்ப்பனர் | 656 | 3, 935 | 9, 827 | 1, 400 |
| 2. | பார்ப்பனரல்லாதார் | 361 | 2, 506 | 8, 455 | 35, 769 |
| 3. | ஆதி திராவிடர் | 6 | 27 | 111 | 1, 870 |
| 4. | முகமதியர்கள் | 101 | 404 | 1, 821 | 10, 556 |
| 5. | ஆங்கிலோ இந்தியர் | 392 | 474 | 522 | 22 |
| 6. | இந்தியக் கிறித்தவர் | 10 | 760 | 1, 551 | 2, 648 |
| 7. | மற்றவர்கள் | – | 9 | 26 | 154 |

(1.04.1935 இல் வெளியிடப்பட்ட அரசு ஆண்டறிக்கை பக் 207)

இந்த இரண்டு புள்ளிவிவரங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஆதி திராவிடர்கள், மற்றும் பார்ப்பனரல்லாதார் அரசு வேலைகளில் சற்று அதிகரித்திருப்பதைக் காணலாம்.

முத்தையா முதலியர் பிறப்பித்த உத்தரவில் வகுப்புவாரி சுழற்சி முறை 1928இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பார்ப்பனரல்லாத இந்துக்கள் | 5 | 44% |
| 2. | பார்ப்பனர்கள் | 2 | 16% |
| 3. | முகமதியர்கள் | 2 | 16% |
| 4. | ஐரோப்பியர் ஆங்கிலோ இந்தியர் | 2 | 16% |
| 5. | ஆதி திராவிடர்கள் | 1 | 8% |
| | மொத்தம் | 12 | 100 |

இந்த பனிரெண்டு இடங்களும் சுழற்சி அடிப்படையில் நிரப்பட்டன.

1. பார்ப்பனரல்லாத இந்துக்கள்
2. முகமதியர்கள்
3. பார்ப்பனரல்லாத இந்துக்கள்
4. ஆங்கிலோ இந்தியர் இந்திய கிறித்தவர்
5. பார்ப்பனர்
6. பார்ப்பனரல்லாத இந்துக்கள்
7. ஆதி திராவிடர்
8. பார்ப்பனரல்லாத இந்துக்கள்
9. முகமதியர்
10. பார்ப்பனரல்லாத இந்துக்கள்
11. ஆங்கிலே இந்தியர் இந்தியக் கிறித்தவர்
12. பார்ப்பனர்கள்

இந்த வரிசை அடிப்படையில் தான் பதவிகள் நிரப்பப்பட்டன. ஆதி திராவிடர்களில் படித்தவர் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்ததால் தான் அவர்களுக்குக் குறைந்த அளவு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது.

நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் உயர்கல்வியில் பார்ப்பனர் ஆதிக்கத்தைக் குறைக்க முயற்சி செய்தது. **'கல்லூரி மாணவர் சேர்க்கைக் குழுவைக்**' கலை அறிவியல் கல்லூரி, பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சட்டம் உட்பட அனைத்துக் கல்லூரிகளிலும் ஏற்படுத்தியது.

அந்தக் குழுவில் கல்லூரியின் முதல்வர், நீதிக்கட்சியைச் சார்ந்த துறைரீதியான அறிவுப் பெற்ற அறிஞர் ஒருவர் அந்தத் துறையின் இயக்குநர் (அ) செயலாளர் கல்லூரி முதல்வர் ஆகியோர் அக்குழுவில் இடம் பெற்றிருந்தனர். 50 %

இடங்களுக்கு மேல் பார்ப்பனர் மாணவர்களை சேர்க்கக் கூடாது என்று அக்குழுவிற்கு அரசு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. (அரசு ஆணை எண் 536 கல்வி நாள் 20.05.1922)

1922 ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியில் அக் கல்லூரி மாணவர் சேர்க்கைக் குழுவில் டாக்டர் நடேச முதலியார் இடம் பெற்றிருந்தார். மொத்தம் இடங்கள் 242. பார்ப்பன மாணவர்கள் 167 பேர் விண்ணப்பம் செய்திருந்தனர். 50% அடிப்படையில் 121 பார்ப்பன மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட்டனர் மீதம் 46 பார்ப்பன மாணவர்களை சேர்க்க மறுத்தனர் (Madras mail 21.07.1922) கடந்த இரண்டாயிரம் ஆண்டு இந்திய வரலாற்றில் முதல் முறையாகப் பார்ப்பன மாணவர்களுக்கு இடமில்லை என்று சேர்க்க மறுத்த சமூகப் புரட்சி நீதிக் கட்சி ஆட்சியில் தான் நடைபெற்றது.

7.12.21 இல் சி. நடேச முதலியார் மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையை வகுப்பு அடிப்படையில் தெரிவிக்க வேண்டும் என்றார்.

18.9.22. எ . சீனிவாச அய்யங்கார் மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையை வகுப்பு அடிப்படையில் தெரிவிக்க வேண்டும் என்றார். இவர்கள் இருவர் கேள்விக்கும் அவரவர்கள் கேட்ட தேதியிலேயே சட்ட மன்றத்தில் பதில் அளிக்கப்பட்டது. ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக இரண்டையும் இணைத்துக் கொடுத்துள்ளேன்.

| வ.எண் | | 1921 | 1922 |
|---|---|---|---|
| | மருத்துவர் படிப்பில் சேர்ந்த மொத்த மாணவர் எண்ணிக்கை | 88 | 91 |
| 1. | பார்ப்பனர் | 58 | 33 |
| 2. | பார்ப்பனரல்லாத இந்துக்கள் | 15 | 36 |
| 3. | இந்தியக் கிறித்தவர் | 9 | 15 |
| 4. | ஆங்கிலோ இந்தியர் | 6 | 2 |
| | | 88 | 91 |

மருத்துவக் கல்லூரிச் சேர்க்கையில் 1921க்கும் 1922க்கும் இடைப்பட்ட ஒரு ஆண்டுக் காலத்தில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டுள்ளதைக் காணலாம்.1921 இல் 58 ஆக இருந்த பார்ப்பன மாணவர் எண்ணிக்கை 1922 இல் 33 ஆகக் குறைந்தது. 1921 இல் 15 ஆக இருந்த பார்ப்பனரல்லாத மாணவர் எண்ணிக்கை 36 உயர்ந்துள்ளதைக் (இரண்டு மடங்கு) காணலாம். இது கல்லூரி மாணவர் சேர்க்கைக் குழுவால் ஏற்பட்ட நன்மையாகும்.

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தாங்கள் ஆட்சியில் பணி புரிய உயர் கல்வி படித்த இந்தியர்களை உருவாக்குவதற்காக 1857 இல் சென்னை, மும்பை, கல்கத்தா ஆகிய மூன்று இடங்களில் பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்பட்டன. அவை இந்தியப் பல்கலைக் கழகச் சட்டத்தின் படி இயங்கி வந்தன.

1920 இல் நீதிக் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு 1921 முதலே வகுப்பு அடிப்படையில் மாணவர் சேர்க்கை முதலானவற்றுக்குச் சென்னைப் பல்கலைக் கழகம் இணங்க மறுத்து வந்தது. எனவே நீதிக்கட்சி அரசு 1923 இல் சென்னைப் பல்கலைக் கழகச் சட்டமசோதாவைச் சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றி மாகாண அரசின் கட்டுப் பாட்டில் பல்கலைக் கழகத்தைக் கொண்டு வந்தது. சட்டப்படி கல்வி அமைச்சர் துணை வேந்தருக்கும் மேலாக இணை வேந்தராக்கப்பட்டார்.

பல்கலைக் கழகச் செனட் அவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக உயர்த்தினார். நீதிக் கட்சியினர் பலர் நடேச முதலியார் உட்பட செனட் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். அதன் பிறகு தான் அதில் பார்ப்பனர் ஆதிக்கம் ஒழிக்கப்பட்டது.

உயர்கல்வியில் பார்ப்பனர்கள் மட்டுமே படிக்க வேண்டும் என்ற உள் நோக்கத்துடன் சம கிருதத்தை ஒரு பாடமாகப் படிக்காமல் தமிழ் உள்ளிட்ட எந்த மொழியிலும் பட்டம் வாங்க முடியாத நிலை இருந்தது.

1924 இல் கல்வி அமைச்சராக இருந்த பரசுராம பாத்ரோவ் சட்டமன்றத்திலேயே இது திராவிட அரசு,இந்த அரசின் பணம் திராவிட மொழிகளுக்கு மட்டுமே செலவிடப்படும் என்று அறிவித்ததோடு நில்லாமல் அரசாணையும் பிறப்பித்தார். (அரசாணை எண் 2123 சட்டம் (கல்வி) நாள் 08.12.1925.)

அதன் பிறகு தான் 1925 இல் சென்னை பல்கலைக் கழகச் செனட் கூட்டத்தில் சம கிருதம் படிக்காமலேயே தமிழைப் படித்து புலவர் பட்டம் பெறலாம் என்ற நிலை உருவாயிற்று. 1926 முதல் தமிழை மட்டுமே படித்துத் தமிழ் பண்டிட் பிற்காலத்தில் புலவர் படிப்புப் படிக்கலாம் என்ற நிலை ஏற்பட்டது. 1927 முதல் சம கிருதம் படிக்காமல் பிலிட் படிக்க வாய்ப்பு ஏற்பட்டது.

தமிழ் மொழிக்கே சம கிருதத்திலிருந்து விடுதலை வாங்கிக் கொடுத்தது நீதி கட்சி ஆட்சி தான்.

இங்கிலாந்தில் I.C.S. படித்துவிட்டுத் தமிழகத்தில் வேலைக்கு வருபவர்களுக்குத் தமிழறிவு இருக்க வேண்டும் என்பதற்காகத் தமிழ் லெக்சிகன் தொகுக்கும் பணிக்கு 1906ல் பணம் ஒதுக்கியது ஆங்கில அரசு. பணம் செலவானாதே தவிர ஒரு வேலையும் நடக்கவில்லை. 1921 க்குப் பிறகு பனகல் அரசர் திட்டமிட்டுப் பணம் ஒதுக்கி 1922 இல் தமிழ் லெக்சின் முதல் தொகுதி வெளிவந்தது. நீதிக் கட்சி ஆட்சி முடிவதற்குள் 1936 இல் தமிழ் லெக்சின் ஏழாம் தொகுதி வெளியிடப்பட்டது. அவர்கள் தெலுங்கு மொழிக்கு இப்படி ஒரு லெக்சிகன் உருவாக்கிக் கொள்ளவில்லை. தமிழ் மொழிக்கு மட்டும் தான் செய்தார்கள்.

நீதிக் கட்சி தொடங்கிய காலத்தில் அரசியலில் காங்கிரசின் பேரால் பார்ப்பனர்களே ஆதிக்கம் செலுத்தி வந்தனர். கவர்னர் கவுன்சிலுக்கும், கவர்னர் ஜெனரல் கவுன்சிலுக்கும் பெரும்பாலும் பார்ப்பனர்களே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். இந்த நிலையில் தேர்தல் நடைபெற்றால் பார்ப்பனர்கள் மட்டுமே வெற்றி பெறுவார்கள் பார்ப்பனரல்லாதார்கள் முன்னேறுவது கடினம் என்று கருதிய நீதிக்கட்சியினர் அதன் செயல் தலைவர் டாக்டர் டி.எம். நாயரை இரண்டு முறை இலண்டனுக்கு அனுப்பிப் பார்ப்பனரல்லாதாருக்குத் தேர்தலில் நிற்கத் தனித்தொகுதியைப் பெற்றனர்.

Non. Brahmin Reserved Seat என்ற பெயரில் தான் முதல் அரசாணை வெளிவந்தது.

(MRO Public (Retorms) G.O.335 A May 25 - 1920) பார்ப்பனரல்லாதார் என்ற பெயர் இருக்கக் கூடாது என்று கூறிப் பார்ப்பனர்கள் ஆங்கிலேயே அரசிடம் கோரிக்கைவைத்து ஒரே மாதத்தில் 'முகமதியர் அல்லாத தொகுதி' என்று பெயர் மாற்றம் செய்து விட்டனர். முகமதியர்களுக்கு மிண்டோ மார்லி சீர்திருத்தப் படி 1909 முதலே அரசு வேலைகளில் 25% இட ஒதுக்கீடு, அதே அடிப்படையில் தேர்தல்களில் ரிசர்வ் தொகுதிகளும் வழங்கப்பட்டிருந்தன.

நீதிக் கட்சியை சார்ந்த கிருஷ்ணன் நாயர் 4.7.1921 இல் பெண்களுக்கும் வாக்குரிமை வேண்டும் என்று சென்னை சட்ட சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். 44 பேர் ஆதரித்தனர் 13 பேர் எதிர்த்து வாக்களித்தனர். அதை உடனடியாகச் சட்டமாக்க ஆளுநர் மறுத்தார். 1926 முதல் தான் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.

அதனால் தான் 1927 இல் முத்துலட்சுமிரெட்டி சட்டசபைக்கு நியமனம் செய்யப்பட்டார். அவைத் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட முத்து லட்சுமி ரெட்டி தேவதாசி ஒழிப்பு மசோதாவை முன்மொழிந்தார். அவர் நீதிக்கட்சியினரை நம்பாமல் சர். சி.பி. ராமசாமி அய்யரிடம் கொடுத்து மசோதாவை தயார் செய்திருந்தார். 1.12.1929 இல் அது சட்டமன்றத்தில் நிறைவேறிச் சட்டமானது. ஆனால் 18 வயது நிரம்பிய பெண்கள் தாமாக விரும்பினால் தேவதாசியாக ஆகலாம் என்று அந்தச் சட்டத்தில் ஒரு ஓட்டை இருந்தது.

9.10.1947 இல் ஓமந்தூரார் ஆட்சியில் அமைச்சராக இருந்த டாக்டர் சுப்பராயன் தேவதாசி ஒழிப்பு மசோதாவைக் கொண்டு வந்து தேவதாசியாக மாறும்படி வற்புறுத்துவோருக்கு 500 ரூபாய் அபராதம் ஆறுமாதம் சிறை என்று சட்டம் கொண்டு வந்து அந்த முறையை முற்றிலுமாக ஒழித்தார்.

பெண்கள் முன்னேற்றத்திற்காகச் சுயமரியாதை இயக்கமும் நீதிக்கட்சியும் ஆற்றிய பங்களிப்புகள் ஏராளம். பெண்கள் கல்விக்காகப் பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்கினர். இந்தியாவில் பெண்கள் முன்னேற்றம் எந்த அளவில் இருக்கிறது என்பதை ஆராய்வதற்காக 'அண்டர்' தலைமையில் 1928 இல் ஒரு குழுவை இந்தியா முழுவதும் அனுப்பியது அன்றைய இந்திய அரசு. அக்குழுவின் அறிக்கையில் சென்னை மாகாணத்தில் பெண்களுக்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததைப் பாராட்டியுள்ளது.

பெண்களுக்கு எ .எ .எல்.சி. படிப்பு வரை கட்டணமில்லாமல் இலவசக் கல்வி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இப்படிச் சமூகத்தின் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகவும், அவர்கள் வாழ்வில் முன்னேற்றம் உண்டாக்கவும் பாடுபட்டது. நீதிக்கட்சி ஆட்சி இப்படிப்பட்ட ஒரு நல்ல ஆட்சி இந்தியாவில் வேறு எந்த மாகாணத்திலும் அன்று இல்லை என்பதை வரலாறு நமக்கு காட்டுகிறது.

**இந்துமத பரிபாலன போர்டு:**

தென்னகத்தில் ஆட்சிபுரிந்த அரசர்கள் பெரிய பெரிய கோவில்களைக் கட்டி அவற்றிற்கு ஏராளமான சொத்துக்களையும் வைத்துச் சென்றனர். இவற்றைப் பார்ப்பனர்கள் கொள்ளையடித்து வாழ்ந்து வந்தனர். இந்தப் பார்ப்பனக் கொள்ளையைத் தடுத்து நிறுத்த பனகல் முயன்றார். இந்துமத பரிபாலனைச் சட்ட மசோதா 18.12.1922இல் சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார். கோவில்களின் வருமானத்தை அரசு ஊழியர்களைக் கொண்டு பராமரித்தல், உபரிநிதியைக் கல்வி, மருத்துவம் போன்றவற்றிற்குப் பயன்படுத்துதல் முதலானவை இச்சட்டத்தின் நோக்கமாகும். நீண்ட விவாதத்திற்குப் பிறகு, சுமார் பலத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பிறகு 1923 நவம்பரில் இது சட்டமாக்கப்பட்டது. இதை நடைமுறைப் படுத்துவதற்குள் 1923 நவம்பர் மாதத்தில் முதல் அமைச்சரவையின் பதவிக் காலம் முடிவுற்றது.

இரண்டாவது பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு மீண்டும் 19.11.1923இல் பனகல் அரசரே முதல்வராகப் பொறுப்பேற்றார். இம்முறை ஒரு தமிழர் சிவஞானம் பிள்ளை அமைச்சராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இந்துமத பரிபாலனைச் சட்டத்திற்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காவண்ணம் பார்ப்பனர்கள் சதி செய்து, ஆளுநரும் ஒப்புதல் அளிக்காமல் திருப்பி அனுப்பிவிட்டார்.

பனகல் அரசர் சளைக்கவில்லை. எப்படியாவது இதை நிறைவேற்றியே தீருவது என்று முடிவுசெய்து, மீண்டும் ஒரு மசோதாவை சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார். இம்முறை சத்தியமூர்த்தி அய்யர் சென்னைப் பல்கலைக்கழக பட்டதாரித் தொகுதி மூலமாகச் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அவர் இதை எதிர்த்து ஓயாமல் சட்டமன்றத்தில் பேசினார்; திட்டினார். 475 திருத்தங்களை அவர் ஒருவர் மட்டுமே கொண்டு வந்தார். மொத்தம் 800 சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. திருப்பதி கோவிலுக்கு மட்டும் விலக்கு அளித்தால் ரூ. 5 இலட்சம் கையூட்டு தருவதாக பனகலிடம் பேசிப்பார்த்தனர். எதற்கும் பனகல் மசியவில்லை. 1925 நவம்பரில் வெற்றிகரமாகச் சட்டமாக்கி நடைமுறைப்படுத்தினார். பனகல் அரசுமீது மடாதிபதிகளும் கோவில் நிர்வாகிகளும் 50க்கும் மேற்பட்ட வழக்குகளை உயர்நீதி மன்றத்தில் தொடுத்தனர். இதனால் காங்கிரசில் இருந்த பெரியாருக்கு, பனகல் அரசர் மீது நேசம் ஏற்பட்டது. காங்கிரசை விட்டுப் பெரியார் வெளியேறிய காலகட்டமும் அதுதான்.

பனகல் அரசர் காலத்தில்தான் 1924இல் சென்னை மாகாண அரசுக்கும், மைசூர் சம தான அரசுக்கும், இடையே காவிரி நீர்ப் பங்கீடு ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன் பயனாக மேட்டூர் அணைகட்டத் திட்டம் உருவாக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று 1924 முதல் 1933க்குள் 10 ஆண்டுகளில் 5,91,38,000ரூ. செலவில் கட்டி முடிக்கத்திட்டமிடப் பட்டுச் செயல்படுத்தப்பட்டு 3,10,000 ஏக்கர் பாசன வசதி பெற்றுத் தமிழகம் பஞ்சமில்லாமல் இருக்க வழிவகை செய்தார்.

ஆதிதிராவிடர்களின் நலனுக்காகச் செயல்பட்ட நீதிக் கட்சியைத் தலித்துக்கள் 'மேல்சாதியினருக்கானக் கட்சி' என்று கூறுவதும், சம கிருதப் பார்ப்பன மேலான்மைக்கு எதிராகப் போராடி தமிழ் மொழிக்கு சம கிருதத்திலிருந்து விடுதலைப் பெற்றுத் தந்த நீதிக் கட்சியை 'தெலுங்கர்கள் கட்சி' என்று தமிழ்த் தேசியர்கள் கூறுவதும், உழைக்கும் மக்களின் முனனேற்றத்திற்காகப் பாடுபட்ட நீதிக்கட்சியைப் பொதுவுடைமை வாதிகள் 'நிலக்கிழாரிய கட்சி' என்று கூறுவதும் ஏற்கத்தக்கதல்ல. ஆயிரம் ஆண்டுகளாகச் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களை மற்றச் சாதிமக்களோடு இரண்டறக்கலந்து பழகும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததே நீதிக்கட்சி ஆட்சி தான் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

# பகுதி 3
# பெரியார் தமிழரின் இனப் பகைவரா?

வழக்குரைஞர் பா.குப்பன் பெரியார் மீது சுமத்தும் மற்றொரு குற்றச்சாட்டு ‘‘தமிழ்ப் பார்ப்பனர்களிடம் சினப் பாய்ச்சல்; தெலுங்குப் பிராமணர்களிடம் இனப்பாசம்!’’ (பக் 53) என்று எழுதியுள்ளார். எந்த ஆதாரத்தின் அடிப்படையில் பா.குப்பன் தமிழ்ப் பார்ப்பனர் தெலுங்குப் பார்ப்பனர் என்று வரையறை செய்தார் என்பது அவருக்கே வெளிச்சம். பழந்தமிழகத்தில் பார்ப்பனர் என்ற சாதியே கிடையாது. தொல்காப்பியர் காலக் கட்டத்தில் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு வட இந்தியப் பார்ப்பனர்கள் தமிழகத்தில் வந்துள்ளனர். தொல்காப்பியத்திலேயே வடமொழிச் சொற்களைச் சேர்ப்பதற்கான விதிகளை அவர் உருவாக்கியதிலிருந்தே இதனை நாம் உணர முடிகிறது. பெரியாரியல் வாதிகளும், மார்க்சிய வாதிகளும், உண்மையான தேசிய இன விடுதலையில் அக்கறை உள்ளவர்களும் தலைவர்களின் அரசியல் நடவடிக்கைகளை வைத்தே அவர்களின் அரசியலை மதிப்பீடு செய்ய வேண்டும். அதுதான் முறை. ஆனால் பிறப்பின் அடிப்படையில் பார்ப்பனர்கள் தங்களை உயர்ந்தவர்களாகச் சாத்திரங்களிலும், சட்டங்களிலும் எழுதி வைத்துக்கொண்டும் அதில் அவர்கள் கட்டுப்பாடாகவும் உறுதியாகவும் இருந்துக் கொண்டு மற்ற சமூகத்தினரின் மீது ஆதிக்கம் செலுத்தியதாலேயே திராவிடர் இயக்கத்தால் அவர்கள் எதிர்க்கப்பட்டார்கள்.

இராஜாஜியின் அரசியல் தலைமையைக் காப்பதற்காக ம.பொ.சியால் திட்டமிட்டுப் பரப்பப்பட்டதே தெலுங்கர் ஆதிக்கம் என்பதெல்லாம். அடுத்தது தெலுங்கர் டி.பிரகாசம் முதல்வராக வந்ததற்குப் பார்ப்பனரல்லாதார் கொள்கையே காரணம் என்கிறார்.

1937 தேர்தலிலேயே பிரகாசம் முதல்வர் பதவிக்கு ஆசைப்பட்டார். அவர் ஆந்திரா பகுதியில் காங்கிர கட்சிக்காக வசூலிக்கப்பட்ட தொகை ரூ80,000த்தைச் சாப்பிட்டு ஏப்பம் விட்டு விட்டார். அதனால் அவரை முதல்வர் வேட்பாளருக்குக் காந்தி பரிந்துரைக்கவில்லை. எனினும் 1937 இல் இராஜாஜி அமைச்சரவையில் பிரகாசம் வருவாய்த்துறை அமைச்சராக இரண்டாமிடத்தில் இருந்தார்.

1946 தேர்தலைத் திராவிடர் கழகம் முற்றிலுமாகப் புறக்கணித்தது.திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கையிலேயே அதிதீவிரம் காட்டியது. பிரகாசத்தைப் பெரியார் ஆதரித்தார் என்பதெல்லாம் பச்சைப் பொய்.

1946 தேர்தலிலும் இராஜாஜியே முதல்வராக ஆசைப்பட்டார். காந்தியும் 1946 ஜனவரி மாதம் ‘அரிஜன்’ இதழில் இராஜாஜியை விட்டால் முதல்வர் வேட்பாளருக்கு வேறு தகுதியான நபர் யாரும் இல்லை. எனக்கு அதிகாரமிருந்தால் இன்றே இராஜாஜியை முதல்வர் பொறுப்பில் அமர்த்திவிடுவேன். என்ன செய்வது அந்த அதிகாரம் மாகாண காங்கிர கமிட்டியிடம் உள்ளது என்று கட்டுரை எழுதினார். ஆனால் 1942இல் பாக்கி தான் பிரிவினைக் கொள்கையைக் காங்கிர ஏற்றுக் கொள்ளவில்லை என்றக் காரணத்தைக் கூறி இராஜாஜி காங்கிரசை விட்டு வெளியேறி விட்டார். மறுபடியும் 1945 சூன் மாதத்தில் திரும்ப வந்து காங்கிரசில் சேர்ந்து கொண்டார். ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்தில் கலந்துக் கொள்ளாத இராஜாஜியை முதல்வர் வேட்பாளராக ஏற்றுக்கொள்ள முடியாது எனப் பல காங்கிரசார் காந்திக்குக் கடிதங்களும், தந்திகளும் அனுப்பினர். காங்கிர மேலிடம், தமிழ்நாடு காங்கிர தலைவர் காமராசர், ஆந்திர காங்கிர தலைவர் டி. பிரகாசம், கேரள காங்கிர தலைவர் மாதவ மேனன் ஆகியோரைத் தில்லிக்கு வர வழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது சென்னை மாகணத்தில் மொத்தம் 215 சட்டமன்ற தொகுதிகள் இருந்தன. பலமான எதிர்கட்சி எதுவுமில்லாததால் காங்கிர 163 தொகுதிகளில் வெற்றி பெற்றிருந்தது. தடை நீக்கம் செய்யப்பட்ட இந்தியப் பொதுவுடைமைக்கட்சியினர் முதன் முதலாகத் தேர்தலைச் சந்தித்தனர். 2 இடங்களில் வெற்றி பெற்றனர். காந்தியின் தலையீட்டின் பேரில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இராஜாஜி முதல்வராக வருவதற்கு 38 சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமே ஆதரவளித்தனர். இதனால் இராஜாஜி முதல்வர் வேட்பாளர் பட்டியலில் இருந்து விலகினார்.

ஆந்திர காங்கிர தலைவர் பிரகாசம் முதல்வர் பதவிக்குப் போட்டியிட்டார். அவரை எதிர்த்துப் பக்தவச்சலத்தின் தாய்மாமன் முத்துரங்க முதலியாரைக் காமராசர் நிறுத்தினார். ஆந்திரப் பகுதியைச் சேர்ந்தவர்கள் மொத்தம் 77 சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமே.

வாக்கெடுப்பில் இராஜாஜி குழுவினர் டாக்டர் சுப்பராயன் தலைமையில் 38 பேர் நடுநிலை வகித்தனர். மா.பொ.சியின் எனது போராட்டம் நூலில் 33 பேர் என்று உள்ளது. அது அச்சுப் பிழையாக இருக்கலாம்.

பிரகாசத்துக்கு 82 வாக்குகளும் முத்துரங்க முதலியாருக்கு 64 வாக்குகளும் கிடைத்தன 13 வாக்கு வித்தியாசத்தில் முத்துரங்க முதலியார் தோல்வியுற்றார். இராஜாஜி குழுவினர் நடுநிலை வகித்தற்குக் கூறிய காரணம் மிகவும் முதன்மையானது. **1937 தேர்தலின் போதே ஆந்திர காங்கிரசாருடன் ஒரு உடன் படிக்கைக் செய்து கொண்டோம். அடுத்த தேர்தலில் முதல்வர் பதவி ஆந்திராவைச் சேர்ந்தவருக்குக் கொடுக்க வேண்டும் என்று, ஆகவே நடுநிலை வகிக்கிறோம்** என்றார்கள். சான்று (Wikipedia 1946 Madras presidency election result) ஆக, பிரகாசம் முதல் அமைச்சராக வருவதற்கு இராஜாஜிதான் காரணமே யொழிய பெரியாரோ அல்லது காங்கிரசிலிருந்த பார்ப்பனரல்லாதார் உணர்வோ காரணமல்ல.

இந்த வரலாற்றை ம.பொ.சி அப்படியே திருப்பிப்போட்டார். ''இராஜாஜி சென்னை மாநிலத்தின் முதல்வராக வேண்டுமென்று 1946இல் நான் விரும்பினேன். அதற்காக கோஷ்டி சேர்ந்து பாடுபட்டேன். சகோதர காங்கிர காரர்களிடம் கல்லடியும் சொல்லடியும் பட்டேன். அன்று இராஜாஜியிடம் எனக்கிருந்த பக்தி இன்றும் உண்டு''.... (ம.பொ.சி எனது போராட்டம் பக் 585) இந்தப் புத்தகம் 1974 இல் வெளியிடப்பட்டது.

1971இல் மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியில் காங்கிர வேட்பாளர் அனந்தநாயகியிடம் தோல்வியுற்ற மா.பொ.சியை 1972 இல் தி.மு.க தலைவர் மு. கருணாநிதி சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமித்து அதே ஆண்டில் மேலவைத் துணைத்தலைவராகவும் நியமித்து, அரசாங்க காரும் அரசாங்க பங்களாவும் கொடுத்ததால் குளிரூட்டும் அறையில் இருந்து கொண்டு இரண்டு ஆண்டுகளில் எழுதி 1974 இல் இந்நூல் வெளியிடப்பட்டது. வி.வி.கிரி என்கிற ஆந்திரப் பார்ப்பனர்தான் இந்த நூலை வெளியிட்டார்.

மேலும் ம.பொ.சி. கூறுகிறார். ''இந்த நேரத்தில், இராஜாஜி டில்லி மாநகரில் தம்முடைய மகள் திருமதி லட்சுமி தேவியின் இல்லத்தில் இருந்தார். அதனால் எனது கருத்தை அவருக்கு எடுத்துரைக்கவும் இயலாதவனாக இருந்தேன். ஆனால் எப்படியோ தனது கோஷ்டியினர் நடுநிலை வகிப்பதென்ற எண்ணம் இயற்கையாகவே இராஜாஜிக்குத் தோன்றியது. இந்த நிலையே திரு முத்துரங்க முதலியாருக்கு வெற்றியளித்து விடுமென்று அவர் கருதினாரோ என்னவோ.'' ம.பொ.சி (எனது போராட்டம் பக்கம் 364) அப்படியே வரலாற்றைத் தலைகீழாகப் புரட்டி எழுதிவிட்டார் ம.பொ.சி. முத்துரங்க முதலியார் வெற்றி பெற வேண்டுமென்று இராஜாஜி குழு நினைத்திருந்தால் அவருக்கு வாக்களித்திருக்கலாமே.

தன்னை முதலமைச்சர் பதவிக்கு வரவிடாமல் தடுத்த காமராசர் குழு வேட்பாளர் முத்துரங்க முதலியார் தோற்க வேண்டும் என்று இராஜாஜி கருதியிருக்க வேண்டும். அல்லது தமிழ்த்தேசியர் பார்வையில் கூற வேண்டுமானால் தனது இனமான தெலுங்குப் பார்ப்பனர் பிரகாசம் முதலமைச்சராக வரவேண்டுமென்று அவர் உள்ளூர நினைத்திருக்க வேண்டும்

இராஜாஜி தெலுங்குப் பார்ப்பனரே

இராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றை அவருடைய பேரன் ராஜ்மோகன் காந்தி எழுதியுள்ளார். கல்கி ராஜேந்திரன் தமிழாக்கம் செய்து 1000 பக்கங்களில் வானதி பதிப்பகம் 2010 இல் வெளியிட்டுள்ளது.

''இராஜாஜியின் முன்னோர் திருப்பதிக்கு அருகே வசித்து வந்ததாகத் தெரிகிறது. இந்த தெலுங்குப் பகுதியிலிருந்து மைசூர் மன்னர்களின் ஆட்சியிலிருந்த பல காட் பீடபூமியில் பன்னப் பள்ளி கிராமத்துக்கு வந்து சேர்ந்தார்கள். (பக்கம்5)

இராஜாஜியின் தந்தையார் பெயர் 'வேங்கடார்யா'. சக்ரவர்த்தி என்பது அவர் குடும்பப் பெயர். ஒசூருக்கு அருகில் உள்ள தொரப்பள்ளியில் அவர் முனிசிப்பாக இருந்தார். இராஜாஜிக்குப் பெற்றோர் இட்ட பெயர் 'ராஜகோபாலாச்சார்' (பக் 70)

இராஜாஜியின் தந்தையைச் சக்ரவர்த்தி அய்யங்கார் என்று எல்லோரும் அழைப்பர். **அவர் சம கிருத நூல்களைத் தெலுங்கில் எழுதிப் படித்துச்** சுமாரான ஞானம் பெற்றிருந்தார் (பக்9)

இராஜாஜி பட்டப்படிப்பில், தமிழில் தேர்ச்சியடையவில்லை. சட்டக்கல்லூரியில் சேர்ந்த பின்பு அவர்கள் பட்டப் படிப்பில் தமிழில் தேர்ச்சி பெற்றால்தான் சட்டப்படிப்பில் தேர்வு எழுத முடியும் என்று அறிவித்தனர். மீண்டும் தமிழ்த் தேர்வு எழுதினார். மயிரிழையில் 46/120 மதிப்பெண்கள் பெற்றுத்தேறினர். தன்னுடைய தந்தை யாரிடம் **''தமிழ்ப் பூதத்திடமிருந்து ஒரு வழியாக விடுபட்டு வந்து விட்டேன்''** என்று கூறினார். (பக் 18)

ஆந்திராவில் உள்ள குப்பம் கிராமத்தில் இராஜாஜியின் திருமணம் நடைபெற்றது. குப்பம் கிராமத்தில் தெலுங்கு பேசுவோரே அதிகமாக இருந்தனர். இராஜாஜியின் மனைவியின் பெயர் அலமேலு மங்கம்மாள் (பக்22)

**இராஜாஜியின் மனைவிக்குத் தெலுங்கு மட்டுமே எழுதப்படிக்கத் தெரியும். திருமணத்துக்குப் பின் இாஜாஜி அவருக்குத் தமிழ் சொல்லிக் கொடுத்தார் (பக்45)**

இராஜாஜி வழக்குரைஞர் தொழில் நடத்துவதற்காக அவருடைய குடும்பம் 1900த்தில் சேலத்தில் குடியேறியது.

இராஜாஜி 1952 இல் சென்னை மாகாண முதலமைச்சராக இருந்த போதும் ஆந்திரர்களுக்குச் சார்பாகவே நடந்து கொண்டார்.

வடக்கு எல்லை மீட்புக் குழுச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான கே. விநாயகம் (தி.க,தி.மு.க.வின் ஆதரவோடு), செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் வெற்றிபெற்றவர் ஆச்சார்யா கிருபாளனியின் 'கிஷான் ம தூர் பிரஜா பார்ட்டியின்' (அதாவது விவசாயிகள் தொழிலாளர்கள் மக்கள் கட்சி) வேட்பாளராக அவர் போட்டியிட்டார்.

அந்த கட்சிக்குத் தமிழகத்தில் செல்வாக்கு இல்லை. 1952 தேர்தலில் தி.க, தி.மு.க இரண்டுமே காங்கிரசைக் கடுமையாக எதிர்த்தும், எதிர்கட்சிகளுக்கு ஆதரவாகவும் தீவிர தேர்தல் பிரச்சாரம் செய்ததால்தான் கே. விநாயகம், சி.பா.ஆதித்தனார் போன்றவர்கள் கிஷான் ம தூர் பிரஜா கட்சியில் இருந்தபோதிலும் வெற்றிபெற முடிந்தது.

கே. விநாயகம் திருத்தணியைச் சேர்ந்தவர். எம்.ஏ.எல். படித்து வழக்குரைஞராக இருந்தவர். அவருடைய பகுதி நேரு சர்க்காரால் ஆந்திராவுக்குக் கொடுக்கப்பட்டதால் அதை எதிர்த்து அவர் தீவிரமாகப் போராடினார். அவர்தான் ம.பொ.சி.யை வடக்கு எல்லைப் போராட்டக் குழுவுக்குத் தலைவராக 1953 இல் நியமித்தார். ம.பொ.சி. முதலமைச்சர் இராஜாஜியுடன் நெருக்கமாக இருந்ததால் வடக்கெல்லைப் பிரச்சனையைச் சுமூகமாக முடித்து விட முடியும் என்ற நம்பிக்கையிலேயே கே. விநாயகம் அதைச் செய்தார். அது வரை தி.மு.க.வினரும் வடக் கெல்லைப் பிரச்சனையில் ஒன்றாகவே இருந்து போராடினர். ம.பொ.சி அப்போது குலகல்விக்கு ஆதரவாகத் தீவிரப் பிரச்சாரம் செய்து வந்ததால் அவருடைய தலைமையை ஏற்க முடியாது என்று வ.ஆ.மா.தி.மு.க செயலாளர் ஏ.எல்.சி கிருஷ்ணசாமி செய்தி ஏடுகளுக்கு அறிக்கை யொன்றை அனுப்பினார். நம் நாடு. 12.2.1954 தி.மு.க. வடக்கெல்லைப் பிரச்சனையில் தனித்தே போராடும் என்றும் அறிவித்தார்.

ஆந்திர மாநில மசோதா விவாதத்தின் போது 15–7–1953 இல் சட்டசபையில் பேசிய விநாயகம் சித்தூர் பகுதியின் வரலாற்றை எடுத்துக் கூறிவிட்டு

''I cannot understand why the Government or the Members interested in the Andhara Bill should take objection. It narrates the history of the chittor district. After all it is a history of how the Tamillians were slowly made to appear as Telugus in my parts ''

என்னுடைய பகுதியின் பிரச்சனையை அரசாங்கமோ, உறுப்பினர்களோ புரிந்து கொள்ள மறுப்பது ஏன் என்று எனக்குப் புரிய வில்லை. என்னுடைய பகுதியில் தமிழர்கள் எல்லாம் கொஞ்ச கொஞ்சமாகத் தெலுங்கர்களாக மாற்றப்பட்டு வருகிறார்கள். என்று வேதனையோடு பேசினார்.

அப்போது குறிக்கிட்டு பேசிய முதலமைச்சர் இராஜகோபாலச்சாரியார்.

**"It is a very good thing"** இது நன்றாக இருக்கிறதே என்று கமண்ட் அடித்தார் (ஆதாரம்: சட்ட மன்ற விவாதங்கள் (பக் 153) நாள் 15.7.1953) ஆந்திர மாநில மசோதாவின் விவாதத்தில் பேசிய இந்தியப் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த ப.ஜீவானந்தம் அவர்கள் பேசும்போது சில முக்கியமான செய்திகளைக் கூறியுள்ளார்.

''இந்த மசோதாவைக் கொண்டு வரும்போது நான் ஏற்கெனவே கூறினேன், இந்த அமைப்பு (மொழிவழி மாநில அமைப்பு) தேசிய ஒற்றுமைக்கு ஏற்றதாக இருக்காது என்றும் இது தேசத்திற்கு விரோதம் என்றும் இதில் உள்ளது. மசோதாவில் மார்ச் 25 ஆம் தேதி பாராளுமன்றத்தில் இந்தியப் பிரதமர் நேரு பிரகடனம் செய்தபோது ஆந்திர மாகாணம் அமைந்ததும் உடனடியாக ஒரு கமிஷன் அல்லது பல எல்லைக் கமிஷன்கள் ஏற்படுத்தி எல்லைகள் நிர்ணயிக்கப்படும் என்று கூறினார். இன்று இருக்கக் கூடிய எல்லையைக் கொண்டு ஆந்திர ராஜ்யம் அமைக்கப்படும் என்றும் பிறகு எல்லைக் கமிஷன் நியமிக்கப்படும் என்றும் கூறினார். ஆனால் இன்று இந்த மசோதாவில் என்ன பார்க்கிறோம் எல்லைக் கமிஷன் நிர்ணயம் செய்யப்படுவது துண்டு விழுந்திருப்பதைப் பார்க்கிறோம். எங்கு தேடிப் பார்த்தாலும் ஒரு இடத்திலாவது எல்லைக் கமிஷன் அமைக்கப்பட வேண்டியதைப் பற்றி இந்த மசோதாவில் கூறவே இல்லை. என்பதை நாம் பார்க்கவேண்டும்''...

இராஜாஜி தயாரித்த ஆந்திர பிரிவினை மசோதாவில் எல்லைக் கமிஷன் வேண்டும் என்ற விதி உருவாக்கப்படவில்லை.

''ஆகவே நான் சொல்லுகிறேன் மொழி வாரியாக மாகாணங்கள் அமைப்பதில் அமைத்துக் கொள்வதில் சகோதரச் சண்டைகள் வேண்டாம். நமக்குள்ளேயே ஒருவருக்கொருவர் போராட்டங்கள் தற்போது எழுந்திருக்கிற சண்டையும் கூட இந்தத் தாலுகா அத்துடன் சேருவதா, இத்துடன் சேருவதா என்ற எல்லையை நிர்ணயப்பதில் ஏற்பட்டிருக்கும் தகராறு

தான். எல்லைகளைச் சண்டை சச்சரவுகள் இன்றிச் சமாதான முறையிலேயே, ஜனநாயக ரீதியாக நிர்ணயிக்க முடியும் என்று தான் கம்யூனி டு கட்சி கூறுகிறது. (சட்ட மன்ற விவாதங்கள் பக்–171–176 நாள் 15–7–1953). இப்படிச் சட்டமன்றத்தில் பேசிய ஜீவானந்தமும் அவருடைய கம்யூனி டு கட்சியும் வடக் கெல்லைப் போராட்டத்தில் தமிழகத்துக்குத் துரோகமே இழைத்தது. அதை ஜீவானந்தமே ஜன சக்தி தலையங்கத்தில் எழுதியுள்ளார்.

'புதிய தமிழகம்' என்ற தலைப்பில் 26–7–52 இல் ஜீவா ஒரு தலையங்கம் எழுதியுள்ளார்.

''திருப்பதி வரையில் சித்தூர் ஜில்லாவின் பகுதிகள் தமிழகத்தோடு இணைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையில் கிஞ்சிற்றும் நியாயமில்லை. 'சித்தூர் ஜில்லாவும், திருப்பதியும் ஆந்திரர்களுக்கே உரியது' என்று தமிழ்நாடு கம்யூனி டு கட்சி 1948–லேயே மிக விளக்கமாக அறிக்கை வெளியிட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கும் சென்னை ஆந்திரர்கள் கோருகிற தவறுக்குக் குறையாத தவறு. சரித்திர பூர்வமாகத் திட்டவட்டமாக ஆந்திர பிரதேசமாக உருவாகிவிட்ட சித்தூர் ஜில்லாவையும் திருப்பதி நகரையும் தமிழ்நாட்டோடு இணைக்க வேண்டும் மென்று கோருவதும், இலக்கியத்தில் காணப்படுகிற சில எல்லைக் கோடுகளைக் கொண்டு யதார்த்த வாழ்வில் சரித்திர பூர்வமாக உருவாகி வந்திருக்கிற, தேசிய இன மக்களின் பிரதேசங்களை மாற்றி அமைத்துவிட முடியும் என்பது நியாயமல்ல. சரித்திரத்திற்குப் புறம்பானது என்பதைத் தமிழ் மக்கள் நிதானமாகச் சிந்திக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்'' (ப.ஜீவா. ஜனசக்தி 26.7.1952)

கம்யூனி டு கட்சி உறுப்பினர்களைப் பொறுத்த வரை சட்ட சபையில் என்ன பேசினாலும் வாக்கெடுப்பு என்று வருகிறபோது தங்கள் கட்சியின் நிலைபாட்டையே ஆதரிப்பார்கள். ''கம்யூனி டு கட்சியினர் சட்டமன்றத்தில் ஆந்திராவுக்கு ஆதரவாக வாக்களித்ததுபோல், தெற்கெல்லை போராட்டத்தில் கேரளாவுக்குச் சாதகமாக வாக்களித்து விட வேண்டாமென்று அ.கோவிந்தசாமி மொழி வாரி மாநில சீரமைப்பு ஆணையத்தின் விவாதத்தின் போது சட்ட மன்றத்தில் கூறினார்...(சட்டமன்ற விவாதங்கள் பக் 296 நாள் 23–11–1955)

ஆந்திர மாநில மசோதாவின் மீது பேசிய அ. கோவிந்தசாமி (இவர் 1952 இல் நடைபெற்ற சட்ட மன்றத் தேர்தலில் தி.க,தி.மு.க. ஆதரவால் உழைப்பாளர் கட்சி விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றவர். அக்கட்சித் தலைமை காங்கிர ஆதரவு போக்குக்குச் சென்றவுடன் இவர் தி.மு.க.விற்கு வந்துவிட்டார்).

15.7.53 அன்று சட்டமன்றத்தில் பேசிய அவர். ''இன்றைய தினம் வடநாட்டினர், டில்லி சர்க்கார், நம்மை அடிமைப்படுத்திக் கொண்டு, தென்நாட்டை வியாபார தலமாக வைத்துக்கொண்டு சுரண்டும் இடமாகவும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கு நாம் என்ன பார்க்கிறோம் – சேட்டுகளும் மார்வாடிகளும் மெத்தையில் படுத்துக்கொண்டு வியாபாரம் செய்யும் நிலைமையை நாம் இப்பொழுது பார்க்கிறோம். இதையெல்லாம் ஒழிக்க வேண்டும் என்பதற்காகவும்தான் பெரியாரும் அறிஞர் அண்ணாவும் ஜவுளிக் கடையின் முன்பாக, வடநாட்டார் வியாபாரம் செய்யும் கடைகளின் முன்பாக தியாகம் செய்து மறியல் செய்தார்கள். இதை அடிப்படையில் வைத்து கொண்டுதான் மொழி வாரி மாகாணம் முதலில் பிரிந்து இறுதியில் இனத்தின் அடிப்படையில் நாம் ஒன்று பட்டு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் வேலை செய்து வருகின்றன. இது எல்லோருக்கும் தெரியும். திராவிடம் பிரிய வேண்டும் என்பதற்காகத்தான் மதிப்புக்குரிய மாணிக்க வேலு நாயக்கர் அவர்களும், பக்தவச்சலு அவர்களும், இன்னும் இந்தப் பக்கத்திலுள்ள 38 பேர்களும் கையெழுத்திட்டுச் சென்றத் தேர்தலில் வெற்றிபெற்றோம். நாம் வடநாட்டை விட்டுப் பிரிந்து சுகமாக வாழவேண்டும் என்று தீர்மானித்தோம். காரணம் வட நாட்டார்கள் வரிகளையும், வருமானத்தையும் வாங்கிக் கொண்டு போகிறார்கள். இன்னும் சுரண்டல் மூலமாகவும் இன்சூரன் மூலமாகவும், பாங்குகள் மூலமாகவும் சேட்டுகள் சுரண்டிக் கொண்டு போகிறார்கள். ஏன்? கல்லக்குடியை டால்மியாபுரம் என்று மாற்றும் போது எதைத்தான் செய்ய மாட்டார்கள். அதைப் போலவே சென்னையில் சௌகார்பேட்டை என்று பெயர்வைத்திருக்கிறார்கள் ஏன்? டில்லியில் காமராஜ் பேட்டை என்ற பெயரை வைக்க முடியுமா? அல்லது ராஜாஜிபேட்டை என்றுதான் வைக்க முடியுமா? நமது ராஜாஜி அவர்களும் அங்கு கவர்னர் ஜெனரலாகத் தான் இருந்தார். அப்படி இருந்தும் அவருடைய பெயரை அங்கு வைக்க முடியுமா? ஒருக்காலும் வைக்க முடியாது...... இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் பெயரால் தன்னுடைய 60 ஆவது வயதில் பெரியாரும், தாளமுத்து நடராஜனும் இன்னும் பல தோழர்கள் சிறைச் சென்றார்கள்.. தாளமுத்துவும் நடராஜனும் சிறையில் பலியானார்கள். அதற்காகவே தான்! அண்ணாவும் போராட்டத்தை நடத்தினார்.... மொழியின் பெயரால் ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்பதற்காகத்தான்... நேரு தலைவராக இருக்கும் வரையில் வடநாட்டு ஆதிக்கம் இருக்கும் வரையில் தீர்ப்புகிடையாது. வாஞ்சுவை அனுப்பக் கூடிய வடநாட்டு ஆதிக்கம் இருக்கும் வரையில் நமக்குத் தீர்ப்பு கிடையாது. நாம் சுபிட்சமாக வாழ முடியாது. நாம் சுமூகமாக பங்கிட்டு கொள்ள முடியாது. அந்த ஆதிக்கம் இருக்கும் வரையில் குரங்கு அப்பத்தைப் பங்கிட்டுக் கொடுத்தது போல தான் ஆகும். இப்பொழுது இருக்கும் நிலைமையில் தமிழர்களுக்கும் ஆந்திரர்களுக்கும் கசப்பு, மலையாளிகளுக்கும் கன்னடியர்களுக்கும் கசப்புக் இதெல்லாம் ஏன் வருகிறது. நம்முடைய அதிகாரத்தை எல்லாம் வட நாட்டார் வைத்திருக்கிறார்கள். நாம் பிரிந்து கொள்ளக் கூட நமக்கு உரிமை இல்லை. நமக்கு எவ்விதமான உரிமையும் இப்போது இல்லை.

நாட்டில் எந்த விதமான கிளர்ச்சி வந்தாலும் மொழி ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. ஆகவேதான் ஆக டு 1 ஆம் தேதியன்று பெரியாரும் அண்ணாவும் தமிழ் நாட்டில் திருப்பதியிலிருந்து தூத்துக்குடி வரையிலுள்ள ரயில்வே நிலையங்களிலுள்ள இந்திமொழியை அழித்தார்கள். இந்திக்கு இங்கு என்ன இடம் இருக்கிறது? அன்று வெள்ளைக்காரன் மவுண்ட் பேட்டன் இருந்த இடத்தில் இன்று ராஜேந்திர பிரசாத் இருக்கிறார். அன்று ஹோப் இருந்த இடத்தில் இன்று ஸ்ரீ பிரகாசா (கவர்னர்) இருக்கிறார். அப்பொழுது எவ்வளவு சம்பளம் கொடுக்கப்பட்டதோ அவ்வளவு சம்பளம் தான் இப்பொழுதும் கொடுக்கப்பட்டு வருகிறது. வெள்ளைக்காரன் சுரண்டல் அப்பொழுது எப்படி இருந்ததோ அப்படித்தான் இப்பொழுதும் இருக்கிறது. அவர்கள் வியாபார முறையில் வந்து இங்கிருந்து சுரண்டிக் கொண்டு போனார்கள். அன்று அவர்கள் எஜமானராக இருந்தார்கள். இன்று வடநாட்டினர் எஜமானர்களாக இருக்கிறார்கள்''....

''போராட்டம் நடக்கும் போது நானும் திருத்தனிக்குப் போயிருக்கிறேன். அங்கு பெருவாரியாகத் தமிழ் பேசுகிறார்கள். எந்தப் பக்கங்களில் தமிழ் பேசுகிறார்களோ அந்தப் பக்கங்களை தமிழ் நாட்டுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதைப் போலவே எங்கு தெலுங்கர்கள் அதிகமாக இருக்கிறார்களோ அந்தப் பகுதியை ஆந்திர ராஜ்யத்துடன் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

''ஆந்திரர்கள் புதிதாகத் தங்கள் ராஜ்யத்திற்குத் தலைநகரம் ஏற்படுத்த வேண்டும், அதற்காக நஷ்ட ஈடு கோருகிறார்கள் என்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் சொத்தை ஜனத்தொகை வாரியாகப் பிரித்திருக்கிறார்கள். அதே முறையில் கடனையும் பிரித்திருக்க வேண்டும். கடனை அப்படிப் பங்கிடாமல், தமிழர்களே கடனை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சொல்வதில் நியாயமில்லை. ஒரு குடும்பத்தில் சகோதர்களுக்குள் பாகம் பிரிகின்ற போது. சொத்தையும் பிரிப்பார்கள் கடனையும் பிரிப்பார்கள். அந்த முறையில் பிரித்திருக்கலாம். ஆனால் அப்படிப் பிரிக்கவில்லை.''

இராஜாஜி ஆந்திர அரசுக்கு புதிய தலைநகரை உருவாக்க 2.30 கோடி கொடுக்கவேண்டும் என்ற விதியை சேர்த்திருந்தார்.

''இராஜாஜி அவர்களுக்கு ஒரு வேண்டுகோள்; பல ஆயிரக்கணக்கான மக்கள் சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள், சுட்டுக்கொல்லப்படுகிறார்கள், நாடு பிரிகின்ற இந்த நல்ல நேரத்தில், இராஜாஜி கொண்டு வந்திருக்கின்ற புதுக் கல்வித் திட்டத்தை (குலக்கல்வித்திட்டத்தை) வாப வாங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.'' ஆதாரம் (சட்டமன்ற நடவடிக்கை பக் 186 முதல் 190 வரை நாள் 15–7–1953)

ம.பொ.சி. அப்போது சட்ட மேலவையில் உறுப்பினராக இருந்தார். அப்போது அவர் பேசியதாவது ''மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இந்தக் கவுன்சிலின் முன்பு வைத்துள்ள ஆந்திர ராஜ்ய அமைப்பு மசோதாவை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்...

இந்த எல்லைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஒரு நியாயம் நடந்திருக்கவேண்டும். சித்தூர் ஜில்லா தகராறுள்ள பிரதேசமாக இருப்பதால் அதை எஞ்சிய சென்னை ராஜ்யத்தோடு சேர்ந்திருக்கவேண்டும். சித்தூர் ஜில்லா தகராறுள்ள ஜில்லா என்று முத்திரைப்போட்டு எஞ்சிய சென்னை ராஜ்ஜியத்தில்தான் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். அப்படியில்லாமல் மொழியின் அடிப்படையிலே அமைக்கப்படுகிற ஆந்திர ராஜ்ஜியத்தில் தகராறுள்ள இந்தச் சித்தூர் ஜில்லாவை சேர்த்திருக்கக்கூடாது. எஞ்சிய சென்னை ராஜ்ஜியத்தில் சேர்க்காமல், ஆந்திர ராஜ்ஜியத்தில் சேர்ப்பதற்கு நியாயமில்லை. **ஆனால், சந்தர்ப்பம், சூழ்நிலை, தயக்கம், முதலிய விஷயங்கள் வேறுவிதமாக மாற்றி அமைத்து விட்டது. ஆயினும் இதைப் பெரிதாகக் கொள்ளாமல்** எல்லைக் கமிஷன் அமைக்கப்படும் வரையில் பொறுத்திருந்தது. இதற்கு முடிவு காண்பதில் ஆட்சேபனை ஒன்றுமில்லை. ஆகவே எல்லைக் கமிஷன் சீக்கிரமாக வரவேண்டும்.....

ஏற்கெனவே பிரிந்துபோன ராஜ்ஜியங்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்படவில்லை. ஆனால் இங்கே மட்டும் நஷ்டஈடு என்ற ஒரு பிரிவு இருக்கிறதைப் பார்க்கும்போது ஒரு புது சம்பிராதயமாக இருக்குமோ என்று தோன்றுகிறது. இப்படி கொடுக்க உத்தேசித்திருப்பதை நஷ்டஈடு என்று சொல்லாமல், சகோதரர்களுக்கு செய்யும் உதவி என்று வேண்டுமானால் சொல்லலாம், கொடுக்கலாம்'' என்று கூறுகிறார். எந்த பெயரில் கொடுத்தாலும் தமிழகத்தின் பணம் ஆந்திராவுக்குத் தானே போகும். (சட்டமேலவை விவாதங்கள் பக் 111–116 நாள் 21.7.53)

திருத்தணி, சித்தூர், திருப்பதி முதலான பகுதிகளை ஆந்திராவோடு இணைத்து இராஜாஜி ஆந்திரா பிரிவினை மசோதா தயாரித்திருந்தார். ம.பொ.சி. இதைப் பெரிதுப்படுத்த வேண்டாம் என்கிறார். தேவிகுளம் பீர்மேடு கேரளாவுக்கே சொந்தம் என்றபோது காமராஜர் ஆட்சி பதவி விலக வேண்டும் என்று கூறிய ம.பொ.சி. இராஜாஜி செய்தியில் இதை பெரிதுப்படுத்த வேண்டாம் என்கிறார். இவர்தான் வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுத் தலைவர்.

காங்சிர கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் கோசல்ராமன் பேசிய அளவுக்குக்கூட ம.பொ.சி. பேசவில்லை. இராஜாஜிக்கு சார்பாகவே பேசியுள்ளார் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. திருவில்லிப்புத்தூர் காங்கிர சட்டமன்ற

உறுப்பினர் கே.டி.கோசல்ராமன் ஆந்திர பிரிவினை மசோதாவின் மீது சட்டமன்றத்தில் இராஜாஜின் ஆந்திர ஆதரவுப் போக்கை வன்மையாகக் கண்டித்தார்.

''இந்த ராஜ்யத்தின் தலைவராகிய கனம் இராஜாஜி அவர்கள் பிரிந்துபோகின்ற ஆந்திரர்களுக்குச் சலுகைக் காட்டும் வகையில் தமிழர்களுடைய உரிமைகளை ஏன் விட்டுக்கொடுக்க வேண்டுமென்றுதான் நான் கேட்கிறேன்? எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்று நீங்கள் கேட்கலாம். சித்தூர் ஜில்லாவில் 6 தாலுக்காக்கள் தமிழர்கள் வாழுகின்ற பிரதேசம். தமிழ் காலாச்சாரம், நாகரீகம், இலக்கியம் தழைத்திருக்கின்ற பிரதேசம். அதையும் ஆந்திர மாகாணத்தோடு சேர்ந்திருப்பதைக் கண்டு அங்குள்ள தமிழர்கள் உள்ளம் குமுறுகிறார்கள். புள்ளி விவரங்களுடன் கூட அந்தத் தாலுக்காக்கள் தமிழர்களுடைய தாலுக்காக்கள் தான் என்று நிரூபிக்கிறார்கள்..... **சந்திரகிரி தாலுக்கா என்றத் திருப்பதிதான் நமது மதிப்பிற்குரிய தலைவர் கனம் இராஜகோபாலாச்சாரியார் அவர்களின் பரம்பரையினர் பிறந்த இடம். அங்கிருந்து வந்தவர்தான் நமது சக்கரவர்த்தி இராஜாஜி அவர்கள்.** அப்படி இருக்கும்போது கனம் இராஜாஜி அவர்கள் அந்த தாலுக்காக்களையெல்லாம் ஆந்திரர்களுக்கு விட்டுக்கொடுக்க எப்படி முன் வந்தார்கள் என்றுதான் தெரியவில்லை.''

**''முதலமைச்சர் இராஜாஜி குறிக்கிட்டு அது அவருடைய தாராள குணத்தினால்''** அவையில் ஒரே (சிரிப்பு)

கே.டி.கோசல்ராமன்: ''தன்னுடைய தாராள குணத்தினால்தான் விட்டுக் கொடுத்திருப்பதாக கனம் இராஜாஜி சொல்லுகிறார்கள். தமிழர்கள் எல்லோரும் தாராள மனப்பான்மையும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும்தான் உடையவர்கள். ஆனால் மிக அதிகமான தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்படுகிறபோது அதை தாராளமான மனப்பான்மையென்று சொல்லி விட்டுக் கொடுக்கவே முடியாது. தமிழர்கள் எல்லோரும் இன்றைய தினம் என்னச் சொல்லுகிறார்கள் என்றால், கனம் இராஜாஜி அவர்கள் ஆந்திரர்களுக்கு சலுகைக் காட்டுகிறார்களே தவிர தமிழர்களின் உரிமையைக் காக்க முயற்சிக்கவில்லை என்று கூறுகிறார்கள்....

பெல்லாரி ஜில்லாவை எத்துடன் சேர்ப்பது என்று விசாரிக்க ஒரு நீதிபதியை அனுப்பினார்களே, ''நீதிபதி மி ரா'' அது மாதிரியாக சித்தூர் ஜில்லாவைப் பற்றியும் விசாரணை செய்து ஒரு முடிவு அறிவிக்க ஏன் ஒரு நீதிபதியை அனுப்பக்கூடாது என்று நான் கேட்கிறேன்? கனம் இராஜாஜி அவர்கள் இதில் கவனம் செலுத்த வேண்டும். தமிழர்களின் உரிமைகளை விட்டுவிடக் கூடாது. ஏன் இந்த ஆந்திர மாகாணப் பிரிவிணை மசோதாவிலேயே, சித்தூர் ஜில்லாவிலுள்ள ஆறு தாலுக்காக்கள் நீங்கலாக இதர சச்சரவு அற்ற பிரதேசங்களைக் கொண்டு ஆந்திர மாகாணம் அமைக்கப்படுமென அறிவிக்கக்கூடாது என்று தான் நான் கேட்கிறேன்'' (சட்டமன்ற விவாதங்கள் பக் 54, 55 நாள் 14.07.1953)

இராஜாஜி ஆந்திரர்களுக்கு சார்பாகவே இம்மசோதாவை தயாரித்திருந்தார் என்பதை காங்கிர கட்சியின் சட்டமன்ற உறுப்பினரே சட்டசபையில் இராஜாஜி முன்னிலையிலேயே கண்டித்துப் பேசியது குறிப்பிடத்தக்கது. ஆந்திர பிரிவிணை மசோதாவின் மீது பேசிய பிரகாசம் ''வ.ஆ.மாவட்டம், சேலம், கிருஷ்ணகிரி, ஒசூர் கூடவே இராஜாஜியையும் சேர்த்து எடுத்துக் கொள்வோம் ஏனென்றால் இராஜாஜியும் தெலுங்கை தாய்மொழியாகக் கொண்ட தெலுங்கர்தான் என்று பேசினார். அப்போது குறிக்கிட்டு பேசிய முதலமைச்சர் இராஜாஜி பிரகாசம் ஆங்கிலத்தில் பேசவே இராஜாஜியும் ஆங்கிலத்தில் **''(you take me or Hosur)''** நீங்கள் என்னை எடுத்துக் கொள்ளப் போகிறீர்களா அல்லது ஒசூரையா? என்று கேட்டார். அதற்கு பதிலளித்த பிரகாசம் ஒசூரையும் எடுத்துக் கொள்வோம். உங்களையும் அழைத்துக் கொள்வோம்'' என்றார். (சட்டமன்ற விவாதங்கள் பக். 342, 343 நாள் 16.07.1953)

புதுதில்லியில் நாடாளுமன்றத்தில் ஆந்திர பிரிவினை மசோதாவின் மீது நடைபெற்ற விவாதத்தில் பேசிய சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எ .வி.இராமசாமி சென்னை மாகாணத்தில் கடந்த பல ஆண்டுகளாக முதலமைச்சர்களாக இருந்தவர்களில் இரண்டு பேர்தான் தமிழர்கள் ஒருவர் டாக்டர் சுப்பராயன் மற்றொருவர் இராஜாஜி என்று கூறினார். இதற்கு மறுப்பு தெரிவித்த எல்லூரு நாடாளுமன்ற உறுப்பினர் பி.எ .மூர்த்தி **இராஜாஜி தெலுங்கர் அவரை நீங்கள் உரிமைக் கொண்டாடக்கூடாது என்றார். அவர் தெலுங்கு மனிதரேதான் அதில் எந்த சந்தேகமும் வேண்டாம். நாங்கள் தான் அவரை உங்களிடம் விட்டு வைத்தோம் என்று மீண்டும் கூறினார். சக்ரவர்த்தி என்பது அவரது குடும்பப் பெயர்தான்.** அதை வைத்து ஏமாற வேண்டாம் என்றும் கூறினார். (நாடாளுமன்ற விவாதங்கள் பக். 1530 நாள் 22.08.1953)

இராஜாஜி தெலுங்கர்தான் என்பது, சட்டமன்றப் பதிவேட்டிலும், நாடாளுமன்றப் பதிவேட்டிலும் இடம் பெற்றுள்ளது. ம.பொ.சி. தன்னுடைய சுயநல அரசியலுக்காக இராஜாஜியைத் தமிழ்ப் பார்ப்பனர் என்று கூறி தமிழர்களை ஏமாற்றி விட்டார்.

ஆந்திர மசோதாவில் இராஜாஜி ஆந்திரர்களுக்குச் சார்பாகவே அந்த மசோதாவை தயாரித்திருப்பது மேற்கண்ட சட்டமன்ற உரைகளிலிருந்தே நாம் தெரிந்து கொள்ளலாம்.

சென்னை நகர் பிரச்சினையிலும் இராஜாஜி ஆந்திரர்களுக்குச் சார்பாக இருந்தார் என்பதையும் ம.பொ.சி.யின் எனது போராட்டம் நூலே சாட்சியாக உள்ளது.

இராஜாஜியின் ஊசலாட்டம் என்ற தலைப்பில் ம.பொ.சி கூறுவதாவது.

''மாநகராட்சியின் சிறப்புக் கூட்டம் நடைபெறவிருக்கும் செய்தியைப் பத்திரிக்கைகளில் பார்த்ததும் மேயரையும் என்னையும் இராஜாஜி தமது இல்லத்திற்கு அழைத்துப் பேசினார். ''ஆந்திர அரசுக்குத் தற்காலிகமாகக் கூட சென்னையில் இடம் தரக் கூடாது'' என்ற வாசகத்தைத் தீர்மானத்திலிருந்து நீக்கி விடும்படி மேயரையும் என்னையும் இராஜாஜி கேட்டுக் கொண்டார்'' (ம.பொ.சி. எனது போராட்டம் பக் 632) இதற்குப் பொருள் என்ன? ஆந்திரர்களுக்குச் சென்னையில் தற்காலிகத் தலை நகரமாக இருக்க இடம் தர வேண்டும் என்பது தானே.

பிரிந்து செல்லும் ஆந்திர சட்டமன்ற மற்றும் மேலவை உறுப்பினர்களுக்குப் பிரிவு உபச்சார விழா 30.7.53 அன்று பேரவையில் நடைபெற்றது. அப்போது பேசிய பிரகாசம் அவர்கள் **இராஜாஜி ஆந்திராவைச் சேர்ந்தவர் அவரை நாங்கள் அழைத்துக் கொள்வோம் என்று கூறினார்.** அன்று பேரவையில் பேசிய தி.மு.க உறுப்பினர் அ.கோவிந்தசாமி ஆந்திர உறுப்பினர்களைப் பாராட்டி விட்டு முடிக்கும் தறுவாயில் ''கடைசியாக ஒரு வேண்டுகோள்; **கனம் பிரகாசம் அவர்கள் பேசும்போது சொன்னார், கனம் இராஜாஜி அவர்களும் ஆந்திராவைச் சேர்ந்தவர் தான் என்றும், அதனால் தன்னுடன் அழைப்பேன் என்றும் சொன்னார். அவ்விதம் அழைத்து கனம் இராஜாஜி அந்த நாட்டிற்குப் போய் விட்டால் சந்தோஷமாக இருக்கும். நாட்டில் குழப்பம் இருக்காது என்று சொல்லிக் கொண்டு இத்துடன் முடித்து கொள்கிறேன் என்றார்.''**

(ஆதாரம்: சட்டப்பேரவை நடவடிக்கைகள் பக். 1807 நாள் 30.7.1953) அன்று ம.பொ.சி.யும் சட்ட மேலவையில் தான் வீற்றிருந்தார்.

இதிலிருந்து தெரிந்து கொள்வது என்னவென்றால் இராஜாஜி தெலுங்குப் பார்ப்பனர் என்பதும் அவருடைய செயல்பாடுகள் ஆந்திரர்களுக்கு ஆதரவாகவே இருந்தது என்பதும் வெளிப்படையான உண்மையாகும். ம.பொ.சி. தன்னுடைய சுயநலத்திற்காக இராஜாஜி தமிழ்ப் பார்ப்பனர் என்ற பொய்யைக் கட்டவிழ்த்தார். அதை நம்பிய முனைவர் அருகோ, வழக்குரைஞர் பா.குப்பன், பழ. நெடுமாறன், பெ.மணியரசன், ராஜேந்திர சோழன் உள்ளிட்ட தமிழ்த் தேசியவாதிகள் உண்மையைக் கண்டறியாமல். ம.பொ.சி சொன்ன பொய்யையே திரும்பத் திரும்பக் கூறிவருவது தமிழ்த்தேசியம் அடைவதற்கு எந்த வகையிலும் பயன்படாது.

இராஜாஜி சட்டமன்றத்திற்கு வெளியிலும் வடக் கெல்லைப் போராட்டத்திற்கு ஆதரவாக இல்லை என்பதை ம.பொ.சியின் எனது போராட்டம் நூலே சாட்சி. ''முதலமைச்சர் இராஜாஜியைச் சந்தித்துப் பேசி, சித்தூர் மாவட்டத்தைத் தகராறுக்கிடமான பிரதேசம் என்றறிவிக்குமாறு பிரதமர் நேருவிடம் தமக்குள்ள செல்வாக்கை பயன்படுத்துமாறு மீண்டும் ஒரு முறை அவரை வற்புறுத்திக் கேட்க விரும்பினேன். அதன்படி 26.6.53 இல் முதல்வர் இராஜாஜியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினேன்......''

''இப்பிரச்சனையில் தமக்குள்ள சங்கடத்தை மற்றொரு முறையும் அவர் எனக்கு விளக்கினார். **தமது அமைச்சரவையில் சரிபாதிப்பேர் ஆந்திரராயிருப்பதாலும், சட்டமன்றக் காங்கிர கட்சிக்குள்ளேயும் சரி பாதிப்பேர் தமிழரல்லாதாராக இருப்பதாலும் ஆந்திரர் நிலைக்கு எதிராக தமிழர் மட்டுமே நடத்தும் எல்லைக் கிளர்ச்சிக்கு ஆதரவாக முதல்வர் என்ற முறையில் தாம் எதையும் செய்ய இயலாமல் இருப்பதை எனக்கு உணர்த்தினார்''.** (ம.பொ.சி. எனது போராட்டம் பக் 659) இது இராஜாஜியின் ஆந்திரர்களுக்குச் சார்பான போக்கேயாகும்.

1952 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சென்னை மாகாணத்தில் 375 சட்ட மன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். அதில் காங்கிர கட்சியினர் 152 பேர் மட்டுமே வெற்றி பெற்றனர். பெரியார் அந்தத் தேர்தலில் கம்யூனி டு கட்சியையும் காங்கிர அல்லாத வேட்பாளர்களையும் ஆதரித்தார். தி.மு.க திராவிட நாட்டுக்கு ஆதரவாக உறுதி கொடுத்த கட்சியையும், வேட்பாளர்களையும் ஆதரித்தது.

ஆந்திர காங்கிர தலைவர் டி.பிரகாசம் 1950 இல் காங்கிரசை விட்டு வெளியேறி 1951 இல் ஐதராபாத் பிராஜா பார்டி, என்பதைத் தொடங்கினார். என்.ஜி.ரங்கா அதன் செயலாளராக இருந்தார். 1952 இல் கிருபாளனி தலைமையிலான. கிஸான் ம தூர் பிரஜா பார்ட்டி (K.M.P.P) விவசாயிகள் தொழிலாளர்கள் மக்கள் கட்சியுடன் இணைத்துக் கொண்டார். 1952 தேர்தலுக்கு முன்பு ஆந்திரப் பகுதியில் கம்யூனி டு கட்சியுடன் இணைந்து குறைந்த பட்ச செயல் திட்டத்தின் அடிப்படையில் (Democratic peoples front) என்ற கூட்டமைப்பை உருவாக்கினார். ஆந்திரா தனி மாநிலம் பெறுவதே இதன் முக்கிய கொள்கைகளுள் ஒன்று, ஆந்திரக் கம்யுனி டு கட்சியினர் தாங்கள் தேர்தலில் வெற்றிபெற்றால், வீட்டுக்கு 5 ஏக்கர் நிலம், ஏர் உழுவதற்கு வீட்டுக்கு ஒரு ஜதை ஏர் மாடு. வீட்டில் பால் கறந்து குடிக்க வீட்டுக்கு ஒரு பசுமாடு தரப்படும் என்று வாக்காளர்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை அளித்தனர். தமிழ்நாட்டில் திராவிட இயக்கங்களின் எதிர்ப்பாலும் ஆந்திராவில் பிரகாசம் கூட்டனி எதிர்ப்பாலும் காங்கிர படு தோல்வி அடைந்தது. சரிபாதி உறுப்பினர் கூட காங்கிரசுக்கு இல்லை. டெல்லி மேலிடம் இராஜாஜியை முதல்வர் பதவி ஏற்குமாறு ஆணையிட்டது. அப்போது ஸ்ரீ பிரகாசா என்ற

உ.பி. காரர் சென்னை மாநில ஆளுநராக இருந்தார். ஆளுநர் நியமனத்தின் பேரில் மேலவை உறுப்பினராகி இராஜாஜி முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். மந்திரி பதவி ஆசைக்காட்டி, மாணிக்கவேலரையும், இராமசாமி படையாச்சியையும் தம் வலையில் விழவைத்தார். முன்னவருக்கு 6சட்ட மன்ற உறுப்பினர்களும் பின்வருக்கு 19 சட்டமன்ற உறுப்பினர்களும் இருந்தனர். மாணிக்க வேலருக்கு அமைச்சர் பதவி கொடுத்தார். 1954 இல் காமராசர் இராமசாமி படையாச்சிக்கு அமைச்சர் பதவி கொடுத்தார். இராஜாஜி ஆந்திராவில் பிரகாசத்திடம் இருந்து பிரிந்து சென்ற என்.ஜி.ரங்கா தலைமையிலான 'கிரி கர் லோக் பார்ட்டியில்' இருந்து சில உறுப்பினர்களை இழுத்தார். எப்படியோ ஒரு வகையில் மெஜாரிட்டியை நிரூபித்துவிட்டு முதலமைச்சர் பதவியைத் தக்க வைத்துக் கொண்டார்.

அப்போது சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களில்

| | |
|---|---|
| தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் | 190 |
| ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் | 140 |
| மலபார் மாவட்டத்தைச் சேர்ந்தவர் | 30 |
| கன்டைப் பகுதியைச் சார்ந்தவர்கள் | 15 |
| மொத்தம் | 375 பேர் |

அந்தத் தேர்தலில் வரலாறு காணாத அளவில் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியினர் 62 பேர் சட்ட மன்ற உறுப்பினராக இருந்தனர். தமிழ்நாட்டில் பெரியார் பிரச்சாரமும், ஆந்திராவில் தெலுங்கானா புரட்சியின் தாக்கமும் பிரகாசத்தின் கூட்டணியும் அதற்குக் காரணமாகும். தமிழ்நாட்டில் 14 பேர் மட்டுமே இந்தியப் பொதுவுடைமைக் கட்சியினர். தமிழ்ப் பகுதியைச் சார்ந்த 190 சட்ட மன்ற உறுப்பினர்களில் இந்த 14 பேர் மட்டுமே வடக் கெல்லைக்கு ஆதரவு தரமாட்டார்கள். தங்கள் கட்சிக் கட்டுபாடு என்ற முறையில், மற்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் கட்சி பாராமல் வடக் கெல்லைக்கு 176 பேர் ஆதரவளித்திருப்பார்கள். ஆந்திர சட்ட மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையை விட இது அதிகம் தான். இராஜாஜிக்குத் தமிழர்களுக்கு உதவி செய்ய விருப்பவில்லை. அவ்வளவுதான். 'இராஜாஜி பரந்த தமிழகம் காண விழைந்தார்' என்ற அருகோவின் கருத்தும் தவறானது ஆகும். (அருகோ தமிழர் இந்தியர் இல்லையா பக்கம் 4)

இராஜாஜி மொழி வாரி மாநிலக் கொள்கைக்கும் தொடக்கம் முதலே எதிராகத்தான் இருந்தார். இது பற்றி ம.பொ.சி கூறுவதாவது. "பிரதமர் நேரு திடீர்ப் பிரகடனம் ஒன்றை வெளியிட்டார். அதாவது பசல்அலி கமிஷன் பரிந்துரையில் கண்டபடி மொழி வாரி ராஜ்யங்கள் அமைப்பதற்கு மாறாக, இந்தியாவை ஐந்து ராஜ்ஜயங்களாகச் செய்யும் திட்டமொன்றைத் திடீரென்று வெளியிட்டார் . அவை தட்சிணம்(தெற்கு) ராஜ்யம், உத்திர (வடக்கு) ராஜ்யம், மேற்கு ராஜ்யம், கிழக்கு ராஜ்ஜியம், மத்திய ராஜ்யம் என்பவனாம்...... நேருவின் திடீர்ப் பிரகடனத்தை இராஜாஜி அவர்கள் மன நிறைவோடு வரவேற்றார். அதற்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்யவும் முற்பட்டார். முதல் கூட்டம் மயிலை விவேகானந்தர் கல்லூரியில் நடைபெற்றது. அதில் இராஜாஜி **"மொழி வாரி அரசு காண விழைவோர் காட்டு மிராண்டிகள்"** என்று கடுஞ்சொல் புகன்றார். இந்தக் கூட்டத்தில் நானும் கலந்து கொண்டேன்"(ம.பொ.சி. எனது போராட்டம் பக்.761) இராஜாஜி மொழி வாரி மாநிலம் கேட்பவர்கள் காட்டுமிராண்டிகள் என்று திட்டினாலும் ம.பொ.சிக்கு இனிக்கும். பெரியார் தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று கூறினால் மட்டும் கசக்கும்.

இராஜாஜி தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தையும் வர விடவில்லை. ஆ.கசபதி நாயகர் தமிழ் ஆட்சி மொழி மசோதாவைச் சென்னை சட்ட மேலவையில் 5–1–1954இல் தாக்கல் செய்தார். அதை விவாதத்துக்கே வரவிடாமல் முதல் அமைச்சர் இராஜாஜி தடுத்து விட்டார். இராஜாஜியின் பச்சை அடிமை ம.பொ.சியும் அன்று மேல் அவையில் தான் இருந்தார். அவர் வாய் மூடி மௌனியாவே இருந்தார். கசபதி நாயகரின் ஆட்சி மொழி மசோதாவை வரவேற்று நம்நாடு நாளேடு 16.1.54 இல் தலையங்கம் எழுதியது.20.12.54 அன்று சென்னையில் அனைத்து கட்சிகளையும் அழைத்துக் கசபதியார் தமிழ் ஆட்சி மொழி மாநாட்டை நடத்தினார். அங்கு பேசியவர்களின் உரைகள் நம்நாடு நாளிதழில் தொடராக வெளிவந்துள்ளது. இதையெல்லாம் ம.பொ.சி திட்டமிட்டு தன்னுடைய செங்கோல் இதழில் வெளியிடாமல் மறைத்து விட்டார்.

மத்தியில் இந்தி ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று ம.பொ.சி.யும், மத்தியில் இந்தி ஆட்சி மொழியாக இருக்கக்கூடாது ஆங்கிலம்தான் இருக்கவேண்டும் என்று இராஜாஜியும் கூறிவந்தனர். அப்போது ம.பொ.சிக்கும் இராஜாஜிக்கும் இடையே சிறு உரசல் ஏற்பட்டது. 'கல்கி' ஏடு இராஜாஜியை ஆதரித்து எழுதியது. அதற்கு பதில் அளித்து ம.பொ.சி. 21.07.63 செங்கோல் ஏட்டில் இராஜாஜியைப் பற்றி எழுதியுள்ளார். **"மொழிவாரி மாநிலத்தை அன்று எதிர்த்தாரே. இராஜாஜி மொழிவாரி மாநிலக் கோரிக்கையைக் "காட்டு மிராண்டிகளின் கொள்கை" என்று**

**அய்தராபாத் காங்கிர மகாசபையில் பேசினார். அது மட்டுமன்றி மொழிவாரி மாநிலம் அமையவிருந்த தருணத்தில் அதனை அழிப்பதற்கென்றே ''தட்சிணப்பிரதேசத் திட்டம்'' என்ற கரடியை கட்டவிழ்த்து விட்டார். இதனை கல்கி மறந்ததா? இல்லை மறைக்கிறதா?**

**இன்றளவும் இராஜாஜி வாய்ப்பு நேரும் போதெல்லாம் மொழிவாரி மாநில அமைப்பை எதிர்த்து வருகிறார்.''**

பெரியார் மொழிவாரி மாநிலம் பிரிந்தவுடன் அதனை ஏற்றுக்கொண்டு சுதந்திர தமிழ்நாடு கோரினார். ஆனால் இராஜாஜி 1963இல் கூட மொழிவாரி மாநிலத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என ம.பொ.சியே எழுதியுள்ளார்.

''1952 இராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது, ஆந்திரம் தனி மாநிலமாக பிரிந்து போன சந்தர்ப்பத்தில் எஞ்சிய சென்னை ராஜ்ஜய ஆட்சியை தமிழிலே நடத்த வேண்டுமென்று ஒரு மசோதா மேல் சபையில் அரங்கேற்றப் பட்டபோது. அதனை இராஜாஜி ஆதரிக்கவில்லை. அப்போது அவர் சார்ந்திருந்த காங்கிர கட்சியின் பலங்கொண்டு தோற்கடித்தார்.''

கசபதியார்தான் தமிழ் ஆட்சிமொழி மசோதாவை மேல் அவையில் கொண்டுவந்தார் என்று சொல்லுவதற்குக்கூட ம.பொ.சி. தயாராயில்லை அன்றைக்கு இராஜாஜியின் ஆணைக்குக் கட்டுப்பட்டு ம.பொ.சியும் தான் தமிழ் ஆட்சிமொழி மசோதாவை எதிர்த்தார். ம.பொ.சிக்கு கொள்கையை விட தனி நபர் தன் குருநாதர் தான் முக்கியம் என்று செயல்படுபவர்.

''இராஜாஜியிடமிருந்து விலகி நிற்பதிலோ, அவர் மீது பழிசுமத்திப் பிரச்சாரம் செய்வதிலோ எனக்கு துளிஅளவும் மகிழ்ச்சி கிடையாது'' (செங்கோல் 21.7.63)

பெரியார் தன்னுடைய கொள்கைக்கு எதிராக யார் இருந்தாலும் எதிர்க்கத் தவறமாட்டார். 1948இல் ஓமந்தூரார் ஆட்சிக்காலத்தில் இரண்டாவது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தினார்.

தன்னுடைய நண்பர் வரதராசலு நாயுடு பார்ப்பனர்களுக்கு ஆதரவாக 1927முதல் தமிழ்நாடு பத்திரிக்கையில் எழுதி வந்ததை குடிஅரசு இதழில் வன்மையாகக் கண்டித்தார்.

1927இல் நீதிக்கட்சியைச் சார்ந்த ஏ.பி.பாத்ரோ, முத்துலட்சுமி ரெட்டியின் தேவதாசி ஒழிப்பு மசோதாவை பொறுப்புக் குழுவுக்கு விடவேண்டும் என்று சட்டசபையில் பேசியபோது, இவர் பார்ப்பனரல்லாதார் கட்சியில் இருப்பதற்கே தகுதியில்லை. நீதிக்கட்சியில் இருந்து விலக வேண்டும் என்று பெரியார் குடிஅரசில் எழுதினார்.

1930இல் முதலமைச்சராக இருந்த சித்தூர் முனிசாமி நாயுடுவின் ஆட்சியில் ஆதிதிராவிட பள்ளிகள் மூடப்பட்டதைக் கண்டித்து அவர் பதவி விலக வற்புறுத்தி திராவிடன் ஏட்டில் பெரியார் எழுதியுள்ளார்.

ஆனால் ம.பொ.சி தன் கொள்கைகளுக்கு எதிரான கொள்கைகளையுடைய இராஜாஜியைத் தான் எப்போதும் ஆதரித்து வந்தார். இவர் என்ன கொள்கை வீரர் என்பது ம.பொ.சி அன்பர்களுக்கே வெளிச்சம்.

''ம.பொ.சிக்கு எப்போதுமே இராஜாஜிதான் குருநாதர் அவர் சொல்படிதான் கேட்பார். தி.மு.கவோடு தேர்தல் உறவு கொண்டதற்கும் இராஜாஜிதான் காரணம் என ம.பொ.சியே கூறியுள்ளார்.

''பிரிவினைக் கோரிக்கையைத் தி.மு.கழகம் கைவிட்டு விட்டதால், அதனோடு தேர்தல் களத்தில் கூட்டுச் சேருவதற்கு எனக்கோ, தமிழரசுக் கழகத்திற்கோ அரசியல் ரீதியான தடை எதுவும் இல்லை. இதைச் சுட்டிக்காட்டி, சுதந்திரா தி.மு.க. கூட்டணியில் தமிழரசுக் கழகமும் இணைய வேண்டும் என்று என் தலைவர் இராஜாஜி வற்புறுத்தினார்.''

தேர்தலில் நான் வெற்றிபெற்ற செய்தி கிடைத்தவுடன் முதன்முதலாக இராஜாஜியின் இல்லத்திற்குச் சென்று, அவருக்கு மாலை அணிவித்து நன்றி தெரிவித்தேன். **இராஜாஜியின் பிடிவாதமான வற்புறுத்தல் இருந்ததில்லையானால், நான் பார்லிமெண்டரி அரசியலில் புகுந்திருக்கவே மாட்டேன்.** சட்டமன்றத்திற்கு வெளியிலிருந்தே என் வாழ்நாள் முழுவதும் தமிழுக்கும், தமிழினத்திற்கும், **என்தாய் நாடான பாரதத்திற்கும்** தொடர்ந்து பணியாற்றி வந்திருப்பேன். ஆனால், இராஜாஜி என் மீது வெற்றி கண்டுவிட்டார்.'' (ம.பொ.சி. நானறிந்த இராஜாஜி பக். 309–312) தனக்கென ஒரு கொள்கை இல்லாத ம.பொ.சியைத் தமிழனத்தின் தலைவராகக் காட்டுவதற்கு முனைவர் அருகோபாலன், பா. குப்பன் போன்ற தமிழ்த் தேசியவாதிகளுக்கு எப்படித்தான் மனம் வருகிறதோ தெரியவில்லை.

1937இல் இராஜாஜி பள்ளிப்பாடங்களில் இந்தியைக் கட்டாயமாகத் திணித்ததால் பெரியார் எதிர்த்தார். தமிழினமே கொந்தளித்து எதிர்த்தது.

1952இல் இராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது அரைநாள் கல்வித்திட்டம் (குலக்கல்வித் திட்டம்) அரைநாள் பள்ளியில் பாடம் பயில வேண்டும். மீதம் அரைநாள் பெற்றோர் தொழிலை செய்யவேண்டும் என்று உத்தரவிட்டு அதுவும் அது கிராமப்புறப் பள்ளிக்கு மட்டுமே என்பதை நடைமுறைப் படுத்தினார். பார்ப்பனரல்லாத பிள்ளைகளின் எதிர்காலமே

பாழடிக்கப்படுகிறது என்ற காரணத்தில்தான் பெரியார் எதிர்த்தாரே தவிர, பா. குப்பன் கூறுவது போல் இராஜாஜி தமிழ்ப் பார்ப்பனர் என்பதால் எதிர்க்கப்படவில்லை. அவர் தெலுங்கு பார்ப்பனரே என்பதை நிரூபித்துள்ளேன்.

தமிழ் ஆட்சி மொழி பற்றியும் ம.பொ.சி. மழுப்பலாகவே மேலவையில் பேசினார். **11–3–1954** அன்று மேலவையில் பேசிய ம.பொ.சி ''தலைவர் அவர்களே, ஆட்சி மொழிப் பிரச்சினையைப் பற்றி நான் வற்புறுத்திப் பேசுகின்றபோது. உடனடியாகத் தமிழ் மொழியை இந்த இராச்சியத்தின் ஆட்சி மொழியாகச் செய்ய வேண்டுமென்று கூட நான் சொல்லவில்லை. இன்றைய நிலைமையில் சட்டத்திலுள்ள சிக்கல்களையும், நிர்வாகத்திலுள்ள கஷ்டங்களையும் நான் அறிகின்றேன்''. என்று இராஜாஜிக்கு ஒத்தூதும் தன்மையிலே பேசினார்... இந்தியா முழுவதற்கும் ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தி மொழியைத்தான் தேசிய மொழியாகக் கொண்டு வர வேண்டுமென்று நமது அரசியல் அமைப்பில் தெள்ளத் தெளிய விளக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவின் விடுதலைக்காகப் போரிட்ட வீரர்களில் ஒருவன் என்ற முறையில் நான் **இந்தியைத் தேசிய பாஷையாக ஆக்குவதற்கு ஒப்புக் கொள்கிறேன்...** தமிழ்மொழி இருக்க வேண்டிய இடங்களை எல்லாம் இன்றைக்கு ஆங்கிலம் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும்போதுதான், அந்த இடத்தில் இனிமேல் இந்தி உட்கார்ந்து கொண்டு தாய் மொழி மீது ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்து விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. அதனால் **தேசிய வாதிகளிற் பலரும், இந்தியை எதிர்க்கும் தேசிய எதிர்ப்பு சக்திகளின் கூட்டத்தினிடையே வழுக்கி விழும்படி நேரிட்டு விடுமோ என்று நான் அச்சப்படுகிறேன்**. ஆகவே தமிழை ஆட்சி மொழியாக ஆக்குவதற்கு வேண்டிய ஏற்பட்டை உடனே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் அரசாங்கத்திற்கு வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்'' அதே உரையில் மேலும் கூறுகிறார்.

''ஒரு பாட்டாளி, பாரளுமன்றத்திற்கு ஆங்கிலம் தெரியாது என்பதினால் வரமுடியவில்லை என்பதை நினைக்கும் போது என் நெஞ்சு துடிக்கிறது. மனம் கொதிப்படைகிறது''.

ம.பொ.சிக்கு ஆங்கிலத்தின் மீது ஏன் அவ்வளவு ஆத்திரம் என்பது உங்களுக்குப் புரிகிறதா? 1946 இல் வடசென்னை பாராளுமன்றத் தொகுதிக்கு ம.பொ.சி மனுப்போட்டிருந்தார். தமிழ்நாடு காங்கிர வேட்பாளர் பட்டியலிலும் இவர் பெயர் இருந்தது. பட்டியல் டில்லிக்குச் சென்ற பிறகு ம.பொ.சி பெயர் நீக்கப்பட்டு நரசிம்மராவ் பெயர் வெளியிடப்பட்டது. (எனது போராட்டம் பக் 356) இதை மனதில் கொண்டுதான் ம.பொ.சி பேரவையில் பேசியுள்ளார். அதே மேலவை உரையில் ம.பொ.சி. மேலும் கூறுகிறார். **''ஆங்கிலத்தை உலகப்பொது மொழியாக நாங்கள் ஏற்றுக் கொள்ளத்தயார். இந்தியை இந்திய நாட்டுப் பொது மொழியாகவும் ஏற்றுக் கொள்ளத் தயார்.** ஆனால் தமிழை இந்த ராச்சியத்தின் ஆட்சி மொழியாகச் செய்தே தீரவேண்டும்'' என்கிறார்.

ஆக மும்மொழித் திட்டத்தை ம.பொ.சி. ஏற்றுக் கொண்டார் என்பதே இதன் பொருள்.

அன்றே குலக் கல்வித்திட்டத்தையும் ஆதரித்து பேசியுள்ளார்

''கல்வித்திட்டம். இதற்கு எதிராகச் சொல்லப்படும் வாதங்கள் பலர் பேசிப் பேசிப் புளித்துப் போனவைகள். சொல்லிச் சொல்லிச் சலித்துப் போனவைகள். இருந்தாலும் கூட அதே சான்றுகளைப் பழைய அத்தாட்சிகளை எடுத்துச் சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் உண்மையில் கல்வித் திட்டத்திற்கு முன்பு இருந்த எதிர்ப்புச் சக்திகள் தேய்ந்து கொண்டே வருகின்றது. ஆதரவு தான் அமோகமாக வளர்ந்து கொண்டிருந்தது. தேய் பிறை போல நாளுக்கு நாள் தேய்ந்து வரும் எதிர்ப்பை எனது நண்பர் டி.ஜி கிருஷ்ணமூர்த்தி பேசினார். ஆரம்பத்திலிருந்தே அதற்கு ஆதரவு தேடிக் கொண்டு வரும் நான், தற்போது அதற்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அதிக ஆதரவைக் கண்டு உள்ளம் பூரித்து உவகைக் கொள்கிறேன்'' ஆதாரம்: (சட்ட மேலவை விவாதங்கள் பக்கம் 412 – முதல் 420 வரை நாள் 11.3.1954 வரவு – செலவு திட்டத்தின் மீதான உரை)

ம.பொ.சி பேசியதில் ஒரு துளிக்கூட உண்மை இல்லை. இராஜாஜியை மகிழ்ச்சியடையச் செய்வதற்காக அந்தத் திட்டத்திற்கு ஆதரவு பெருகுவதாக அவர் பொய்யாகப் பேசியுள்ளார். உண்மையில் குலக் கல்விக்கு எதிர்ப்புதான் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருந்தது. ம.பொ.சி பேசிய 20 நாட்களில் மார்ச்சு 31 ஆம் நாள் இராஜாஜி ஆட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது தோற்று ஆட்சியை மூட்டைக் கட்டிக்கொண்டது. காமராசர் 1954 ஏப்ரல் 14 ஆம் நாள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

காமராசர் ஆட்சிக்கு வந்தவுடனேயே குலக் கல்வித்திட்டத்தை நீக்கினார். அதனால் பெரியார் அவருக்கு ஆதரவு கொடுத்தார்.

வடக்கு எல்லைப் பிரச்சினையை இதழுத்தடிக்க இராஜாஜி சூழ்ச்சி செய்தார். இதைக் கஜபதி நாயகர் கண்டித்தார். 25.2.1954 அன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் பேசிய ஆ.கசபதி நாயகர் ''தமிழ்நாட்டுடன் சேர்ந்திருக்க வேண்டிய பகுதிகளாகிய சித்தூர் மாவட்டத்திலுள்ள திருத்தணி போன்ற பிராந்தியங்களை ஆந்திர ராஜ்யத்தோடு இந்திய சர்க்கார் சேர்ப்பதற்கு அனுமதித்தது தவறு ஆகும். அதனால் நாட்டில் எழுந்த கேடுகளை,

கிளர்ச்சிகளை குழப்பங்களை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். அந்த பிராந்தியங்களில் வசிக்கின்ற பெருபான்மையான தமிழ் மக்களின் கலாச்சாரத்தைப் பாதிக்கின்ற ஒரு பெரிய விஷயத்தைப் பற்றி அந்தச் சபையில் (Assembly) என் நண்பர் திரு விநாயகம் அவர்கள் பேசும்போது, சித்தூர் விஷயம் ஆந்திர சர்க்காரின் பொறுப்பும் அல்ல, சென்னை ராஜ்யசர்க்கரின் பொறுப்பும் அல்ல. அது மத்திய சர்க்காரின் பொறுப்பு! என்று குறிப்பிட்டார்கள். ஆனால் மேன்மை தாங்கிய கவர்னர் பிரான் அவர்களுடைய சொற்பொழிவில் இருந்து என்ன தெரியவருகிறது என்றால் இது மத்திய சர்க்காரின் பொறுப்பு அல்ல. சென்னை ராஜ்ய அரசியலாரும், ஆந்திர ராஜ்ய அரசியலாரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டிய நிலைமையில் இருவர்களுடைய பொறுப்பாகவே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது......

''ஆனால் கவர்னர் பிரான் சொல்லுகிறார். எப்போதும் நிர்வாகப் பிரிவுகள் மொழி வழியாகப் பிரிக்கப்பட்ட ஒரு பிரிவாக இருக்க முடியாது என்பதை நாம் எல்லோரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று, மக்களுடைய விருப்பங் கூட பூர்த்தி செய்ய முடியவில்லை என்றால் ஏன் என்று தான் நான் கேட்கிறேன். இப்பொழுது இருக்கும் எல்லைகளை யார் வகுத்தது? யாரால் இந்த எல்லைகள் பிரிக்கப்பட்டது? இவைகளை யெல்லாம் மொழி வழி பிரிப்பதற்கு என்ன கஷ்டம் இருக்கப் போகிறது என்பது தான் எனக்குத் தெரியவில்லை.''

''ஒரு எல்லையை நீங்களாவே அமைத்துக் கொண்டு அதில் தமிழ்த் தாயகத்தோடு சேர வேண்டிய தமிழ்ப் பிரதேசங்கள் இருந்தாலும் கூட அதைக் கவனிக்காது அந்த இடத்தோடு ஒரு கோட்டைப் போட்டு இதற்கு அப்பாலுள்ள பிராந்தியங்கள் எல்லாம் தெலுங்கு ராஜ்யத்தைச் சேர்ந்தது என்று அறிவித்திருப்பது ரொம்பவும் வருந்தத்தக்க விஷயம் ஆகும்'' என்று கண்டித்துப் பேசினார்.(சட்டமேலவை விவாதங்கள் பக் 56–59 நாள் 25–2–54)

ஆனால் வடக்கெல்லைப் போருக்காகத் தாம் வாழ்வதாகத் தம்பட்டம் அடித்துக் கொண்ட ம.பொ.சி இராஜாஜியின் எல்லைப் பிரச்சினையை இழுத்தடிக்கும் சதித் திட்டத்திற்கு ஆதரவாகவே இருந்தார்.

''மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே கவுன்சில் முன்புள்ள நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை மனப் பூர்வமாக ஆதரிக்கிறேன். குறிப்பாக சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளை இந்த ராஜ்யத்தோடு சேர்ப்பதற்காக இந்தச் சர்க்கார் ஒரு உடன்படிக்கை செய்து கொள்வார்கள் என்பதாக அவ்வுரையின் ஆரம்பத்திலேயே அந்தப் பிராந்தியத்திலுள்ள மக்களுக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. அதற்காக, அவ்வுரையை நிகழ்த்திய கவர்னர் அவர்களுக்கும் அதனைத் தயாரித்துள்ள மந்திரிமார்களுக்கும் நான் சித்தூர் மாவட்டத் தமிழர்களின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆந்திர அரசாங்கத்துடன் நம் சர்க்கார் சுமூகமான முறையில் பேச்சு வார்த்தைகள் நடத்தியே ஒரு நேர்மையான முடிவைக் காண வேண்டும் என்பது அபிப்பிராயம். என்னைக் கேட்டால் எல்லைக் கமிஷன் சர்ச்சைக்கே இப்பிரச்சனையை விடாமல், **உண்மை இந்தியர்கள் நாம்** என்பதை அகில உலகுக்கும் எடுத்துக் காட்டும் முறையில் தமிழர்களும், தெலுங்கர்களும் கூடிப்பேசி இவ்விஷயத்தைத் தீர்த்து கொள்வது தான் சரியானதாகும். இன்றைய தினம் சென்னை ராஜ்ஜியத்திற்கும் சரி, ஆந்திர ராஜ்யத்திற்கும் சரி அறிவும், அனுபவமும், வயதும் முதிர்ந்த இரு பெரியார்கள், இரு அறிஞர்கள், இரு சிறந்த தேசத்தலைவர்கள்தான் முதலமைச்சர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். சென்னை முதல்வர் இராஜாஜியும், ஆந்திர முதல்வர் பிரகாசமும் இவர்கள் இருவருமே தேச விடுதலைப் போராட்டத்தில் ஒன்றாக, ஒரே கட்சியில் நின்று போராடி வெற்றி பெற்ற சிறந்த தியாகிகள். ஆகவே ஆந்திர நாட்டுப் பிரதமராகவும், தமிழ்நாட்டுப் பிரதமராகவும் வீற்றிருக்கின்ற இந்த இரு நண்பர்களுமே ஓரிடத்தில் கூடி இப்பிரச்சினைக்கு உடனடியாக ஒரு முடிவைக் காணுவதுதான் சிறந்த வழியாகும்''. (மேலவை விவாதங்கள் பக் 106 நாள் 26.2.1954)

முன்பு எல்லைக்கமிஷன் வேண்டுமென்று விநாயகம் மூலம் தீர்மானத்தைக் கொடுத்து நான்தான் அதைச் சட் முன் வடிவில் சேர்த்தேன் என்றார். (ம.பொ.சி எனது போராட்டம் பக் 673) ஆனால் இப்போது எல்லைக் கமிஷனுக்கே விட வேண்டாம் என்கிறார்.

ஏனென்றால் ஆளுநர் உரையில் அப்படி உள்ளது அதற்காக இராஜாஜிக்குப் பக்கமேளம் வாசித்தார். இதனால் வந்த விளைவு பல முறை பேச்சு வார்த்தை நடத்தியும் எந்த முடிவும் எட்டப்படவில்லை. 1956 இல் தீர்ந்திருக்க வேண்டிய வடக் கெல்லை தீராமல் பவுண்டரி கமிஷன் அனுப்பு என்று நான்காண்டுக் காலம் போராட்டம் நடத்தினார். இராஜாஜி, ம.பொ.சி கூட்டுறவால் காலம் கடந்ததுதான் மிச்சம்.

வடக்கெல்லைப் போராட்டத்திலும், தெற்கெல்லைப் போராட்டத்திலும், மொழிவாரி மாநில அமைப்பிலும், தமிழ் ஆட்சி மொழியாக்குவதிலும், எதிலுமே ம.பொ.சிக்கு ஆதரவாக இராஜாஜி இல்லை. தட்சிண பிரதேசத்திட்டத்தை ம.பொ.சி.எதிர்த்தார். இராஜாஜி ஆதரித்தார். மொழி வாரி மாநிலப் பிரிவினை கேட்பவர்கள் ''காட்டுமிராண்டிகள்'' என்று இராஜாஜி பேசினார். 5.11.1953இல் நடைபெற்ற வடக்கெல்லை மீட்பு மாநாட்டிற்கு ''மாநாடு வெற்றி பெறக் கோரிப்'' பெரியார் ஈ.வெ.ரா. ராஜா சர்.முத்தையா செட்டியார் ஆகியோர் வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தனர். (கோல்டன் நா.சுப்பிரமணியன் தமிழக வடக் கெல்லைப் போராட்டமும் தணிகை மீட்சியும். பக் 48, ம.பொ.சியின் செங்கோல் 11–1–1953)

9–2–1953இல் நகரில் நடைபெற்ற தமிழர் மாநாட்டுக்குத் திருவாளர்கள் ஈ.வே.ரா, கோவை ஜி.டி.நாயுடு, செட்டி நாட்டரசர், டாக்டர் மு.வ., திருமதி மரகதம் சந்திரசேகர் முதலிய பல தலைவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தனர்.(கோல்டன் நா.சுப்பிரமணியன் தமிழக வடக்கெல்லைப் போராட்டமும் தணிகை மீட்சியும், பக் 55 ம.பொ.சியின் செங்கோல் 15–2–53)

ஆக, பெரியார் வடக்கெல்லைப் போராட்டத்திற்கு எதிர்ப்பாக இருந்தார் என்று கூறுவது தவறே ஆகும். ம.பொ.சி.யின் எந்தக் கொள்கைக்கும் ஒத்துவராத இராஜாஜியை ம.பொ.சி ஏன் தலைவராக ஏற்றுக் கொண்டார் என்பதையும் வடக் கெல்லை, தெற்கெல்லைப் போராட்டத்தை ஆதரித்த, தட்சிணப் பிரதேச திட்டத்தை எதிர்த்த ம.பொ.சிக்கு ஒத்த கொள்கையுடைய பெரியாரை ஏன் எதிர்த்தார் என்பதையும் அடிக்கடி இராஜாஜி வீட்டுக்குப் போய் அவரைப் பார்த்து வரும் ம.பொ.சி. இராஜாஜி தெலுங்குப் பார்ப்பனர் என்பதை ஏன் மறைத்தார் என்பதையும் இராஜாஜி தமிழ்ப் பார்ப்பனர் அதனால்தான் பெரியார் எதிர்த்து வந்தார் எனக்கூறித் திரியும் தமிழ் தேசியம் பேசுவோர் மற்றும் ம.பொ.சியின் பற்றார்கள் தான் விளக்க வேண்டும்.

## பகுதி –4
## பெரியார் தமிழ் இனத்தின் பகைவரா?

ம.பொ.சிதான் உண்மையான சுதந்திர தமிழ்நாடு கோரினார் என்பதை ம.பொ.சியின் ‘பிரிவினை வரலாறு’ நூலிலிருந்தும் தமிழன் குரல் நூல்களிலிருந்தும் மேற்கோள்களை எடுத்துக் காட்டியுள்ளார் வழக்குரைஞர் பா.குப்பன். ஆம் உண்மை தான், ம.பொ.சி அப்படி எழுதிய காலத்தில் பெரியார் ம.பொ.சியை முழு மனதுடன் ஆதரித்தார் என்பதை வழக்குரைஞர் பா.குப்பன் மறைத்து விட்டார். இதோ பெரியார் ஆதரித்ததை ம.பொ.சியே எழுதியுள்ளார்.

“பெரியாரைச் சந்தித்தேன்! 1947 ஜனவரி 26 இல் விருது நகரில் நகர மன்றத்தின் சார்பில் நடைபெறவிருந்த விழாவிற்கு அம்மன்றத்தலைவர் திரு.வி.வி.இராமசாமி அவர்களால் அழைக்கப்பட்டேன். அதற்காகச் சென்னையிலிருந்து திருவனந்தபுரம் எக் பிரசில் நான் சென்று கொண்டிருந்தபோது, அதே வண்டியில் பெரியார் ஈ.வெ. ராவும் கோயில் பட்டியில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுவதற்காகச் சென்று கொண்டிருந்தார். காலை சுமார் 7 மணிக்கு ரயில் கொடைக்கானல் ரோடில் நின்றபோது, நான் எதிர்பாராத வண்ணம் திடீரென்று திருமதி. மணியம்மையாருடன் பெரியார் எனது பெட்டிக்கு வந்தார்.

நான்கு இட்டலி, அதற்குத் தேவைப்படும் நெய், சர்க்கரை ஆகியவற்றை ஒரு தட்டில் வைத்துக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்து, அதை உண்ணுமாறு இனிய வார்த்தைகள் கூறி உபசரித்தார். அதுவரை நான் பெரியாரை நேரில் சந்தித்துப் பேசியதில்லை. என்னைவிட வயதில் பெரியவரான அவர், தாமாகவே வலிய வந்து என்னை உபசரித்தது எனக்கு வியப்பைத் தந்தது. இருவரும் இரண்டு நிமிடம் உரையாடினோம். அவர், ‘ஐயா, ‘தமிழ் முரசுப் பத்திரிகையில் தாங்கள் எழுதி வருவதையெல்லாம் நான் தொடர்ந்து படித்து வருகிறேன். எங்களைப் போலவே எழுதுகிறீர்கள். அப்படியே பேசுகிறீர்கள் என்றும் கேள்விப்பட்டேன். காங்கிர காரர்களும் பார்ப்பனர்களும் ஐயாவுக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடும். எங்கள் ஆதரவு தங்களுக்கு எப்போதும் இருக்கும். தாங்கள் தொடர்ந்து அப்படியே எழுதி வாருங்கள்” என்று கனிவான குரலில் பணிவன்போடு கூறினார் (ம.பொ.சி. எனது போராட்டம் பக் 421, 422) என்று ம.பொ.சியே எழுதியுள்ளார்.

இந்தியாவிலிருந்து தமிழ்நாடு பிரிந்தாலும், திராவிட நாடு பிரிந்தாலும் பெரியார் அதை வரவேற்றார். பெரியார் விரும்பியது வடவர் ஆதிக்கத்திலிருந்து தென்னகம் முற்றிலுமாக விடுபட வேண்டும் என்பதே. அதனால் ம.பொ.சி கூறிய தமிழ்நாடு விடுதலையை அவர் எதிர்க்கவில்லை. மேலும் ம.பொ.சியின் தமிழ் முரசு இதழுக்கு சிறப்பான முறையில் மதிப்புரை எழுதி அனைவரும் அதைப் படிக்க வேண்டும் என்று தமது குடி அரசுப் பத்திரிகையிலேயே எழுதினார்.

மதிப்புரை தமிழ் முரசு தோழர் ம.பொ.சிவஞான கிராமணியார் அவர்களை ஆசிரியராகக் கொண்ட ‘தமிழ் முரசு’ என்ற திங்கள் வெளியீடு நமது பார்வைக்கு வந்தது. ‘தமிழகத்தில் தமிழரசு’ என்ற கிராமணியாரின் கட்டுரையில், அவரின் நாட்டுப் பற்றும், இனப்பற்றும், சீர்திருத்தக் கொள்கையும் நன்கு விளங்குகின்றன.

கிராமணியார் காங்கிர இயக்கத்தைச் சார்ந்தவரெனினும் தேசியத்தால் தமிழர்களுக்கும், தமிழ் மொழிக்கும் வந்த இடையூறுகளை வன்மையாகக் கண்டிக்கின்றார். மதம், கடவுள், புராணம் ஆகியவற்றால் தமிழர்களின் நிலை சீர் குலைந்துள்ளதைக் கண்டித்தும், வருங்காலத்தில் தமிழராட்சி தனித்தியங்க வேண்டுமென்று வற்புறுத்தியும் விளக்கமாக எழுதியுள்ளார். திரு.வி.க., மு.வரதராசனார் போன்ற தமிழ் அறிஞர்களும் அரிய கட்டுரைகள் எழுதியுள்ளனர். ‘தமிழ் முரசு’ என்னும் மாத வெளியீட்டைப் பலரும் படித்துப் பயன் பெற வேண்டுமென்பது நமது விருப்பம்” கிடைக்குமிடம் தமிழ் முரசுப்

பதிப்பகம், 233, லிங்கச் செட்டித் தெரு ஜி.டி. சென்னை –1, (குடியரசு13–7–46)

தமிழ் பேசுபவர்களை தமிழர் என்று பெரியார் கடுமையாக கண்டித்தார் என்று பெரியாருக்கு எதிராக அபாண்டமாக புளுகி வருகின்றனர் போலித் தமிழ்த் தேசிய வாதிகள். இவ்வளவு சிறப்பாக 'தமிழ் முரசு' இதழுக்கு குடி அரசு ஏட்டில் பெரியார் எழுதியிருந்தும் ம.பொ.சி அதைத் திருத்தி ஒரு பொய்யை எழுதியுள்ளார்.

''குடி அரசு'' வார இதழிலே பெரியார் ஈ.வெ.ரா அவர்களும் ''தமிழ் முரசு''ப் புத்தகத்துக்கு மதிப்புரை எழுதியிருந்தார். எனது அரசியல் கட்டுரைகளைப் பொதுவாக அவர் வரவேற்றார் என்றாலும், கதர் அணிந்து கொண்டு, ஆரியரது (அவரது கருத்துப்படி) செல்வாக்கிலுள்ள காங்கிரசிலும் இருந்து கொண்டு நான் புதிய தமிழகம் படைக்கக் கனவு காண்பதனைச் சிறிது நையாண்டியும் செய்திருந்தார். (ம.பொ.சி. எனது போராட்டம் பக் 378) ம.பொ.சி வரலாற்றை திரிப்பதிலும் மாற்றி எழுதுவதிலும் வல்லவர் என்று ஏற்கனவே நான் எழுதியுள்ளேன் அதனை குடி அரசு மதிப்புரை செய்தியிலும் உறுதிபடுத்தி விட்டார். ம.பொ.சி . குடி அரசு ஏட்டின் ''தமிழ் முரசு'' மதிப்புரையை நான் அப்படியே கொடுத்திருக்கிறேன். அதில் என்ன நையாண்டி இருக்கிறது. என்ன நக்கல் இருக்கிறது. வேண்டுமென்றே பெரியாரின் மீது ஒரு பொய்யை அள்ளி வீசுவது ம.பொ.சியின் வாடிக்கையாகி விட்டது என்பதைத் தவிர அதில் உண்மைத் தன்மை இல்லை என்பதே வெளிப்படை.

ம.பொ.சியின் 'தனித்தமிழ் நாடு' சோலிச தமிழ் தேசக் குடியரசு' என்ற கொள்கை எல்லாம் எவ்வளவு காலம் நீடித்தது என்பதுதான் கேள்வி.'' ஒரு ஆறு மாதம் கூட நீடிக்க வில்லையே! 1–4–47 'தமிழ் முரசு' ஏட்டில் ம.பொ.சி எழுதுகிறார். ''தமிழ் நாடு தனி நாடு; அதை உபமாகாணம் என்று சொல்வது தமிழரை ஏய்க்கச் செய்யும் சதி. **தமிழன் இந்தியனாய் இருக்கத் தயார்; ஆனால், அவன் முதலில் தமிழன்; இரண்டாவதாகத்தான் இந்தியன்;''** தமிழன் எப்படி தமிழனாகவும், இந்தியனாகவும் இருக்க முடியும் என்பது ம.பொ.சி அன்பர்களுக்கே வெளிச்சம்.

15–5–47 தமிழ் முரசு இதழில் ''சுதந்திர இந்தியாவில் சுதந்திரத் தமிழரசு அமைய வேண்டும். வெறும் மாகாண சுயாட்சி மட்டும் போதாது. தமிழர் வாழ, தமிழ்மொழி வளர, தமிழ் நிலம் செழிக்கத் தமிழரசு வேண்டும் (பக்4) இவ்வளவு வீரமாக எழுதிய ம.பொ.சி அதே கட்டுரையில் தமிழ் முரசு 15.5.47 இல் ஒரு அந்தர் பல்டியும் அடிக்கிறார். ''இந்திய தேசிய இனங்களின் கூட்டரசில் சுதந்திரத் தமிழகம் இணைய வேண்டுமென்பதே நமது விருப்பம்''. என்கிறார்.

15.12.47 தமிழ் முரசு இதழில் மிகப் பெரிய பல்டியை ம.பொ.சி அடித்தார். ''தமிழ் நாடு ஒரு தனிநாடு, தமிழர் ஒரு தேசிய இனம்''. என்ற வரலாற்று உண்மைகளைக் கூட அரசியல் நிர்ணய மன்றத்தார் மறந்து விட்டனர். அதில் கலந்து கொண்ட தமிழகத்துப் பிரதிநிதிகள் கூட வற்புறுத்தவில்லை. தமிழினத்துக்கு இழைக்கப்பட்டுள்ள இந்த அநீதிகளைத் தவிர்ப்பதற்கான ஒரே வழி தமிழகப் பிரிவினையை வற்புறுத்துவதோடு, சுதந்திர சோசலிசத் தமிழ்க் குடியரசை அமைத்துக் கொள்ள தமிழினத்துக்கு உரிமை உண்டென்று பிரகடனம் செய்ய வேண்டும். இது காங்கிரசின் அடிப்படை கொள்கைக்கு முரண்பட்டதல்ல. காங்கிர வேண்டுவது **ஏதேனும் ஒரு வகையில் அய்க்கிய இந்தியா. அதை நாம் ஏற்போம். அதே சமயத்தில் பிரஜா உரிமை, கைத் தொழில், வர்த்தகம், சுங்கம் இவை போன்ற தமிழ்நாட்டின் உயிர் நாடியான உரிமைகளை விட்டுக் கொடுக்க முடியாது என மறுப்போம். இது தான் தேச பக்தி மார்க்கம்''.**

ம.பொ.சியின் தமிழின துரோகத்தை அப்போதே தோலுரித்துக் காட்டினார் கி.ஆ.பெ. ''ஈ.வெ.ராவையும் அவருடைய விடுதலையையும் மட்டுமல்ல, தமிழ் நாட்டிற்கு நலம் தரும் கொள்கைகளைக் கூடத் தாக்க முன் வந்திருக்கிறார். காங்கிர கட்சிக் கூட்டங்களில் இருந்துக் கொண்டு பிற கட்சியினரின் கொள்கைகளை வசை மொழிகளால் தாக்க முன் வந்து விட்டார். வடநாட்டார் தமிழ் நாட்டைச் சுரண்டவில்லை என்று பேசத் தொடங்கி விட்டார். ம.பொ.சியால் அவருக்கோ, தமிழ் நாட்டிற்கோ, எவ்வித பயனும் ஏற்படாது என்பதை நட்பு முறையில் அறிவித்துக் கொள்கிறோம்''. (தமிழர் நாடு 16–12–1950)

ம.பொ.சியின் மும்மொழிக் கொள்கை. பிரதேச மொழிகளும் சிறுபான்மையினரும் என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் ம.பொ.சி எழுதுகிறார் பள்ளிகளில் மாகாண மொழி முதல் மொழியாகவும் ஆங்கிலம் இரண்டாம் மொழியாகவும் உயர் நிலைப்பள்ளிகளில் ஏதாவது ஒரு மொழியை மூன்றாவது மொழியாகக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட வேண்டும் என்கிறார். ஆங்கிலத்தின் தேவையை அக்கட்டுரையில் ம.பொ.சி அழுத்தமாகக் கூறியுள்ளார்.

''அடுத்தப்படியாக, உலகப் பொது மொழியாகவும், நாடுகளின் கூட்டுறவு மொழியாகவும் அறிவியல் மொழியாகவும் உள்ள ஆங்கிலம் எல்லோருக்கும் இரண்டாம் மொழியாக இருக்கும். உலகத்தோடு ஒட்டி வாழ, வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய விரும்பும் எந்த அறிவாளியும் இதற்கு மாற்றாக எண்ணவே முடியாது.'' (தமிழ் முரசு 15–3–48)

ம.பொ.சி ஆங்கிலத்தைப் பற்றி இப்படி சொன்னால் அவர்களுக்கு இனிக்கிறது. பெரியார் ஆங்கிலத்தை படி என்று சொன்னால் அவர்களுக்கு கசக்கிறது. ம.பொ.சியின் 'தமிழ்க் குடி அரசு' ஒரே ஆண்டில் செத்துபோய் விட்டது. அய்க்கிய இந்தியாவை ஏற்போம். சில உரிமைகள் மட்டும் நமக்கு இருந்தால் போதும் என்று முடிவுக்கு அவருடைய தமிழரசுக் கழகம்

1948 லேயே முடிவு செய்து விட்டது. அப்படி இருக்க ம.பொ.சி தான் தனித் தமிழ்நாட்டை தூக்கிப் பிடித்தார், பெரியார் திராவிடம் பேசி அதை கெடுத்து விட்டார் என்ற குப்பனின் வாதத்தில் அர்த்தமில்லை.

இந்து பத்திரிக்கை நிரூபர் ம.பொ.சி சுதந்திர தமிழ்நாடு வேண்டும் என்று கோருகிறார் என்று எழுதி விட்டார். ம.பொ.சி அடுத்த நாளே இந்துவுக்கு எழுதிய கடிதத்தில் தான் எப்போதுமே சுதந்திர தமிழ்நாடு கேட்டதில்லை. இந்துவில் தவறான செய்தி வந்திருக்கிறது என்று மறுப்பு எழுதினார். உடனே குத்தூசி குருசாமி 4.2.53 விடுதலை ஏட்டில் பொய்! பொய்! பொய்!!! என்று விடுதலையில் தலையங்கம் எழுதினார். அதில் 'தமிழ் முரசுப்' பத்திரிக்கையில் தனித் தமிழ்நாடு வேண்டும் என்று ம.பொ.சியை எழுதியதை எல்லாம் எடுத்துக் காட்டினார். ம.பொ.சிக்கு விடுதலையின் மீது ஆத்திரம் பொங்கி எழுந்தது. காங்கிரசிலிருந்து ம.பொ.சியை வெளியே அனுப்ப இருந்த காலம் அது. ம.பொ.சி எழுதுகிறார்.

''இந்த நேரத்தில் திராவிடர் கழக நாளேடான 'விடுதலை' சும்மா இருக்கவில்லை. அதுவும் தனது பங்கைச் செய்ய முன் வந்தது. எனக்கு ஆதரவாக அல்ல. என்னை ஒழித்து கட்ட விரும்புபவர்களுக்கு உதவியாக.

அந்த நாளில், திராவிடர் கழகத்துக்கும் எனது தமிழரசுக் கழகத்திற்கும் மோதல் இருந்து வந்தது. ஆகையால் விடுதலைப் பத்திரிக்கைக்கு என்பால் நல்லெண்ணம் இருக்குமென்று நான் எதிர்பார்க்க இயலாது தானே! சுதந்திர திராவிடம் கோரி வந்த 'விடுதலை' யார் அதன் குறைந்தபட்ச உருவகமான சுயாட்சி தமிழகம் கோரிய எனக்கு தார்மீக ரிதியிலேனும் ஆதரவு காட்டியிருக்க வேண்டும். இது சாத்தியமில்லா விட்டாலும் என்னை அடியோடு அழித்து முடிக்கப் பாடுபட்ட காங்கிர காரர்களுக்குக் கை கொடுக்காமலேனும் இருந்திருக்கலாம். அதற்கு மாறாக தமிழரசு கழகத்தின் கொள்கை சுதந்திரத் தமிழகம் தான் என்று சாதித்து பிரிவினைக் கோரும் என்னை காங்கிர வைத்திருக்கக் கூடாதென்று உபதேசம் செய்தது. 'விடுதலை' ஆசிரியர் தமிழ் முரசின் பழைய இதழ்களிலே நான் எழுதியவற்றிலிருந்து சான்றுகள் காட்டி, காமராசர் குழுவினருக்கு தகவல் அளித்தார். சுருங்கச் சொன்னால், 'விடுதலை' என் முதுகில் குத்தியது. விடுதலையின் தலையங்கப் பகுதிகள் மிகுந்த உற்சாகத்துடன் காங்கிர ஏடுகளிலே எடுத்தாளப்பட்டன.'' (ம.பொ.சி எனது போராட்டம் பக் 700–701)

ம.பொ.சி முன்பு தான் எழுதியவற்றையே அவ்வாறு எழுதவில்லை என்று மறுத்து காங்கிர காரர்களிடம் மண்டியிட்டு கொண்டிருந்த காலம் அது. நேருவுக்கு தன்னை காங்கிரசிலிருந்து நீக்க வேண்டாமென்று பல கடிதங்களை ம.பொ.சி எழுதியுள்ளார். தமிழரசு கழகத்தின் சட்ட திட்ட விதிகளையும் மாற்றி இது ஒரு கலாச்சார கழகமே அரசியல் அமைப்பல்ல என்று கூறியும் நேருவிடம் மண்டியிட்டார்.குத்தூசி குருசாமி விடுதலை தலையங்கத்தின் ம.பொ.சியின் தமிழ் முரசு ஏட்டில் வெளிவந்த கட்டுரைகளைத் தானே வெளியிட்டார். அவர் சொந்த கருத்து எதையும் அதில் எழுதவில்லையே. இது எப்படி ம.பொ.சியின் முதுகில் குத்தியது ஆகும். விடுதலையை மட்டுமன்று தினத்தந்தியையும் திட்டித் தீர்த்தார். ம.பொ.சி.

''பொது வாழ்வில் எவ்வளவோ இன்னல்களுக்கிடையே நான் கடை பிடித்து வரும் ஒழுக்கத்தை! மக்கள் ஐயுறும் வகையிலும் என் மீது பழி சுமத்திப் பிரச்சாரம் செய்தனர். அந்தப் பொய் குற்றச்சாட்டுகள் ''தினத்தந்தியில்'' முழுப்பக்க அளவில் பெரிய தலைப்புகளில் அவ்வப்போது பிரசுரிக்கப்பட்டு வந்தன. என்ன காரணத்தினாலோ திரு காமராசருக்கு ஆதரவாக இருந்தது அந்நாளில் சி.பா.ஆத்தினாரின் நேர்பார்வையில் நடத்தப்பட்டு வந்த 'தினத்தந்தி' அப்போதும் நானும் திரு சி.பா. ஆதித்தனாரும் நண்பர்களாகத் தான் இருந்தோம். ஆயினும் அவருக்கு என்னிடமிருந்த நட்பைவிட திரு காமராசரிடமிருந்த ''பக்தி (?)'' யே விஞ்சியிருந்தது.

''வடக்கெல்லை – தெற் கெல்லைப் பிரச்சனைகள் பற்றி நான் பொதுக் கூட்டத்திலோ, நிருபர்களிக்கும் பேட்டிகளிலோ மத்திய அரசைக் குறைக் கூறி ஏதேனும் சொல்லி விட்டால் போதும்; அவை ''நேருவுக்கு ம.பொ.சி எச்சரிக்கை'' ''இன்னும் 15 நாட்களில் போராட்டம்'' பிரதமருக்கு ம.பொ.சி இறுதி நோட்டீ என்றெல்லாம் தலைப்புகள் தந்து தினத்தந்தியில் பிரசுரிக்கப்படும்''. என்றெல்லாம் தினத்தந்தியின் மீது ம.பொ.சி வசைப்பாடுகிறார். வடக்கெல்லை தெற்கெல்லைப் போராட்டத்தில் இவர் முழு மனதுடன் செயல்பட்டிருந்தால் இந்த செய்திகளுக்காக மகிழ்ச்சி அடைந்திருக்க வேண்டும். தினத்தந்தி எதையும் திருத்தி போடவில்லை. இவர் கூறியதை தானே முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்தது. இதையெல்லாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து நேருவுக்கு அனுப்பி விட்டார்களாம். அனுப்பினால் நல்லது தானே. தமிழ்நாட்டில் எல்லைப் போராட்டங்கள் நடக்கின்றன என்று நேரு தெரிந்து கொள்ளட்டுமே. ம.பொ.சி தன்னை காங்கிரசை விட்டு நீக்கி விடக் கூடாது என்பதற்காக எல்லார் மீதும் வசைப்பாடினார் என்பது தானே உண்மை.

மேலும் தமிழ்நாடு பிரிவினைக்கு எதிராக பல கட்டுரைகளை ம.பொ.சி. தொடர்ந்து தனது செங்கோல் இதழில் எழுதி வந்துள்ளார். அதில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே தருகிறேன்.

**தமிழ்நாடு பிரிவினையைக் கண்டிக்கும் ம.பொ.சி.**

''தமிழகத்தை இந்தியாவிலிருந்து துண்டாட விரும்புகின்றன ஒன்றிரண்டு கட்சிகள். அறிஞர் ஒருவர் சொல்கிறார், ''எனது தாயகம் அக்பருக்கு அடிமைப்பட்டதில்லை, மௌரியருக்கு அடிமைப்பட்டதில்லை.....'' என்று. ஆனால் அந்த

அரசியல் அறிஞர் நாம் வாழ்வது அசோகர், மௌரியர் காலமல்ல, அணு ஹைட்ரஜன் குண்டு காலம் என்பதை மறந்து விடுகிறார்.

அக்பர் காலத்தில் இந்தியாவில் ஆயிரம் தனி நாடுகள் இருந்திருக்கலாம். இந்த அணுகுண்டு காலத்தில் வல்லரசுகளின் கெடு பிடிபோர் இந்தியாவின் வாயிற் கதவைத் தட்டுகின்ற நேரத்தில் நாடு துண்டாடப்படுவது நல்லதா?

தமிழகத்தின் மக்கள் தொகை 3 கோடிக்கு மேல் இல்லை. இந்த இலட்சணத்தில் தமிழகம் தனியாக பிரிந்தால், நமது இராணுவத்தில் எத்தனை லட்சம் பேர் இருப்பார்கள்? அந்நிய நாடுகளிடமிருந்து பாதுகாப்புக்கு ஆயுதங்கள் பெறலாம் பண உதவியும் பெறலாம். இராணுவ வீரர்களையும் இரவல் வாங்குவதோ? வாங்கினால் அதன் பின் நாம் பெற்ற சுதந்திரம் நிலைக்குமா? (செங்கோல் 27.11.60)

பிரிவினைக் கோரிக்கையை அது அந்த வடிவத்தில் வந்தாலும் எதிர்ப்பேன் என்ற தலைப்பில் ம.பொ.சி எழுதுகிறார். ''தமிழகத்தில் ஜீவநதி ஒன்று கூட இல்லை காவிரியாற்றின் தலைப்பு கன்னட நாட்டில் இருக்கிறது. தமிழகம் பிரிந்தால் காவிரி ஆற்றில் தண்ணீர் விட கன்னட அரசு சம்மதிக்குமா?......

''தமிழகத்தின் நிலப்பரப்பு ஐம்பதாயிரம் சதுரமைல். மக்கள் தொகையோ மூன்று கோடிக்கும் அதிகம். இன்னும் ஒரு அய்ம்பதாண்டு கழிந்தால் தமிழகத்தின் மக்கள் தொகை எட்டு கோடியாகலாம். அந்த நிலையில் பெருகி விட்ட மக்கள் தொகைக்கு குறுகிக்கிடக்கும் தமிழ் நிலம் போதுமா? வடவரை வெளியேற்றி, தமிழகத்தை தனி நாடாக்குவோமானால், அதையே காரணமாக காட்டி, வடக்கிலிலுள்ள தமிழர்களும் தமிழகத்திற்கு விரட்டப்படுவார்களே? இலங்கை, பர்மா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்களும் தாயகத்திற்கு விரட்டப்பட மாட்டார்களா?..... தமிழகத்தை இழப்பதால், எஞ்சிய பாரதத்திற்கு நஷ்டமில்லை. பாரத்திலிருந்து பிரிவதால் நஷ்டம் தமிழகத்திற்கே என்கிறார் ம.பொ.சி.'' (செங்கோல் 28.10.62)

'தமிழகம் தனி நாடகப் பிரிந்தால் நமக்குத் தேவைப்படும் பண்டத்திற்கும், பணத்திற்கும் அயல் நாடுகளிள் உதவியை நாட வேண்டியிருக்கும். சகோதர நாடு என்ற நல்லெண்ணத்தாலோ, கஷ்டப்படும் மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற கருணையாலோ எந்த ஒரு நாடும் நமக்கு உதவி செய்ய முன்வராது. அயல் நாட்டு அரசியலில் நாம் சொந்தக் கொள்கையின்றி எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்து நடப்பதனால் மட்டுமே உதவி கிடைக்கும்... பாகி தான் கதியை தமிழ்நாடு அடைய வேண்டுமா?'' செங்கோல் (15.12.57) 22.4.62 செங்கோல் இதழில் நாட்டை துண்டாடுவதால் யாருக்கு லாபம் என்ற கட்டுரையில் தமிழகத்தின் கதி என்ன? ''சென்னை நகரின் குடி தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க, கிருஷ்ணா – கோதவரி ஆறுகளின் தண்ணீரில் ஒரு சிறு பகுதியைச் சென்னையின் பக்கம் திருப்பி விட முடியா தென்கின்றனர் ஆந்திரர்.

தமிழகம் இந்தியாவோடு இணைந்திருக்கும் போதே நிலைமை இது வென்றால் பிரிந்து வாழுமானால், இப்போது கொடுக்கும் தண்ணீரைக் கூட நிறுத்தி விடுவார்கள் கன்னட, கேரள ஆட்சியினர். அந்நிலையில் நம் தமிழகத்தின் கதி என்ன?

**குறைப்பது எப்படி:** உணவு உற்பத்தியைப் பெருக்கினால் தானே அரிசி விலையைக் குறைக்க முடியும். தண்ணீர் பஞ்சத்திற்கு இரையாகித் தவிக்கும். தமிழ்நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படுமென்றால் அரிசி விலையை எப்படி குறைக்க முடியும்?

**கற்பனை செய்து பாருங்கள்:** இது நிற்க, தனித் தமிழ் நாட்டில் அதன் சுய நிறைவுக் கேற்ப கனரகத்தொழிற் சாலைகளை ஏற்படுத்தியாக வேண்டும். அதற்கேற்ப மின் விசைத் தேவையைப் பூர்த்தி செய்ய தண்ணீர் வசதியும் தேவைப் படுமல்லவா? கற்பனை செய்து பாருங்கள்.

**முன்னேற முடியுமா?:** உணவு உற்பத்திக்குத் தேவைப்படும் நீருக்கும், குடி தண்ணீருக்குமே திண்டாடும் தனித் தமிழ்நாடு, கனரகத் தொழில் துறையில் சிறிதேனும் முன்னேற முடியுமா?

**உதவி கிடைக்குமா?:** இந்தியாவோடு இணைந்திருக்கும் இந்நாளில் வட மாநிலங்களிலிருந்து கோதுமை, அரிசி போன்ற உணவுப் பொருள்கள் ஓரளவு தமிழகத்திற்குக் கிடைக்கின்றன. ஆந்திர நாட்டிலிருந்து மிகுதியான அரிசி நமக்குக் கிடைக்கின்றது. தனித்து வாழும் தமிழ் நாட்டிற்கு இந்த உதவிகள் கிடைக்குமா? உரிமையோடு கேட்கத்தான் முடியுமா?

**அயல்நாட்டு உதவி?** ''அமெரிக்கா போன்ற அயல் நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து கொள்ளலாம்'' என்று கூறலாம். இப்போதே, பாரதத்துக்குற்ற நாணய மாற்று சக்தியையும் மீறி உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகிறது, செய்தும், விலைவாசிகளை குறைக்க முடியவில்லையே! கேட்டவனுக்கெல்லாம், கேட்ட போதெல்லாம் அவனவனுக்குத் தேவைப்படும் அளவுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்க அமெரிக்க நாட்டார் வள்ளல் பெருமக்கள் அல்லர். தாங்கள் உதவும் நாட்டிலிருந்தும், தங்கள் நாட்டிற்கு என்ன ஆதாயம் கிடைக்கும்? என்று அலசி

ஆராய்ந்து பார்த்தப் பின்னர் தான் அவர்கள் உதவி புரிவார்கள்......

**என்ன இருக்கிறது?:**

தமிழ் நாட்டில் உலக நாடுகளுக்குத் தேவைப்படுகின்ற மூலப் பொருள்கள் இப்போது என்ன இருக்கிறது? ஏதோ இங்கும் அங்குமாக ஒரு சில இடங்களில் மூலப் பொருள்கள் கிடைக்கலாமென்று யூகிக்கிப்படுகிறது. ஆனால், இப்போதுள்ள நிலையை வைத்துத் தானே நாம் பிரிவினையால் நன்மை தீமைகளை ஆராய முடியும்.

**தனியாகப் பிரிந்தால்:**

தமிழ்நாட்டின் தற்போதைய மக்கள் தொகை மூன்றுகோடி, இவர்களில் தற்காலிகமாக குடியேறி வாழும் வட நாட்டாரோ, பிற அயல் நாட்டாரோ மிக மிகச் சொற்பம். இந்த நிலையில் தமிழ்நாடு தனியாகப் பிரியுமானால், தமிழகத்திற்கு வெளியே இந்தியாவிலும், பர்மா, இலங்கை, மலாயா, சிங்கப்பூர் போன்ற அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் பிரிக்கப்பட்ட தமிழகத்திற்கு விரட்டப்படுவது திண்ணம்......

தமிழகம் அழைத்துக் கொள்ள வேண்டிய மக்களின் எண்ணிக்கை அற்பமன்று; அரை கோடிக்கு மேலிருக்கும். ஒருக்கால், தமிழகத்திலிருந்தும் சிலர் வெளியேற்றப்படலாமென்றால், அத்தகைய 'அன்னியர்' எண்ணிக்கை ஆயிரக்கணக்கில்தான் இருக்கும். ஆம் சில ஆயிரக் கணக்கானவர்களை வெளியேற்றி அரைக்கோடி தமிழர்களை இங்கு அழைத்துக் கொள்ள நேரும். அந்த நிலையில் தமிழகத்தில் அரிசிவிலை இன்னும் கூடுமா? குறையுமா?

**என்ன அரசியல் ஞானமோ?:**

உறுதியாகச் சொல்லுகிறேன், எந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும் தமிழ்நாடு தனியாகப் பிரிந்தால் பயங்கரமான உணவு பஞ்சம் ஏற்படுவது திண்ணம். ஒரு புறம் உணவு விலையைக் குறைப்பதாகச் சொல்லிக் கொண்டு, இன்னொரு புறம் உணவுப் பஞ்சத்தை அதிகரிக்கச் செய்யும் தனி நாடு கேட்பது என்ன அரசியல் ஞானமே!...

**மன்னிக்க முடியாத குற்றம்**

.... நாட்டு மக்கள் எல்லோரும் இன்புற்று வாழ வேண்டுமென்றால் அதற்கு நாட்டைத் துண்டாட தேவை இல்லை.... நாட்டைத் துண்டாடக் கோரிக் கூச்சலிடுவது மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாகும். பிரிவினைக் கோரிக்கை நாடு முழுவதையுமே அழிக்கும் நஞ்சு என்பதை உணருங்கள். (செங்கோல் 22–4–62)

தமிழ்நாடு தனி நாடாக ஆக்கக் கூடாது என்பதற்கு ம.பொ.சி கூறும் அறிவுரைகள் நியாயமானவைகளா, நாடு பிரிந்தால் அந்த நாட்டை சேர்ந்தவர்களை உலகில் உள்ள எல்லா நாட்டவரும் அடித்துத் துரத்தி விடுவார்களா? உலக வரலாற்றில் பல நாடுகள் பிரிந்துள்ளன. அந்த நாட்டவர்களை ம.பொ.சி கூறுவது போல் மற்ற நாட்டினர் அடித்துத் துரத்தினார்களா? நீங்கள் தான் தமிழ் நாடு தனிநாடு வாங்கி விட்டீர்களே உங்கள் நாட்டுக்கே ஓடி விடுங்கள் என்று துரத்தி விடுவார்களா? என்ற கேள்வியைத் தமிழ்த் தேசியம் பேசும் ம.பொ.சி அன்பர்களுக்கே விட்டு விடுகிறேன். தோழர் சுப வீர பாண்டியன் அவர்கள் (பெரியாரின் இடது சாரி தமிழ் தேசியம்) என்ற நூலை வெளியிட்டபோது அவர் ம.பொ.சியின் சிலக் கருத்துகளை கூறி அவரை வலது சாரி (மதவாத) தமிழ்த் தேசியர் என்று குறிப்பிட்டிருந்தார். அப்போது பெ.மணியரசனும், இராசேந்திர சோழனும் வானத்துக்கும் பூமிக்கும் எகிறி எகிறி குதித்தார்கள். இப்போதும் அப்படியே தான் உள்ளார்கள். இப்போது நான் கூறுகிறேன் ம.பொ.சி. தமிழ்த் தேசியத் தலைவரல்ல அவர் இந்திய தேசிய வாதிதான் என்பதற்கு அவருடைய எழுத்துகளிலிருந்தே ஆயிரம் பக்கங்களுக்கு மேல் எடுத்துக் காட்ட முடியும்.

**ம.பொ.சியின் கொள்கை இந்து – இந்தி– இந்தியார் என்பதே!**

**22.10.1962** செங்கோல் இதழில் தீபாவளி வாழ்த்து கூறிய ம.பொ.சி. "தீபாவளி திருநாள், பாரத மக்களின் மிகப்பெரும்பாலேருக்கு இன்ப மூட்டும் நன்னாள். முப்பது கோடிக்கு மேற்பட்ட மக்கள் எல்லோரும் 'ஓர் குலம்' என்றெண்ணி உணர்ச்சி பூர்வமாக ஒன்றுபடும் நன்னாள்".

"தீபாவளி போன்ற பண்டிகைகள் தோன்றியிராவிடில்; பாரத மக்களிடையே இன்றுள்ள, அற்ப ஒருமைப்பாடும் இருந்திருக்க முடியாது. ஆகவே இதனை ஒரு தேசியத் திருநாளாகவே கருத வேண்டும். வாழ்க பாரதம்" அதோடு விடவில்லை அவர், அக்பர் அரண்மனையில் தீபாவளி கொண்டப்பட்டதாம். இப்படி யெல்லாம் அவருடைய இந்துத்துவ ஆராய்ச்சி செல்கிறது.

**21–11–62** இல் சென்னை வானொலில் பேசிய ம.பொ.சி, "தமிழ் பெரு மக்களே! நாம் தமிழராயினும் பிறந்த நாட்டால் நாம் எல்லோரும் இந்தியர். இந்தியா நம் தாய்த் திரு நாடு, நாம் அதன் புதல்வர்கள். இந்த உண்மையை மதிமாறி துறந்தால், அன்றே நாம் அழிந்தோம். வாழ்க நேரு வெல்க பாரதம்" (செங்கோல் 25.11.62)

**8.11.62** செங்கோல் தலையங்கத்தில் நேரு வேண்டாம் என்றால் வேறு யார்? என்று தலையங்கம் எழுதினார் நேருவை

விட்டால் நமக்கு வேறு தலைவர் யாரும் இல்லை என்பதை முழு பக்கம் எழுதி உள்ளார்.

15.5.55 செங்கோல் தலையங்கத்தில் ''மொழி வேற்றுமை காரணமாக, இந்திய சமூகத்தினரிடையே பிளவு தோன்றக் கூடாது என்கிறார் நேரு, அதை அப்படியே ஏற்றுக் கொள்கிறோம். ''பிளவு தோன்றினால், பெற்ற விடுதலைக்கு கேடு நேரும்'' என்றும் அதிலும் நமக்கு அய்யமில்லை அங்கிகரிக்கிறோம்.'' இப்படி எழுதும் ம.பொ.சிக்கு தமிழரசு கழகம் எதற்கு காங்கிரசிலே இணைந்து விட்டிருக்கலாமே. இவருக்கு ஆசை இருந்தது காங்கிரசிலே தொடர்ந்து இருக்க வேண்டுமென்று. ஆனால் தமிழ்நாடு காங்கிரசு காரர்கள் இவரை வெளியே துரத்தி விட்டு சேர்க்க மறுத்து விட்டார்கள்.

**இந்திய கலாச்சாரத்தை வற்புறுத்தும் ம.பொ.சி**

'உணர்ச்சி பூர்வமான தேசிய ஒருமைப்பாடு வளர வேண்டும் இந்திய கலாச்சாரம் என்பது பல்வேறு கலாச்சாரங்களின் கூட்டுப் பொருளாகும். ஆரியக் கலாச்சாரம், திராவிடக் கலாச்சாரம், அராபியர் கலாச்சாரம், ஆகியவற்றின் கலப்பே இந்திய கலாச்சாரம். பிற கலாச்சாரத்தினால், ஒரு கலாச்சாரம் அழிந்து விடுகிற தென்றால் அது கலாச்சாரமே அல்ல''....

ஆரியக் கலாச்சாரம், திராவிடக் கலாச்சாரம் உண்டு என்கிறார் ம.பொ.சி ஆனால் அவரது கடைசி சீடர் பா.குப்பன் திராவிடம் ஆரியம் என்பதெல்லாம் பொய் திட்டமிட்ட கட்டுக்கதை என்கிறார்.

நாம் தமிழினத்தவராக இருப்பினும் இந்திய சமுதாயத் தினராகவும் இருக்கிறோம். இந்த பிணைப்பு அல்லது இணப்பு எந்த சக்தியாலும் அழிக்க முடியாதது ஆகும்'' (8.7.62 அன்று தஞ்சை அரண்மனையில் மத்திய அமைச்சர் தலைமையில் நடைபெற்ற இந்திய கலாச்சார விழாவில் ம.பொ.சி பேசியது. (செங்கோல் 22.7.62) தேசிய ஒருமைப்பாடும் தமிழின உரிமையும் என்ற தலைப்பில் ம.பொ.சி 4.10.62 செங்கோல் இதழில் தலையங்கம் எழுதியுள்ளார்.

''இந்தியா ஒரே நாடு, இதனை, இந்தியாவின் இயற்கை அமைப்பே எடுத்துக் காட்டும் இந்தியாவின் எல்லைகள் வடக்கில் இமயமலை. தெற்கில் குமரிமுனை. கிழக்கில் வங்களாக் குடாக்கடல். மேற்கில் அரபிக்கடல். இந்த இயற்கை அமைப்பு **இந்தியா ஒரே நாடாக இருப்பதற் கென்றே இறைவன் படைத்தாகும். அதனால் தான் சேதமில்லாத இந்து தானம் என்றார் பாரதி. இந்தியா ஒரே நாடு என்ற உணர்ச்சி குமரிமுதல் இமயம் வரை பரந்து விரிந்த பாரத மக்களிடையே தொன்று தொட்டே இருந்து வருகிறது.''**

ஆங்கிலேயன் இந்த நாட்டை விட்டு 1947 இல் வெளியேறிய போது 562 குறு நில மன்னர்கள் ஆண்டு கொண்டிருந்தனர். இந்தியா என்ற ஒரு நாடு வரலாற்றில் என்றுமே ஒரே நாடாக இருந்ததே இல்லை. ஆனால் ம.பொ.சி கூறுகிறார் தென்று தொட்டே இந்தியா ஒரு நாடாக இருந்தது என்று. இது எவ்வளவு பெரிய பொய்? வரலாற்று மோசடி என்பதை தமிழ்த் தேசியம் பேசுவோர் உணரவேண்டும்.

17.1.63 அன்று கன்னியாகுமரி விவேகானந்தர் பாறையில் சிலை அடிக்கல் நாட்டு விழாவில் பேசிய ம.பொ.சி. ''நான் ஒரு இந்துவாக இருப்பது குறித்து வருத்தமோ வெட்கமோபடவில்லை. மாறாக மாபெரும் கலாச்சாரப் பாரம்பரியத்தை சார்ந்தவன் என்பதற்காகப் பெருமைப்படுகிறேன். ஒரு இந்துவாக மட்டுமல்லாமல், தேச பக்தியுடைய இந்தியனாகவும் இந்தக் கூட்டத்தில் பேசுகிறேன். நாம் இந்தியர் இந்தியா நம் தாய் நாடு என்பதை மறந்து விடக் கூடாது''. என்றார் (செங்கோல் 27–1–63)

**இந்தியைப் பற்றி ம.பொ.சியின் கருத்து:**

''தனித் தமிழ்நாடு கோருவோர் இந்தியை அடியோடு வெறுக்கலாம். அவர்களின் நிலை வேறு. இந்தியாவின் அய்க்கியத்தை ஏற்பவர்களாகிய நாம் (தமிழரசு கழகத்தினர்) இந்தியை அடியோடு புறக்கணிக்க முடியாது. தமிழக மக்கள் இந்தி பயிலத்தான் வேண்டும். குறைந்த பட்ச தேர்வுக்குரிய மதிப்பெண் பெறவேண்டும் என்ற நிலையில் பாடத்தில் இந்தி இடம் பெறவேண்டும்'' (செங்கோல் 3–3–63)

ம.பொ.சி இந்து, இந்தி, இந்திய வெறியர் அவர் தமிழ்த் தேசியவாதியே அல்ல. தமிழ் பயிற்று மொழி, தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழிக்காக போராடினால் மட்டும் போதது. தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் அவர் இந்திய தேசியத்திற்கு ஆதரவாகவே இருந்தார். தமிழின விடுதலைக்கு எதிராகவே இருந்தார். அவர் ஒரு இந்திய தேசிய வாதியே ஆவார்.

பெரியார் 1938 முதல் தமிழ்நாடு தமிழருக்கே என்று போராடி வந்தார். அவர் சிறையிலிருந்த போது நீதிகட்சியின் தலைவராகத் 1938 டிசம்பர் 31 நாள் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் சிறையில் இருந்து வெளியே வந்த பிறகு நடைபெற்ற நீதிகட்சி செயற்குழுவில், நீங்கள் தமிழ்நாடு தமிழருக்கே என்றால் நாங்கள் எங்கே போவது என்று நீதிக்கட்சியில் இருந்த தெலுங்கர்களும் மலையாளிகளும் கேட்டார்கள், அதனால் தான் அந்தக் கோரிக்கை திராவிட நாடு திராவிடருக்கே என்று மாற்றப்பட்டது. திராவிட நாடு என்பது ஒரே நாடல்ல நான்கு நாடுகள் சேர்ந்த ஒரு கூட்டமைப்பு என்று அப்போதே

விளக்கப்பட்டது. இன்றைக்கு தமிழ்த் தேசியர்களால் உயர்த்திப் பிடிக்கப்படும் நீதிக்கட்சியை சேர்ந்தவர்களான கி.ஆ.பெ. விதவநாதம் அப்போது நீதிக்கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தார். அவர் மறுப்பு சொல்லவில்லை.24, 25–8–1940 இல் திருவாரூரில் நடைபெற்ற நீதிகட்சி இரண்டு நாள் மாநாட்டில் திராவிட நாடு பிரிவினை தொடர்பான பல தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

அந்த மாநாட்டில் ‘‘திராவிட நாடு பிரிக்கப்பட திட்டங்கள் வகுக்கு ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவில் கி.ஆ.பெ. உறுப்பினராக இருந்தார்.

இன்றைக்கு அண்ணல் தங்கோவின் பெயரன் அருள் செல்வனால் அறிமுகப்படுத்தப்பட்டு தமிழ்த் தேசிய வாதிகள் மிகப் பெரியத் தமிழ்த் தேசிய வாதியாக உயர்த்திப் பிடிக்கப்படும் அண்ணல் தங்கோ. அந்த மாநாட்டில் முக்கிய தீர்மானத்தை முன்மொழிந்தார்.

‘‘வரவிருக்கின்ற சென்ச  கணக்கெடுப்பின் போது திராவிட மக்கள் தங்களை ‘‘திராவிடர்கள்’’ என்று பதிவு செய்ய வேண்டும். மதம் என்ன என்று கேட்டால் ‘‘திராவிட சமயம்’’ என்று சொல்ல வேண்டுமே தவிர இந்து சமயம் என்று சொல்லக் கூடாது’’. என்ற தீர்மானத்தை முன்மொழிந்தவர் அண்ணல் தங்கோ வழி மொழிந்தவர் வாணியம்பாடி விசுவநாதம் ஆவர் (ஆதாரம்: குடிஅரசு 1–9–1940 பக்கம் 12)

அன்றைக்கு இருந்த அரசியல் அமைப்புக்கு ஏற்றத் தன்மையில் நீதிக்கட்சியினர் இயங்கி வந்தனர். பெரியாரை மட்டும் குறை சொல்வது என்ன நியாயம்? 1956 நவம்பர் 1 ஆம் நாள் தமிழகம் மொழி வழி மாநிலமாக பிரிந்தவுடன் பெரியார் 4–11–56 அன்று தி.க.செயற் குழுவை திருச்சியில் கூட்டிய கூட்டத்தில் இனி ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற உரிமை முழக்கத்தை எழுப்ப வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. விடுதலை ஏட்டின் தலைப்பு பகுதியில் ‘திராவிட நாடு திராவிடருக்கே’ என்று வெளியிட்டு வந்ததை மாற்றி ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்று வெளியிட்டு வந்தது. பெரியார் மறையும் வரை ஏன் 1975 ‘எமர்ஜியன்சி’ காலம் வரை இந்த முழக்கம் விடுதலையில் இடம் பெற்று வந்தது. ‘‘தமிழ்நாடு தமிழருக்கே’’ என்ற முழக்கத்தை பெரியார் முழு மனதுடன் எழுப்பவில்லை; அண்ணாதுரையின் ‘திராவிட நாடு’ கோரிக்கையை எதிர்ப்பதற்காக வென்றே தமிழ்நாடு கோரிக்கையை முன் வைத்தார்’’ என்று கூறுகிறார் (பா.குப்பன் பக் 41) குப்பன் ஒரு குதர்க்காவாதி 34 ஆண்டுகள் திராவிடர் கழகத்தில் இருந்த பா.குப்பன் இப்படி ஒரு அபத்தமான கருத்தை எழுதுவது பெரியாரை கொச்சைப்படுத்த வேண்டும் என்பதற்காகவே ஆகும். உண்மையில் குப்பனின் இன்றையத் தலைவர் ம.பொ.சி தான் ஏட்டிக்கு போட்டியாக திராவிடர் கழகத்துக்கு எதிராக தமிழரசு கழகம் என்று நடத்தி ஒரே ஆண்டில் நாட்டு பிரிவினை கோரிக்கையை கை விட்டார். குப்பன் கூற்றுப்படி பெரியார் அண்ணாவுக்கு போட்டியாக தமிழ்நாடு தனிநாடு கோரிக்கையை வைத்திருந்தால் அண்ணா 1963 இல் திராவிட நாடு கோரிக்கையை கை விட்டவுடனேயே பெரியாரும் கைவிட்டு இருக்க வேண்டுமல்லவா? இல்லையே பெரியார் மறையும் வரை அக்கோரிக்கை அவர் கைவிடல்லையே.

பெரியாரிடம் நாட்டு பிரிவினைக்கான எந்தத் திட்டமும் இல்லையென்கிறார் பா. குப்பன். தமிழ்நாடு நீங்கிய இந்திய தேசப்படத்தை எரித்தது எதற்காக தமிழ்நாடு வேண்டும் என்பதற்காகத் தானே! அதைக் கூட உங்கள் ம.பொ.சி எதிர்த்தாரே. பெரிய மக்கள் திரளிடையே இந்த எண்ணத்தை உருவாக்கியவர் பெரியார்.

பெரியாரிடம் எந்தத் திட்டமும் இல்லை என்று கூறும் குப்பனிடம், தென்மொழியிலும் தமிழர் எழுச்சி இதழிலும் பெரியாரைக் கண்டபடி திட்டி விட்டு கடைசியாக முடிக்கும் போது ஒரு வரி தமிழ்த் தேசியம் அமைப்போம் வாருங்கள் என்று எழுதிவிட்டால் போதுமா?

1938 முதல் 1973 இல் பெரியார் மறையும் வரை இந்திய தேசியத்தின் ஆக்கிரமிப்பை, அடக்கு முறையை, இந்திய அரசியல் கட்டமைப்பை எதிர்த்த ஒரே தலைவர் பெரியார் தான். பெரியாரை நீங்கள் திட்டுவதால் அவருடைய புகழ் ஒன்றும் மங்கிப் போய்விடாது. பெரியார் இன்றும் நிலைத்து நிற்கின்றார் என்றால் அவருடைய கருத்து வலிமை, நேர்மையான அரசியல் ஆகியவற்றால் தான், ம.பொ.சி மாதிரி போலியாக தமிழரசுக் கழகம் என்று ஒரு அமைப்பை வைத்துக் கொண்டு இந்திய தேசியத்துக்கு ஆதரவாக பக்க மேளம் வாசிக்கவில்லை.

பெரியாரை இவ்வளவு கேள்வி கேட்கும் பா.குப்பன் ம.பொ.சி காங்கிரசில் இருந்து கொண்டே தமிழ்நாடு கேட்டாரே அது நடைமுறை சாத்தியமா? கண்ணியமாக காங்கிரசை விட்டு அவராகவே வெளிவந்து தனி அமைப்பு அல்லவா வைத்திருக்க வேண்டும். பெரியார் திராவிட நாடு திராவிடன் என்று எல்லாம் கூறி திசை மாற்றி விட்டார் என்று அங்கலாய்க்கும் ம.பொ.சி பக்தர்களோ, ம.பொ.சி மூச்சுக்கு முன்னூறுதரம் இந்து, இந்தி, இந்தியா என்று எழுதிக் கொண்டிருந்தாரே அவரை ஒரு கேள்வி நீங்கள் கேட்டதுன்டோ?

பெரியார் திராவிட நாடு கேட்டதோ, சுதந்திர தமிழ்நாடு கேட்டதோ, வடநாட்டான், பார்ப்பான் போன்ற அன்னியன் சுரண்டலற்ற, இந்துமதச் சாக்கடையான வருணாசிரம, சாதிபேத மற்ற மக்களாக உழைப்பாளி மக்களின்ஆட்சியை நிறுவவும் ஆணுக்கு அடிமைப்பட்டு கிடந்த பெண்ணினத்தை விடுவிக்கும் விதமாக அனைத்து விதமான அடிமைத் தளைகளிலிருந்தும் விடுதலை வேண்டும் என்பதற்காகவே விடுதலை கேட்டார். வெறும் கோடு போட்டது போல் இதுவரை

உன் எல்லை இதுவரைஎன் எல்லை என்று வரைப்படம் போட்ட நாடு அல்ல. இன்றைக்கு தமிழ் மக்களிடையே விடுதலை உணர்ச்சி வளர்ந்து வருகிற தென்றால். அது பெரியார் இயக்கத்தின் நீட்சியே ஆகும். திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியே தமிழ்த்தேசியமாகும்.

# பகுதி-5

பா.குப்பனின் குற்றச்சாட்டுகள் ''பெருங்காவூர் இராச கோபாலாச்சாரி என்ற பிராமணரை சபைநாயகராக ஆங்கிலேயே ஆளுநர் நியமித்தபோது அதை நீதிக் கட்சியினர் எதிர்க்கவில்லை; மாறாக மனமுவந்து ஏற்றுக் செயல்பட்டனர். இது நீதிக் கட்சியினரின் பிராமண எதிர்ப்பு போலியானது என்பதற்கு முதல் எடுத்துக்காட்டு''(பக் 49) என்கிறார் பா.குப்பன்.

1919 இல் ஏற்பட்ட இரட்டை ஆட்சியில் முதல் முறை மட்டும் சபாநாயகரை தேர்ந்தெடுக்கும் உரிமை சட்டசபைக்கு கொடுக்கப்படவில்லை. சபாநாயகர் ஆளுநர் நியமனம் என்பதை பா.குப்பனே தெரிவித்துள்ளார். சபாநாயகருக்கு சட்டம் இயற்றும் எந்த அதிகாரமும் கிடையாது. அவர் வெறும் பொம்மைதான். அந்த பார்ப்பனர் சபாநாயகராக இருந்த போது தான் பார்ப்பனரல்லாதாருக்கு இடஒதுக்கீடு அளிக்கக் கூடிய இரண்டு வகுப்பு வாரி உரிமை அளிக்கக் கூடிய அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன என்பதை பா.குப்பன் அறிவாரா?

முதல் வகுப்புரிமை அரசானை 16–9–1921 இலும் இரண்டாவது வகுப்புரிமை அரசாணை 15–8–1922 இலும் பிறப்பிக்கப்பட்டது. அதே காலகட்டத்தில் தான் 1922 முதல் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு கல்லூரிகளில் 50% இடஒதுக்கீடு அளிக்கும் தீர்மானமும் அதனை கண்காணித்து மாணவர் தேர்வு குழுக்களும் அமைக்கப்பட்டன.

பா.குப்பன் சொல்லும் பார்ப்பனர் சபாநாயகராக இருந்த காலத்தில்தான் பார்ப்பனர் கோயில்களில் கொள்ளை அடித்து வந்ததை தடுக்கும் விதத்தில் இந்து அறநிலையத் துறை பாதுகாப்பு மசோதாவை, பனகல் அரசர் 8.12.1922 இல் முன்மொழிந்து 1923க்குள் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பார்ப்பனரல்லா தாருக்கும் ஆதி திராவிட மாணவர்களுக்கும் பயனளிக்கும் பல விவாதங்கள் சட்ட மன்றத்தில் விவாதிக்கப்பட்டு பார்ப்பனரல்லாதாருக்கு சாதகமான பல சட்டங்கள் இயற்றப்பட்டன. நீதிக்கட்சியினரின் பார்ப்பன எதிர்ப்பு போலியானது என பா.குப்பன் கூறுவதில் ஒரு சிறிதும் உண்மை இல்லை.

அடுத்தக் குற்றச்சாட்டு ''சேதுரத்தினம் அய்யரை அமைச்சராகச் சேர்த்துக் கொண்டது''. 1926 இல் சுயேச்சை அமைச்சரவை அமைத்த சுப்பராயன் அமைச்சரவையில் அமைச்சர்களாக இருந்த சுயராச்சிய கட்சியை சேர்ந்த அரங்கசாமி முதலியார் ஆரோக்கியசாமி முதலியார் இருவரும் சைமன் கமிஷனை டாக்டர் சுப்பராயன் வரவேற்றதை கண்டித்து பதவி விலகினர். டாக்டர் சுப்பராயன் ஆட்சிக் கவிழும் நிலை ஏற்பட்டது. அன்றைய ஆளுநர் நீதிக்கட்சியினரை அழைத்து டாக்டர் சுப்பராயனுக்கு ஆதரவு அளிக்கும் படி கேட்டுக் கொண்டார். நீதிக்கட்சியை சார்ந்த முத்தையா முதலியாரையும் சுயராச்சிய கட்சியில் இருந்து விலகி அமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்டு வந்த சேதுரத்தினம் அய்யரையும் அமைச்சரவையில் சுப்பராயன் சேர்த்துக் கொண்டார்.

1926 தேர்தலில் நீதிக்கட்சி தோல்வி அடைந்தது. சுயராஜ்ஜிய கட்சி தான் வெற்றி பெற்றிருந்தது. நீதிக்கட்சியில் 21 சட்டமன்ற உறுப்பினர்களும், சுயராய்ச்சிய கட்சியில் 41 சட்டமன்ற உறுப்பினர்களும் சுயேச்சைகள் 36 பேரும் அப்போது இருந்தனர். சுயராச்சிய கட்சியில் பெரும்பாலும் பார்ப்பனர்களே அதிக அளவில் இருந்தனர். அவர்களின் எதிர்ப்பை சமாளிக்க பார்ப்பனரான சேதுரத்தினம் அய்யர் சுயேச்சை அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

சேதுரத்தினம் அய்யர் திருச்சியை சேர்ந்தவர். 1920 தேர்தலில் சுயேச்சையாகவும், 1923, 1926 சட்டமன்றத் தேர்தலில் திருச்சி தொகுதியிலிருந்து சுயராஜ்ய கட்சி வேட்பாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர். பா.குப்பன் பார்வையில் இராஜாஜியும், சத்திய மூர்த்தி அய்யரும் தமிழ்ப் பார்ப்பனர்களாக இருக்கும் போது மணத்தட்டை சேதுரத்தினம் அய்யர் மட்டும் எப்படி தெலுங்கு பார்ப்பனராக மாறிவிட்டார் என்பது நமக்கு புரியவில்லை.

ம.பொ.சி ஆதரித்தால் அவர்கள் தமிழ்ப் பார்ப்பனர்கள். ம.பொ.சி எதிர்த்தால் இவர் தெலுங்கு பார்ப்பனரா? என்ன அளவு கோலை வைத்திருக்கிறார் பா.குப்பன்? மஞ்சள்காமலை வந்தவன் கண்களுக்கு பார்க்கப்படும் பொருள்கள் அனைத்தும் மஞ்சளாகவே தெரியுமாம். அதைப் போலத்தான் நீதிக்கட்சி என்றாலே குப்பனுக்கு தெலுங்கராகத் தெரிகிறார் போலும். அந்தப் பார்ப்பனரை அமைச்சர் அவையில் வைத்துக் கொண்டுதான் முத்தையா முதலியார் வகுப்புரிமை அடிப்படையில் அரசானை பிறப்பித்து நடைமுறைப்படுத்தினார். டாக்டர் சுப்பராயன் சத்திய மூர்த்தி பார்ப்பனர் வானத்துக்கும் பூமிக்கும் குதித்த போதும் தேவதாசி ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றினார். விபச்சாரத் தடுப்புச் சட்டத்தை நிறைவேற்றினார். அதைக்கூட சத்திய மூர்த்தி எதிர்த்தார். விபச்சாரத்தை ஒழித்து விட்டால் காமவெறியர்கள் குடும்பப் பெண்களை எல்லாம் கொடுத்து விடுவார்கள். ஆகவே விபச்சார ஒழிப்பு சட்டம் கூடாது என்று வாதாடினார். இவர்தான் ம.பொ.சி.க்கு தலைவர் பா.குப்பனுக்கும் தலைவர். டாக்டர் சுப்பராயன் கொண்டு வந்த எந்தச்சட்டத்தையும் சேதுரத்தினம்

அய்யர் எதிர்க்கவில்லை. அதற்கு ஆதரவாகவே செயல்பட்டார். இதைக் கொண்டு நீதிக்கட்சியினருக்கு பார்ப்பன எதிர்ப்பு இல்லை அது போலியானாது என்று பா. குப்பன் கூறுவதில் உண்மையில்லை என்பது புலப்படும்.

நெல்லூர் பார்ப்பனரல்லாதார் மாநாட்டில் அமைச்சரவையில் மட்டும் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளலாம். நீதிக் கட்சியில் பார்ப்பனர்களை உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளக் கூடாது என்ற பெரியாரின் தீர்மானத்தை காட்டி பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பு போலியானது என்கிறார் பா.குப்பன் (பக் 49)

நெல்லூர் மாநாடு 5, 6–10–1929 இல் நடைபெற்றது. அதற்கு முந்தைய வாரமே குடி அரசு இதழில் பெரியார் நீதிக்கட்சியினருக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார். ‘‘பார்ப்பனர்களை தென் இந்திய நல உரிமைச் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளுவது என்கிற முடிவுக்கு வந்தால் அன்றே அந்த இயக்கம் தோல்வி அடைந்து விட்டது. செத்துப்போய் விட்டது, என்பதை மாத்திரம் ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்... பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ளுவது என்கிற விஷயம் நிறைவேறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது தான் மிகவும் முக்கியமான விஷயம்... எந்தக் காரணத்தை முன்னிட்டும் பார்ப்பனர்களை இவ்வியக்கத்தில் சேர்த்தால் இவ்வியக்கம் அன்றே தன் கூட்டில் நெருப்பு வைக்கப்பட்டது போல் இயக்கம் செத்து பார்ப்பன ஆதிக்கத்திற்கு மற்றொரு சாதனமாய் மாறிவிடும் என்பதை மட்டும் அழுத்தம் திருத்தமாக உறுதியாய்ச் சொல்லுவோம்’’....

‘‘பார்ப்பனரர்களுக்குள்ள அரசியல் பங்கை மோசம் செய்ய வேண்டும் என்றும் நாம் சொல்வதில்லை. நமது கொள்கைக்கும், நன்மைக்கும் விரோதமில்லாத பார்ப்பனர்களுக்கு அவர்களது பங்கைக் கொடுக்க நாம் தயராகவே இருக்கிறோம்’’. (குடிஅரசு 22–9–1929) 1926 தேர்தலில் நீதிக்கட்சி தோற்று விட்டவுடன் 1927 இல் கோவையில் நடைபெற்ற மாநாட்டில் நீதிக்கட்சியில் பார்ப்பனர்களை உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று முயற்சி செய்யப்பட்டது. அதற்கு இரண்டு நாள் கழித்து தான் இந்த நெல்லூர் பார்ப்பனரல்லாதார் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டின் தலைவர் சித்தூர் முனிசாமி நாயுடுவும், ஏ.பி.பாத்ரோவும் நீதிக்கட்சியில் பார்ப்பனர்களை உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தனர். அந்த தீர்மானத்தை மாற்றுவதற்காவே. கட்சியில் பார்ப்பனர்களை உறுப்பினர்களாக சேர்க்க வேண்டாம். தேர்தல்களிலும் அவர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்ய வேண்டாம். தாங்களாகவே வெற்றி பெரும் பார்ப்பனர்களில் நாம் கொள்கைக்கு ஒத்து வருபவர்களை அமைச்சராக வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளலாம் என்ற நீதிக்கட்சியினரின் தீர்மானத்தை பெரியார் வழி மொழிந்தார். தெலுங்கரான மனத்தட்டை சேதுரத்தினத்தை விழுந்து விழுந்து வழிமொழிந்தார் பெரியார் என்பது உண்மையல்ல சேதுரத்தினம் அய்யர் பதவி ஏற்றுக் கொண்டது 16–3–1928 இல் நெல்லூர் மாநாடு நடைபெற்றது 5, 6–10–1929. சேதுரத்தினம் அய்யர் பதவி ஏற்று ஒன்றரை ஆண்டுகள் கழித்துத் தான் நெல்லூர் மாநாடு நடைபெற்றது.

பெரியார் பார்ப்பனர்களைத் திட்டிக் கொண்டே வாசன் போன்ற பார்ப்பனர்களிடம் பணம் வாங்கினார் என்ற குற்றச்சாட்டை கூறியுள்ளார் வாசன் தொடக்கக் காலத்தில் பத்திரிக்கை முதல்வராக இருந்தார். பெரியாரின் குடி அரசு ஏட்டுக்கு ஏஜெண்டாகவும் இருந்து பணம் சம்பாதித்து பெரிய ஆளாக வளர்ந்தார். அந்த நன்றிக் கடனுக்காக ஒவ்வொரு ஆண்டும் பெரியார் பிறந்த நாளில் அவரே நேரில் வந்து அய்யாவை வணங்கிவிட்டு இயக்க வளர்ச்சிக்கு பணம் கொடுத்துவிட்டுப் போவார். பெரியார் வாங்கிய பணத்தையெல்லாம் பொது மக்களுக்கு பயன்படும் படி செய்து விட்டுபோனார். ஆனால் உங்கள் தலைவர் ம.பொ.சிக்கு கொடுத்தப் பணத்தையெல்லாம் தன் வீட்டுக்கு கொண்டு போனார். ஆனால் நான் யாரிடமும் பணமே வாங்கவில்லை என்று **நிதிவாங்க மறுத்தேன்** என்ற தலைப்பில் எனது போராட்டத்தில் பொய்யாக எழுதியுள்ளார். திராவிட இயக்க கலைஞர் என்.எ .கிருஷ்ணன் தான் திரைக்கலைஞர்களிடம் பணம் வசூலித்து பியட் கார் ஒன்றை பரிசாக அளித்தார். என்.எ .கே. மேடையில் பேசும்போது ‘‘நான் வாங்கி வந்த காரை தூக்கி காட்டமுடியாதல்லவா அதனால் அந்த காரின் காவியை காட்டுகிறேன்’’ என்று கூறியுடன் அவையில் பலத்த கைத்தட்டலுக்கிடையே காரின் சாவியை ம.பொ.சியிடம் வழங்கினார். ரூ 30,000 பணமுடிப்பு வழங்கப்பட்டது. இந்த பணம் எனக்கல்ல கஷ்டத்தில் வாடும் என் மக்களுக்கு பிள்ளைகளுக்கு என்று வீட்டுக்கு கொண்டு சென்றுவிட்டார்.

சி.ப.ஆதித்தனார் பதவிக்காக தி.மு.கவுக்கு போகவில்லை. மாறாக, ஆதித்தனாரின் மணிவிழாவிற்குக் கருணாநிதி நேரில் வந்து ‘‘சுதந்திர தமிழ்நாடு’’ வரைப்படம் போட்ட கேடயம் ஒன்றைக் கொடுத்து, ‘‘இன்று வரைப்படம் நாளை தனிநாடு இலக்கு ஒன்றே நாம் சேர்ந்து செயல்படுவோம்’’ என்று ஏமாற்று உரையாற்றினார். அதனை தொடர்ந்து அண்ணாதுரை ஆதித்தனாரை அவருடைய வீட்டில் சந்தித்து ‘‘நமது கருத்து ஒத்திருப்பதால் இணைந்து செயல்படுவோம்!’’ என்று கூறியதால் தான் ‘நாம் தமிழர்’ அமைப்பு இணைந்தது என்கிறார் (பா.குப்பன் பக்111)

பா.குப்பன் இதே நூலில் பக் 43 இல், அண்ணாதுரை இந்திய சீன எல்லைப் போரைக் காரணம் காட்டி 1963 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் நாளான்று திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கையை கை விடுவதாக அறிவித்தார்’’. என்று எழுதியுள்ளார்.

1963 இல் நாட்டு பிரிவினையை கை விட்ட தி.மு.க. வினர் 1965 இல் எப்படி ஆதித்தனாருக்கு ‘தமிழ்நாடு’ வரைபடம்

போட்டகேடயத்தை கருணாநிதி வழங்கி இருக்க முடியும்? கருணாநிதிக்கு மட்டும் தனிக் கொள்கை இருந்ததா? ஆதித்தனாரை காப்பாற்ற பா.குப்பன் மூளையில் உதித்த கற்பனை தான் இது.

1944 இல் தமிழ் அரசு கட்சி என்று அமைப்பை தொடங்கிய ஆதித்தனார் 'தமிழ்க் கொடி' என்ற ஏட்டையும் அப்போது தொடங்கினார். 'தனித் தமிழ் நாடு' தான் தன்னுடைய கோரிக்கை என்றார்.

1945 இல் 'தமிழ் அரசு கட்சியை' கலைத்து விட்டு இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்தது ஏன்? மேலவை உறுப்பினர் M.L.C பதவிக்குத் தானே வேறு என்ன காரணம்? 1950 இல் காங்கிரசு அரசு பனை மரத்துக்கு வரிவித்தது. தன்னுடைய நாடார் சாதியினருக்கு தொல்லையாக அது ஒட்டுவிழாது என்ற காரணத்தினால் காங்கிரசை விட்டு வெளியே வந்த ஆதித்தனார், 1952 இல் வட இந்தியத் தலைவரான ஆச்சாரியா கிருபாளினையைத் தலைவராக் கொண்ட அகில இந்திய கட்சியான (Kissan mustur prja party)K.M.P.P யில் ஏன் சேர்ந்தார்? M.L.A. பதவிக்குத்தானே, வேறு என்ன காரணம், பா.குப்பன் அவர்களே இத்தனைக்கும் கிருபாளணி மொழி வழி மாநில கோரிக்கைக்கு எதிராவனர். இந்தி வெறியர். ஆதித்தனர் தமிழ்நாட்டில் 'கிஸான்' போராட்டத்தை நடத்தினார் விவசாயிகள் போராட்டம் என்று சொல்லவில்லை குப்பன் அவர்களே.

நாம் தமிழர் இயக்கத்தை கலைத்து விட்டு 1967 இல் தி.மு.க வில் சேர்ந்து சபாநாயகரான ஆதித்தனர் 1971 இல் அமைச்சராகவும் 1980 தேர்தலில் தி.மு.கவில் M.L.A சீட்டு கொடுக்கவில்லை. 1980 இல் நீங்கள் மலையாளி என்று கூறும் எம்.ஜி.ஆரிடம் ஓடி அண்ணா தி.மு.வில் ஏன் சேர்ந்தார்? பா.குப்பன் அவர்களே தனித்தமிழ் நாடு கேட்டுப் போராடவா? உங்கள் தலைவர் ம.பொ.சியும். 1976 இல் தமிழ்நாட்டில் பிறமொழியினர் என்ற நூலை எழுதிவிட்டு, 1977 தேர்தலில் தி.மு.க தோற்றுவிட்டு அ.தி.மு.க அதிக இடங்களைப் கைப்பற்றியவுடன் மேலவை துணைத்தலைவர் பதவியை தக்கவைத்துக் கொள்வதற்காக இராமாவரம் தோட்டத்திற்கு சென்று உங்களால் மலையாளி எனக் கூறப்படும் எம்.ஜி.ஆரின் வீட்டுக் கதவை தட்டினாரே அப்போது எம்.ஜி.ஆர் பிறமொழியினர் என்று தெரியவில்லையா? குப்பன் அவர்களே! எம்.ஜி.ஆர்.ஆதித்தனாருக்கும் ம.பொ.சிக்கும் தனித் தமிழ்நாடு பெற்றுத் தருவேன் என்று வாக்குறுதி அளித்தாரா? குப்பன் அவர்களோ! பொய்க்கால் குதிரைகளின் மீது அமர்ந்து கொண்டு பெரியாரை மண் குதிரை என்று கூறுவதில் என்ன நியாயம் இருக்கிறது பா.குப்பன் அவர்களே!

பகுத்தறிவாளர் என்றும் சிந்தனையாளர் என்றும் பாராட்டப்பட்டப் பெற்ற ஈ.வெ.ரா சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கியது முதல் தாமே அதற்குத் தலைவராயிருந்தார். நீதி கட்சியில் இணைந்த போதும் அந்த நீதிக்கட்சியின் தலைவராகவே இணைந்தார். நீதிக்கட்சியின் பெயர் 'திராவிடர் கழகம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட போதும் அதற்கும் தலைவரானார். தாம் இறக்கும் வரையில் அவர் அந்தத் தலைவர் பதவியை விட்டுக் கொடுக்கவில்லை. ஈ.வெ.ரா பதவி வெறியர் இல்லையா என்கிறார் பா.(குப்பன் பக் 112) சுயமரியாதை இயக்கத்தின் தலைவராக 11.5.1930 அன்று ஈரோட்டில் நடைபெற்ற கூட்டத்தில் ஊ.பு.அ சௌந்தர பாண்டியன் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஊ.பு.அ சௌந்தர பாண்டியன் அவர்கள் இராமநாதபுரம் ஜில்லா போர்டுத் தலைவர் பதவியை ராஜிநாமா செய்த போது பெரியார் கீழ்க்கண்டவாறு எழுதினார். உயர்திருவாளர், ''ஊ.பு.அ சௌந்த பாண்டியர் அவர்களின் இராஜினமா. மானம் பெரிதொழிய தானம் பெரிதல்ல சுயமரியாதை வீரரின் சுயமரியாதைச் செயல்! சுயமரியாதைத் தலைவர். சுயமரியாதைச் சங்கத்தின் தலைவர், உயர் திரு ஊ.பு சௌந்தர பாண்டியனார் அவர்கள் இராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர் பதவியை சிறிது நேரத்தில் இராஜினமா செய்து உண்மைச் சுயமரியாதைக்கு உதாரணமாய் விளங்கி விட்டார்.'' என்று பெரியாரே எழுதியுள்ளார். செங்கல்பட்டு முதல் சுயமரியாதை மாநாட்டுக்கும் தலைவர் சௌந்தர பாண்டியன் தான். சுயமரியாதை இயக்கத்தின் தலைவராகவும் சௌந்தர பாண்டியன் தான் இருந்தார். பா.குப்பன் சொல்வது போல் பெரியாரே சுயமரியாதை இயக்கத்தின் நிரந்தர தலைவரல்ல. கி.ஆ.பெ.விசுவநாதன் 1920 முதலே நீதிக்கட்சியில் இருந்தவர் பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறிய 1925 ஆம் ஆண்டிலிருந்து பெரியாருடன் இணைந்து செயல்பட்டார்.

1938 இல் இந்தி எதிர்ப்பின் போது இராஜாஜி நீதிக்கட்சியின் தலைவர் பொப்பிலி அரசரை அக்கட்சியின் தலைவர் பதவியை விட்டு விலகுமாறு மிரட்டினார். பொப்பிலி அரசர் பயப்படவில்லை. இராஜாஜியும் சும்ம இருக்கவில்லை. ஜமின் தாரி ஒழிப்பு மசோதாவை கொண்டு உங்கள் ஜமின் சொத்துகளை அரசுடைமை ஆக்கி விடுவேன் என்று மிரட்டியதால், மற்ற ஜமீன்தார்கள் பொப்பிலி அரசருக்கு நெருக்கடி கொடுத்து நீதிக்கட்சி தலைவர் பதவியிலிருந்து விலகி விடுமாறு வற்புறுத்தினர். பொப்பிலி அரசர் விலகி விட்டால் நீதிக்கட்சியை ஒழித்து விடலாம் என இராஜாஜி கனவு கண்டார். பொப்பலி அரசர் நீதிக்கட்சி தலைவர் பதவிலியிருந்து விலவி விட்டார். இந்த நிலையில் தான். கி.ஆ.பெ.விசுவநாதமும் ஏ.டி.பன்னீர் செல்வமும் பெல்லாரி சிறையில் இருந்த பெரியாரை சந்தித்து ஆலோசனை நடத்தினர். பெரியாரை நீதிக்கட்சித் தலைவர் பொறுப்பை ஏற்கும்படி வற்புறுத்தினர். பெரியாருக்கு அதில் விரும்பம் இல்லையெனினும் வேறு வழியின்றி ஒத்துக் கொண்டார். தலைவரின் தலைமை உரையை அங்கேயே பெரியாரிடம் கேட்டு எழுதி வாங்கி வந்தனர். 1938 டிசம்பர் 29, 30,31 மூன்று நாட்கள் சென்னையில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் பெரியாரின் படத்தை வைத்து அதற்கு மாலையிட்டு பெரியாரின் தலைமை உரையை ஏ.டி.பன்னீர் செல்வமும், கி.ஆ.பெ. விசுவநாதமும் படித்தனர். (கி.ஆ.பெ.விசுவநாதன் எனது

நண்பர்கள் பக் 96) பெரியார் தானே தலைவர் பதவியை ஏற்றுக் கொள்ளவில்லை. இதிலும் பா.குப்பனின் வாதம் தவறானதே.

நெ.து.சுந்தர வடிவேலு அவர்கள் ஒரு முறை தம் இல்லத்தில் பெரியாருடன் பேசிக் கொண்டிருக்கும்போது ‘‘அய்யா அவர்கள் சுயமரியாதை இயக்கத்தை மட்டுமே நடத்தி வந்திருக்கலாம் நீதிக்கட்சிக்கு தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டியதில்லையே, என்று கேட்டுள்ளார். அதற்கு பெரியார் அவர்கள் ‘‘என்னை வந்து கேட்டவர்கள் தமிழுக்காக நிறைய சேவை செய்தவர்கள் அவர்களே வந்து வேறு வழி என்று இல்லை கூறும்போது எனக்கு வேறுவழி இல்லாததால்தான் அந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்’’ என்று கூறியுள்ளார்.

(நெ.து.சு. நினைவு அலைகள் முதல் தொகுதி பக் 740–742) ஆக பெரியாருக்கு விருப்பம் இல்லாமல் தான் அதன் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளார். திராவிடர் கழகத்துக்கு தலைவராக ஜனநாயக முறைப்படி 1944 இல் சேலம் மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1950 முதல் 1962 வரை வழக்குரைஞர் தி.பொ. வதாச்சலம் தான் திராவிடர் கழகத் தலைவர். குத்தூசி குருசாமி தான் அதன் பொதுச் செயலாளர். தி.க.செயற்குழு, பொதுக்குழுக் கூட்டம் எல்லாமே தி.பொ.வேதாசலத்தின் தலைமையிலே நடைபெற்று வந்துள்ளதை விடுதலை ஏட்டில் காண முடிகிறது. 34 ஆண்டுகள் திராவிடர் கழகத்தில் இருந்த பா.குப்பனுக்கு தி.க.வரலாறே தெரியாதது வெட்கப்படவேண்டிய செய்தியாகும். அது சரி பா.குப்பனின் தலைவர் மட்டும் என்னவாம்? 1946 இல் தமிழரசுக் கழகம் அமைத்த நாள் முதல் 1989 இல் ராஜீவ் காந்தி முன்னிலையில் காங்கிரசில் அந்த இயக்கத்தை கரைக்கும் வரையில் அவர் தானே அதன் நிரந்தரத் தலைவர்.

வரலாற்றை திரிப்பதில் ம.பொ.சியை விட அவரது சீடர்கள் பன் மடங்கு உயர்ந்துள்ளனர். நான் ம.பொ.சியும் ஆதித்தனாரும் தமிழ்த் தேசியத் தலைவர்களா என்ற நூலில் M.L.A, M.L.C போன்ற பதவிகளுக்காக அவர்கள் கொள்கைகளை காற்றில் பறக்கவிட்டு போய் விட்டார்கள் என்று எழுதினால் பா.குப்பன் கட்சி தலைவர் பதவியைப் பற்றி எழுதி திரிபுவாதம் செய்கிறார். நான் ம.பொ.சி தமிழரசு கழகம் கண்ட பிறகும். இந்தியைக் கட்டாய பாடமாக்க வேண்டும் என்று எழுதியதையும். 1955 இல் இந்தி ஆட்சிமொழி ஆணையத்திற்கு சாட்சிய மளித்த ம.பொ.சி. இந்தியாவின் ஆட்சிமொழியாக இந்தித்தான் இருக்கவேண்டும். நாடாளுமன்ற நிர்வாகம் கூட இந்தியில் நடத்தலாம். அந்த மாநிலத்தவருக்கு நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு மட்டும் அவரவர் தாய்மொழியை அனுமதித்தால் போதும், சுப்பிரீம் கோர்ட்டு வாதங்கள் தீர்ப்புகள் கூட இந்தியிலே வெளிவரலாம் என்று கூறியதை எழுதியிருந்தேன். ஆனால் பா.குப்பன் 1938 இல் கட்சிகட்டுப்பாட்டுக்கு கட்டுபட்டு இந்தியை ஆதரித்தார் என்று மழுப்புகிறார். நான் எழுதியது. காங்கிரசை விட்டு வெளியே வந்த பிறகும் இந்தியை பிடித்துக் கொண்டு தொங்கிக் கொண்டிருந்தது ஏன் என்ற கேள்விக்கு விடையைக் காணோம்.

தனி ஆந்திரம் பிரிய வேண்டும் என்று உண்ணா விரதம் இருந்து உயிர் நீத்த பொட்டி சீரிராமுலுவைப் பற்றியும் பா.குப்பன் தவறான கருத்தையே எழுதியுள்ளார். ‘‘சர். பிட்டி தியாகராயரின் உடன் பிறந்தாளின் மகனான பொட்டி சீராமுலு சென்னை மயிலாப்பூரில் புலுசு சாம்பமூர்த்தி என்பவரின் வீட்டில் உண்ணாவிரதம் இருந்தார்.’’ என்று எழுதுகிறார். தியாகராயர் தேவங்கர் துணிநெய்யும் நெசவு தொழில் செய்யும் சாதியைச் சார்ந்தவர். பொட்டி சீராமுலு பேரி செட்டி சாதியைச் சேர்ந்தவர் இவர் எப்படி தியாகராயரின் தங்கை மகனாக முடியும்? அருகோபாலன் ஏற்கனவே எழுதிய பொய்யைதான் பா.குப்பன் மறுபடியும் எழுதியுள்ளார்.

பொட்டி சீராமுலுவின் மனைவி இவருக்கு 28 வயது இருக்கும் போதே இறந்துவிட்டார். பிறந்த ஒரே குழந்தையும் இறந்துவிட்டது. அதனால் விரக்தியடைந்த அவர் மும்பையில் இரயில்வே வேலையை ராஜினமா செய்துவிட்டு காந்தியின் சபர்மதி ஆகிரமத்தில் பத்தாண்டுக்கும் மேலாக பணியாற்றியவர். தீவிர காங்கிர காரர். மயிலாப்பூர் இருந்த புலுசு சாம்பமூர்த்தி என்ற ஆந்திரப் பார்ப்பனர் (இவர் இராஜாஜி 1937–38 முதல்வராக இருந்த போது சபாநாயகராக இருந்தவர்.) வீட்டில் தான் தனி மாநில ஆந்திரம் கோரி 19–10–52 முதல் 15–12–52 வரை உண்ணாவிரதம் இருந்தார். அப்போது இராஜாஜி தான் முதலமைச்சர். ராஜாஜி நினைத்திருந்தால் அந்த இறப்பைத் தடுத்திருக்க முடியும். இராஜாஜியும் ஆந்திராவுக்கு ஆதரவாக சீராமுலு சாகட்டும் என்றே விட்டு விட்டார். தியாகராயருக்கு களங்கம் கற்பிக்க வேண்டும் என்பதற்காகவே இது போன்ற பொய்யான செய்திகளை வரலாறாக எழுதுகிறார்கள். அருகோவும், பா. குப்பனும்.

# பகுதி 6

## சென்னை நகரை ம.பொ.சி. மட்டுமே மீட்டுக் கொடுத்தாரா?

**–வாலாசா வல்லவன்**

பெரும்பாலான தமிழ்த் தேசியவாதிகளில் ம.பொ.சி. மட்டும்தான் சென்னை நகரை மீட்டுக் கொடுத்தார் என்று நம்புகின்றனர். இது உண்மையல்ல என்பதை அனைவரும் உணர வேண்டும்.

**இந்தியாவில்** மொழிவழி மாநிலம் பிரிப்பதற்காக இந்திய அரசினரால் முதன் முதலில் அமைக்கப்பட்டது நீதிபதி தார் தலைமையிலான குழு ஆகும். குடிஅரசு தலைவரால் 1948இல் இக்குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் மொத்தம் நான்கு பேர் இருந்தனர் நீதிபதி எ .கே. தார் தலைவராகவும் டாக்டர் பன்னாலால், திரு ஜகத்நாரியன் லால், பி.சி. பானர்ஜி ஆகியோர் உறுப்பினர்களாகவும் இருந்தனர். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் எழுதும் குழுவினருக்கு அறிவுரை வழங்குவதற்காக இந்த குழு உருவாக்கப்பட்டது. 10.12.1948இல் இந்திய அரசிடம் இக்குழு அறிக்கையைக் கொடுத்தது. இப்போது உள்ள நிலையில் புதிய மாநிலம் எதையும் உருவாக்கத் தேவையில்லை என்று இக்குழு கருதியது. அந்த அறிக்கையில் மொழிவாரி மாநிலம் பிரிக்கப்படும்போது ஒரு குறிப்பிட்ட பகுதியில் 70%க்கு மேல் ஒரே மொழியைப் பேசும் மக்கள் இருந்தால் தான் அதை ஒரு மொழிப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்றும் 70%க்குக் கீழ் ஒரு மொழியைப் பேசும் மக்கள் உள்ள பகுதியை 'இரு மொழியாளர் பகுதி' (அ) பல மொழியாளர் பகுதி என்றே கருதவேண்டும் என்ற கருத்தை அறிவித்தது.

திருவாங்வர், கொச்சி இரண்டு நாடுகளும் மன்னராட்சியில் இருந்து விடுபட்டு இந்திய அரசில் இணைந்துள்ள இரண்டு மாநிலத்தையும் ஒரே மாநிலமாக இணைக்கப் பரிந்துரைத்தது.

புதிய மாநிலப் பிரிவினை வேண்டாம் என்று அக்குழு கருத்தறிவித்ததால் ஆந்திரர்கள் கோபமுற்றனர். ஏனென்றால் அவர்கள் 1913 முதலே தனி மாநிலம் வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்தனர். அதற்காக 1937க்குப் பிறகு தீவிரமாகப் போராடி வந்தனர்.

1913இல் ஆந்திர மகாசபை உருவானது. அன்றைய சென்னை மாகாண அரசின் வேலைவாய்ப்பில் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களும், மராத்தியப் பார்ப்பனர்களும் அதிக அளவில் இடம் பெற்றிருந்தனர். ஆந்திரப் பார்ப்பனர்களுக்கு மிகக் குறைந்த அளவிலேயே வேலை வாய்ப்புகள் கிடைத்தன. சென்னைப் பல்கலைக் கழகத்திலும் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களே அதிகமாக இடம் பெற்றனர். ஆந்திர மாணவர்களுக்குப் போதுமான இடம் கிடைக்கவில்லை. இதன் காரணமாகவே தெலுங்குக் காரர்களுக்குத் தனிமாநிலம் வேண்டும் என்ற கோரிக்கை உருவானது. (Political History of Andhra Pradesh 1901-2009) (Innaiah–பக். 13) நாளடைவில் அந்தக் கோரிக்கை வலுப்பெற்றுவந்தது.

1917இல் கல்கத்தாவில் அன்னிபெசன்ட் தலைமையில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரசு மாநாட்டில் ஆந்திரர்களுக்குத் தனிமாநிலம் வேண்டும் என்ற கோரிக்கை விண்ணப்பத்தை அளித்தனர். அன்னிபெசன்ட்டும் காந்தியும் அக்கோரிக்கையை ஏற்க மறுத்தனர். திலகர் அக்கோரிக்கையை ஆதரித்தார்.

காந்தி மொழி வாரியாக காங்கிர கமிட்டிகளை அமைப்பதற்கு முன்பே ஆந்திரர்கள் 20.1.1918இல் நீதிபதி சுப்பராவ் தலைமையில் ஆந்திரப் பிரதேச காங்கிர கமிட்டியை அமைத்துக் கொண்டனர். அதனால் வேறு வழிஇன்றிக் காந்தி மொழி வாரியாகக் காங்கிர கமிட்டிகளை 1920இல் அமைத்தார்.

எல்லா மாநிலக் காங்கிர கமிட்டிகளுக்கும் தலைநகரை அந்த அந்த மாநிலத்திலே அமைத்த காங்கிர கட்சி ஆந்திரக் காங்கிர கமிட்டிக்கு மட்டும் தலைநகரை ஆந்திராவில் அமைக்காமல் சென்னையிலே இருக்கும்படி அமைத்துவிட்டனர். இது முதல் தவறு. இது குறித்து ம.பொ.சி. அவர்களும் தமது கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

"சென்னை நகரில் ஆந்திரா ஜில்லா காங்கிர கமிட்டி அமைப்பதற்குத் தமிழ்நாடு காங்கிர அங்கீகாரம் கொடுத்தது. சென்னை கார்ப்பரேஷன், சட்டசபைத் தேர்தல்களில் அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்கும் வேலையில் ஆந்திரக் காங்கிரசைக் கூட்டாகச் சேர்த்துக் கொண்டது. சென்னை நகருக்குரிய அசெம்ளி (சட்டசபை) தொகுதிகளில் சரிபாதியை ஆந்திரருக்கு அளித்ததோடு அத்தொகுதிகளுக்கு அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்கும் உரிமையையும் ஆந்திர மாகாண காங்கிரசுக்கே வழங்கியது தமிழ்நாடு காங்கிர " (செங்கோல் 5.12.54)

தமிழகத்தின் வடக்கெல்லை தெற்கெல்லைப் பகுதிகளைத் தமிழ்நாடு காங்கிர முழுமையாக தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவில்லை, சித்தூர் பகுதி ஆந்திரக் காங்கிரசிடமும் தென் திருவிதாங்கூர் பகுதி திருவாங்கூர் – கொச்சி காங்கிரசிடமும் அளித்திருந்ததும் அப்பகுதிகள் நமக்குக் கிடைக்காமல் போனதற்கு ஒரு காரணம் என கோல்டன் சுப்பிரமணியம் தன்னுடைய 'வடக்கெல்லைப் போராட்டமும் தணிகை மீட்சியும்' என்ற நூலில் பக். 29இல் பதிவு செய்துள்ளார். (குறிப்பு: அவர் வடக்கெல்லையை மட்டும் குறிப்பிட்டிருந்தார்)

1948இல் ஜெய்ப்பூரில் கூடிய காங்கிர  கமிட்டி மொழிவாரி மாநிலங்களை அமைக்க ஆய்வு செய்யுமாறு காங்கிரசில் இருந்த மூவர் குழுவை அமைத்தது. அந்தக் குழுவிற்கு (ஜெ.வி.பி.) குழு என்று பெயர். ஜவஹர்கலால் நேரு, வல்லபாய் பட்டேல், பட்டாபி சீத்தாராமையா ஆகிய மூவர் அடங்கிய அந்தக் குழு ஆய்வு செய்து அகில இந்திய காங்கிர  கட்சியின் தலைமையிடம்  அறிக்கையை 1.4.1949இல் அளித்தது.

அந்தக் குழுவிற்கும் மொழி அடிப்படையில் மாநிலங்களைப் பிரிப்பதற்கு விருப்பம் இல்லையெனினும் ஆந்திர மக்களின் போராட்டங்களைக் காரணமாகக் காட்டி ஆந்திராவை மட்டும் பிரித்துத் தனிமாநிலமாகக் கொடுக்கச் சிபாரிசு செய்தது. **சென்னையை ஆந்திரர்கள் கேட்கக்கூடாது என்ற நிபந்தனையும் விதித்தது. (ஜெ.வி.பி. குழு அறிக்கை பக்.14)** அக்குழுவில் இடம் பெற்றிருந்த பட்டாபி சீத்தாராமய்யா எவ்வளவோ முயன்றும் நேருவும், பட்டேலும் சென்னையை ஆந்திராவுக்குக் கொடுக்க மறுத்துவிட்டனர்.

1949இல் கூடிய காங்கிர  காரியக் கமிட்டி சென்னை மாகாண அரசாங்கத்தையும், ஆந்திர மாகாண காங்கிர  கமிட்டியையும், தமிழ்நாடு காங்கிர  கமிட்டியையும் அழைத்து ஆந்திர மாநிலம் பிரிவினை தொடர்பான அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்து முடிவெடுக்க இந்திய அரசுக்குப் பரிந்துரை செய்துக் கேட்டுக்கொண்டது.

இந்திய அரசு இந்த மூவர் குழுவின் அறிக்கையை ஏற்றுக்கொண்டு ஆந்திரத்தைத் தனி மாநிலமாகப் பிரித்துக் கொள்ள சென்னை மாகாண அரசாங்கத்தையே ஒரு குழுவை அமைத்து முடிவு செய்யக் கேட்டுக் கொண்டது.

இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் கடித எண். 651/49/15 நாள் 25.11.1949. இதன் அடிப்படையில் ஆந்திர மாநிலப் பிரிவினை தொடர்பாக ஒரு அதிகாரப்பூர்வ குழுவைச் சென்னை மாகாண அரசு அமைத்தது. அக்குழு அப்போதைய முதலமைச்சர் குமாரசாமி ராசா தலைமையில் அமைக்கப்பட்டது. அக்குழுவில் டி. பிரகாசம், டி. கோபால்ரெட்டி, என். சஞ்சீவரெட்டி, காலா வெங்கட்ராவ் ஆகிய நால்வர் ஆந்திர காங்கிரசின் பிரதிநிதிகளாகவும், குமாரசாமிராசா, எம். பக்தவச்சலம், டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஆகிய மூவர் தமிழகக் காங்கிரசின் பிரதிநிதிகளாகவும், மாதவமேனன் கேரளக் காங்கிரசின் பிரதிநிதியாகவும் உறுப்பினர்களாக இருந்தனர். 17 முறை அக்குழு கூடி விவாதித்தது.

**சென்னை மாகாண அரசு சென்னைக்கு ஈடாக ஆந்திராவில் புதிய தலைநகரை ஏற்படுத்திக் கொள்ள ரூபாய் ஒரு கோடி கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.** அப்போது இருந்த சட்டமன்ற உறுப்பினர்களில் 95 பேர் ஆந்திராவுக்குப் பிரிந்து செல்ல வேண்டும் என்றும் மீதம் 174 உறுப்பினர்கள் சென்னை மாகாணத்திலேயே இருக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. **புதிய  ஆந்திரத்தின் தலைநகர் ஆந்திர எல்லைக்குள் அமைய வேண்டும் என்றே முடிவு செய்யப்பட்டது.** (பிரிவினைக் கமிட்டி அறிக்கை பக். 4)

**ஆந்திராவின் உயர்நீதி மன்றம் ஆந்திர எல்லைக்குள் அமைய வேண்டும்.** சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகள் 16 பேரில் 7 நீதிபதிகள் புதிய ஆந்திர உயர்நீதி மன்றத்திற்குச் செல்ல வேண்டும். (அறிக்கை பக். 4)

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரும் புதிய ஆந்திர மாநில அரசுக்கு செல்ல வேண்டும். ICS அதிகாரிகளைப் பொறுத்து அவர்கள் இந்திய அரசால் நியமிக்கப்படுவதால் மொத்தம் உள்ள 43 பேரில் ஆந்திராவுக்கு 16 பேர் பேச்சுவார்த்தை மூலம் அவரவர்களின் விருப்பத்தை அறிந்து மத்திய அரசுக்குத் தெரிவித்துச் சுமூகமான முறையில் மாற்றிக் கொள்ள வேண்டும். (அறிக்கை பக். 28)

IAS அதிகாரிகள் மொத்தம் 28 பேர் சென்னை மாகாண அரசில் பணியில் இருந்தனர். அதில் 38% மக்கள் தொகை அடிப்படையில் 11 பேர் ஆந்திராவுக்குச் செல்ல வேண்டும் என முடிவு செய்யப்பட்டது (அறிக்கை பக். 30)

சென்னை மாகாண அரசு எல்லாத் துறைகளைப் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டு **ஆந்திர மாநிலப் பிரிவினை அறிக்கையை 25.12.1949இல் இந்திய அரசுக்கு அனுப்பியது.**

இந்தியா குடி அரசு நாளாக மலரவிருக்கும் 26.1.1950இல் ஆந்திர புதிய மாநிலம் உருவாக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற குழுவின் முடிவைச் சென்னை மாகாண அரசின் கெசட் மூலம் பதிவு செய்து இந்திய அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது.

அந்தக் குழுவில் இடம் பெற்றிருந்த டி. பிரகாசம் இதில் சில கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்தார். மின்சாரச் செலவினங்களுக்குத் தமிழ்நாடு பகுதிக்கு அதிக அளவில் ஏற்கெனவே செலவு செய்யப்பட்டிருப்பதால் புதிய ஆந்திர அரசுக்கு 20 கோடி ரூபாய் கொடுக்க வேண்டும் என்றார். (அறிக்கை பக். 2) சென்னை நகரிலுள்ள அரசு கட்டிடங்களை மதிப்பீடு செய்து அதற்கு ஏற்றாற் போல் ரூ. 1 கோடி என்பதை உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்றார்.

டி. பிரகாசம் தன்னுடைய எதிர்ப்புகளைத் தனியாக அதில் பதிவு செய்துள்ளார். ஆந்திராவில் புதிய உயர்நீதி மன்றம் கட்டும் வரையில் ஆந்திர உயர்நீதி மன்றம் சென்னையிலே இருக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் முன் வைத்தார்.

ஆந்திரக் காங்கிர கமிட்டி 11.11.1949இல் கூடியபோது பட்டாபி சீதாராமய்யா கூறியது கருத்தாவது. ஜெ.வி.பி. கமிட்டியில் சென்னை நகரத்தை ஆந்திரர்கள் கேட்கக்கூடாது என்று முடிவு செய்த காரணத்தினாலேயே அது தமிழர்களுக்குச் சொந்தம் என்று ஆகிவிடாது. ஜெ.வி.பி. கமிட்டியில் புதிய ஆந்திர அரசு தகராறுக்கு இடமில்லாத வகையில் அமைந்த 12 மாவட்டங்களைப் புதிய மாநிலமாக அமையும் என்று கூறியுள்ளதாலேயே சென்னையைத் தமிழர்களுக்கு விட்டுக் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. (அறிக்கை பக்.5)

ஆந்திராவில் புதிய தலைநகரம் உருவாகும் வரை ஆந்திர அரசின் தலைமை அலுவலகங்கள் சென்னையிலே இருக்க வேண்டும். சென்னை மாநகரத்தையும் அதைச் சுற்றியுள்ள இருமொழி பேசுவோர் பகுதிகளையும் இணைத்துத் தனி கமிஷனர் மாகாணமாக ஆக்கவேண்டும். (அறிக்கை பக். 5) பட்டாபி சீத்தாராமையா இக்குழுவில் இடம் பெறவில்லை என்றாலும் அவருடைய கருத்துகளை டி. பிரகாசம் பதிவு செய்துள்ளார். ஆந்திர உயர்நீதி மன்றம் சென்னையில் இருக்கவேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை முன் வைத்தார். ஆனால் பெருவாரியான உறுப்பினர்கள். இவருடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. சென்னை நகரத்தில் தமிழருக்கு எந்த அளவு உரிமை இருக்கிறதோ அதே அளவு ஆந்திரருக்கும் உரிமை உள்ளது என்ற பிரகாசத்தின் கோரிக்கையைப் பிரிவினைக் குழு ஏற்றுக் கொள்ளவில்லை. **சான்று: (Formation of Andhra Province - Report of the Partition Committee)**

நேருவின் தலைமையிலான இந்திய அரசு வழக்கம் போல மாநிலப் பிரிவினையில் விருப்பம் இல்லாததால் இந்தக் குழுவின் அறிக்கையை வாங்கிக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டது.

பொட்டி ஸ்ரீராமுலு சென்னை மயிலாப்பூரில் புலுசு. சாம்பாமூர்த்தி வீட்டில் தனி ஆந்திர மாநிலம் அமைக்க வலியுறுத்திச் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார். 19.10.1952 முதல் 15.12.1952 வரை 57 நாட்கள் உண்ணா விரதம் இருந்து இறந்துவிட்டார். பொட்டி ஸ்ரீராமுலு உண்ணாவிரதம் இருந்தபோதே பிரதமர் நேரு அவர் இறப்பதற்கு முன் 9.12.1952இல் பாராளுமன்றத்தில் **"ஆந்திரர்கள் சென்னை நகரைக் கேட்காமல் இருந்தால் தனி ஆந்திர மாநிலம் உருவாக்குவது குறித்து ஆலோசிக்கப்படும்"** என்று அறிவித்தார். (Political History of Andhra Pradesh 1909 - 2009 by Narisatti Innaiah பக். 44)

பொட்டி ஸ்ரீராமுலு 15.12.1952இல் இறந்த பிறகு ஆந்திராவில் பெரும் வன்முறை மூண்டது. விஜயவாடா இரயில் நிலையத்தை அடித்து நொறுக்கினர். துணை இராணுவப்படை வரவழைக்கப்பட்டது. துப்பாக்கிச்சூடு நடைபெற்றுச் சிலர் கொல்லப்பட்டார்கள். மேலும் போராட்டம் அதிக அளவில் வெடித்த பிறகுதான். நேரு பாராளுமன்றத்தில் 19.12.1952 அன்று நாடாளுமன்றத்தில் தனி ஆந்திர மாநிலம் உருவாக்கப்படும் என்று அறிவித்தார். புதிய ஆந்திர மாநிலத்தை உருவாக்குவதற்காக நீதிபதி வாஞ்சு தலைமையிலான குழுவை அமைத்தது மத்திய அரசு.

பிரகாசம் - வாஞ்சு சந்திப்பு 100 நிமிடம் பேச்சு:

பல்வேறு தரப்பினரும் நீதிபதி வாஞ்சுவிடம் தம் கோரிக்கைகளை முன் வைத்தனர். தோழர் டி. பிரகாசம் நேற்று நீதிபதி வாஞ்சுவைக் கண்டு சுமார் 100 நிமிட நேரம் ஆந்திரப் பிரிவினைப் பிரச்சனைகளைக் குறித்துத் தமது கோரிக்கைகளை வெளியிட்டதாகவும் சென்னையில் இரு ராஜ்ஜியங்களின் தலைநகரங்களும் இருக்க வேண்டுமென்று வற்புறுத்தியதாகவும் தெரிகிறது. (விடுதலை 11.01.1953)

கம்யூனி டுகள் சந்திப்பு:

ஆந்திரக் கம்யூனி ட் கட்சியின் உட்குழுவினர்களாகிய தோழர்கள் டி. நாகிரெட்டி, சி. ராஜே வர ராவ், பி. வெங்கடேசுவரலு, ஓய். ஈ வராரெட்டி, ஓய்.வி. கிருஷ்ணாராவ் ஆகியவர்கள் நீதிபதி வாஞ்சுவை நேற்று பிற்பகல் கண்டு ஒரு மணிநேரம் வரை விவாதித்தனர். பொது கவர்னர், பொது உயர்நீதி மன்றம், பொது பப்ளிக் சர்வீ கமிஷன் போன்ற எதுவுமற்ற விசால ஆந்திரா மார்சு 16ஆம் தேதிக்குள் நிறுவப்படவேண்டுமென்று வற்புறுத்தியதாகத் தெரிகிறது. (விடுதலை 11.01.1953)

பொதுவுடைமைக் கட்சியைப் பொறுத்தவரை சென்னை தமிழ்நாட்டுக்குச் சொந்தம், சித்தூர் மாவட்டமும் திருப்பதியும் ஆந்திராவுக்குச் சொந்தம் என்ற கொள்கை உடையவர்கள். ஆந்திரத்தின் தலைநகர் ஆந்திரத்திலேயே இருக்க வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளனர். இதுகுறித்து இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் சென்னை சட்டசபையில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பி. இராமமூர்த்தி மாநிலச் சீரமைப்பு மசோதாவின் மீது பேசும் போது, அன்றைக்கு நிதிமந்திரி சி. சுப்ரமணியம் பேசும்போது, ''தமிழகத்தின் வட பகுதிகளை இராமமூர்த்தி ஆந்திரா மாகாணத்திற்கு விட்டுக் கொடுத்துவிட்டார்'' என்று குறிப்பிட்டார். அதே மாதிரி ஆந்திர முதலமைச்சர் கோபால் ரெட்டி ஆந்திரக் கம்யூனி டுகளைப் பற்றிப் பேசும்போது, ''தமிழர்களுக்கு அடிமைகளாகி விட்டார்கள்'' என்று குறிப்பிட்டார்.

(சட்டமன்ற விவாதங்கள் பக். 296 நாள் 31.12.1956) ஆந்திராவில் பொதுவுடைமைக் கட்சியினர் சென்னை தமிழ்நாட்டுக்கு உரியது என்று பிரச்சாரம் செய்தனர்.

தமிழ்நாடு காங்கிர கமிட்டியினர் வாஞ்சு சந்திப்பு:

தமிழ்நாடு காங்கிர கமிட்டியினர் தோழர்கள் கே. காமராஜ் எம். பக்தவச்சலம், டாக்டர் பி. சுப்பராயன், பி.எ. சுப்பையா, டி. செங்கல்வராயன் ஆகியவர்களைக் கொண்ட காங்கிர கமிட்டியின் தூதுக்குழுவொன்று தோழர்கள் எம்.ஏ. முத்தையா செட்டியார், ஆர். குழந்தைவேலு ஆகியவர்களுடன் நீதிபதி வாஞ்சுவைக்கண்டு ஒரு மனுவைக் கொடுத்தனர். சென்னை நகரம் தமிழ்நாட்டைச் சேர்ந்தது என்றும், ஆந்திராவின் தலைநகரமும், உயர்நீதி மன்றமும் சென்னைக்கு வெளியில்தான் இருக்கவேண்டும் என்றும் வற்புறுத்தினார்கள் என்று தெரிகிறது. (விடுதலை 11.01.1953)

இந்தக்குழுவில் ம.பொ.சி. இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

நீதிபதி வாஞ்சு தன் பணியை 30.12.1952இல் தொடங்கினார். 7.2.1953இல் வாஞ்சு குழுவின் அறிக்கையை இந்திய அரசிடம் ஒப்படைத்தனர். அவர் தம் பரிந்துரையில்,

**“சென்னை ஆந்திராவின் தற்காலிகத் தலைநகராக 3 முதல் 5 ஆண்டுகள் வரை இருக்கலாம். ஆந்திரர்களுக்குச் சென்னையின் மீது எவ்வித உரிமையும் இல்லை. விருந்தாளிகளைப் போல அல்லது வாடகைதாரர்களைப் போல அவர்கள் இருக்கலாம். அந்தக் குறிப்பிட்ட காலத்திற்கு மேல் அவர்கள் சென்னையில் இருக்கக் கூடாது”.** அதற்குள் தாங்கள் மாநிலத்தில் புதிய தலைநகரை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இமாச்சல பிரதேசத்தின் தலைநகர் சிம்லாவில் இருந்தபோதும், இமாச்சல அரசு சிம்லாவின் மீது எந்த உரிமையையும் கொண்டாட முடியவில்லை என்பதை வாஞ்சு உதாரணமாகக் காட்டியுள்ளார். இது என் சொந்தக் கருத்து என்றும் கூறியுள்ளார். (வாஞ்சுகுழு அறிக்கை பக். 5)

சென்னையைத் தற்காலிகத் தலைநகராகக் கொடுத்தால் அதன் பிறகு ஆந்திரர்கள் போகமாட்டார்கள் என்று சென்னையில் உள்ள மற்றவர்கள் அச்சப்படத் தேவையில்லை என்றும் கூறியுள்ளார்.

ஆந்திர அரசின் அனைத்து அலுவலகங்களையும் உடனடியாக மாற்றிக் கொள்வதில் சிரமம் இருக்கும். சென்னையிலேயே **ஆந்திர உயர்நீதிமன்றம் தற்காலிகமாக 5–10 ஆண்டுகள் வரை இருக்கப் பரிந்துரை செய்கிறேன். (பக். 8)** அதற்கு உதாரணத்தையும் வாஞ்சு காட்டியுள்ளார். ஒரிசா 1936இல் பிரிந்தாலும் அதனுடைய உயர்நீதிமன்றம் 1947 வரை பீகாரிலேயே இருந்தது என்கிறார். (பக். 9) **ஆந்திராவின் தலைநகரமும் ஆந்திராவின் உயர்நீதிமன்றமும் உடனடியாகச் சென்னைவிட்டுப் போகவேண்டும் என்று ஆந்திரர் அல்லாதவர்கள் கூறுகிறார்கள். அது உடனே முடியக் கூடிய காரியமல்ல. (பக். 10)**

சென்னை மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, சட்டக்கல்லூரி உள்ளிட்ட உயர் கல்வி நிறுவனங்களில் 36% இடங்களை 25 ஆண்டுகளுக்கு ஆந்திரர்களுக்கு ஒதுக்கித்தரவேண்டும். அந்த இடங்களுக்கான மாணவர் பெயர்ப் பட்டியலை ஆந்திர அரசு கொடுக்கும். (பக். 12) இக்குழு பெல்லாரி மாவட்டத்தைக் கர்நாடகாவுடன் சேர்க்கப் பரிந்துரை செய்தது. (பக். 2) மற்ற 11 மாவட்டங்களைக் கொண்ட ஆந்திர மாநிலம் அமைத்துக் கொள்ள வழிவகுத்தது.

சென்னை நகருக்கு ஈடாக ரூ. 2.3 கோடியை புதிய ஆந்திர அரசுக்குக் கொடுக்கப் பரிந்துரை செய்தது. (பக். 26)'

அனைத்துக்கட்சிக்கூட்டம்

வாஞ்சு அறிக்கையைப் பற்றிப் பத்திரிக்கைகளில் வெளியாகி இருக்கும் சேதிகள் அநேகமாக உண்மையென்றே விஷயம் தெரிந்த மக்களிடையே பேசப்படுகிறதை உத்தேசித்து அதைக் கண்டித்து டில்லி முதன் மந்திரிக்குக் (பிரதமர்) கண்டனம் அனுப்புவதற்காக 13.02.14 மாலை 4 மணிக்குச் சென்னை மேயர் செங்கல்வராயன் அவர்கள் முன் முயற்சியின் மீது கார்ப்பரேஷன் தியாகராயர் கட்டிடத்தில் 13.02.1953இல் சென்னைப் பிரமுகர்கள் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடந்தது.

அக்கூட்டத்திற்குச் சர். முகமது உ மான், பெரியார் ஈ.வெ.இராமசாமி, மேயர் டி. செங்கல்வராயன், மாஜி மந்திரிகள், எம். பக்தவச்சலம், டி. பரமே வரன், எ . முத்தையா முதலியார், மாஜி மேயர்கள், ராமநாதன் செட்டியார், ராதா கிருஷ்ணபிள்ளை, சிக்யதுல்லா சாயுபு, மாஜி ஐக்கோர்ட் ஜட்ஜ் பி. பாஷ்யம் அய்யங்கார், மாஜி அட்வகேட் ஜெனரல் குட்டி கிருஷ்ணமேனன், தமிழ்நாடு காங்கிர கமிட்டி உபதலைவர் என்.எல். கரையாளர், பார்லிமெண்ட் மெம்பர் பி.எம். லிங்கே வரன், எம்.எல்.சி., ம.பொ.சிவஞான கிராமணி, எம்.எல்.ஏ. கே. விநாயகம், டாக்டர் வி.கே. ஜான், எம்.பி. தாமோதரன், லக்கபராய், நஜீர் உசைன், தெ. பொ. மீனாட்சி சுந்தரம், மீனம்பாள் சிவராஜ், செரியன் ஆகிய தமிழ், கேரள, கர்நாடக நாட்டுப் பிரதிநிதிகளான முக்கிய தர்கள் அழைக்கப்பட்டு விஜயம் செய்திருந்தார்கள். வந்திருந்தவர்கள் யாவரும் கலந்து ஆலோசித்து, பண்டித நேருவுக்கு ஒரு மெமோரண்டம் அனுப்புவது என்றும் அதன் சுருக்கத்தைத் தந்தியில் உடனே அனுப்புவது என்றும், ஒரு மனதாக முடிவுசெய்தனர். மெமோரண்டத்தில் மேற் கண்டவர்கள் கையெழுத்து

செய்தார்கள். பிறகு 16ஆம் தேதி திங்கட்கிழமை திருவல்லிக்கேணி கடற்கரையில் ஒரு சென்னை ராஜ்யப் பொதுக்கூட்டம் கூட்டித் தீர்மானம் நிறைவேற்றி டில்லிக்கு அனுப்புவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

**அனைத்துக்கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் முடிவு**

நீதிபதி வாஞ்சு இந்திய சர்க்காருக்கு ஆந்திர ராஜ்ய அமைப்புப் பற்றிச் செய்துள்ள சிபாரிசுகளைக் குறித்துப் பற்பல கவலைகளைக் கொடுக்கக்கூடிய தகவல்கள் பத்திரிக்கை மூலமாகவும் வெளிவந்திருக்கின்றன. ஆந்திர ராஜ்ய அமைப்பில் மிகவும் முக்கியமான அம்சங்களைப் பற்றிய மேற்கூறிய தகவல்கள் எங்களுக்கு மிகுந்த கவலையைக் கொடுத்திருக்கின்றன. ஆந்திர ராஜ்யத்தின் தலைநகரமானது. உயர்நீதி மன்றமாவது தற்காலிக ஏற்பாடாகக்கூட சென்னை நகரத்தில் இருக்கக்கூடாதென்று மீண்டும் வற்புறுத்திக் கூற விரும்புகிறோம். ஆந்திரத் தலைநகரையும், உயர்நீதி மன்றத்தையும் சிறிது காலத்திற்குச் சென்னை நகரில் ‘‘விருந்தாளியாகக்கூட’’ இருப்பதற்கு அனுமதிப்பதால் அனாவசியமான தொல்லைகளும் சர்ச்சைகளும் ஏற்படும். இதனால் நிர்வாகக் கஷ்டங்களும் தொல்லைகளும் ஏற்படும்.

ஆந்திர ராஜ்ய அமைப்பு மிகவும் சௌகர்யமாகவும் நேசமனப்பான்மையாகவும் அமல் நடத்தப்பட வேண்டியது அவசியம். ஆகவே ஆந்திரத் தலைநகரை எந்த வகையிலும் சிறிது காலத்திற்குக் கூட சென்னையில் வைத்தால் அனாவசியமான தகராறுகளுக்கும் சர்ச்சைகளும் ஏற்படும். ஆகவே பாக்கியுள்ள சென்னை ராஜ்யத்தின், தமிழ், கன்னடம், மலையாளம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் அனைவரும் சொற்பகாலத்திற்குக் கூட ஆந்திரத் தலைநகரமோ உயர்நீதி மன்றமோ சென்னை நகரத்தில் இருக்கக் கூடாதென்று ஏக மனதாக அபிப்ராயப் படுகிறார்கள். ஆந்திரர்களில் சிலர் இன்னும் சென்னை நகரத்தில் பாத்தியதை கொண்டாடிக் கிளர்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் ஆந்திரத் தலைநகரைச் சென்னை நகரில் ஏற்படுத்துவது மிகவும் ஆட்சேபகரமானது. சென்னை நகரம் பாக்கியுள்ள சென்னை ராஜ்யத்தின் தலைநகராக இருக்கும். ஆகவே பலமான எதிர்ப்பை அலட்சியம் செய்து, ஆந்திர தலைநகரையும், உயர்நீதி மன்றத்தையும், தற்காலிகமாகக்கூட சென்னை நகரத்தில் ஏற்படுத்துவதென்று முடிவு செய்யாமலிருக்குமாறு இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறோம். (விடுதலை 14.02.1953)

சென்னை மேயர் தலைமையில் 13.02.1953இல் கூடிய கூட்டத்தில் பெரியார் உள்பட அனைத்துக் கட்சித் தலைவர்களும் கையொப்பமிட்டு பிரதமர்ப் நேருவுக்கு அன்றே உடனடியாகத் தந்தி அனுப்பப்பட்டது. விரிவான கோரிக்கை விண்ணப்பத்தையும் அனுப்பி வைத்தார்கள்.

சென்னை நகரமேயர் ஏற்பாடு செய்து திருவல்லிக்கேணிக் கடற்கரையில் 16.02.1953 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சிப் பொதுக்கூட்டத்தில் பெரியார் பேசியதாவது.

‘‘மாட்சிமிக்க மேயர் அவர்களே, தாய்மார்களே, தோழர்களே, நான் உங்கள் ஆரவாரத்திற்கு நன்றி செலுத்துகிறேன்.

ஆனால் இந்த ஆரவாரத்திற்கு ஏற்ப நீங்கள் இப்போது என்னிடம் உங்களுக்கு உற்சாகமும் உணர்ச்சியும் ஊட்டத் தகுந்த ‘‘காரசாரமான’’ பேச்சை எதிர்பார்த்து ஏமாற்றமடையக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் இன்று என் பேச்சு அப்படி இருக்காது.

இந்தக்கூட்டம் பல கருத்துக் கட்சிகள் கூட்டமாகும். இதில் ஆளும் கட்சியும் அங்கம் வகித்திருக்கிறது. காங்கிர கலந்துகொண்ட இந்தக்கூட்டத்தில் எனக்குத் தலைகாட்டவும் பேசவும் கிடைத்த ஒரு வாய்ப்பை நல்ல வாயப்பென்றே கருதுகிறேன். ஆதலால் இந்தக் கூட்டத்தின் தன்மைக்கு ஏற்றபடிதான் நான் பேசுவேன். வேறு எதையாவதைப் பேசி அவர்களுக்குத் தொந்தரவோ, சங்கடமோ ஏற்படும்படி பேசமாட்டேன். அப்படி எதையாவதை நான் பேசிவிட்டால் அப்புறம் அவர்கள் என்னைக் கூப்பிட மாட்டார்கள். அன்றியும் எல்லோருடனும் சேர்ந்து எல்லோருக்கும் ஏற்ற முறையில் நமது குறைபாடுகளுக்கு ஒரு பரிகாரம் செய்ய வாய்ப்புக் கிடைத்தால் அது நமக்கு எவ்வளவு பெரிய இலாபம் என்று எண்ணிப் பாருங்கள்.

**நம் காரியம்:**

நாம் செய்ய வேண்டிய – செய்யப் போகும் காரியம் இருக்கவே இருக்கிறது. அதை எடுத்துச் சொல்ல நமக்கு வேறு பல மேடைகளும் இருக்கின்றன. சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. நாம் கடிவாளம் இல்லாத குதிரைகள். மற்றவர்கள் எல்லோரையும் அப்படி எதிர்பார்க்கக் கூடுமா?

இந்தக் கூட்டம் நான்கு நாட்களுக்கு முன் மேயர் காரியாலயத்தில் பல பிரமுகர்கள் கூடிப்பேசி, ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காகவே கூட்டப்பட்ட கூட்டமாகும். ஆகவே அந்தக்காரியம் நடைபெறும் அளவுக்கே நமது எல்லை இருக்க வேண்டும்.

ஆதலால் நான் மேயர் அவர்களின் தீர்மானத்தை ஆதரிக்கிற அளவுக்குப் பேசுகிறேன்.

தோழர்களே! ஆந்திரா பிரிவினை விஷயத்தில் ஜ டி வாஞ்சு அவர்கள் அறிக்கையைக் கண்டித்துப் பண்டித

நேரு அவர்களுக்கு நமது கருத்தைத் தெரிவிக்கும் தீர்மானத்தை உங்கள் ஆதரவு மீது இப்போது நிறைவேற்றப்பட வேண்டும்.

அதைப்பற்றிப் பேசுவதென்றால், அந்த அறிக்கையின் கேட்டையும் பற்றிப் பேச வேண்டும். அப்படிப் பேசுவதில் எனக்கு முன் பேசிய மாட்சிக்குரிய மேயர் அவர்களும் பெருமைக்குரிய பக்தவச்சலம் அவர்களும் மற்றும் பெரியோர்களும் பேசினார்கள். அந்தப்பேச்சுகள் பெரிதும் வாஞ்சுவையும் ஆந்திரக்காரரையும் கண்டிப்பதாகவும், அவர்கள் மீது அதிருப்திப் படுவதாகவும் தான் காணப்பட்டனவே தவிர, அதன் மூலாதாரத்தைக் கண்டித்ததாகவோ, அதைப்பற்றிப் பேசியதாகவோ ஒன்றும் தெரியவில்லை.

காரணமானது அவர்களுக்குத் தெரியவில்லையோ, அல்லது அது பெரிய இடத்துச் சங்கதி என்ற தாட்சண்யமோ எனக்குத் தெரியவில்லை.

நான் இப்போது வெளிப்படையாய்த் தெளிவாய்ச் சொல்லுகிறேன். தவறு இருந்தால் மேயர் அவர்கள் அருள்கூர்ந்து திருத்தவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். நான் இப்போது சொல்லப் போவது, ஜனவரி 2ஆம் தேதி மேயர் அவர்கள் வீட்டில் கூடிய சென்னை எல்லாக் கட்சிப் பிரமுகர் கூட்டத்திலும், ஜனவரி 5ஆம் தேதி மைலாப்பூர் இலட்சுமிபுரம் யுவசங்கத்தில் கூடிய ஒரு பொதுக்கூட்டத்திலும் பிப்ரவரி 1ஆம் தேதி பீச்சில் ஒரு இலட்சம் பேர் கூடிய மாபெரும் கூட்டத்திலும், பிப்ரவரி 13ஆம் தேதி கார்ப்பரேஷன் கட்டிடத்தில் மேயர் காரியாலத்தில் கூடிய எஞ்சிய 3 நாட்டின் பிரமுகர்கள் கூட்டத்திலும் சொன்னவைகளேயாகும்.

ஆனால் இங்கு அதைத் திரும்பவும் ஆதாரப் பூர்வமாக எடுத்துச் சொல்லி ஆதாரமும் காட்டப் போகிறேன். என் சங்கதி எப்போதும் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டுதான் எந்தச் சங்கதியும் எங்கும் பேசப்படுவதாக இருக்கும். ஆகையால் சொல்லுகிறேன். தயவு செய்து காது கொடுக்கக் கோருகிறேன்.

### நேருவே மூலப் புருஷர்:

வாஞ்சு அவர்கள் அறிக்கைக்கு வாஞ்சு அவர்களோ, இலங்கா சுந்தரம் அவர்களோ மூலப் புருஷர்கள் அல்ல; அந்தப் பிரச்சனைகளுக்கு அதாவது ஒரு ஐகோர்ட், ஒரு கவர்னர் சென்னைக்கும் ஆந்திராவுக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்ற யோசனை தோன்றியதானது பண்டிதர் நேரு அவர்களின் மூளையிலேயாகும்.

அவர்தான் டாக்டர் இலங்கா சுந்தரம் அவர்களுக்கு இந்தப்படி செய் என்று யோசனை சொன்னவர். நேரு அவர்கள் உபதேசத்தாலேயே இதைச்சொல்லி வலியுறுத்தி **"இந்தப்படி இல்லாவிட்டால் ஆந்திரருக்கு ஆந்திர ராஜ்யமே வேண்டாம்"** என்று சொல்லும் நிலையை அடைந்தார்.

ஆந்திரர்களையே கூப்பிட்டு நீங்கள் இந்தமாதிரி செய்யுங்கள் என்று நேரு அவர்கள் சொல்லி இருப்பார்களே யானால், ஜ டி வாஞ்சு அவர்களிடம் சொல்லி அனுப்புவது அவருக்கு முடியாததாகவோ கூடாததாகவோ இருந்திருக்க முடியுமா?

இதோ பாருங்கள் 18.12.1952ஆம் தேதியில் நேரு அவர்கள் இலங்கா சுந்தரம் அவர்களுக்குச் சொன்ன உண்மையை இலங்கா சுந்தரம் அவர்கள் ஜனவரி மாதம் 18இல் நீதிபதி வாஞ்சு அவர்களிடம் கொடுத்த மனுவில் தெரிவித்திருக்கிறார்.

''சென்னை நகரம் பொது நிர்வாக சர்க்கார், நிர்வாக வட்டாரமாக்கப்பட வேண்டும். ஆந்திராவின் தலைநகரும் அந்தச் சென்னை நகரிலேயே அமைக்கப்படவேண்டும்''

''புதிய ராஜ்யத்துக்காக அனாவசியமாக இரட்டிப்புச் செலவு செய்யவேண்டியதில்லை என்று பிரதமர் நேரு 18.12.1952இல் என்னிடம் தெரிவித்தார். மற்றும் ஆந்திரா ராஜ்ய துவக்கக் காலத்திலாயினும் இரு ராஜ்யங்களுக்கும் ஒரே கவர்னரும், ஒரே உயர்நீதி மன்றமும் இருக்கவேண்டுமெனவும் பிரதமர் நேரு தெரிவித்தார். நான் பிரதமர் நேருவின் கருத்தை முழு அளவுக்கு ஒப்புக் கொள்கிறேன். ஆந்திரப் பொதுமக்களும் அவரின் இந்த யோசனையை முழு அளவுக்கு ஆதரிப்பார்களென்பதில் எனக்குச் சந்தேகமில்லை'' என்று கூறியிருக்கிறார். இது ஜனவரி 19ஆம் தேதி 'இண்டியன் எக் பிரசில்' வெளியாக்கப்பட்டிருக்கிறது. அதில் கண்டுள்ள ஆங்கில வாசகமாவது *(பெரியார் கடற்கரைப் பொதுக் கூட்டத்தில் 2 ½ இலட்சம் மக்கள் முன்னிலையில் இந்தியன் எக் பிர ஆங்கில நாளேட்டில் வந்திருந்த செய்தியைப் படித்துக் காட்டினார்.)*

## Andhra without Hq. In City

**'PUBLIC OPINION WON'T ACCEPT"**

New Delhi, Jan. 18

Dr. Lanka Sundaram, M.P. from Andhra and President of the All-India Linguistic States Conference in

his memorandum to Mr. Justice Wanchoo has suggested that Madras City should be made a centrally administered area and the capital of Andhra located in it. Without this being done, Dr. Sundaram said 'Andhra public opinion would not accept the Andhra State. .....Dr. Sundaram said that the Prime Minister Nehru had told him on Dec. 18, 1952. that there need not be unnecessary duplication of expentiture for the new state. Mr. Nehru had also expressed that there should be one Governor and one High Court for both the states at any rate for the initial years of the life of the Andhra State. "I am in entire agreement with the view of the Prime Minister and I have no doubt that Andhra public opinion would view this proposal with unqualified favour".

**இதன் கருத்து என்ன?**

இதன் கருத்து என்ன? நீங்கள் பிரிந்துக்காணப் போகும் ஆந்திர ராஜ்யத்திற்கு இரட்டிப்புச் செலவு வேண்டாம். ''ஆந்திராவுக்கும் சென்னைக்குமாக ஒரே நிர்வாகக் கவர்னர் இருக்க வேண்டும்'' என்பதாகும்.

இதிலிருந்து என்ன நினைக்கிறீர்கள்; அனாவசியமாய் இலங்கா சுந்தரத்தின் மீதும், வாஞ்சு மீதும் குறை கூறுவதில் என்ன பயன்? யார் தவறுக்கு யாரை நோவது? இதற்குக் காரணம் எனக்குத் தெரியும். நேரு அவர்களுக்கு எங்களைப் பற்றிய பயம் மாத்திரம் அல்ல; இந்த மேயர் அவர்களிடமும், மதிப்புக்குரிய பக்தவச்சலம் அவர்களிடமும் நம்பிக்கை கிடையாது; காரியத்திற்கு இவர்களைப் பயன்படுத்திக் கொள்கிறார். *(மேயரைத் தொட்டுக்காட்டி, பக்தவச்சலம் அவர்களைக் கைநீட்டிக் காட்டிச் சொன்னார். அவர்களும் மேடையில் உள்ளவர்களும் பொதுமக்களும் சிரித்தார்கள்.)* நேரு அவர்கள் சென்னையை அடக்கி வைத்திருக்கவேண்டிய நாடு என்றுதான் கருதியிருக்கிறார் என்று நான் கருதுகிறேனே ஒழிய, நம்மை ஒரு சுதந்திர நாட்டாராகக் கருதி இருக்கிறார் என்று நான் எண்ணவில்லை. இது என் தாழ்மையான கருத்து. மேயர் அவர்கள் என்னை மன்னிக்கவேண்டும். இதில் ஏதாவது தவறு இருந்தால் மாட்சி மிக்க மேயர் திருத்தினால் நன்றியோடு ஒப்புக் கொள்ளுகிறேன்.

**பரிகாரக் கூட்டம்:**

இந்தச் சங்கதியை இங்கு ஏன் சொல்லுகிறேன் என்றால் இந்தக் கூட்டம் வாஞ்சு அறிக்கையினால் ஏற்படும் கெடுதியை எடுத்துச் சொல்ல மாத்திரம் ஏற்படுத்தப்பட்டக் கூட்டம் அல்ல. அந்த அறிக்கையை மாற்ற நாம் என்ன செய்யவேண்டும் என்கிற பரிகாரத்திற்கு ஆகவும் கூட்டப்பட்ட கூட்டமாகும். வாஞ்சு அறிக்கையினால் ஏற்படும் கேடு இந்த நாட்டில் உள்ள எல்லோருக்கும் தெரிந்ததுதான்; இங்குக் கூடி உள்ள உங்கள் எல்லோருக்கும் தெரிந்ததுதான். இதற்குப் பரிகாரம் என்ன? இதில் யார் யார் எவ்வளவு தூரம் ஒன்றுபட்டு வேலை செய்ய முடியும்? அப்படி செய்வதற்குக் கையாளும் முறை என்ன? இவைதான் இங்குச் சிந்திக்க வேண்டிய முக்கிய காரணமாகும்.

ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால் மேயர் மன்னிக்க வேண்டும். இந்த நாட்டிலுள்ள முக்கிய கட்சிக்காரர்களுக்குள் காங்கிர ஒரு பெரியகட்சியார், எப்படியென்றால், ஏன் என்றால் அந்தக் கட்சியார்தான் இந்த நாட்டை ஆளும் கட்சியாராக இன்று இருக்கிறார்கள். ஆதலால் அதை நாம் மறுக்க முடியாது.

இந்தக் கண்டனக் கூட்டத்தில் அவர்களும் பெருவாரியாகக் கலந்து இருக்கிறார்கள். வாஞ்சு அறிக்கையை இன்று ''அதிகாரமற்ற அறிக்கையல்ல, அது ஒரு சிபாரிசு அறிக்கைதானே, அதுவும் ஹே யம் தானே, அன்றியும் அது முடிந்ததல்லவே'' என்று விவகாரத்திற்குச் சொல்லிவிடலாம். ஆனாலும் மாஜி மந்திரி பக்தவச்சலம் அவர்களே என்னோடு பேசும் போது, ''அது ஹே யம் அல்ல உண்மை என்றுதான் கருதவேண்டும்'' என்று சொன்னார். எப்படியோ இருக்கட்டும். நமது கண்டனங்களை. தந்தி தீர்மானம் மூலமாகப் பண்டிதருக்குச் சொல்லுகிறோம்; அவர் அதை மதித்தால் நமக்கு நல்ல வாய்ப்புத்தான்; அவர் இலட்சியம் செய்யாமல் அறிக்கைப்படி காரியத்தை முடிவு செய்துவிட்டால் மேலால் நாம் என்ன செய்வது? –என்பதைக் காட்ட வேண்டாமா? எந்த அளவுக்கு நாம் தயாராய் இருக்கிறோம்? என்பதைக் கலந்தாவது பேசிக் கொள்ள வேண்டாமா? அதற்கு மக்கள் தயாராய் இருக்கிறார்களா என்று இந்தக்கூட்டத்தில் அறிய வேண்டாமா?

இஷ்டப்படாத காரியம் நடப்பது என்றால், அதைத் தடுக்க நாம் சிறிதாவது சிரமப்பட்டுத்தான் ஆகவேண்டும். அதற்கு ஆக சிறிதாவது கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தாவது சிறிது எதிர்ப்பாவது காட்ட வேண்டும். அப்படி இல்லையானால் இதற்குத் தீவிர எதிர்ப்பு இல்லை என்று கருதி மேலிடத்தார் உறுதி செய்துவிட்டால், அப்புறம் நமக்கு எவ்வளவு கஷ்டம் தொல்லை ஏற்படும்? அந்தத் தொல்லை கஷ்டங்களை இப்படி ஒன்று சேர்ந்து அனுபவிக்க முன்வர முடியுமா? என்பது தெரிய வேண்டாமா?

நான் வரப்போகும் கஷ்டத்திற்கு இன்று இங்கு உள்ள காங்கிரசுக்காரர்கள் பின் வாங்குவார்கள் என்று கருதிப் பேசுவதாகத் தயவு செய்து யாரும் கருதக் கூடாது. மக்கள் அரசியல் காரணங்களுக்குக் கஷ்ட நஷ்டமடைவது, தியாகம் செய்வது என்பது இந்த நாட்டில் காங்கிர காரர்களால் போதிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பது எனக்குத் தெரியும். நானும் தியாகம் என்பதைக் காங்கிரசினால்தான் தெரிந்துகொண்டேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆதலால் நான் காங்கிர தோழர்களைப் பற்றி இப்போது என்ன கருதுகிறேன் என்றால், இன்று காங்கிர வேறு;

கவர்ன்மென்ட் வேறு என்பதாக இல்லை. அவர்கள் தான் நாட்டை ஆளுகிறார்கள். அந்த ஆட்சி முறையில் பிரதம மந்திரி பண்டித நேருவினால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு காரியம் நேரு சர்க்கார் அவர்களின் முத்திரை பெறுவது, சாதாரண நிலையில் அசாத்தியமானதாக இருக்க முடியுமா? அப்படி முத்திரை பெற்றுவிட்டால் காங்கிர தோழர்கள் தங்கள் தலைவர் முடிவு என்பதற்குத் தலைவணங்காமல் எப்படி இருக்க முடியும்? இது ஒரு சங்கடமான நிலைதான். ஆதலால் அதை அவர்கள் இங்கேயே கூற வேண்டும் என்று நான் வலியுறுத்தவில்லை.

**கவனிக்க வேண்டும்:**

ஆனால் ஒரு எதிர்ப்பைச் சித்தரிக்க வேண்டி வந்தால் இந்த விஷயம் கவனிக்கப்படவேண்டியதாகும் என்று சொல்லிவிட்டு, காங்கிர தோழர்களும் ஏற்றுக்கொள்ளுகிற அளவில் ஒரு சிறிய தீர்மானத்தை இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றலாம் என்று மேயர் அவர்கள் அனுமதியை எதிர்பார்த்துக் குறிப்பிடுகிறேன். அது என்னவென்றால் நாளது பிப்ரவரி 22ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையைத் தமிழ்நாடு எங்கும் எல்லாக்கட்சியாரும் வாஞ்சி அறிக்கை கண்டன நாளாகக் கொண்டாட வேண்டுமென்று வேண்டுகோளும் அறிக்கையும் விடுத்து இருக்கிறேன். அதுவும் ''சென்னையைப் பொறுத்தவரையில் 22ஆம் தேதி தவிர்த்து வேறுநாள் வைத்துக் கொள்ளலாம்'' என்று மேயர் யோசனையை அனுசரித்துப் பொது மக்களுக்குத் தெரிவித்து இருக்கிறேன்.

**கடையடைப்பு நாள்:**

அது தவிர்த்து வாஞ்சு அறிக்கையைக் கண்டிக்கிற அளவில் ஒரு வாரத்திற்குள்ளாக ஒரு நாளில் தமிழ் நாடெங்கும் கடை அடைப்பு, அர்த்தால் நடத்தலாம் என்றும் அதற்கு ஒரு நாள் குறிப்பிடலாம் என்றும் ஒரு தீர்மானம் கொண்டு வருகிறேன்.

இதை மேயர் அவர்கள் ஏற்றால் ஓட்டுக்கு விடலாம்; இல்லாவிட்டால் நான் வலியுறுத்தவில்லை. ஏனென்றால் எந்தக் காரணத்தாலும் மேயர் அவர்களின் அதிருப்திக்கு இடம் தரும் காரியம் இங்கு நடக்கக் கூடாது என்பது எனது கருத்தும் கவலையும் ஆகும்.

நாம் ஒரு பலமான காரியத்தை எதிர்க்க வேண்டியவர்கள் கூடிச் செய்கிற காரியத்தில் நமக்குள் கருத்து வேற்றுமை இருக்கக்கூடாது என்பது என் கருத்தாகும். (விடுதலை 17.02.1953)

மேலேகண்ட பெரியாரின் கடற்கரைச் சொற்பொழிவில் டாக்டர் லங்கா சுந்தரம் அவர்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

*அவர் விசாகப்பட்டிணம் தொகுதி சுயேட்சை நாடாளுமன்ற உறுப்பினர். 1952 முதல் நாடாளுமன்றத்தில் அடிக்கடி ஆந்திரப் பிரிவினையையும், சென்னை ஆந்திராவுக்கு மட்டுமே சொந்தம். சென்னை இல்லாத ஆந்திரா எங்களுக்குத் தேவை இல்லை என்று பேசியவர்.*

கடற்கரைச் சொற்பொழிவில் பெரியார் கூறியபடி அனைத்துக்கட்சிகளும் இணைந்து பொது வேலை நிறுத்தம் கடையடைப்பு நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை காங்கிர கட்சியினர் ஏற்றுக் கொள்ளவில்லை.

**22.02.1953** அன்று சென்னை வந்த குடிஅரசுத் தலைவர் இராஜேந்திர பிரசாத்துக்குத் திராவிடர் கழகத்தின் சார்பில் குத்தூசி குருசாமி தலைமையில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்டோர் கருப்புக் கொடி காட்டினர். தமிழ்நாடு முழுவதும் திராவிடர் கழகத்தின் சார்பில் வாஞ்சி அறிக்கை கண்டன நாள், ''தமிழக உரிமைப் பாதுகாப்பு நாள்'' கொண்டாடப்பட்டது.

**08.03.1953** அன்று சென்னை சிந்தாதிரிப் பேட்டையில் செட்டிநாட்டு முத்தையா செட்டியார் தலைமையில் கூடிய கூட்டத்தில் பேசிய ம.பொ.சி. ''தமிழ்நாடு காங்கிர கமிட்டியும், சர்வக்கட்சித் தலைவர்களும், சென்னைச் சட்டசபை ஆந்திரர் அல்லாத உறுப்பினர்கள் 200 பேரும், பார்லிமென்டிலிலுள்ள ஆந்திரரல்லாத உறுப்பினர்களும் பெரியார் ஈ.வெ.ராவும் எல்லோரும் சேர்ந்து மகஜர்மூலம் சென்னையில் ஆந்திரத் தலைநகரை ஒரு நாளைக்குக்கூட அமைக்கக்கூடாது என்று அறிவித்த பின்னும் சஞ்சீவ ரெட்டி கோரிக்கைக்கு மத்திய சர்க்கார் அசைந்து கொடுக்காது என்று நாங்கள் நம்புகிறோம் என்று பேசியுள்ளார். (விடுதலை 09.03.1953)

**ஆந்திரத் தலைநகர் பிரச்சனை – சென்னையில் மாபெரும் கூட்டம்:**

தமிழ்நாடு காங்கிர கமிட்டியின் காரியாலய செக்ரட்டரி திரு. என்.இ. ரகுநாதன் எழுதுவதாவது:

**16.02.1953**ஆம் தேதி மாலை 6 மணிக்குத் திருவல்லிக்கேணிக் கடற்கரையில், சென்னையில் தற்காலிகமாகக்கூட ஆந்திரத் தலைநகரையும், உயர்நீதி மன்றத்தையும் நிறுவப்படுவதற்குத் தங்களின் உறுதியான எதிர்ப்பைக் காட்டுவதற்காகச் சர்வக்கட்சிப் பிரதிநிதித்துவமடங்கிய ஒரு மாபெரும் கூட்டம் நடைபெறும்.

சென்னை மேயர் திரு.டி. செங்கல்வராயன் அவர்கள் தலைமை வகிப்பார். பெரியார் ஈ.வெ. இராமசாமி,

திருவாளர்கள் எம். பக்தவச்சலம், எ . முத்தையா முதலியார், எல்.எ . கரையாளர், ம.பொ. சிவஞானம் கிராமணி, கே. விநாயகம், உபயதுல்லா சாகெப், மீனாம்பாள் சிவராஜ் முதலியவர்கள் பேசுவார்கள். (விடுதலை 14.02.1953)

இந்தக் கடற்கரைக் கூட்டத்தைத் தமிழ்நாடு காங்கிர கட்சி முன் நின்று நடத்தியிருக்கிறது. ம.பொ.சி எனது போராட்டத்தில் கூறியிருப்பது போல இராஜாஜி சொல்லி ம.பொ.சி ஏற்பாடு செய்ததல்ல. மேலும் பெரியாரின் கடற்கரைச் சொற்பொழிவிலிருந்து தெரிந்து கொள்வது என்னவென்றால் மேயரின் அலுவலகத்தில் நான்கு நாட்களுக்கு முன் நடைபெற்ற அனைத்துக்கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கடற்கரையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

பெரியாரின் கிளர்ச்சியைக் காட்டித்தான் முதலமைச்சர் இராஜாஜி காங்கிர கட்சியின் மேலிடத்தில் ‘‘சென்னையில் தற்காலிகமாகக் கூட ஆந்திராவுக்குத் தலைநகராகக் இருக்கக்கூடாது என்று சொல்லிவிட்டு வந்தார். பெரியார் கிளர்ச்சி தொடங்கி விட்டார். இனி யார் யாரோ கிளர்ச்சித் தொடங்குவார்கள். என்னால் இதைச் சமாளிக்க முடியாது. முதல்வருக்கு வேறு ஆளைப்பார்த்துக் கொள்ளுங்கள்’’ என்று டெல்லியில் நேருவிடம் சொல்லிவிட்டு வந்தார். (விடுதலை 13.03.1953)

இதே காலக்கட்டத்தில் தான் ம.பொ.சிக்குக் காங்கிர கட்சியில் சிக்கல் உருவானது. ம.பொ.சி சென்னைச் சட்ட மேலவைத் தேர்தலில் ஏற்கெனவே வெற்றிப்பெற்றிருந்தார். வேறு ஒரு வேட்பாளர் அந்தத் தேர்தல் சரியான முறையில் நடைபெறவில்லை எனக்கூறி உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து வெற்றியும் பெற்றுவிட்டார். அந்தத் தேர்தல் செல்லாது என உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது மீண்டும் மறுதேர்தல் நடைபெற இருந்தது.

20.03.1953 அன்று ம.பொ.சியும் மற்றும் பலரும் மேலவைத் தேர்தலுக்கு வேட்பு மனுவைத்தாக்கல் செய்தனர். தமிழ்நாடு காங்கிர கட்சி இவருடைய வேட்பு மனுவை டெல்லிக்கு அனுப்பும்போது கூடவே ஒரு குறிப்பையும் அனுப்பி வைத்தனர். இவர் தமிழரசுக் கழகம் என்று தனிக்கட்சி நடத்துகிறார். காங்கிர சட்டவிதிகளுக்குப் புறம்பாகக் கட்சி நடத்துவதால் இவருடைய வேட்பு மனுவை நிராகரிக்க வேண்டும் என்று எழுதி அனுப்பினர். காங்கிர கட்சியின் பார்லிமென்டரி போர்டு ம.பொ.சி.யின் வேட்பு மனுவை நிராகரித்தது.

உடனே ம.பொ.சி. தமிழரசுக் கழகத்தின் செயற்குழுவைக் கூட்டி அதன் விதிகளைத் திருத்தி இது அரசியல் கட்சியல்ல. வெறும் கலாச்சார கழகமே என்று காங்கிர மேலிடத்திற்குக் கழகத்தின், தீர்மான நகலையும் அனுப்பி வைத்தார். விடுதலையில் குத்தூசி குருசாமி ‘‘கிராமணியாரின் சரணாகதி; பதவிப்பேராசையால் கட்சிக் கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டார்’’ என்று எழுதினார். (விடுதலை 25.03.1953)

ம.பொ.சி.யின் மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு மேலவைத் தேர்தலிலும் போட்டியிட்டார். அதைப் பெரியார் ஆதரித்தார். ‘‘சட்டப்பேரவைத் தொகுதியிலே சட்டமேலவைக்குப் போட்டியிட நான் முனைந்தது தெரிந்ததுமே பெரியார் ஈ.வெ. ராவின் ‘விடுதலை’ பத்திரிக்கை கூட நான் வெற்றிபெற வேண்டுமென்று விரும்பியது. காங்கிரசில் இருந்த கோஷ்டி பூசல் காரணமாக ஒருகால் நான் தோற்கடிக்கப்படுவேனோ என்ற அச்சத்தையும் விடுதலை வெளியிட்டது’’. (எனது போராட்டம் பக். 582)

காங்கிர கட்சியில் பலர் போட்டியிட்டதால் ஒவ்வொரு வேட்பாளருக்கும் பதினான்கு சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும். ம.பொ.சிக்கும் வாக்களிக்க காங்கிர கட்சி 14 சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கட்டளையிட்டது. ஆனால் அதில் 9 பேர் மட்டுமே ம.பொ.சிக்கு வாக்களித்தனர். முதல் சுற்றில் ம.பொ.சி. தோல்வியுற்றார். அப்போது இராமசாமி படையாச்சின் தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி 19 சட்டமன்ற உறுப்பினர்களைப் பெற்றிருந்தது. அக்கட்சி இராஜாஜி ஆட்சியை ஆதரித்தது. அக்கட்சியின் சார்பில் மேலவைக்குப் போட்டியிட்ட ஆ. கஜபதி நாயகருக்கு 14 வாக்குகள் போக மீதம் 5 வாக்குகள் இருந்தன. ம.பொ.சி. 1952 தேர்தலில் காங்கிர கட்சி வெற்றிக்காகச் சூறாவளியாக பிரச்சாரம் செய்தார். படுத்துக்கிடந்த காங்கிரசை நான் தான் நிமிர்த்தினேன் என்று பெருமைப்பட்டுக் கொண்டார். இந்த மேலவைப் பதவி கூடத் தீவிரமாகத் தேர்தல் வேலை செய்ததற்காகத் தான் காங்கிர எனக்குக் கொடுத்தது என்று எழுதியுள்ளார். அந்த தேர்தலில் ம.பொ.சி தமிழ்நாடு உழைப்பாளர் கட்சியை மிகக் கடுமையாக விமர்சனம் செய்தார். ‘‘நண்டு நாற்காலி ஏறுமா’’ அதாவது வன்னியர் நண்டு தின்னும் ஜாதியினர் என்பதாகக் கேலி செய்தார். ‘‘பள்ளிகள் பாராளமுடியுமா’’? என்றெல்லாம் தேர்தல் கூட்டங்களில் பேசினார். காங்கிர கட்சியில் இவர் ஒருவர்தான் பீரங்கிப் பேச்சாளர் என்று பெருமைப் பீற்றிக்கொண்டார். மேலவைத் தலைவர் பதவி ஆசை காரணமாக இராஜாஜியின் மூலமாக இராமசாமி படையாச்சியைப் பிடித்து மீதம் இருந்த 5 வாக்குகளைத் தனக்குப் போட வைத்து இரண்டாவது சுற்றில் வெற்றி பெற்றார். இதை அவரே எழுதியுள்ளார். ம.பொ.சி. (எனது போராட்டம் பக். 685)

ம.பொ.சி.க்கும் காங்கிரசில் எந்தச் செல்வாக்கும் இல்லை என்பது இதன்மூலம் உறுதியாகிறது. அவருடைய குருநாதர் இராஜாஜிக்கும் தமிழ்நாட்டில் எந்தச் செல்வாக்கும் இல்லை. அவர் டெல்லியிலிருந்து திணிக்கப்பட்ட முதலமைச்சர். காந்தி உயிரோடு இருந்தவரைத்தான் இராஜாஜிக்கு அகில இந்திய காங்கிரசில் செல்வாக்கு இருந்தது.

அதன் பிறகு இல்லை. கவர்னர் ஜெனரலாக இருந்த இராஜாஜி இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராக இருக்கவிரும்பினார். நேருவிடமும் கேட்டார். ஆனால் வல்லபாய் பட்டேல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்து கொள்ளாத இராஜாஜிக்குக் குடி அரசுத் தலைவர் பதவி தரமுடியாது என்று மறுத்துவிட்டார். (ராஜ்மோகன் காந்தி இராஜாஜி வாழ்க்கை வரலாறு பக். 731–733)

நேரு இராஜாஜியைத் தன் அமைச்சரவையில் 15.17.1950இல் சேர்த்துக் கொண்டார். ஆனால் எந்த இலக்காவையும் கொடுக்காமல் அவமதித்தார். தனக்கும் வல்லபாய் பட்டேலுக்கும் இடையில் இடைத்தரகர் போல இருக்கும்படி செய்து விட்டார். சம்பளம், கார், பங்களா எல்லாம் உண்டு. ஆனால் கையெழுத்துப் போட ஒரு கோப்பு கூடக்கிடையாது. இலாக்கா இருந்தால்தானே கோப்புகள் வரும். இராஜாஜியும் மானம் ஈனம் எதுவும் இல்லாமல் இலக்கா இல்லாத அமைச்சராக 15.12.1950 வரை இருந்தார். 1950 டிசம்பர் 13இல் வல்லபாய் பட்டேல் இறந்த பிறகு தான் அவருடைய உள்துறை இலாக்கா இராஜாஜிக்குக் கொடுக்கப்பட்டது. (ராஜ்மோகன் காந்தி இராஜாஜி வாழ்க்கை வரலாறு பக். 741)

நேருவுக்கும் அவருக்கும் கருத்து முரண்பாடு ஏற்பட்டு விரைவிலேயே மத்திய அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு வந்து விட்டார்.

ம.பொ.சியின் குருநாதரும் சென்னை மாகாண முதல்வருமான ராஜாஜிக்கும் காங்கிர கட்சியில் செல்வாக்கு இல்லை என்பதே உண்மை.

ம.பொ.சி. வரலாற்றையே புரட்டி எழுதிவிட்டார். ‘‘சென்னைப் பற்றிய பிரச்சனையில் தமிழினத்தார் நிலை ஆரம்பத்தில் பரிதாபகரமானதாக இருந்தது. தி.க. தலைவர் பெரியார் ஈ.வெ. ரா., ‘‘சென்னை ஆந்திரத்தில் இருந்தால் என்ன தமிழகத்தில் இருந்தாலென்ன! எங்கிருந்தாலும் திராவிடத்தில் தானே இருக்கப்போகிறது’’ என்று அறிவித்து விட்டார் என்ற பச்சையான பொய்யை (எனது போராட்டத்தில் பக். 619)இல் ம.பொ.சி. எழுதியுள்ளார்.

தமிழ்நாடு காங்கிர கமிட்டித் தலைவர் கே. காமராஜரைப் பற்றிக்கூடப் பொய்யான தகவலையே ம.பொ.சி. எழுதியுள்ளார். ‘‘ஆம் சென்னை நகர் பற்றிக்கூட எதுவும் கூறாமல் அவர் மௌனம் சாதித்தார்’’ (எனது போராட்டம் பக். 619)

ம.பொ.சியின் கூற்று உண்மையல்ல. காமராசரின் தலைமையில் தான் அக்கட்சியினர் நீதிபதி வாஞ்சுவைச் சந்தித்து ஆந்திராவின் தலைநகர் சென்னையில் இருக்கக்கூடாது என்று விண்ணப்பம் அளித்தனர். (விடுதலை 11.01.1953)

சென்னை நகர மேயர் காமராசர் குழுவைச் சார்ந்தவர். அவர் காமராசருடன் சேர்ந்து போய் நீதிபதி வாஞ்சுவை சந்தித்தார். (விடுதலை 11.01.1953) அக்குழுவில் ம.பொ.சி. இல்லை என்பதே உண்மை. சென்னை நகர மேயர் ‘‘சென்னையில் வாழும் சிறுபான்மையினரான ஆந்திரர்கள் சென்னைப் பற்றிய கிளர்ச்சியிலே ஆந்திரக் காங்கிரசுடன் ஒத்துழைத்தால், அவர்களுக்குக் குடி தண்ணீர் வழங்க மாட்டேன். பிணம் புதைக்கவும் சுடுகாட்டில் அவர்களுக்கு இடம் கிடைக்காது’’ என்று முழங்கினார். (ம.பொ.சி. எனது போராட்டம் பக். 620)

இப்படிப்பட்ட மேயரையும் ம.பொ.சி. கூறுவதைப் போல இராஜாஜியின் ஆந்திராவின் தற்காலிகத் தலைநகர் கோரிக்கைக்கு இணங்கினார் என்பது பொய். புதுதில்லியில் பத்திரிக்கையாளர்களுக்குப் பேட்டி அளித்த சென்னை மாகாண முதல்வர் இராஜாஜி, ‘‘சென்னையை ஆந்திராவுக்குக் கொடுப்பது என்றால் வேறு முதலமைச்சரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்’’ என்று காங்கிர மேலிடத்துக்குக் கூறிவிட்ட இராஜாஜியையும் தன் குருநாதர் என்று கூடப் பார்க்காமல் ம.பொ.சி. கவிழ்த்து விட்டார்.

‘‘மாநாகராட்சியின் சிறப்புக்கூட்டம் நடைபெறவிருக்கும் செய்தியைப் பத்திரிக்கைகளில் பார்த்ததும் மேயரையும் என்னையும் ராஜாஜி தமது இல்லத்திற்கு அழைத்துப் பேசினார். ‘‘ஆந்திர அரசுக்குத் தற்காலிகமாகக் கூட சென்னையில் இடம் தரக்கூடாது’’ என்ற வாசகத்தை தீர்மானத்திலிருந்து நீக்கி விடும்படி மேயரையும் என்னையும் இராஜாஜி கேட்டுக் கொண்டார். மேயர் அவர்கள் வெகு சுலபத்தில் அதற்கு இணங்கிவிட்டார்... இந்த விஷயத்தில் மேயரும் என்னைக் கை விட்டுவிட்டார்... நிபந்தனை எதுவும் இல்லாமலே ஆந்திர அரசுக்குச் சென்னையில் இடம் தரத் தமிழ்நாடு காங்கிர தலைவரும் தயாராக இருப்பதை நான் அறிவேன். (ம.பொ.சி. எனது போராட்டம் பக். 632)

இது அத்தனையும் பொய் ம.பொ.சி. தான் மட்டும்தான் தலைநகரைக் காப்பதில் உறுதியாக இருந்தேன் என்பதற்காக எழுதப்பட்ட புனைக்கதை.

தேவிக்குளம், பீர்மேடு தமிழகத்திற்குத்தான் சொந்தம் என்ற சட்டமன்றத் தீர்மானத்தையே ஏற்க மறுத்த நேரு, பக்தவச்சலமும், சி. சுப்பிரமணியமும் தேவிகுளம், பீர்மேட்டை கேரளாவுடன் சேர்க்க மறுப்புத் தெரிவித்துப் பதவி விலகல் கடிதத்தை அகில இந்திய காங்கிர தலைவர் தேபர் அவர்களிடம் கொடுத்ததை மும்பையிலிருந்து வெளிவரும் ‘பிளீட்’ ஆங்கில ஏட்டில் வெளி வந்ததைச் சட்ட மன்றத்தில் அ. கோவிந்தசாமி எடுத்துக் காட்டியுள்ளார் 29.03.1956. (பக். 185, 186) அப்படியும் தேவிக்குளம் பீர்மேட்டைத் தமிழகத்தில் சேர்க்க மறுத்தவர் நேரு.

ம.பொ.சியின் நகர மன்றத் தீர்மானம் நேருவின் மனத்தை மாற்றிவிட்டது என்பதும் ஆயிரம் பேர் தந்திகள் அடித்ததால் நேரு மனம் மாறினார் என்பதும் உண்மையல்ல. ஒட்டுமொத்த தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளின் பொதுமக்களின் எதிர்ப்புக் காரணமாகவே நேரு பணிந்தார் என்பதே உண்மை. ஆந்திரர் அல்லாத 200 சட்டமன்ற உறுப்பினர்களிடம் நானும் செங்கல்வராயனும் கையெழுத்துப் பெற்று அனுப்பினோம் என்பதிலும் உண்மை இல்லை. ம.பொ.சி. காமராஜர் குழுவினரை நெருங்கவே முடியாத காலம் அது. மேயர் என்ற முறையில் செங்கல்வராயன் கையெழுத்து வாங்கியிருப்பார். அவர் காமராஜர் குழுவில் இருந்தார். ம.பொ.சி. பிற்காலத்தில் எழுதிய 'எனது போராட்டத்தில்' நானும் சேர்ந்துவாங்கி அனுப்பினேன் என்பது பொய்.

சென்னை மாகாணத்தில் தமிழ் நாட்டைச் சேர்ந்த அனைத்துக்கட்சி 32 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமர் நேருவைச் சந்தித்துச் சென்னையைத் தமிழ் நாட்டுக்கே தரவேண்டும்; ஆந்திராவிற்குத் தற்காலிகத் தலைநகராகக் கூட சென்னையில் இடம் தரக்கூடாது என்று வலியுறுத்தினர். தமிழ் மக்களின் ஒட்டுமொத்த எதிர்ப்பைக் கண்டு தான் நேரு பின் வாங்கினாரே தவிர, ம.பொ.சி மட்டும் தனித்து நின்று சென்னை நகரை மீட்கவில்லை.

இது ஒட்டு மொத்தத் தமிழ் மக்களின் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி என்று விடுதலையேடு எழுதியது 26.03.1953. ஆனால் ம.பொ.சி. தனக்குக் கிடைத்த வெற்றியாக எனது போராட்டத்தில் எழுதிக் கொண்டார்.

1946இல் ம.பொ.சி.க்குக் கிடைத்த வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் சீட்டை டெல்லி மேலிடம் நரசிம்மாவிற்கு மாற்றிக் கொடுத்துவிட்டது. இதனால் ஆத்திரமடைந்த ம.பொ.சி. நரசிம்மராவ் தெலுங்கர் என்பன போன்ற அவதூறுப் பிரச்சாரங்களை மேற்கொண்டார் எனத் தமிழ்நாடு காங்கிர கமிட்டி ம.பொ.சி. மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது. நரசிம்மராவ் ''இவர் ஒழுங்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்தார்'' என்று கூறி இவரைக் காப்பாற்றி விட்டார். ம.பொ.சி.யைப் பற்றி முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்ட முனைவர் எம்.ரங்கசாமி கூறியுள்ளார்.

(Dr. M. Rangasamy Tamil Nationalisam Political Identity of Tamil Arasu Kazhagam P. 98)

1948இல் திராவிடர் கழகம் முன்னின்று நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் காலையில் மட்டும் கலந்து கொண்டார். பிற்பகல் கலந்து கொள்ளவில்லை. இது இந்தியை எதிர்ப்பதற்காக நடத்தப்பட்ட கூட்டமல்ல; காங்கிரசை எதிர்ப்பதற்காக நடத்தப்படுகிறது என்று கூறிப் பின் வாங்கினார். அப்போதும் இவர் மீது காங்கிர நடவடிக்கை ஏன் எடுக்கக் கூடாது என்று விளக்கமளிக்க நோட்டீ அனுப்பியது. (மேற்கண்ட நூல் பக். 98)

காங்கிரசில் நிறுத்திவைக்க நேரு செய்த முயற்சி

ம.பொ.சியை முழுமையாகக் காங்கிரசை விட்டு நீக்கிவிட தமிழ்நாடு காங்கிர 1952இல் முடிவு செய்தது. அதைப்பற்றி ம.பொ.சி.யே கூறியுள்ளார். ''நேருஜி என்பால் அன்பு காட்டி எனது தமிழரசு இயக்கத்திற்கு வெற்றிகளைத் தந்ததை விடவும் எனது சொந்த விஷயம் ஒன்றிலும் அவர் என்பால் பேரன்பு காட்டியது என்னால் என்றும் மறக்க முடியாததாகும். காங்கிரசிலிருந்து என்னை வெளியேற்றத் தமிழ்நாடு காங்கிர பிடிவாதத்துடன் முயன்றபோது, நான் நேருஜியிடம் சரண் புகுந்தேன்.

1952 ஆம் ஆண்டின் இறுதியில் காங்கிரசிலிருந்து என்னை வெளியேற்றிவிடத் தமிழ்நாடு காங்கிரசைத் தங்கள் செல்வாக்கில் வைத்திருந்த ஒரு சாரார் பெருமுயற்சி எடுத்தார்கள். அதற்கு அவர்கள் வெளிப்படையாகச் சொன்ன காரணம், தமிழரசுக் கழகம் என்னும் பெயரில் ஒரு கட்சியையே காங்கிரசுக்குள் நான் நடத்திக் கொண்டிருக்கிறேன் என்பதாகும். தமிழரசுக் கழகம் ஆட்சியைக் கைப்பற்ற விரும்பும் அரசியல் கட்சியல்ல என்று நான் சொல்லி வந்ததை அவர்கள் நம்பவில்லை. ஆம், நம்புவதிலே அவர்களுக்கு லாபமில்லை.

அவர்கள் சொன்ன மற்றொரு காரணம், இந்தியாவிலிருந்து பிரிந்து வாழும் சுதந்திரத் தமிழகத்தைத்தான் தமிழரசுக் கழகம் கோருகின்றது என்பதாகும். ''சுயாட்சித் தமிழகம்'' என்று நான் சொன்னதன் பொருளை அவர்கள் புரிந்து கொள்ளாததுபோல் நடித்தார்கள்.

சென்னை நகருக்கெனத் த. நா. கா. கமிட்டியால் நியமிக்கப்பட்டிருந்த தேர்தல் அதிகாரி, காங்கிரசால் நியமிக்கப்பட்டிருந்த தேர்தல் அதிகாரி, காங்கிர அமைப்புக்குரிய சட்டத்தில் நான்காவது விதியைக் காட்டி எனது நியமனப் பத்திரத்தை நிராகரித்தார். நான்காவது விதி, ''வேறோர் கட்சியில் உறுப்பினராக இருப்பவர் காங்கிரசிலும் உறுப்பினராக இருக்கமுடியாது'' என்று கூறுகிறது.

தேர்தல் அதிகாரியின் இந்த நடவடிக்கையானது என் மனத்திற்கு மிகுந்த அதிர்ச்சியைத் தந்தது. நேருஜி அப்போது அனைத்திந்திய காங்கிரசின் தலைவராக இருந்தார். என்னைப்பற்றி அவர் நன்கு அறிந்து வைத்திருந்த நேரம் அது. அதனால், தேர்தல் அதிகாரியின் முடிவை நேருஜிக்கு அறிவித்து, எனக்கு நீதி வழங்க வேண்டும் என்று அவருக்கு 'மேல் மனு'ப் போட்டேன். 21 மணி நேரத்திற்குள் அவரிடமிருந்து கீழ்க்கண்ட தந்தி கிடைத்தது.

புதுடெல்லி, 16.11.1952

*தாங்கள் காங்கிர தலைவருக்குச் செய்து கொண்ட அப்பீல் மனு கிடைத்தது. காங்கிர மேலிடம் தமிழரசுக் கழக அங்கத்தினர்கள் பற்றி விசாரணை நடத்தி இறுதி முடிவு எடுக்கப்படும் வரையிலும் அந்தக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் காங்கிர தேர்தலில் ஈடுபட அனுமதிக்கப்படுவார்கள். ‘‘காங்கிர ’’*

அப்போது இராஜாஜி அவர்கள் முதலமைச்சர் பொறுப்பில் இருந்தார். ஆயினும், நேருஜியிடமிருந்து நீதி பெறுவதற்கு இராஜாஜியின் உதவியை நான் நாடவில்லை. எனது மேல் மனுவை நேருஜி ஏற்றுக் கொண்டது செய்தித் தாள்களில் வெளியானபோது தான் இராஜாஜி அறிந்து கொண்டார். நானும் அவரைச் சந்தித்து நிகழ்ந்ததை விவரமாகக் கூறினேன்.

மாநில சுயாட்சி பற்றி நான் எழுதிய கட்டுரைகளை எல்லாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் காங்கிர தலைவர் நேருஜிக்குத் தமிழ்நாடு காங்கிர கமிட்டி வட்டாரம் அனுப்பி வைத்ததோடு, காரியக்கமிட்டி உறுப்பினர்களுக்கும் அதன் நகலை அனுப்பியது. இராஜாஜி அப்போது காங்கிர காரியக் கமிட்டியில் இருந்தார்.

காரியக் கமிட்டியின் ஒவ்வொருக் கூட்டத்திலும் தமிழரசுக் கழகம் பற்றிய பிரச்சினை ஆராயப்பட்டு, இறுதி முடிவு எதுவும் எடுக்காமல் ஒத்திப்போடப்பட்டு வந்தது. இதற்கிடையிலே, ஸ்ரீமந் நாராயணன் அனைத்திந்தியக் காங்கிரசின் பொதுச் சொயலாளர் என்ற முறையிலே என்னுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டார். அவருக்குப் பின் பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்ற திரு. பல்வந்தராய் மேத்தா என்பவரும் என்னுடன் கடிதப் போக்குவரத்து நடத்தினார். இந்த இருவருமே சென்னை நகருக்கு வருகை தந்து, எனக்கு நேரிலும் பேட்டியளித்து, என்னிடமிருந்து விவரங்களறிந்து சென்றனர்.

இப்படி, தமிழரசுக் கழகம் பற்றிய பிரச்சினை சரியாக ஒன்றரையாண்டுக்காலம் ‘இழுபறி’யில் இருந்து வந்தது. காரியக்கமிட்டியின் ஒவ்வொரு கூட்டத்திலும் இராஜாஜி கலந்து கொண்டு, அதன் உறுப்பினர்களான சர்தார் படேல், மவுலானா ஆசாத் போன்ற பெருந்தலைவர்களுக்கு என்னைப் பற்றிச் சரியான தகவல்களைத் தந்துகொண்டிருந்தார்.

இதற்கிடையில் திருவிதாங்கூர் சம தான சட்டமன்றத்திற்குத் தேர்தல் வந்தது. அதிலே, கேரள மாகாண காங்கிரசானது தமிழர் மிகுதியாக வாழும் தென் திருவிதாங்கூர் தொகுதிகள் சிலவற்றில் கேரளர்களை நிறுத்தி வைத்தது. அவர்களுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்ய நான் தென் திருவிதாங்கூருக்குச் செல்ல வேண்டுமென்று த. நா. கா. கமிட்டியிடமிருந்து ஆணை வந்தது.

நான் ஆணையை ஏற்க மறுத்தேன். இராஜாஜி தமிழக முதலமைச்சர் என்ற முறையிலே கேரளத்திற்குச் செல்ல இசைவு தெரிவித்திருந்தார். என்னை நேரில் அழைத்து, நானும் அவருடன் வரவேண்டுமென்று எனக்கு ஆலோசனை கூறியதோடு, நேருஜி தமக்கு எழுதிய கடிதம் ஒன்றையும் காட்டினார். அதிலே, ‘‘தங்கள் நண்பர் கிராமணியார் பிரச்சினை எனக்கு மிகவும் கவலை தருவதாக இருக்கிறது என்பதை நீங்கள் உணர்வீர்கள் என்று நம்புகிறேன். திருவிதாங்கூர் சம தானத்திற்குத் தாங்கள் தேர்தல் பிரசாரத்திற்குச் செல்லும் போது ஸ்ரீ கிராமணியாரையும் அழைத்துச் செல்ல முயலுங்கள்’ என்று நேருஜி குறிப்பிட்டிருந்தார்.

இராஜாஜி, திருவிதாங்கூர் தமிழர்களுக்கு எதிராகத் தேர்தல் களத்தில் கேரள வேட்பாளர்களை நான் ஆதரிப்பதிலுள்ள சங்கடத்தை அறிந்து கொண்டார். ஆயினும், நேருஜியைத் திருப்தி செய்வதற்காக – என்பால் நேருவுக்குள்ள அன்பு கெடாமலிருப்பதற்காக நான் தம்முடன் திருவிதாங்கூர் சம தானத்திற்கு வருவதை அவர் விரும்பினார். தமிழர்கள் மிகுதியாக வாழும் தொகுதிகளுக்குத் தாம் செல்லப் போவதில்லையென்றும், அதனால் நானும் தம்முடன் வரலாமென்றும் கூறினார்.

இந்த நிகழ்ச்சியானது நேருஜிக்கு என்பால் கொஞ்சம் மனக்கசப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அப்படியிருந்தும் இந்த நிகழ்ச்சிக்குப் பின்னும் ஆறுமாத காலம் நான் காங்கிரசிலிருப்பதற்கு நேருஜி வழிவகுத்துக் கொடுத்தார். இந்த நிலையில் முதலமைச்சர் பதவியிலிருந்து இராஜாஜி தாமாக விலகிக் கொள்ளவே குலக்கல்வித் திட்டம் எதிர்ப்புக் காரணமாக சட்டமன்ற வாக்கெடுப்பில் தோல்வியுற்றதை ம.பொ.சி. மறைத்து விட்டார். திரு. காமராசர் அந்தப் பதவியில் அமர்ந்தார்.

இதனையடுத்து, தமிழ்நாடு காங்கிர ஒரு புதுவழியைக் கண்டுபிடித்தது. தமிழக எல்லைப் பிரச்சினைக்கென்று நடைபெறும் கூட்டங்களிலோ, ஊர்வலங்களிலோ காங்கிர காரர்கள் கலந்து கொள்ளக்கூடாது என்று த. நா. கா. க. செயலாளர் திரு. ஆர். வெங்கட்ராமன் எனக்கு ஆணை அனுப்பினார். தமிழ் மாகாண காங்கிர கமிட்டி தரங்கம்பாடியில் நிறைவேற்றிய தீர்மானத்தையே திரு. ஆர்.வி. எனக்கு அனுப்பிவைத்தார். அதன் பின்னரும் நான் எல்லைகளை மீட்கும் கிளர்ச்சிகளிலே தொடர்ந்து ஈடுபட்டு வந்தேன். ‘வடக்கெல்லை தினம்’ என்னும் பெயரில் ஒரு நாள் கொண்டாடியது தமிழரசுக் கழகம். அது, 1954 ஜுலை 4ஆம் தேதியாகும். அன்று திருவல்லிக்கேணிக் கடற்கரையில் தமிழரசுக் கழகத்தின் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடத்தி, அதிலே நான் பேசினேன். அந்தப் பேச்சினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத்

தமிழ்நாடு காங்கிர வட்டாரம் நேருஜிக்கு அனுப்பிவைத்தது. எல்லைக் கமிஷன் நியமிப்பதில் நேரு ஆட்சி காட்டி வரும் நியாயமற்ற தாமதத்தை எனது பேச்சில் நான் வன்மையாகக் கண்டித்திருந்தேன். அது, "நேருஜிக்கு ம.பொ.சி. மிரட்டல்" "நேருஜியே தமிழர்களை ஏமாற்றாதே" என்றெல்லாம் காரசாரமான தலைப்புக்களைத் தந்து, 'தினத்தந்தியில்' பிரசுரிக்கப் பட்டிருந்தது. அதை அப்படியே மொழி பெயர்த்து த. நா. கா. கமிட்டி நேருஜிக்கு அனுப்பியது. தினத்தந்தியில் வெளியான செய்திக்குப் பின்னர் காங்கிர காரியக்கமிட்டி கூடிய போது, "ஸ்ரீ சிவஞான கிராமணியார் பிரச்சினையை இந்தக் கமிட்டியில் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. தாங்கள் அவசியம் கலந்து கொண்டு உதவி செய்யுங்கள்" என்று நேருஜி இராஜாஜிக்குக் கடிதம் எழுதியிருந்தார். ஆனால், என்ன காரணத்தாலோ, காரியக் கமிட்டிக் கூட்டத்திற்கு இராஜாஜி செல்லவில்லை. தனது அபிப்பிராயத்தைக் கூட நேருஜிக்கு எழுதவில்லை. ஆம்; என்னைக் கைவிட்டு விட்டார். அதனால், தமிழரசுக் கழகப் பிரச்சினையைத் தமிழ்நாடு காங்கிரசிடமே விட்டு விடலாம் என்று காரியக்கமிட்டி முடிவெடுத்தது. ஆம்; ஆடு கசாப்புக்காரனிடமே ஒப்புவிக்கப்பட்டது. அதன் பின்னர் 20.7.1954 தேதியிட்டுத் தமிழ்நாடு காங்கிர செயலாளர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களிடமிருந்து எனக்கு வந்த கடிதத்திலே "15 நாட்களுக்குள் தமிழரசுக் கழகத்திலிருந்து தாங்கள் ராஜினாமா செய்ய வேண்டும். தவறினால் காங்கிர தாபனத்திலிருந்து விலக்கப்படுவீர்கள்" என்று குறிப்பிட்டிருந்தது.

காங்கிர மேலிடத்தின் அனுமதியைப் பெற்றே தமிழ்நாடு காங்கிர இந்த முடிவை மேற்கொண்டது என்றும் திரு. ஆர். வி. தம் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். பின்னர், நானும் தமிழரசுக் கழகத் தோழர்களும் காங்கிரசிலிருந்து தமிழரசுக் கழகத்தின் தீர்மானப்படி வெளியேறியது நாடறிந்த நிகழ்ச்சியாகும்.

காங்கிரசிலிருந்து வெளியேறி விடுவதென்று தமிழரசுக் கழகம் எடுத்த தீர்மானத்தின் ஆங்கில நகலை எனது கையெழுத்துடன் நேருஜிக்கு அனுப்பி வைத்தேன். அவர், "தமிழரசுக் கழகம் எடுத்த துரதிருஷ்டமான முடிவு எனக்குக் கிடைத்தது" என்று மட்டுமே குறிப்பிட்டு பதில் எழுதினார். "தமிழரசுக் கழகத்தார் அனுப்பிய ராஜினாமாக்களை ஏற்று பதில் எழுத வேண்டாம். மேற்கொண்டு அவர்கள் எப்படி நடக்கிறார்கள் என்பதைக் கண்காணித்து வாருங்கள்" என்று நேருஜி த. நா. க. கா.வுக்கு எழுதியதாகக் கேள்விப்பட்டேன். பிரதமர் நேருஜி என்பால் காட்டிய பேரன்பு காரணமாக ஒன்றரையாண்டுகாலம் நான் காங்சிரசில் நீடித்திருக்க அவகாசம் கிடைத்தது. (ம.பொ.சி. 'நேருஜி என் ஆசன்' பக். 93 முதல் 100 வானதி பதிப்பகம், சென்னை – 17)

சென்னை நகர் பிரச்சினை 1953 சனவரி முதல் 1953 மார்சு வரை மட்டுமே. இந்தக் காலக்கட்டத்தில் ம.பொ.சி.க்கும் தமிழ்நாடு காங்கிர கமிட்டிக்கும் சுமூக உறவே இல்லை என்பதை அவரே எழுதியுள்ளார். தனக்குப் பெருமை கிடைக்க வேண்டும் என்பதற்காக எல்லார் மீதும் வீண்பழி சுமத்தி 'எனது போராட்டத்தில்' எழுதியுள்ளார்.

அவருடைய ஆட்சிக்காலத்திலே தமிழ் மாகாணம் அமைந்தது. குமரி மாவட்டமும் செங்கோட்டை வட்டமும் கேரளத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுத் தமிழகத்தோடு சேர்க்கப்பட்டன. தணிகை வட்டமும் ஆந்திரத்திடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டுத், தமிழகத்துடன் இணைக்கப்பட்டது. சென்னை நகரம் தமிழகத்திற்கே உரியதாக்கப் பெற்றது. இவ்வளவுக்கும் பிரதமர் நேருஜிக்கு என்பாலிருந்த அன்பும் காரணமாக இருந்தது என்பதனைத் தமிழ் மக்களுக்கு நான் நினைவூட்ட வேண்டும். ம.பொ.சி. ஒருவருக்காகத்தான் நேருஜி எல்லாம் செய்தாராம். அப்படியானால் தேவிகுளம் பீர்மேடு ஏன் கொடுக்கப்படவில்லையாம். (மேற்கண்ட நூல் பக். 101)

1954 ஜனவரி 17இல் தமிழரசுக் கழகத்தின் சார்பில் ம.பொ.சி. தலைமையில் நடைபெற்ற தமிழர் திருநாள் விழாவில் கலந்து கொண்டு பேசிய நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம் "சென்னையைக் காத்தது ம.பொ.சி. என்று சிலர் நினைக்கிறார்கள். அது வெறும் மாயை. இராஜாஜிதான் சென்னையைக் காத்தார்" என்று பேசினார். (ம.பொ.சி. 'நானறிந்த இராஜாஜி' பக். 325)

சென்னை மாநகராட்சியின் சிறப்புக் கூட்டத்தில் தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் என்று நான் பேசினேன். வேடிக்கை பார்க்கப் பெரியக்கூட்டம் கூடியது என்பதெல்லாம் சுத்த பொய். இன்றைக்கும் மாநகராட்சி தீர்மானப் புத்தகத்தில் அந்தச் சொற்பொழிவு உள்ளது. "இந்த மாமன்றம் பிரதமர் நேரு அவர்கள் 19.01.1953இல் நாடாளுமன்றத்தில் தெலுங்கு பேசும் பகுதியைத் தனி ஆந்திர மாநிலமாக உருவாக்கப்படும் அதில் சென்னை இடம் பெறாது என்று அறிவித்ததற்கு வரவேற்பைத் தெரிவித்துக் கொள்கிறது. சென்னை தமிழ்நாட்டுக்குச் சொந்தமானது. சென்னை தற்காலிகத் தலைநகரமாகக்கூட ஆந்திராவுக்கு இங்கு இருக்கக்கூடாது. அது இரு மாநில மக்களின் உறவுகளைப் பாதிக்கும் என்று சென்னையில் ஆந்திரா தற்காலிகத் தலைநகர் வேண்டும் என்பதற்கு இம்மாமன்றம் எதிர்ப்புத் தெரிவிக்கின்றது." அந்தக்கூட்டம் 03.01.1953இல் நடைபெற்றது. வேண்டுமென்றே ம.பொ.சி. எனது போராட்டத்தில் கூட்டத் தேதியை எழுதவில்லை. ஏனென்றால் இவருடைய தீர்மானத்தால் நேரு மனமாற்றம் அடைந்தார் என்று எல்லோரும் நம்ப வேண்டும் என்பதற்காகவே நேரு நாடாளுமன்றத்தில் வாஞ்சுக் குழு அறிக்கையை வைத்துப் பேசியபோது 25.03.1953இல் ஆந்திராவின் தலைநகர், ஆந்திர எல்லைக்குள் அமையும் என்று அறிவித்தார். இந்த இடைப்பட்ட மூன்று மாதத்தில் சென்னை தலைநகர் தொடர்பாக ஏராளமான நிகழ்வுகள் தமிழகம் முழுவதும் நடைபெற்றது. அனைத்துக் கட்சித்

தலைவர்கள் செய்த முயற்சியை எல்லாம் ம.பொ.சி. தன்னுடைய சொந்த முயற்சியாக எழுதிக் கொண்டார். சென்னை தலைநகருக்காக ம.பொ.சி.யின் தமிழகரசுக் கழகமோ, இந்தியத் தேசிய காங்கிரசோ, எந்தப் போராட்டத்தையும் நடத்தவில்லை. திராவிடர் கழகம் மட்டுமே தனித்து நின்றுப் போராடியது.

திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் குத்தூசி குருசாமியின் தலைமையில் 5000த்திற்கும் மேற்பட்ட திராவிடர் கழகத்தினர் 22.02.1953 அன்று சென்னைக்கு வந்த குடியரசுத் தலைவர் இராஜேந்திரப்பிரசாதுக்குக் கருப்புக்கொடி காட்டினர். குடி அரசுத் தலைவர் கவர்னர் மாளிகைக்குச் சென்றபின் தமிழர்கள் பொறுமை காக்கவேண்டும் என்று அறிவித்தார். அதே நாளில் 22.02.1953 தமிழகம் முழுவதும் திராவிட கழகத்தினர் ஊர்வலம் மற்றும் பொதுக்கூட்டம் நடத்தி வாஞ்சு அறிக்கைக்குக் கண்டனம் தெரிவித்தனர். ஆந்திராவின் தற்காலிகத் தலைநகராகக் கூட சென்னையில் இடம் தரக்கூடாது என்று போராட்டம் நடத்தினர்.

தமிழகத்தின் வடக்கெல்லைப் போராட்டம் மற்றும் தெற்கெல்லைப் போராட்டத்தில் தமிழகத்திற்குத் துரோகம் இழைத்த இந்தியப் பொதுவுடைமைக் கட்சியினர் சென்னை தமிழ்நாட்டுக்கே சொந்தம் என்பதில் உறுதியாக இருந்தனர். ஆந்திராவில் இருந்த பொதுவுடைமைக் கட்சியினர் ஆந்திராவில் சென்னையைத் தமிழ்நாட்டுக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்று பரப்புரைச் செய்தனர். தமிழக முதலமைச்சர் இராஜாஜியின் உறுதிப்பாடும், இந்தியத் தேசிய காங்கிரசின் தமிழ்நாடு கமிட்டி சென்னை தலைநகர் பிரச்சனையில் தமிழ்நாட்டுக்கு ஆதரவாக உறுதியாக இருந்தது. அனைவருடைய முயற்சியால் தான் சென்னை தமிழ்நாட்டுக்கே கிடைத்தது.

# திப்பு சுல்தானுக்கும் சிருங்கேரி சங்சுரமடத்திற்கும் இருந்த உறவுகள் - ஓர் ஆய்வு

வாலாசா வல்லவன்

1782 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது மைசூர் போரில் ஹைதர் அலி இறந்து விடவே அவருடைய மகன் திப்பு சுல்தான் போருக்கு பொறுப்பேற்று போரில் வென்று ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டான்.

திப்பு சுல்தானின் ஆட்சிக்குட்பட்ட ஸ்ரீரங்கப் பட்டிணத்தில் அதுவும் திப்புவின் அரண்மனைக்கு 300 அடி தொலைவில் தான் ஆதி சங்கரனால் தோற்றுவிக்கப்பட்ட சிருங்கேரி சாரதா பீடம் என் அழைக்கப்படும் சங்கர மடம் உள்ளது.

திப்பு சுல்தானும் தன் தந்தை அய்தர் அலியைப் போலவே சிருங்கேரி சங்கர மடத்தினிடம் நல்லுறவு கொண்டிருந்தார் என்று அவர் சங்கர மடத்திற்கு எழுதிய கடிதங்களிலிருந்தும், சங்கர மடத்திலிருந்து திப்புவிற்கு எழுதப்பட்ட பதில் கடிதங்களிலிருந்தும் அறிந்து கொள்ள முடிகிறது.

திப்பு 1790 முதல் 1799ல் இறக்கும் வரை சிருங்கேரி சங்கர மடத்திற்கு இருபத்தியொரு கடிதங்கள் எழுதியிருந்தார். அவை அனைத்தும் பழைய கன்னட மொழியிலானது. அக்கடிதங்கள் அனைத்தும் இன்றும் சிருங்கேரி சங்கர மடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

சங்கர மடத்திலிருந்து திப்புவிற்கு எழுதப்பட்ட பதில் கடிதங்கள் அனைத்தும் சம கிருத மொழியில் எழுதப்பட்டிருந்தது. திப்புவிற்கு ஓரளவு சம கிருதம் தெரியும் எனினும் தன்னுடைய பார்ப்பன அமைச்சர்கள் மூலம் திப்பு அவற்றைப் படித்து அறிந்து கொண்டு சங்கர மடத்திற்கு தேவைப்பட்டபோதெல்லாம் உதவிகளைச் செய்துள்ளார். இந்தக் கடிதங்கள் முழுவதும் மைசூர் ஆவணக் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

திப்பு சங்கர மடத்திற்குக் கடிதம் எழுதும் போது ஒவ்வொரு முறையும் மிகுந்த மரியாதை கொடுத்து பணிவான வணக்கத்துடன், எழுதுவார். திப்பு 1790இல் சிருங்கேரி சங்கராச்சாரிக்கு எழுதிய முதல் கடிதத்தில் ஸ்ரீமத் பரமாம்ச பரிவர ஆச்சாரிய சிருங்கேரி சச்சிதானந்த சாமிகளுக்குத் திப்புவின் வணக்கங்கள் என்றுதான் தொடங்கியுள்ளார். தன் நாட்டு மக்களைப் பாதுகாக்க ஈசுவரனை வேண்டும்படி அக்கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். 1791இல் மராட்டிய தளபதி பரசுராமபாகு என்பவன் தலைமையில் சிருங்கேரி சங்கரமடம் கொள்ளை அடிக்கப்பட்டது. அப்போதே சுமார் 60 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் களவாடப்பட்டன. அத்தோடு நில்லாமல் சாரதா தேவியின் சிலையையும் புரட்டிப் போட்டான் அவன். அங்கிருந்த பார்ப்பனக் குருக்களையும் கொன்றான் அந்த மராட்டிய தளபதி. கார்கிலாவுக்கு ஓடி ஒளிந்து கொள்ள வேண்டிய நிலை சங்கராச்சாரிக்கு அன்று ஏற்பட்டது. கார்கிலாவிலிருந்து தமக்கு உதவும்படி திப்புவிற்குக் கடிதம் கொடுத்தனுப்பியிருந்தார் சிருங்கேரி சங்கராச்சாரி. (சிருங்கேரி சங்கர மட கடித எண்கள் 54,55, New History of marathas by sardesi G.S. Volume III P.180) அக்கடிதத்திற்கு திப்பு பதில் கடிதம் எழுதி உள்ளார் அவை வருமாறு.

புனித இடங்களை அழிப்பவர்கள் தங்களது தீய செயல்களுக்கான பலனை அனுபவிப்பார்கள். குருவுக்குத் தீமை செய்பவர்களுக்கு அழிவே உண்டாகும். சாரதா பீடம் மீண்டும் அமைய 200 ரஹாடி ரொக்கமாகவும், 200 ரஹாடி பொருட்களாகவும் 200 ரஹாடி தானியமாகவும் வழங்கியுள்ளேன்.

மேலும் நிதி தேவையெனில் கொடுக்கும் படி கிராம நிர்வாக அலுவலர்க்கு உத்திரவிட்டுள்ளேன் என திப்பு சிருங்கேரி சங்கராச்சாரிக்கு எழுதி உள்ளார். (திப்புவின் கடித எண் 47)

சிருங்கேரி சங்கராச்சாரி மீண்டும் உதவி கேட்டு திப்புவிற்குக் கடிதம் கொடுத்து அனுப்பியிருந்தார். அதைப் பெற்றுக் கொண்ட திப்பு, சுவாமிகள் உங்கள் கடிதம் வேலூர் வெங்கட்ராம ஜோய் மற்றும் அகோபில சா திரிகள் மூலம் கிடைத்தது. செய்தியை தெரிந்து கொண்டேன். உங்களுக்காகப் பல்லக்கு ஒன்று அனுப்பி உள்ளேன். உங்களுக்கு மேலும் நிதி உதவி அளிக்கும் படி நகர நிர்வாகத்திற்கு உத்திரவிட்டுள்ளேன் என எழுதியுள்ளார். (திப்புவின் கடித எண்48)

நரசிம்ம சா திரி மூலம் சங்கர மடத்திலிருந்து திப்புவிற்கு மீண்டும் கடிதம் கொடுத்தனுப்பப்பட்டது. அக்கடிதத்தை பெற்றுக் கொண்ட திப்பு, 200 ரஹாடி நெல் மற்றும் சாரதா தேவிக்கு அணிவிக்க விலையுயர்ந்த பட்டு புடவையையும் மேலாடையையும், சங்கராச்சாரியின் சொந்த பயன்பாட்டிற்கு விலையுயர்ந்த இரண்டு சால்வைகளையும் அசாப் என்பவர் மூலம் அனுப்பி வைத்துள்ளார். (திப்புவின் கடித எண் 49) சிருங்கேரி சங்கராச்சாரி மீண்டும் உதவி கேட்டுத் திப்புவிற்குக்

கடிதம் எழுதி உள்ளார். அக்கடிதத்தை பெற்றுக் கொண்ட திப்பு, நாராயணன் என்பவர் மூலம் யானை ஒன்றையும் புதிதாக வெளியிட்ட நாணயங்கள் பலவற்றையும் கொடுத்தனுப்பி உள்ளார். அவை வருமாறு:

| நாணயத்தின் பெயர் | எண்ணிக்கை மதிப்பு | ரூபாயில் |
|---|---|---|
| 1. ஹைதர் மகாரி | 50 | 100 |
| 2. அபிடி | 100 | 50 |
| 3. பாகபி | 200 | 500 |
| 4. பாகேநலுக்கு | .... | 700 |
| 5. பொடைக்கி நாசி அகமதி | 5 | 80 |
| 6. சிக்கர் | 10 | 80 |
| 7. பீமாரி | 10 | 40 |
| 8. குடபாகே | 3 | 300 |

இதனுடன் கூடுதலாக ரூ.500 சேர்த்து அனுப்பி வைத்தார். அன்னை சாரதா தேவியின் கோவிலை விரைவில் கட்டி முடித்துக் குடமுழுக்கு நடத்த வேண்டிக் கொண்டார். (திப்புவின் கடித எண் 50) அதே கடிதத்தில் திப்பு மேலும் எழுதி உள்ளதாவது: 1000 பார்ப்பனர்களை அழைத்து 40 நாட்களுக்கு சா திரா சண்டி ஜபம் செய்ய வேண்டிக் கொண்டார். இதற்கான முழு செலவையும் தாமே ஏற்றுக் கொள்வதாக எழுதியுள்ளார். நாட்டின் எதிரிகளை அழிக்க இந்த ஜபம் பயன்படுமென திப்பு சங்கராச்சாரிக்கு எழுதி உள்ளார். கடித எண்கள் 51, 52, 53 ஆகியவற்றிலும் சா திரா சண்டி ஜபம் நல்ல முறையில் நடத்துவது குறித்த ஏற்பாடுகளைப் பற்றியே எழுதி உள்ளார்.

கடித எண் 54 இல் சாரதா தேவிக்கு மூன்று கால பூசையும் தவறாமல் நடத்தும்படி வேண்டிக் கொண்டுள்ளார். இந்தக் கடிதம் எழுதிய போதும் கங்கராச்சாரி பயணம் செய்ய வேலைபாடுகள் மிகுந்த பல்லக்கு ஒன்றை அனுப்பி உள்ளார்.

சிருங்கேரி சங்கராச்சாரியின் வேண்டுகோளுக்கிணங்கி அரசுப் பணத்தைக் கையாடல் செய்து சிறையில் அடைத்து வைத்திருந்த இரண்டு பார்ப்பனர்களை விடுதலைச் செய்தார். மேலும்,

திப்புவின் ஆட்சியில் நாற்பத்து அய்ந்து ஆயிரம் முதல் அய்ம்பதாயிரம் வரை மிகப்பெரிய எண்ணிக்கையிலான பார்ப்பனர்கள் அரசாங்க வேலைகளில் இருந்தனர். இவர்கள் தவறு செய்தால் தண்டிக்கும் பொறுப்பு அரசிடமிருந்ததை மாற்றி சங்கர மடத்தினிடமே அப்பொறுப்பையும் ஒப்படைத்தார். இந்து சா திரத்தில் என்ன தண்டனை விதிக்கப்பட்டுள்ளதோ அதே தண்டனையை நீங்களே ஒரு அலுவலரை அமர்த்தி நிறைவேற்றும்படி சங்கராச்சாரியை திப்பு கேட்டுக் கொண்டார். (திப்புவின் கடித எண் 58) மேலே கண்ட கடிதத்திலேயே சங்காராச்சாரிக்கு வெள்ளை குதிரை ஒன்று அனுப்பி உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சிருங்கேரி மடத்தின் சாரதா தேவி கோவிலின் திருவிழாவிற்காக திப்பு தங்கத் தகட்டாலும், வெள்ளிக்குழிழ்களாலும் செய்யப்பட்ட பல்லக்கு ஒன்றை அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார் என்பதை அவருடைய கடிதம் வாயிலாக அறிய முடிகிறது. (திப்புவின் கடித எண் 59)

திப்பு சிருங்கேரி சங்கர மடத்திற்கு பதிகலிங்கம் ஒன்றை விலையுயர்ந்த கற்களால் செய்து கொடுத்துள்ளார். (Tippu Sultan a Fanatic P. 84) மேலே கண்ட ஆவணங்களின் மூலம் திப்புவிற்கும் சிருங்கேரி மடத்திற்கும் இருந்த நல்லுறவை அறிந்து கொள்ள முடிகிறது. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். இந்து – மு லிம் ஒற்றுமைக்குப் பாலமாக இருந்து நேர்மையாக ஆட்சி செய்துள்ளார். மதத்திற்கு அரச செலவு செய்த மொத்த தொகையில் 90% இந்து கோவில்களுக்கும் 10% இசுலாமிய மசூதிகளுக்கும் மக்கள் தொகை விகிதாச்சார அடிப்படையில் செலவு செய்துள்ளார். திப்புவிற்கும் சிருங்கேரி சங்கர மடத்திற்கும் இருந்த தொடர்புகளை மட்டுமே இங்குச் சுருக்கமாக எழுதி உள்ளேன். திப்புவின் மற்ற பண்புகளும் மிகச்சிறந்தவை. குறிப்பாக உழவர்களுக்கே நிலம் சொந்தம் என்பதை நடைமுறைபடுத்தியவர். எல்லா மதத்தினரையும் சமமாக நடத்திய பண்பாளர். மிகச் சிறந்த கல்வி மான். அவர் மறைந்தது 4–5–1799 இல்! அவர் மறைந்த இருநூறாவது ஆண்டில் அவரை நினைவு கூர்வோம்.

**வாழ்வ திப்புவின் புகழ்!**

குறிப்பு: இக்கட்டுரை எழுத பயன்பட்ட நூல்கள்:

1. Tippu Sultan a Fanatic? by V. JALAJA SAKTHI - DASAN.

2. Sringeri Sovemir 1968.

3. The Sword of Tippu Sultan by. BHAGWANGI DWANI

4. History of Sringeri by A.K.SASTRY

5. Secret Correspondence of Tippu Sultan by. KABIR KAUSAR

6. திப்பு விடுதலைப் போரின் முன்னோடி தொகுப்பு Dr. வெ.ஜீவானந்தம்

## 11. கோடியில் பா.ச.க. பயிற்சிப் பள்ளி

பா.ச.க.வினருக்கு பயிற்சி அளிக்க, மும்பை அருகே ரூ11 கோடியில் பயிற்சிப் பள்ளியை அக்கட்சி அமைந்துள்ளது.

இப்பள்ளியில், மகாராஷ்டிர மாநில பா.ச.க.வினருக்கு மட்டுமே பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இங்கு, விடுதி, தனி பங்களா வசதிகள் உள்பட அனைத்து வசதிகளும் உள்ளன.

பதினைந்து ஏக்கர் பரப்பளவில் அனைத்து வசதிகளும் உள்ளன. ராம்போ மாளிகை அகாதெமி என்று பெயரிடப்பட்டுள்ளது. பணிகள் முடிந்து விரைவில் இப்பள்ளி செயல்பட உள்ளது.

பா.ச.க.வினருக்கு அமைப்பு ரீதியான பயிற்சி உள்பட பல்வேறு பிரிவுகளிலும் பயிற்சி அளிக்கப்படும். உதாரணமாக, தலைவர், செயலர், இணைச் செயலர் போன்றவர்கள் பதவிகளில் நியமிக்கப்பட்டால் எவ்வாறு செயல்பட வேண்டும். கட்சியின் வளர்ச்சிக்கு எந்த வகையான அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும், பொதுமக்களிடம் கட்சியின் புகழை எவ்வாறு பரப்ப வேண்டும் என்பது உள்பட பல்வேறு நிலைகளில் பயிற்சி அளிக்கப்படும்.

**–தினமணி, டிச.26,1999**

## சமதர்மம்

“சமதர்மம் என்கின்ற வார்த்தைக்குச் சமூகத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் மக்கள் உயர்வு தாழ்வு இல்லாமல் சமத்துவமாய் (அபேதமாய்) வாழ வேண்டும் என்பதையே பொருளாகக் கொள்கிறேன்.”

## பண்டிகைகள்

ஆரிய பண்டிகைகளின் அடிப்படைக் காரணமெல்லாம் திராவிடர்களை ஆரியர்கள் அடக்கினது. கொன்றது, இழிவுபடுத்தியதுதான். அதுவும் சாதாரண மக்களைக் கடவுள் அவதாரம் என அழைத்து நமது அரசர்களை அசுரர் – சூத்திரர் என்று இழிவுபடுத்தி ஏற்படுத்தப்பட்ட பண்டிகைகள் **பெரியார் கணினி, பக். 989**

# பகுதி 7
# பெரியார் தமிழினப் பகைவரா?

_வாலாசா வல்லவன்

## 10 தமிழர்களை சுட்டுக் கொன்றவர் இராசாசி அதை ஏன் என்று கேட்காதவர் ம.பொ.சி.

1949–இல் வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டது. அதன் தலைவராகச் சித்தூர் வழக்கறிஞர் திரு. எ . ரங்கநாத முதலியாரும் துணைத் தலைவராகத் திரு. வி.கே. சடகோபாலச்சாரியாரும் செயலாளராகத் திரு. பி. கண்ணப்பமுதலியாரும் உறுப்பினர்களாக மங்கலங்கிழார், கே. விநாயகம், கோல்டன், நா. சுப்பிரமணியம் உட்பட 20 பேரும் இருந்தனர். (தமிழக வடக்கு எல்லைப் போராட்டமும் தணிகை மீட்சியும் பக். 38 கோல்டன் நா. சுப்பிரமணியம்)

இந்திய அரசு 1946–இல் ஆந்திர மாநிலத்தைப் பிரித்துக் கொடுக்க சென்னை மாகாண சர்க்காருக்கு உத்தரவிட்டது. அன்றைய முதலமைச்சர் பி. குமாரசாமி ராஜா அவர்கள் தலைமையில் பிரிவினைக் கமிட்டி அமைக்கப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் சித்தூர் வழக்கறிஞர் ரங்கநாத முதலியார் தலைமையில் மங்கலங்கிழார், கே. விநாயகம், சடகோபாலாச்சாரியார் மற்றும் வடக்கெல்லை குழுவைச் சார்ந்த நாங்களும் திரு. டி.டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் பி. குமாரசாமி ராஜா அவர்களையும், மாண்புமிகு பக்தவச்சலம் அவர்களையும் தனித்தனியாகச் சந்தித்து, சித்தூர் மாவட்டத்துத் தமிழ்ப்பகுதிகள் தற்போது அமைக்கப்படவிருக்கும் ஆந்திர மாநிலத்தோடு இணைக்கப்படக்கூடாது என்றும், குறிப்பாகச் சித்தூர், புத்தூர், திருத்தணி தாலுக்காக்களைத் தாய் தமிழகத்துடன் இணைக்கவேண்டுமென்றும், மற்றத் தாலுக்காக்களைப் பிரிப்பதற்கு எல்லைக் கமிஷன் ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் இக்குழுவின் சார்பில் கேட்டுக் கொண்டோம்.

(மேற்படி நூல் பக்.39) ஆனால் அப்போது ஆந்திர மாநிலப் பிரிவினையை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1952 பொதுத் தேர்தலில் வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவின் சார்பில் திரு. இ.எ . சுப்பிரமணிய முதலியார் வேட்பாளராக நிறுத்தப்பட்டார். இத்தேர்தலில் வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவில் இருந்த ஆசிரியர் மங்கலங்கிழார், எ . ரங்கநாத முதலியார், டி.எம். திருமலைப்பிள்ளை, இ.எ . தியாகராஜன் ஆகியோருடன் இந்நூலாசிரியர் திருத்தணி கோல்டன் நா. சுப்பிரமணியமும் வடக்கெல்லை பாதுகாப்புக் குழுவின் வேட்பாளரை ஆதரித்து தீவிரப் பிரச்சாரம் செய்தனர். திருத்தணி கே. விநாயகம் இத்தேர்தலில் செங்கல்பட்டு தொகுதி பிராஜா வேட்பாளராகப் போட்டியிட்டபோதிலும் திருத்தணிக்கு வந்து வடக்கெல்லை வேட்பாளருக்கு ஆதரவாகத் தேர்தல் பிரச்சாரம் செய்தார். (மேற்கண்ட நூல் பக். 41) ஆனால் காங்கிர கட்சியின் வேட்பாளர் வி.கே. வரதாச்சாரியார் வெற்றிபெற்றார். இத்தேர்தலில் ம.பொ.சி. காங்கிரசை ஆதரித்துத் தீவிரப் பிரச்சாரம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1952 ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் தேதி வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டிக்கூட்டம் எ . ரங்கநாத முதலியார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிரதமர் நேரு டிசம்பர் 19 ஆம் தேதி பாராளுமன்றத்தில் தகராறுக்கு இடமில்லாத 12 மாவட்டங்களைக் கொண்டு ஆந்திரா அமையும் என்று அறிவித்ததைப் பரிசீலனைச் செய்தனர். சித்தூர் மாவட்டம் தகராறுக்கு இடமில்லாத தெலுங்குப் பகுதியென நேரு அறிவித்த கருத்தைக் குறித்து இக்கூட்டம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

தமிழ்நாடு வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு 17.01.1953–இல் கே. விநாயகம் தலைமையில் நீதிபதி வாஞ்சுவைச் சந்தித்து மனு ஒன்றை அளித்தனர். மங்கலங்கிழாரும், திரு. ரங்கநாத முதலியாரும், திரு. சபாபதி தேசிகரும் மனுவைத் தயாரித்தனர். திருப்பதி வரை தமிழகப் பகுதிகள் என்பதை இலக்கியச் சான்றுகளுடன் விளக்கினர். சித்தூர் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண எல்லைக் கமிஷன் அமைக்க மத்தியஅரசுக்குப் பரிந்துரைக்கப் போவதாக இக்குழுவினரிடம் நீதிபதி வாஞ்சு தெரிவித்துள்ளார். (மேற்கண்ட நூல் பக். 49)

சித்தூர் மாவட்டத் தமிழர் மாநாடு 09.02.1953–இல் நகரியில் நடைபெற்றது. மங்கலங்கிழார்

வரவேற்புரையாற்றினார். பன்மொழிப் புலவர் தெ.பொ.மீ. சிறப்புரையாற்றினார். ம.பொ.சி. தலைமையுரையாற்றினார். திருத்தணி கே. விநாயகம் M.L.A. தமிழக நிலப்படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார். இம்மாநாட்டுக்கு ஈ.வெ.ரா. வாழ்த்துச் செய்தி அனுப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது. (மேற்கண்ட நூல் பக். 55)

தமிழ்நாடு வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டி செயற்குழுக் கூட்டம் 1953 மார்ச்சு 25 மாலை திருத்தணியில் கே. விநாயகம் தலைமையில் நடைபெற்றது. சித்தூர் மாவட்டம் ''தகராறில்லாத தெலுங்குப் பிரதேசம்'' என்று ஒரு தலைப்பட்சமாக அபிப்பிராயங்கள் கூறி அதை ஆந்திர மாநிலத்தோடு சேர்ப்பது என்று மத்திய சர்க்கார் அறிக்கை விட்டிருப்பதைத் தமிழக வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டி பலமாக ஆட்சேபிக்கிறது.

மேலும் போராட்டத்தைத் தீவிரப்படுத்த, சாத்வீக முறையில் நேரடி நடவடிக்கையில் ஈடுபட, திருவாளர்கள் கே. விநாயகம், ஆசிரியர் மங்கலங்கிழார், திரு. என். சுப்பிரமணியம், திரு. என்.ஏ. ரஷீது, திரு. ரங்கநாத முதலியார், திரு. டி.எம். திருமலைப்பிள்ளை, திரு. இ.எ . தியாகராஜன் ஆகியோரைக் கொண்ட தனிக்குழு அமைக்கப்பட்டது.

இறுதி வெற்றி காணும் வரை வடக்கெல்லைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த கே.விநாயகம் M.L.A அவர்களிடம் முழுப் பொறுப்பும் அளிக்கப்பட்டது. (மேற்கண்ட நூல் பக். 59)

03.04.1953 அன்று திருத்தணி வன்னியகுல சத்திரத்தில் கூடிய கூட்டத்தில்தான் வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவினர் ம.பொ.சியை அதன் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். (மேற்கண்ட நூல் பக். 61)

திருத்தணியில் கண்டன ஆர்பாட்டங்கள் பலமாக இருந்தன. தெலுங்கர் கடைகள் தவிர மற்றக்கடைகள் மூடப்பட்டன. சுமார் 2000–த்திற்கு மேற்பட்ட மக்கள் நான்கு நான்கு பேராக அணிவகுத்துக் கருப்புக் கொடிகளைக் கையிலேந்தி ஊர்வலமாகச் சென்றனர். கடையடைப்பு ஆர்ப்பாட்டங்களையும், மறுநாள் தாசில்தார் அலுவலகத்தின் முன்பு நடைபெற்ற மறியலையும் மேற்பார்வையிடத் தலைவர் ம.பொ.சி. அவர்கள் 9–ஆம் தேதி காலையில் திருத்தணிகை வந்துவிட்டார்.

அன்று மாலை வடக்கெல்லைப் பாதுகாப்புக்குழுச் செயலாளர் என். சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசிய ம.பொ.சி. ''சித்தூர் தமிழ் மக்கள் சாத்வீக முறையில் ஆந்திர மக்களை விரோதிக்காத வகையில் தங்கள் போராட்டத்தை நடத்தவேண்டுமென்று'' கூறினார். (மேற்கண்ட நூல் பக். 64)

10.04.1953 அன்று திரு. கே. விநாயகம் தலைமையில் மறியல் நடைபெற்றது. திரு. ம.பொ.சி. அவர்கள் மறியல் களத்திலிருந்து நடவடிக்கைகளைக் கவனித்து வந்தார். (மேற்கண்ட நூல் பக். 65) ம.பொ.சி. மறியலில் கலந்து கொள்ளவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இம்மறியல் தொடர்ந்து ஏப்ரல் 25–ஆம் தேதிவரை நடைபெற்றது. கே. விநாயகம் (சட்டமன்ற உறுப்பினர்) திருத்தணிகையிலே தங்கி மறியலைப் பொறுப்பேற்று நடத்தி வந்தார். ம.பொ.சி. அடிக்கடி திருத்தணிக்கு வந்து நிலைமையைக் கவனித்தார். (மேற்கண்ட நூல் பக். 66)

1952–ஆம் ஆண்டு நடந்தப் பொதுத் தேர்தலின் போது இருந்த நிலை இப்போது முற்றிலும் மாறிவிட்டது. தமிழர் அனைவரும் இப்போது ஒரே அளவில் ஒன்றுபட்டனர். இப்பெருமை திரு. கே. விநாயகம் அவர்களையே சாரும். (மேற்கண்ட நூல் பக். 68)

திருத்தணி பஞ்சாயத்துத் தேர்தலை ஒட்டி நிறுத்தப்பட்ட வடக்கெல்லைப்போர் மீண்டும் மே 12 முதல் நடத்த முடிவெடுக்கப்பட்டது. மேற்படி போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தும் பொறுப்பு தளபதி கே. விநாயகம் M.L.Aஅவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (மேற்கண்ட நூல் பக். 72)

ம.பொ.சி. போராட்டத்தைப் பார்வையிட காரில் திருத்தணிகை வந்தார். தணிகையில் அரைமணி நேரம் தங்கியிருந்து விட்டு உடனே, புத்தூர் சென்று, அங்கு நடைபெற்ற மறியலைப் பார்வையிட்டார். வெயில் கடுமையாக இருந்ததோடு அனல் காற்றும் வீசியதால் சித்தூர் செல்லும் முயற்சியைக் கைவிட்டுப் பிற்பகல் சென்னைத் திரும்பினார். (பக். 74)

மே 14–ஆம் தேதி கே. விநாயகம் தலைமையில் திருத்தணியில் நீதிமன்ற மறியல் செய்யச் சென்றனர். இரும்புத் தொப்பிக் காவல் துறையினர் ஏராளமானோர் குவிக்கப்படடிருந்தனர். கே. விநயாகம் அவர்களைத் தள்ளிவிட்டு உள்ளே சென்று நீதிபதியின் முன் ''சித்தூர், தமிழர் பகுதிகளுக்கு நீதி கிடைக்கும் வரை நீதி மன்றத்தை நடத்தக் கூடாது என்று தெரிவித்தார். போலீசார் விநாயகத்தை குண்டுக் கட்டாக வெளியே தூக்கி வந்தனர். விநாயகத்திற்குக் காலில் அடிப்பட்டது. அன்று நடைபெற்ற லத்தி சார்ஜில் சம்பந்தம் என்ற தொண்டருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. (இவர் அப்பகுதி தி.மு.க. செயலாளராவார்)

மே 18–ஆம் தேதி புத்தூரில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆந்திரர்கள் கூட்டம் நடத்தவிடாமல் தகராறு செய்தனர். புத்தூர் மாவட்டக் காவல்துறை சூப்பிரண்டென்ட் ஒரு கன்னடர். அவர்தான் தமிழர்களைப் பத்திரமாகக் காவல் துறை வண்டியில் கூட்டம் நடத்தச் சென்றவர்களைக் காப்பாற்றி ஏற்றி அனுப்பினார். (மேற்கண்ட நூல் பக். 82)

அன்றைய முதல்வர் இராசாசி இக்கிளர்ச்சியை நிறுத்த விரும்பி வேண்டுகோள் விடுத்தார். ம.பொ.சி.யையும் நேரில்

அழைத்து வடக்கெல்லைக் கிளர்ச்சி நீடிக்குமானால் அது இனச்சண்டையில் முடிந்துவிடும் என்று கூறினார்.

22.05.1953 அன்று வடக்கெல்லைப் பாதுகாப்புக்குழுக் கூடிப் போராட்டத்தைச் சென்னையில் நடத்த முடிவு செய்தது. (மேற்கண்ட நூல். பக். 83)

1953 ஜுன் 20–ஆம் தேதி 1000 தொண்டர்கள் திருத்தணியில் பம்பாய் (மும்பை) எக் பிர இரயிலைச் செல்ல விடாமல் தடுத்துத் தண்டவாளத்தில் அமர்ந்து விட்டனர். அவர்கள் முன்னெச்சரிக்கையாகத் தந்தி கம்பிகளையும் அறுத்து விட்டிருந்தனர். இந்தச்செய்தி இந்து நிருபர் தொலைப்பேசியில் கூறியபொழுதுதான் ம.பொ.சிக்கே தெரியும். (ம.பொ.சி. எனது போராட்டம் பக்.654) ஆக ம.பொ.சி. இராசாசிக்குக் கட்டுப்பட்டுப் போராட்டத்தைத் தொடராமல் இருக்கிறார். இவரை நம்பக்கூடாது என்பதாலேயே வடக்கெல்லைப் போராட்டக் குழுவினர் ம.பொ.சிக்குத் தெரிவிக்காமலேயே இரயில் நிறுத்தப் போராட்டத்தை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருத்தணி சென்ற ம.பொ.சி. இரயில் மறியல் செய்த தொண்டர்களைப் பார்த்துக் கடுமையான குரலில் ‘‘இன்னும் வேறென்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள்?’’ என்று கேட்டார். (மேற்கண்ட நூல் பக். 90)

ம.பொ.சி.க்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு பக்கம் தன் குருநாதர் இராசாசி போராட்டம் நடத்தக் கூடாது என்கிறார். மறுபக்கம் தொண்டர்கள் போராட்டம் நடத்தியே தீரவேண்டும் என்று துடிப்போடு இருந்தனர். வடக்கெல்லைப் போராட்டக்குழு எங்கே தம் கையை விட்டு நழுவிப் போய்விடுமோ என்ற அச்சத்தில் மீண்டும் அடுத்தநாள் இரயில் நிறுத்தப் போராட்டத்தை அவரே நடத்தச் செய்தார். என்.ஏ. ரஷீத் (இவர் தி.மு.க.வைச் சேர்ந்தவர்) உட்பட ஒன்பது பேர் அரக்கோணம் சென்று ஒருவர் மாற்றி ஒருவராகப் புத்தூர் செல்வதற்குள் 9 முறை சங்கிலியைப் பிடித்து இழுத்து, இரயில் வண்டியை ஆங்காங்கே நின்று செல்லுமாறு செய்தனர். மறுநாள் நீதிமன்றத்தில் இவர்களுக்கு 15 நாள் சிறைத் தண்டனை கொடுக்கப்பட்டது.

அப்போது பிரதமராயிருந்த நேரு இரயிலை நிறுத்திப் போராட்டம் செய்பவர்கள் காட்டுமிராண்டிகள். இரயில் நிறுத்தம் சிறுபிள்ளைத்தனமானது. குழந்தைத்தனமானது. பைத்தியக்காரத்தனமானது என்று கண்டித்தார். (இச்செய்தி ம.பொ.சி. நூலிலோ, நா. சுப்பிரமணியம் நூலிலோ இடம்பெறவில்லை).

21.07.1953 அன்று துப்பாக்கிச்சூடு பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது சட்டமன்றத்தில் பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர். இருவர் கண்டனம் மட்டும் இங்கு பதிவு செய்துள்ளேன்.

தமிழர்களைக் காட்டுமிராண்டிகள், பைத்தியக்காரர்கள் என்று கூறிய நேருவுக்குப் பாடம் புகட்ட வேண்டுமென்று முடிவெடுத்த தி.மு.க.வினர் பத்து நாள்களுக்கு முன்பே அறிவிப்பு கொடுத்துவிட்டு 15.07.1953 தமிழகம் முழுவதும் அனைத்து இரயிலையும் சங்கிலி பிடித்து இழுத்துப் போராட்டங்கள் நடத்தினர். இச்செய்தியைத் தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினர் அ. கோவிந்தசாமி சட்டமன்றத்திலேயே பதிவு செய்துள்ளார். வடக்கெல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டு இரயில் நிறுத்தம் செய்தவர்களை நேரு கண்டித்ததால் நேருவுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் 15.07.1953 இரயில் நிறுத்தப் போராட்டம் நடைபெறும் என்று அறிவித்தது. அன்று தமிழகத்தில் 600 இடங்களில் இரயில் மறியல் நடைபெற்றது. தூத்துக்குடியிலும் கல்லக்குடியிலும் துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. அன்றே 6 பேர் காவல் துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். பலர் கை, கால்கள் இழந்தனர். பலருக்குத் தலையில் பலத்தக் காயம் ஏற்பட்டது. இராசாசி அரசின் இந்த வன்செயலைச் சட்டமன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மானம் மூலம் பலரும் கண்டித்தனர். 21.07.1953 அன்று தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் அ. கோவிந்தசாமி தம்முடைய கண்டனத்தைப் பதிவு செய்தார்.

‘‘கனம் சபாநாயகர் அவர்களே, டால்மியாபுரத்திலும், தூத்துக்குடியிலும் மக்கள் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்ச்சி சம்பந்தமாக விவாதத்திற்கு வந்திருக்கிற அவசரப் பிரேரேணையின் மீது பேசுகின்றபோது என் நெஞ்சம் குமுறுகிறது. மக்களின் உயிர்களைத் திரணமாக மதித்து, நாய்களைப் போல மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டுத் தெருவில் இழுத்தெறியப் படும் இந்த ராமராஜ்யத்தில் மனதிற்கு மிகவும் வேதனையைத் தரக்கூடிய இப்படிப்பட்ட செய்கையைத் தவிர வேறு எதையும் நாம் காணமுடியாது தான். வெள்ளைக்காரர்கள் தான் கொடுமைமிக்கவர்கள் என்று எண்ணினோம். அன்று வெறிப்பிடித்த டயர் தன் துப்பாக்கியில் ரவை இருக்கும் வரையிலும் சுட்டுத் தீர்த்தான் என்ற செய்தியை நாம் கேட்டிருக்கின்றோம். ஆனால் அன்றும் கூட டால்மியாபுரத்தில் சுட்டதைப் போல அறுபத்து நான்கு ரவுண்டுகள் சுட்டான் என்று கிடையாது. இந்தக் காருண்ய, அஹிம்சா மூர்த்திகளோ சாத்வீகத்தில் தமக்கு நம்பிக்கை இருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் இந்த ராமராஜ்ய ஆட்சியாளர்களோ நிராயுதபாணியான கூட்டத்தின் மீது 64 ரவுண்டுகள் சுட்டிருக்கிறார்கள். ஈவு இரக்கமுள்ளவர்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்களின் உடல், உள்ளம் எல்லாம் இதைக் கேட்டுச் சிலிர்க்கவில்லையாயென்று நான் கேட்கிறேன்?

‘‘ஜுலை 15–ஆம் தேதி தான் இந்தச் சர்க்காருக்குச் சாவு மணி அடித்த நாள். இந்தச் சர்க்கார் அ தமனம் அடையப் போகிறது என்பதைக் குறிக்கும் வெடிகுண்டு ஒலித்த நாள். இந்த அரசாங்கத்தின் வரலாற்றில் ரத்தக்கறைப் படிந்த

நாளாகும். திராவிடரை மிகவும் அவமானப்படுத்தக் கூடிய வகையில் இந்தியப் பிரதம மந்திரி ஸில்லி என்றும், நான்சென் என்றும் சொல்லி வருவதைக் கண்டிக்கும் முறையில் ரயில் நிறுத்தம் செய்ய தி.மு.க. திட்டமிட்டிருந்தது சர்க்காருக்குத் தெரியும். இரயில் நிறுத்தத் திட்டத்திற்கும், ஆரம்பக் கல்வித் திட்டத்திற்கும் ஏதோ சம்பந்தமிருப்பதாக ஒரு சிலர் குழப்பிக்கொண்டே வருகிறார்கள். அது வேறு, இது வேறு விஷயம் என்பதை நாம் முன்பு சொன்னதைக் கொண்டு மனதில் வைத்துக் கொள்ளவேண்டும்.

''கடந்த காலமாக தமிழர்கள் பல போராட்டங்களை நடத்திக்கொண்டே வருகிறார்கள். வடநாட்டு மொழி ஆதிக்கம் தென்னாட்டில் இருக்கக்கூடாது என்பதற்காகத் திராவிடர் கழகமும், முன்னேற்றக் கழகமும் ஹிந்தி அழிப்பு இயக்கத்தை நடத்தினார்கள். அது மட்டுமல்ல, ஆந்திர மாகாணம் அமைய வேண்டுமென்பதற்காக சென்னை நகரில் ஸ்ரீ பொட்டி ஸ்ரீராமுலு பட்டினி கிடந்து இறந்தார். அதைத்தொடர்ந்து விஜயவாடாவிலும், மற்ற இடங்களிலும் இரயில் வண்டி நிலையங்களில் சென்று சூறையாடியும், உணவு தானியங்களைச் சேதப்படுத்தியும் ஆந்திரர்கள் கிளர்ச்சிச் செய்தார்கள். ஆனால் நியாயமான தனது பிரதேசத்தை ஆந்திராவுடன் சேர்க்கக்கூடாது என்பதற்காக திருத்தணியில் சாத்விகமான முறையில் தமிழர்கள் போராடிய போதும், இந்தியப் பிரதமர் தமிழர்களின் போராட்டங்களை ஸில்லி என்றும், நான்சென் என்றும், சைல்டிஷ் என்றும் மட்டமாகப் பேசிக்கொண்டே வருகிறார்கள். மானமுள்ள தமிழர்கள் யாரும் இதைக்கேட்டு ஆத்திரம் அடையாமல் இருக்கமாட்டார்கள். அதன் காரணமாகத்தான் அறிஞர் அண்ணாதுரை அவர்களும் நேருவுக்குப் பாடம் கற்பிக்க நாடெங்கும் ஜுலை 15–ஆம் தேதி இரயில் நிறுத்தம் செய்வோம். அது சாத்வீகமான மறியலாக இருக்குமென்று அறிவித்தார். அவர் வேண்டுகோளின்படி தமிழ் நாடெங்கும் 600 இடங்களுக்கு மேல் மறியல் நடந்திருக்கிறது. ஆனால் டால்மியாபுரத்திலும், தூத்துக்குடியில் மட்டும் போலீஸார்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறாகள். அதற்குக் காரணம் என்னவென்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

(இந்த நேரத்தில் துணை சபாநாயகர் தன்னுடைய இருக்கையில் வந்து அமர்ந்தார்.)

''வட நாட்டிலிருந்து தென்னாட்டிற்குச் சுரண்டுவதற்காக வந்த ஒரு முதலாளியின் பெயரை டால்மியாபுரம் என்று ஒரு தமிழ்நாட்டிலுள்ள இரயில் நிலையத்திற்குக் கொடுத்திருப்பது தமிழர்களையே அவமானப்படுத்துவதாக இருக்கிறதென்ற காரணத்திற்காக அந்த இரயில் நிலையத்தின் பெயரைக் கல்லக்குடி என்று மாற்றியமைக்க வேண்டுமென்று கலைஞர் கருணாநிதி தலைமையில் தமிழர்கள் போராடினார்கள். இதில் தவறு என்ன? பெயர் மாற்ற இயக்கத்தை இராசாசி சில்லி என்கிறார். காங்கிரசுக்காரர்கள் வெள்ளையர்களின் பெயர் இருக்கக்கூடாதென்று பல இடங்களில் தமிழ்ப் பெயர்களை ஏற்படுத்தவில்லையா? பாங்க்வெட்டிங் ஹாலிற்கு ஏன் ராசாசி ஹால் என்று பெயரிட்டார்கள்? அது அற்பத்தனமல்லவா? சைனா பஜாருக்கு ஏன் சுபாஷ் சந்திர போ ரோடு என்றும், மதுரா என்பதை ஏன் மதுரை என்றும் பெயரை மாற்றி வைத்தார்கள் என்று கேட்கிறேன். இவைகளெல்லாம் சில்லியல்லவா? இதேபோல் டால்மியாபுரம் என்பதைக் கல்லக்குடி என்று மாற்றவேண்டுமென்பது தமிழர்களின் அவமானம் துடைக்கும் உரிமைப் போராட்டம், உரிமைக்கிளர்ச்சி, இந்த உரிமைக் கிளர்ச்சியை நேரு அவர்கள் அவமானப்படுத்திக்கொண்டே வருவதைக் கண்டிக்கும் முறையில் தான் சிதம்பரம் மாநாட்டில் அதாவது ஜுலை நான்கு ஐந்தில் நடந்த கூட்டங்களில் ஒரு தீர்மானம் போட்டு நிறைவேற்றினார்கள். ஜனங்கள் அமைதியாகப் பகலில் இரயில் நிறுத்தம் செய்ய வேண்டுமென அறிவிப்புகள் செய்திருந்தார்கள். அதுவும் 15–ஆம் தேதி ஒரேநாள் தான். கனம் இராசாசி சர்க்கார் என்ன செய்திருக்க வேண்டும்? தன்மானமிக்க தமிழர்கள் ஒன்று சேர்ந்து போராடப்போகிறார்கள் என்றவுடனேயே நேருவுக்குக் கடிதம் எழுதி அவர் சொன்ன வார்த்தைகளை வாப வாங்கும்படி செய்திருக்கவேண்டும். ஆனால் முதல் மந்திரி அப்படிப்பட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. காமராஜுக்கும், ராஜாஜிக்கும் மன தாபம் வந்தபோது காந்தி 'கிளிக்', என்ற வார்த்தையை உபயோகித்ததைக் கண்டிக்க எவ்வளவுக் கூட்டங்கள் நடந்தது என்பதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அந்தப் பெருந்தன்மை மிக்க உலகத் தலைவர் அந்த வார்த்தையை உடனே வாப வாங்கிக்கொண்டார். ஆனால் பெருந்தன்மையில்லாத காரணத்தால் அடிக்கடி தன்னிச்சைப்படி தமிழர்களை இழிவு படுத்தும் வார்த்தைகளை உபயோகிப்பது, தமிழர்கள் வருந்தும்போது அதை வாப வாங்காது இறுமாப்போடு நேரு இருக்கிறார். அவரது இழிவு படுத்தும் போக்கை எதிர்க்கவேண்டிய நிலைமையில் தான் நாம் இருக்கிறோம். இந்தக் கிளர்ச்சியில் சாத்வீக முறையில் போராடி நிராயுதபாணியான திராவிட வீரர்களைச் சுட்டிருக்கிறது இந்த வெறிப்பிடித்த சர்க்கார். சுடுவதற்கு முன் கண்ணீர்புகை உபயோகப்படவில்லை. இரயில் போகாதவாறு குறுக்கே படுத்திருப்போர்களைப் பலவந்தமாக அப்புறம் தள்ள எந்தவிதமான முயற்சியும் எடுத்துக் கொள்ளாது உடனடியாக 64 ரவுண்டுகள் சுட்டிருக்கிறது. கண்ணதாசன் கையிழந்து தவிக்கிறார். கடந்த ஒரு வாரமாக என்ன நடக்கும் என்பதைப் பத்திரிக்கை வாயிலாகப் படித்தால் எல்லோருக்கும் தெரியும் என்று சொன்ன கனம் ராஜகோபாலாச்சாரியார் கண்ணீர் புகை டாக் வைத்துக்கொள்ள உத்தரவிடவில்லையா? உத்தரவு இட்டிருக்க வேண்டாமா? வெறிபிடித்து 64 ரவுண்டுகளா சுடவேண்டும்? சுட்டது தான் சுட்டார்களே? ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தவர்களின் மேலேயா குறிபார்த்துச் சுடவேண்டும்? கதவுகளைச் சாத்தவிட்டு மேல் பர்த்தில் படுத்திக்கொண்டிருந்த ஒரு பிரயாணி சுடப்பட்டிருக்கிறான். ஒரு சிறுவன் சுடப்பட்டிருக்கிறார் என்னும்போது சர்க்காரின் போலீ அதிகாரிகள் எவ்வளவு வெறி பிடித்து நடந்து கொண்டிருக்கிறாகள் என்பதை நாமே

தெரிந்துகொள்ளலாம். தாலியை இழந்த தாய்மார்கள் அலறுகிறார்கள். அந்தத் தாலிகள் இந்த சர்க்காரைக் கேட்கும் குழந்தைகள் அலறுகின்றன. இப்படி சாத்வீகமான முறையில் நடத்தப்பட இருந்த ஒரு கிளர்ச்சியின் மீது அசம்பாவிதமான முன் எச்சரிக்கை எதுவுமின்றித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது மன்னிக்க முடியாத குற்றம் என்பதற்காக கனம் முதல் மந்திரி ராஜகோபாலாச்சாரியின் மேல் நான் குற்றம் சாட்டுகிறேன்.

"கிளர்ச்சி நடத்த இருந்த அறிஞர் அண்ணாவையும் கலைஞர் கருணாநிதியையும் இந்த சர்க்கார் சிறையில் அடைத்தது.இன்னும் இதுபோல பல ஆயிரக்கணக்கான பேர்கள் சிறையில் கிடக்கிறார்கள். தலைவர்கள் இல்லாதபோது சர்க்கார் பலாத்கார முறையில் போலீ படையின் உதவி கொண்டு சுட்டிருக்கிறது. இதை இன்றைய தினம் விசாரிக்க வேண்டுமென்றால், இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்திற்குக் காரணமாயிருந்த அதிகாரிகளைக் கொண்டே விசாரணை நடத்தும் படியாக ஏற்பாடு செய்திருக்கிறார். மேலும் கலெக்டர் விசாரிக்கும் பின்னால் சாட்சி சொல்லவேண்டிய கீழ் அதிகாரிகளும் இருந்திருக்கிறார்கள். இதில் ஏதாவது நியாயமுண்டா? நீதி உண்டாகுமா? ஏன் கனம் ராஜா சிதம்பரம் போன்ற தனிப்பட்ட பிரமுகர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்து விசாணை நடத்தக்கூடாதென்று நான் கேட்கிறேன். அரசாங்க உத்தியோக தர்களைக் கொண்டே விசாரிக்கச் சொல்வதில் நியாயம் கிடைக்காது. கட்சி சார்பற்ற தனிப்பட்ட பிரமுகர்களைக் கொண்டுதான் விசாரிக்கச் செய்யவேண்டும். இது அரசாங்கத்தின் பொறுப்பு என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் இராசாசி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், போலீ காரர்கள் திறமையாகச் சுட்டிருக்கிறார்கள் என்று அவர்கள் செய்கையை இவர்தான் பாராட்டுகிறார். தாலியை இழந்த தாய்மார்களின் கண்ணீர் ஓய்ந்தபாடில்லை. அவர்கள் அலறும் அலறல் ஓய்ந்தபாடில்லை. அதுவெல்லாம் ஆச்சாரியாருக்குத் தெரியவில்லை. டால்மியாபுரத்தில் சுமார் பகல் 2 மணிக்குக் சுட்டிருக்கிறார்கள். எனக்கு உடனே மூன்று மணிக்கு ஒரு தந்தி, 3.24 மணிக்கு ஒரு தந்தி, 3.34 மணிக்கு ஒரு தந்தி என்று வரிசையாகத் தந்தி அடித்திருக்கிறார்கள். ஆனால் ஒரு தந்தியாவது எனக்கு அன்றே கிடைக்கவில்லை. ஒரு நாள் கழித்து எனக்குக் கிடைக்கும்படியாக இந்த சர்க்கார் செய்திருக்கிறது. இது தான் ஜனநாயகத்தின் போக்கா? இப்படிச் செய்தியை மறைத்து விட்டால் உண்மை வெளிப்படாமலேயே இருந்துவிடுமென்று எண்ணமா? குடையைக் கொண்டு சூரியனை மறைக்க முடியுமா? இதேமாதிரியே தன்மானத்தைப் புரிந்து கொள்ளவேண்டும். அவர்களது உரிமைக் கிளர்ச்சியை நன்கு அறிந்து கொள்ளவேண்டும். வட நாட்டவர்கள் நம்மை இழிவுபடுத்திப் பேசுவதை நிறுத்தும்படி செய்யவேண்டும். அதற்குத் தகுந்த நடவடிக்கையை இந்தச் சர்க்கார் எடுக்கவேண்டும். மிருகத்தனமாக நடந்து கொண்ட போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகம் நியாயமானதா இல்லையாயென்பது பற்றி விசாரிக்க உடனே ஒரு தனிப்பட்ட பிரமுகர்கள் கொண்ட அதாவது அரசாங்க உத்தியோக தர்கள் அற்ற ஒரு கமிட்டியை நியமித்து விசாரணை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்."

A. Govindasami Nayagar:- "Sir, on a point of Order – கனம் அங்கத்தினர் ஸ்ரீ சுயம்பிரகாசம் அவர்கள் ஆரம்பக் கல்விக்காக இரயில் நிறுத்தம் செய்யப்பட்டதாகச் சொல்லுகிறார். ஆரம்பக் கல்வித் திட்டத்திற்கும், இரயில் நிறுத்தத்திற்கும், எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. தமிழர்களை அவமதிக்கும் முறையில் இந்தியப் பிரதமர் பேசிக்கொண்டே வருவதைக் கண்டிக்கத்தான் இரயில் நிறுத்தம் செய்யப்பட்டது என்பதை அவருக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் எம். கல்யாணசுந்தரம் தன்னுடைய கண்டன உரையில் கூறியதாவது:–

Sri. M. Kalyanasundaram:- "கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்துகொள்ளும் எனக்கு உணர்ச்சி வேகம் ஏற்படுகிறது. ஒரு புறத்தில் துக்கம், இன்னொரு புறத்தில் கோபம் – ஆகவே வார்த்தைகள் வருவதுகூட கஷ்டமாக இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை தமிழ்நாட்டில் நடந்திருக்கிறது. துப்பாக்கிப் பிரயோகத்தின் மூலம் 10, 12 உயிர்களை மாய்க்கவேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது? துப்பாக்கிப் பிரயோகத்தைத் தவிர வேறு வழியே அவர்களுக்குத் தெரியவில்லையாயென்று நான் கேட்கவிரும்புகிறேன்".

Sri. M. Kalyanasundaram:- "கனம் முதல் மந்திரி அவர்கள் சொல்லுகிறார், "ஆறு உயிர்கள்தான் இறந்தனவென்று, அப்படியே இருக்கட்டும். அதை நான் மறுக்கவோ, திருத்தவோ விரும்பவில்லை. இந்த ஆறு பேர்களைத் தவிர இன்னும் பல ஆயிரக்கணக்கான பேர்கள் கையும், காலும், மண்டையும் உடைபட்டு ஆ பத்திரியில் கிடக்கிறார்கள். இது நியாயமா, நீதியா, தப்பு யாருடையது என்று விவாதத்திற்கு வரும்முன் நான் முதலில் கம்யூனி டுக் கட்சியின் சார்பில் இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு மனப்பூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"இம்மாதிரி துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்த்தக் காரணம் என்ன? கனம் ராசாசி அவர்கள் இந்த இயக்கத் தலைவர்கள் சிறையில் அடைத்தபோதே தலைவர்கள் வெளியில் இல்லாவிட்டால் என்ன நடக்கும் என்பதை உணரவில்லையா? நேரில் காணும் பிரச்சினைகள் ஒப்புக்கொள்ள மறுத்து விஷயங்களை மழுப்பக் கூடாது. நம் எதிரேயுள்ள உண்மை விஷயத்தை அப்படியே எடுத்துப் பார்க்கவேண்டும். ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு அபிப்பிராயம் இருக்கும். ஒரு குறிப்பிட்ட பிரச்சினைப்பற்றி வடநாட்டான் தென்னாட்டை ஆதிக்கம் செலுத்துவதை ஒரு கட்சி விரும்பாமல்

இருக்கலாம். அது அந்தக் கட்சியின் அபிப்பிராயம். ஆனால் ஒரு பொறுப்புள்ள அந்த த்தில் இருக்கக்கூடிய இந்தியப் பிரதம மந்திரி அவர்கள், இவைகளையெல்லாம் சில்லியென்றும், நான்சென் என்றும் இழிவுப்படுத்திப் பேசுவது ரொம்பவும் கண்டித்தக்கதாகும். தமிழ் மக்களின் எழுச்சியை இழிப்படுத்துவது தமிழ்நாட்டையே இழிவுப்படுத்துவது போலாகும். தமிழ் நாட்டிலுள்ளவர்கள் கௌரவமாக வாழவேண்டும். மானத்தோடு வாழவேண்டும். வடநாட்டானுக்கு அடிமைப்பட்டுத் தன்மானத்தை இழக்கக்கூடாது. வடநாட்டான்தமிழனை இழிவுப்படுத்திப் பேசுவதைப் பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. வடநாட்டானின் ஆதிக்கச் சின்னமான வடநாட்டுப் பெயர்கள் தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் இருக்கக்கூடாது என்பதற்காக ஒரு கட்சி சாத்வீக முறையில், முன்னறிவிப்புச் செய்துவிட்டு, டால்மியாபுரம் என்ற பெயரைக் கல்லக்குடி என்று திருத்தி எழுதுவதற்கு முயற்சி செய்தபோது கூட்டத்தின்மீது 64 ரவுண்டுகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய அவசியம், கனம் இராசாசி அவர்களின் அதிகார ஆதிக்க வெறியைக் காட்டாது வேறு எதைக் காட்டுகிறதென்றுதான் நான் கேட்கவிரும்புகிறேன். சபையிலே பேசும்போது கடந்த ஒரு மாதமாக திராவிடப் பத்திரிகைகளான விடுதலை, நம்நாடு போன்ற தினத்தாள்களைப் பார்த்தாலேயே உங்களுக்குத் தெரியும். இதுமாதிரியான ஒரு நிலையை உண்டுப் பண்ணவே அவர்கள் ரொம்பவும் தூபம் போட்டு வந்தார்கள். ஆகவே இதுமாதிரியான ஒரு சம்பவம் நிகழ்ந்திருப்பது பற்றி நான் ஆச்சரியப்படவேயில்லை', என்று இராசாசி சொன்னாரே. முன்பே என்ன நடக்கும் என்று எதிர்ப்பார்த்த ஸ்ரீ இராசாசி துப்பாக்கிப் பிரயோகம் செய்யச் சொல்லித்தான் போலீ அதிகாரிகளுக்கு உத்தரவிட்டாரா? குறிப்பாக சபையிலுள்ளவர்கள் இராசாசி பதவிக்கு வந்தபின், அதாவது அதிகாரம் அவர்கள் கைக்கு வந்தபின் எப்படி நடந்து கொண்டு வருகிறார் என்பதைப் பார்க்கவேண்டும்.

''பலமான எதிர்ப்புகளிடையே கனம் இராஜகோபாலாச்சாரியார் மந்திரி சபையை அமைக்க ஒப்புக்கொண்டதும், தீரமாக மந்திரி சபையை அமைத்ததும் – கொல்லைப்புர வழியாக வந்தாலும் அதன் பின் தனது சாகஸங்களை உபயோகித்துத் தனது சாணக்கிய சட்ட நுணுக்கத்திறமைகளைக் காட்டி மந்திரி சபையை நிலைக்க வைத்துக் கொண்டதையும் எல்லோரும் பாராட்டலாம். அது தனிப்பட்ட விஷயம். ஆனால் நாட்டின் நிலைமை கொஞ்சமாவது முன்னேற்றம் அடைந்திருக்கிறதா? பொதுநலனைப் பாதுகாக்க எப்படிப்பட்ட எதிர்ப்பு இருந்தாலும் ஒன்றுப்பட்டு அதை முறியடிக்கப் போராடுவோம் என்பதை மக்கள் பல சந்தர்ப்பங்களில் இந்தச் சர்க்காருக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். கனம் இராஜகோபாலாச்சாரியார் மந்திரிசபைக்கு எதிராக உணவுப்பஞ்சம், வேலையில்லாத் திண்டாட்டம், பசிப்பட்டினிச் சாவுகள் போன்ற பலப் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன. ஆகவே இதுமாதிரியாக மக்கள் ஒன்றுச் சேர்ந்துப் போராட இப்பொழுது சந்தர்ப்பம் அளித்தால் இந்த எதிர்ப்புச் சக்திகள் எல்லாம் நிச்சயமாக ஒரு காலத்தில் ஒன்று திரண்டு இந்தச் சர்க்காரையே கவிழ்த்துவிடும் என்ற அச்சத்தாலேயேதான் மக்கள் உள்ளத்தில் பயத்தை உண்டுபண்ண அவசியமானால் துப்பாக்கிப் பிரயோகத்தையும்கூடச் செய்து இந்த இயக்கத்தை நசுக்க வேண்டுமென்று இராசாசி உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்று நான் சொல்லுகிறேன். அதை அவர்கள் மறுக்க முடியுமாவென்று கேட்கிறேன்? முன்பு நடந்த ஹிந்தி ஒழிப்பு இயக்கத்தின்போது போலீ அதிகாரிகளுக்கு என்ன உத்தரவிட்டார்கள். அவர்கள் சாத்வீக முறையில் அழிக்கும்போது பேசாமல் இருங்கள். நிலைமை மோசமாகிவிடாமல் மாத்திரம் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னதோடு கடைசி பாராவில் இதில் கம்யூனி ட்டுகள் பங்குக் கொள்ளுகிறார்களா என்றுப் பார்க்கவும் எனக் கொண்டிருந்தது.

Sri. M. Kalyanasundaram:- ''உங்களால் உத்திரவும் போட முடியும். உத்திரவு போடவில்லையென்று மறுக்கவும் முடியும். ஆனால் எங்களால் அந்த இரகசிய உத்தரவைக் கொண்டுவந்து காட்ட முடியாதல்லவா? நீங்கள் உத்திரவு போடவில்லையென்றால், போலீ அதிகாரிகளுக்கு என்ன உத்தரவு கொடுத்தீர்கள்? என்ன உத்தரவு கொடுத்தீர்களோ அதன் நகல் ஒன்றை சபையின் முன்பு உங்களால் வைக்கமுடியுமா?''

Sri. M. Kalyanasundaram:- ''அந்த உத்தரவையும்தான், இப்பொழுது போட்ட உத்தரவையும்தான், தமிழ்நாட்டில் இரயில் நிறுத்த மறியல் பல இடங்களில் நடந்தபோதிலும்கூட துப்பாக்கிப் பிரயோகம் எந்த இடங்களில் நடந்திருக்கிறதென்று பாருங்கள். ஒன்று டால்மியாபுரத்தில், மற்றொன்று தூத்துக்குடியில். டால்மியாபுரத்தில்தான் சிமெண்ட் தொழிற்சாலை இருக்கிறது. தொழிலாளர்களின் நலனை நசுக்க எல்லாவித வழியையும் கையாளும் அந்த வட நாட்டு முதலாளி, மற்றவர்களுக்கெல்லாம் கிடைக்காத இந்திய சர்க்காரின் சலுகையைப் பெற்றுத் தொழிலாளிகளின் உயிரை உறிஞ்சி வருகிறான். தூத்துக்குடிதான் ஆர்.வி. மில்லியன் கோட்டை. அங்கே வேலை செய்யக் கூடிய தொழிலாளிகள் பட்டினி கிடந்து செத்தாலும்கூட தன்னுடைய நாலு பங்கு லாபத்தில் ஒரு பங்கு லாபம் குறைந்தாலும் கூட அவன் அலறுவான். அவர்களின் நஷ்டத்தைக் கோடிக்கணக்கில் கொடுத்து ஈடு செய்யவும் சர்க்கார் முன்வரும். இந்த இரு இடங்களில்தான் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம், உணவு கிடைக்காத திண்டாட்டம் போன்ற பல பெரிய பெரிய பிரச்சினைகள் நாட்டில் கிளம்பிக்கொண்டிருக்கிறது. இப்பொழுதிலிருந்தே எதிர்ப்புச் சக்திகள் ஒன்று சேர இடம் கொடுக்கக்கூடாது என்ற கருத்தோடுதான் கனம் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் அவர்களைச் சுட்டுக்கொல்ல உத்தரவிட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இதுவே தமிழ் நாட்டிலுள்ள மக்களின் அபிப்ராயம். சர்க்காரிடம் அவர்கள் ஆத்திரப்படுகிறார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள்மேல் பழியைச் சுமத்திவிட்டு,

சந்தர்ப்பங்களை தனது சமயோசித புத்தியால் எப்பொழுதும் தனக்குச் சாதகமாகவே வைத்துக்கொண்டு விட்டால் மாத்திரம் போதாது. சர்க்கார் தரப்பிலிருந்து பேசியவரால் கூட துப்பாக்கிப் பிரயோகம் சரி என்று சொல்வதற்கு நாக்கு வரமாட்டேன் என்று விட்டது. அவர் மனம் அதற்குத் துணியவில்லை. ஆகவே கனம் ராஜகோபாலாச்சாரியாக்கு நான் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். பிரச்சினையை நேருக்கு நேராகப் பார்க்கவேண்டும். சென்ற ஒரு மாதகாலமாகவே சர்க்காரின் ஆரம்பக் கல்வித் திட்டத்தையும், மற்ற விஷயங்களையும் கண்டிக்கும் முறையில் அவர்கள் மகாநாடுகள் கூட்டினார்களே. பலப்பல இடங்களில் கூட்டங்கள் போட்டு தீர்மானங்கள் அனுப்பினார்களே. அவர்களது தினத்தாள்களில் ரொம்பவும் எதிர்த்து எழுதி வந்திருப்பதாக கனம் ராஜகோபாலாச்சாரியாரே ஒப்புக்கொண்டிருக்கிறாரே. அப்படியிருக்க ஜனநாயகத்தில் ரொம்பவும் நம்பிக்கையுள்ள கனம் இராசாசி அவர்கள் அந்தக் கட்சித் தலைவர்களைக் கூப்பிட்டு வைத்து அவர்கள் எதிர்க்கவேண்டியதன் அவசியத்தைக் கேட்டாரா? அப்படி எதுவும் சமரச முறையில் நடந்ததாகத் தெரியவில்லை. விபரீதமான செய்கை ஏற்படலாம் என்று உணரும் போதாவது கண்ணீர்ப் புகை எல்லாயிடங்களிலும் கிடைக்கும்படி வழி செய்தாரா? போதுமான முன்னறிவிப்பு இன்றி, சாத்வீகமான முறையில் கூட்டத்தைக் கலைக்க வழியிருந்தும் அவைகள் ஒன்றையும் கைப்பற்றாமல் சுடுவதற்கு உத்தரவு எப்படிக் கொடுத்தார் என்று கேட்கிறேன்? கனம் இராசாசியின் உத்திரவு இல்லாவிட்டால் அவர்கள் அப்படித் துணிந்து செய்திருப்பார்களா? கூட்டத்தினரின் தொகை அதிகமாக இருந்தது என்று வைத்துக்கொண்டாலும், அவர்களைக் கலைப்பதற்கு வேறு வழி ஒன்றுமேயில்லையென்று வைத்துக்கொண்டாலும் முப்பது வயதுகூட நிரம்பப் பெறாத ஒரு அதிகாரி, ஒரு ரவுண்டா இல்லை.... 64 ரவுண்டுகள் சுடு, சுடு என்று சொல்ல வேண்டுமானால் அரசாங்கத்தின் உத்தரவு இல்லாமலா் தைரியமாக அப்படி மக்களின் உயிர்களைத் திரணமாக மதித்து உத்தரவு இட்டிருப்பார்? நான் கேட்கிறேன்? யாரோ தெரியாமல் செய்துவிட்டதாக, தல அதிகாரிகளின்மீது பழியைப் போட்டுவிட்டு கனம் ராஜகோபாலாச்சாரியார் தப்பித்துக்கொள்ள முடியாதென்று நான் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

“ஆகவே ஒரு பாரபட்சமற்ற கமிட்டியை நியமித்து இதைப்பற்றி விசாரிக்க வேண்டும். இந்த சம்பவத்திற்குக் காரணமாயிருந்த அதிகாரிகளைவிட்டே இதை விசாரிக்கச் சொல்வது ரொம்பவும் தப்பாகும். அதில் நியாயம் கிடைக்காது. நீதி இருக்காது. ஆகவே ஜனநாயகத்தை காலில் போட்டுத் துவைக்காமல், இரத்தத்தைச் சிந்தி இந்த நாட்டில் ஜனநாயகத்தைக் காப்பாற்றவேண்டிய ஒரு நிலைமை ஏற்படாமல் செய்ய வேண்டுமென்றால் உடனே தனிப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்து இதுப்பற்றிப் பாரபட்சமற்ற விசாரணையை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அல்லது ஜனங்கள் இரத்தத்தைச் சிந்தியாவது ஜனநாயகத்தை நிலைநாட்ட இந்த எதேச்சதிகார ஆட்சியை ஒழித்துக் கட்டுவார்கள் என்று சொல்லிக்கொண்டு என்பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.”

அண்ணா திராவிட நாடு இதழில் தம் கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

நன்றிகெட்ட ம.பொ.சி. ஒரு வரிக்கூட தமிழர் சுட்டுக்கொல்லப்பட்டதைப் பற்றிஎழுதவில்லை. ஏனென்றால் சுட்டுக் கொல்லக் காரணமாக இருந்தவர் அவருடைய குருநாதர் இராசாசி ஆவார். வடக்கெல்லைப் போராட்டத்தில் இருவர் இறந்ததைப் பற்றி எழுதியுள்ள ம.பொ.சி. வடக்கெல்லைப் போராட்டத்திற்கு ஆதரவாக இரயில் மறியல் செய்தபோது சுட்டுக்கொல்லப்பட்ட 10 தமிழர்களைப் பற்றி ஒரு வரிக் கூட எழுதவில்லை.

1967 தேர்தலில் தி.மு.க. இராசாசியின் சுதந்திரக் கட்சியின் கூட்டணி வைத்துக் கொண்டதால் அவர்களும் இந்த வரலாற்றை மறைத்துவிட்டனர் என்பது சோக வரலாறு.

பட்டம் தாணுப்பிள்ளை திருவிதாங்கூரில் 11 தமிழர்களைச் சுட்டுக்கொன்றதை கண்டிக்கும் தமிழ்த் தேசியவாதிகள். வடக்கெல்லைப் போருக்கு ஆதரவாகப் போராடி இரயில் மறியல் செய்தபோது 15.07.1953 அன்று இராசாசியின் அடக்குமுறை ஆட்சியால் 10 தமிழர்கள் சுட்டுக் கொன்றதைப் பற்றி வாய்த் திறப்பதில்லையே ஏன்? இவர்கள் தமிழர்கள் இல்லையா?

கோல்டன் ந. சுப்ரமணியமும் தன்னுடைய நூலில் இதைத வெளியிடவில்லையே ஏன்?

தகராறுக்கிடமான பிரதேசம் என்றறிவிக்குமாறு பிரதமர் நேருவிடம் தமக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்துமாறு மீண்டும் ஒரு முறை அவரை வற்புறுத்திக் கேட்க விரும்பினேன். அதன்படி 26.06.1953–இல் முதல்வர் இராசாசியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினேன்... ஆந்திரர் நிலைக்கு எதிராகத் தமிழர் மட்டுமே நடத்தும் கிளர்ச்சிக்கு ஆதரவாக முதல்வர் என்ற முறையில் தாம் எதையும் செய்யாமலிருப்பதை எனக்கு உணர்த்தினார்.

அன்று சங்கடமான நிலையை உணர்ந்தேன். ஆயினும் அன்றைய நிலையில் அவரிடம் எனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்திப் பிரதமர் நேருவிடம் தொலைபேசியில் பேசி எல்லைக் கமிஷன் அனுப்பவுதாக உறுதிமொழி வாங்கித் தருமாறு அவரைக் கட்டாயப் படுத்தினேன். அவர் அதற்கு இணங்கவில்லை என்றாலும் மாற்று யோசனை ஒன்றை எனக்குத் தெரிவித்தார்.

விரைவில் சென்னை மாநிலச் சட்டமன்றத்தில் ஆந்திரப் பிரிவினை மசோதா விவாவதத்திற்கு வரவிருப்பதால்

அந்த மசோதாவிலேயே சித்தூர் மாவட்டத்தைத் தகராறுக்குரிய பிரதேசமாகக் கருதி ஆந்திரம் பிரிந்து ஓராண்டுகள் எல்லைக் கமிஷன் அனுப்படவேண்டும் என்ற விதியைச் சேர்த்துவிடலாம் என்பது இராசாசி கூறிய மாற்று யோசனை. இதற்கு அமைச்சரவையிலும் சட்டமன்றக் காங்கிர கட்சியிலும், உள்ள ஆந்திரர்களுடைய ஆதரவைப் பெற்றுவிட முடியும் என்று இராசாசி நம்பினார்.

எனக்கு அந்த நம்பிக்கை இல்லை என்பதோடு அப்படியே சென்னை மாநில சட்டமன்றம் இசைந்தாலும் மத்திய அரசு அதனை ஏற்குமென்று எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை–கோல்டன் நா. சுப்பிரமணியம் (மேற்கண்ட நூல் பக். 98–93) ம.பொ.சி.யின் எனது போராட்டம் நூலிலிருந்ததை கோல்டன் சுப்பிரமணியம் மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

இராசாசி அரசு தயாரித்த ஆந்திரபிரிவினை சட்டமசோதாவில் எல்லை நிர்ணயணையம் அமைக்க வேண்டும் என்ற விதி இல்லை. திருத்தணி விநாயகம், கோசல்ராமன், ப. ஜீவானந்தம் ஆகியோர் சட்டமன்றத்தில் வற்புறுத்திய பிறகு அவ்விதியைச் சேர்த்தார் என்பதே உண்மை.

வடக்கெல்லைப் பிரச்சனையில் ஒரு எல்லை வரையரை ஆணையம் அமைப்பதற்கு மத்திய அரசு ஏற்காது என்று கூறுகின்ற ம.பொ.சி. சென்னை தலைநகர் மீட்பதில் தான் நகர மன்றத்தில் கொண்டுவந்த தீர்மானத்தினால் நேரு மனமாற்றம் அடைந்து சென்னையைத் தமிழகத்திற்குக் கொடுத்துவிட்டார் என்று எழுதுவதில் என்ன நியாயம் இருக்கிறது. சட்டமன்றம் பெரியதா? மாநகராட்சி மன்றம் பெரியதா? என்பதை ம.பொ.சி. அன்பர்கள் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்.

வடக்கெல்லைப் பிரச்சிணையில் ம.பொ.சிக்கு இராசாசி எந்தவிதமான ஆதரவையும் வழங்கவில்லை என்பதை அவரே ஒப்புதல் வாக்குமூலமாக நமக்கு அளித்துள்ளார். பின்பு எதற்காக அவரைத் தலைவராக ஏற்றுக்கொண்டார் என்பது அவருக்கே வெளிச்சம்.

வேறுவழியின்றி ம.பொ.சி. திருத்தணி மார்கெட் பகுதியிலுள்ள காந்தி சிலையின் முன் 03.07.1953 அன்று சத்தியாகிரகம் இருக்கப்போவதாக அறிவித்தார்...

சத்தியாகிரகத்தில் ஈடுபடுவதற்கு முந்தைய நாள் இராசாசி எனக்குத் தந்திக் கொடுத்திருந்தார். அதில் ''தாங்கள் தடையை மீறிச் சிறைப்புகுவதற்கு முடிவு செய்துவிட்டதாக அறிகிறேன். அது தேவையற்ற முயற்சி. அந்த முயற்சியைக் கைவிட்டு உடனே சென்னைக்கு வந்து என்னைப் பார்க்கக் கோருகிறேன்''...... ''இராசாசியின் அன்புக் கட்டளையைப் புறக்கணிப்பது என் மனதுக்குத் துன்பம் தருவதுதான்''

....சென்னை மாநில காங்கிரசிடமோ, அதன் முதல்வராகிய தங்களிடமோ எனக்கு எந்தவிதமான மனத்தாங்கலும் இல்லை. மத்திய அரசின் நீதியற்றப் போக்குத்தான் என்னைப் போராட்டத்தில் ஈடுபடுத்தியுள்ளது. இப்போதுங்கூட சித்தூர் மாவட்டம் தகராறுக்குரிய பிரதேசம் என்பதனை ஒப்புக்கொண்டு அதற்காக எல்லைக்கமிஷன் அனுப்ப மத்தியஅரசு உறுதி கூறுமானால், நான் போராட்டத்தை அடியோடு கைவிட்டு விடுவேன். தாங்கள் என் தலைவர். அந்த வகையில் தங்கள் ஆணைக்குக் கட்டுப்பட நான் கடமைப்பட்டவன்''..... (மேற்கண்ட நூல் பக். 100–101)

இந்தக் கடிதத்தை ம.பொ.சி. ஒரு ஆள்மூலம் முதல்வர் கைக்குக் கிடைக்கும்படி அன்று இரவே அனுப்பிவிட்டார்.

03.07.1953 காலை 9 மணிக்குத் திருத்தணி காந்தி சிலைமுன் போடப்பட்டிருந்த மேசையின் மீதேறி வடக்கெல்லைப் பகுதிகளை மீட்கும் போராட்டத்தில் ஈடுபடுமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துப் பேசத் தொடங்கினேன். இரண்டு மணித்துளி ஆவதற்குள் கைது செய்யப்பட்டேன்.....

''ஒன்றரை ஆண்டுக்கு முன்பு 1952இல் நடந்தப் பொதுத் தேர்தலிலே எந்தக் காங்கிர கட்சியின் வெற்றிக்காக இரவு பகல் பாராமல் சரியான ஊன், உறக்கம் இல்லாமல் நாடு சுற்றிப் பிரச்சாரம் செய்தேனோ அந்தக் கட்சியின் ஆட்சி என்னைச் சிறையில் அடைத்தது''. (மேற்கண்ட நூல் பக். 102)

பா. குப்பனின் தலைவர் தேர்தலில் காங்கிரசுக்கு உழைத்ததை அவரே எழுதியுள்ளார். இதுதான் தமிழ்த் தேசியம் அமைக்க அவர் தீவிரமாகப் போராடியதா....?

''நீதிபதி ம.பொ.சிக்கு 6 வார சிறைத்தண்டனை விதித்தார். அதுவரை எல்லைக்கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களுக்கு 2 வாரத்திற்கதிமாகத் தணிகையில் யாருக்கும் தண்டனைத் தரப்படவில்லை. எனக்குத்தான் அதிக தண்டனை''.... (மேற்கண்ட நூல் பக். 105)

ம.பொ.சி.யை வேலூர் சிறைக்கு அனுப்பவேண்டாம் என்று முதல்வர் கூறியதால் திருத்தணி சப்–ஜெயலில் ம.பொ.சி. தங்க வைக்கப்பட்டார். ஆமாம் அடைக்கப்படவில்லை. இதோ ம.பொ.சி.யே பேசுகிறார். ''சப்–ஜெயிலில் வழக்கமான கைதிகளை அடைக்கும் காற்றோட்டம் இல்லாத இருட்டறையில் என்னை அடைக்காமல் சப்–இன் பெக்டர் அலுவலகத்தைக் காலி செய்து அங்கு என்னை வைத்தனர். கட்டில், நாற்காலி, மின்விசிறி முதலியவற்றையும் கொண்டு வந்து வைத்தார்கள்''.

‘‘சட்டத்திற்குட்பட்டு ம.பொ.சிக்கு எவ்வளவு வசதிகளைச் செய்து தரமுடியுமோ, அவ்வளவையும் செய்து கொடுங்கள் என்று முதலமைச்சர் தங்களுக்குக் கட்டளையிட்டதாகப் போலீ அதிகாரிகள் என்னிடம் கூறினார். இராசாசி என்னிடம் வைத்துள்ள அன்பை அறிந்து கொள்ள இந்த நேரம் எனக்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது.’’ (மேற்கண்ட நூல் பக். 104)

இதே இராசாசி 1938–இல் ஹிந்தி எதிர்ப்புப் போராளிகளுக்கு ஆறுமாதம் முதல் 2 ஆண்டுகள் வரை தண்டனை கிடைக்கும்படி கிரிமினல் சட்டம் மூலம் நடவடிக்கை எடுத்தார். பெரியாரைப் பெல்லாரி சிறையில் அடைத்தார். ம.பொ.சி. செல்லப்பிள்ளை என்பதால் அவருக்கு மட்டும் உபச்சாரம் செய்துள்ளார்.

பிரதமர் நேரு அவர்கள் சித்தூர் மாவட்டம் தகராறுக்குரிய பிரதேசம் என்பதனை ஒப்புக்கொண்டு அதற்காக விரைவில் எல்லைக்கமிஷன் அமைக்கப்படும் என்று, இன்று பகல் செய்தி நிருபர்களிடம் கூறியுள்ளார். இதைத் தங்களிடம் தெரிவித்து தங்கள் கருத்தை அறிந்து உடனே தமக்குத் தகவல் தருமாறு முதலமைச்சர் இராசாசியைக் கேட்டுள்ளார் என்று வி.ஆர். இராசரத்தின முதலியார் மகிழ்ச்சியோடு கூறினார். (மேற்கண்ட நூல் பக். 106)

நேருவின் அறிக்கைத் தமக்கு மனநிறைவைத் தந்ததாகக் கூறி அதே நாளில் ம.பொ.சி. சிறையிலிருந்து வெளியே வந்துவிட்டார். 6 வாரம் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டாலும் 5 நாளில் வெளியே வந்துவிட்டார்.இது ம.பொ.சி.யும் இராசாசியும் போட்ட கபட நாடகம்தான். எப்படி என்றால் இது நடைப்பெற்றது 1953 சூலையில் நேரு அதன் பிறகு நான்காண்டு காலம் எல்லைக்கமிஷனை அமைக்கவே இல்லை என்பதை எண்ணிப்பார்க்கவும்.

ம.பொ.சி. கைது செய்யப்பட்ட மறுநாளே விநாயகம் தடை உத்தரவை மீற இருந்தார். தலைவர் ம.பொ.சி. கேட்டுக் கொண்டதால் போராட்டம் அன்றே நிறுத்தப்பட்டது. அதன்பிறகு இரண்டு ஆண்டுகள் எந்தப் போராட்டமும் நடைபெறாமல் ம.பொ.சி. தடுத்துவிட்டார். சென்னை மாகாண அரசின் தடை உத்தரவை மீறிப் பல இடங்களிலும் ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன. ஜுன் 2–ஆம் தேதி அம்மையார்குப்பத்தில் 500 பேர், ஆர்.கே. பேட்டையில் 500 பேர் தடை உத்தரவை மீறி ஊர்வலம் நடத்தினர். ஜுன் 30–ஆம் தேதி நகரில் சுமார் 4000 பேர் தண்டவாளத்தில் அமர்ந்து பம்பை எக் பிர ரயலை மறித்தனர். திருவாலங்காட்டுக்கும் மணவூருக்கும் இடையே ஜனதா எக் பிர இரயில் நிறுத்தப்பட்டது. சித்தூரிலும் இரயில் நிறுத்தம். (மேற்கண்ட நூல் பக். 118) வடக்கெல்லைப் போராட்டத்தின் வீச்சைக் குறைத்து இராசாசியைக் காப்பாற்றவே ம.பொ.சி. நாடகம் ஆடினார்.

வடக்கெல்லைப் பாதுக்காப்புக் குழுவினர் 02.09.1953 அன்று கே.விநாயகம் தலைமையில் தில்லிச் சென்று பிரதமர் நேருவைச் சந்தித்தனர். இந்தச் சமயத்தில் தில்லித் தமிழ்ச்சங்க விழாவில் கலந்துகொள்ள ம.பொ.சி.யும் தில்லி சென்றிருந்தார். அன்று ம.பொ.சி. தில்லியில் இருந்தபோதிலும் வடக்கு எல்லைப் போராட்டக்குழுவிற்குத் தலைவராக இருந்த போதிலும் நேருவைப் பார்க்கும் குழுவினருடன் அவர் உடன் செல்லவில்லை. (மேற்கண்ட நூல் பக். 121)

ம.பொ.சிக்கு வடக்கெல்லைப் போராட்டத்தில் எவ்வளவு அக்கறை இருந்தது! என்பது இதன் மூலம் தெரிகிறது. நேரு காங்கிரசை விட்டுத் தம்மை நீக்கிவிடுவார் என்று பயந்துக் கொண்டுதான் ஒதுங்கிவிட்டார் என்பதே உண்மை. **1953 சூலையில்** தற்காலிகமாக நிறுத்தப்பட்ட எல்லைப்போரை மீண்டும் இரண்டு ஆண்டுகள் கழித்துத் திரு. கே. விநாயகத்தின் முயற்சியில்தான் மீண்டும் தொடர முடிவு செய்யப்பட்டது.

தமிழரசுக் கழக மாநாட்டில் பேசிய விநாயகம் ‘‘நாங்கள் இறுதி முடிவுக்கு வந்துவிட்டோம். அதாவது இரண்டு வருடங்கள் காத்திருந்தும் எல்லைக்கமிஷன் அனுப்பப் படாததுதால் தற்காலிகமாக நிறுத்தி வைத்த எல்லைப் போராட்டத்தை மீண்டும் துவக்குவதென்று தீர்மானித்துவிட்டோம்’’ (மேற்கண்ட நூல் பக். 152)

1955 ஆம் ஆண்டு ஆக டு 24 ஆம் தேதி முதல் சத்தியாகிரகம் நடைபெறவும் கே. விநாயகம் தளபதியாகவும் முடிவு செய்யப்பட்டது. அதற்குள் ம.பொ.சி. சென்னை மாநில நிதி அமைச்சருடன் பேச்சு வார்த்தை நடத்தினார். 1955 டிசம்பருக்குள் எல்லைச் சிக்கல் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

‘‘நான் கொடுத்த மூன்று நிபந்தனைகளையும் அரசாங்கம் ஒப்புக்கொண்டுவிட்டதால், எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் காலவரம்பு வைக்கப்பட்டு விட்டதால், நாளை நடக்கவிருந்த சத்தியாகிரகப் போராட்டத்தை இவ்வாண்டு டிசம்பர் 31ஆம் தேதி வரை ஒத்தி வைத்து இருக்கிறேன்’’ என்று ம.பொ.சி. அறிவித்தார். (மேற்கண்ட நூல் பக். 158–159)

1955 டிசம்பர் இறுதிநாள் முடிந்தும் வடக்கெல்லைப் பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் எட்டப்படாததால் வடக்கெல்லைப் போராட்டக்குழுச் செயலாளராகிய நான் (இந்நூலாசிரியர்) திருத்தணி வன்னியர் குல சத்திரத்தில் 1956 சனவரி 19 ஆம் தேதி காலை 9 மணிக்கு உண்ணாவிரதத்தைத் தொடங்கினேன். அதன் விளைவாகத் திருத்தணியில் கடைகள் அடைக்கப்பட்டன. ஊர்வலமும் நடத்தப்பட்டது. தலைவர் ம.பொ.சி.யிடமிருந்து கடிதம் வந்தது. அதில் உண்ணாவிரதத்தைத் தொடர வேண்டாம் எனக் கூறியிருந்தார். (மேற்கண்ட நூல் பக். 165)

பெரியோர் பலரின் அறிவுரையை ஏற்று உண்ணா விரதத்தை மறுநாள் காலை 9 மணிக்கு முடித்துக் கொண்டேன்.

தமிழக வடக்கெல்லைப் போராட்டம் வெற்றிப்பெறும் பொருட்டு டிசம்பர் 23ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று

**“வடக்கெல்லைப் பாதுக்காப்புத் தினம்”** கொண்டாடுமாறு தமிழ் மக்களை வடக்கெல்லைப் பாதுகாப்புக்குழு வேண்டிக் கொள்கிறது. சென்னையில் நடைபெறும் எல்லைப் போராட்டத்தில் கலந்துக் கொள்ளத் தொண்டர் படைக்குழு ஒன்று தணிகையிலிருந்து புறப்பட்டுச் சென்னை வரை கால்நடையாகவே செல்லவேண்டும் என்றும் இப்படைக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்ல திரு. ஈ.எ . தியாகராஜன் அவர்களை நியமிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (மேற்கண்ட நூல் பக். 176)

வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவினர் 1956 செப்டம்பர் 20ஆம் நாள் சுமார் 500 பேர் சென்னையிலிருந்துப் புறப்பட்டனர். தளபதி கே. விநாயகம் வந்துக் கலந்துக் கொண்டார். 12 மைல் நடந்து வந்த கே. விநாயகம் பகலுணவுக்குப் பின் சிறிது நேரம் ஓய்வெடுத்து விட்டுச் சென்னை சென்று விட்டார்..... ம.பொ.சி. திருவள்ளூருக்கு வந்து நலம் விசாரித்துவிட்டுப் பொதுக் கூட்டத்தில் கலந்துக்கொண்டார்.... செப்டம்பர் 23 ஆம் தேதி கோடம்பாக்கம் வந்தவுடன் தளபதி விநாயகம் இன்முகம் காட்டி வரவேற்றுக் காலை மற்றும் பகல் உணவிற்கு ஏற்பாடு செய்திருந்தார். வடபழனி கோவில் மண்டபத்தில் ஓய்வெடுக்கவும் ஏற்பாடு செய்திருந்தார். நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு ம.பொ.சி. வந்துப் பார்த்தார்....

செப்டம்பர் 24 ஆம் தேதி தளபதி கே. விநாயகம் தலைமையில் 50 பேர் சட்டமன்றத்தை நோக்கி முழக்கங்கள் எழுப்பியவாறு அப்போது சட்டமன்றம் கலைவாணர் அரங்கில் நடைபெற்று வந்தது. அனைவரும் கைது செய்யப்பட்டனர். 25 ஆம் நாளும் மறியல் நடைபெற்றது. 26 ஆம் நாள் ம.பொ.சி. மறியலில் கலந்து கொண்டனர். 29 ஆம் தேதி வரை மறியல் நடைபெற்றது. அனைவருக்கும் 15 நாள் சிறைத்தண்டனை கொடுக்கப்பட்டது. ஆனால் மறுநாள் 30 ஆம் தேதியே அனைவரும் விடுதலைச் செய்யப்பட்டனர். இது எங்களுக்கு சற்று ஏமாற்றமாகவே இருந்தது. ம.பொ.சி. அவர்கள் எங்களிடம் மீண்டும் போராட்டம் நடைபெறும் என்று தெரிவித்தார். இது எங்களுக்கு ஓரளவு ஆறுதல் அளித்தது. (மேற்கண்ட நூல் பக். 180–181)

ஒவ்வொரு முறையும் வடக்கெல்லை போராட்டக் குழுவினர் போராடும் போதெல்லாம் அதை தடுப்பதிலேயே ம.பொ.சி. குறியாக இருந்துள்ளார். வடகெல்லைப் பிரச்சினைத் தொடர்ந்து இருந்துகொண்டே இருந்தால்தான் ம.பொ.சி. க்கு அரசியல் கட்சி நடத்த ஆட்கள் இருப்பார்கள் என்ற காரணத்தினால் பிரச்சினையை விரைவில் தீர்ந்துவிடாமல் பார்த்துக்கொண்டார். 1956ல் இந்தியா முழுவதும் மொழிவாரி மாநிலங்கள் பிரிந்த போதும் தமிழகத்தின் வடக்கெல்லையைப் பற்றியக் குறிப்பு எதுவும் பசல் அலி ஆணையத்தில் இல்லாமல் போனதற்கு ம.பொ.சி., இராசாசி கூட்டுறவே காரணம். அதனால் 1960 வரை இப்பிரச்சினை இழுத்துக் கொண்டே சென்றது.

ஆந்திரப் பிரிவினைத் தொடர்பான மசோதா சென்னை சட்டமன்றத்தில் 14.07.1953 முதல் 27.07.1953 வரை 14 நாட்கள் நடைபெற்றது. அதில் பேசிய பெரும்பான்மையான தமிழகப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் முதலமைச்சர் இராசாசியின் ஆந்திர ஆதரவுப் போக்கை வன்மையாகக் கண்டித்துள்ளனர். சட்டமன்ற விவாதங்கள் 1000 பக்கங்களுக்கு மேல் உள்ளது. சென்னை சட்டமன்ற மேலவையிலும் 20.07.1953 வரை 5 நாட்கள் நடைபெற்றது. ம.பொ.சி. ஒருவரைத் தவிர வேறு யாரும் இந்த மசோதாவை வரவேற்கவில்லை. எண்பதுக்கும் மேற்பட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டு இந்த மசோதா நிறைவேற்றப்பட்டது. இந்த உண்மையை ம.பொ.சி.யோ, கோல்டன் சுப்பிரமணியமோ எழுதவில்லை.

தில்லி நாடாளுமன்றத்திலும் ஆந்திரப் பிரிவினை மசோதா 13.08.1953 முதல் 27.08.1953 வரை 15 நாட்கள் நடைபெற்றது. 18.08.1953 அன்று நாடாளுமன்றத்தில் பேசிய திருக்குறள் முனுசாமி ‘‘சென்னை மாகாண சட்ட மன்றத்தால் ஆந்திராவுக்குப் புதிய தலைநகரை உருவாக்க 2.30 கோடி கொடுக்க வேண்டும் என்ற விதி நிராகரிக்கப்பட்டது. ஆனால் இந்த மசோதாவில் அது சேர்க்கப்பட்டுள்ளது. இதை வன்மையாகக் கண்டிக்கிறேன். மேலும் ஆந்திரப் பிரிந்து எஞ்சிய சென்னை மாகாணத்திற்குத் திராவிடநாடு (அ) தமிழ்நாடு என்ற பெயரைச் சூட்டவேண்டும்’’ என்று பேசினார். ஆந்திராவில் சேர்க்கப்பட்டுள்ள தமிழ்ப் பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் சேர்க்கவேண்டும் என்பதற்காக ஒரு எல்லை ஆணையம் (கமிஷன்) அமைக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். (நாடாளுமன்ற விவாதங்கள் பக். 1030 – 1034 நாள் 18.08.1953)

தஞ்சாவூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்நாடு காங்கிர கட்சியின் செயலாளருமான ஆர். வெங்கட்ராமன் ‘‘ஆந்திராவுக்குப் புதிய தலைநகரை உருவாக்கச் சென்னை மாகாண அரசு 2.30 கோடிக் கொடுக்க வேண்டும் என்ற விதியை நீக்கவேண்டும் (அ) அதை ஒரு கோடியாக குறைக்க வேண்டும்’’ என்று வாதிட்டார். (நாடாளுமன்ற விவாதக் குறிப்புகள் பக். 1630 நாள் 26.08.1953)

மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் தொண்டு வ. வீரசாமி ஆந்திர உயர்நீதிமன்றத்தைச் சென்னையில் இருந்து உடனே ஆந்திரப் பகுதிக்கு மாற்றவேண்டும் என்று பேசினார் நாடாளுமன்ற விவாதங்கள் பக். 1273 நாள் 22.08.1953)

திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் அவினாசிலிங்கம் செட்டியார், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எ .வி.

இராமசாமி, திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் நடேசன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி உள்ளிட்டோர் தமிழகத்திற்கு ஆதரவாக வாதாடி உள்ளனர். ஆந்திரா பிரிவினை தொடர்பான நாடாளுமன்ற விவாதங்கள் 1000 பக்கங்களுக்கு மேல் உள்ளது. இதைப் பற்றியெல்லாம் ம.பொ.சி. ஒருவரிகூட எங்குமே எழுதவில்லை. கோல்டன் சுப்பிரமணியமும் எழுதவில்லை. ஆந்திரப் பிரிவினை வடக்கெல்லைப் பிரச்சினை என்பது கே. விநாயகம், ம.பொ.சி. இராசாசி, போன்றவர்களோடு முடிந்துவிட்டதைப் போல வரலாற்றை இவர்கள் பதிவுச் செய்துள்ளார்கள்.

தமிழகத்தின் தெற்கெல்லைத் தொடர்பாகவும் சட்டமன்ற, நாடாளுமன்ற விவாதங்கள் 1000 பக்கங்களுக்கு மேல் உள்ளது. இன்று வரை எல்லைப் போராட்டங்களைப் பற்றி நூல் எழுதியவர்கள் யாருமே முழுமையாக இவற்றை ஆராய்ந்துப் பார்த்து எழுதவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ம.பொ.சி. தனக்கு மட்டுமே பெருமை வரவேண்டும் என்ற வகையில் ‘எனதுப் போராட்டத்தை’ எழுதியுள்ளார்.

வடக்கெல்லைப் போராட்டத் தளபதி கே. விநாயகம் தான் அந்தப் பகுதி மக்களைத் திரட்டிப் போராட்டத் தளபதியாக திகழ்ந்தார். ம.பொ.சி. அவ்வப்போதுக் கூட்டத்தில் பேசுவதற்கு மட்டுமே சென்றார். வடக்கெல்லைப் போராட்டத்தில் ம.பொ.சி. பெரிய தியாகம் எதுவும் செய்துவிடவில்லை.